# இங்கே, ஸ்ரீராமன் தீக்குளிக்கிறான்!

பூவை எஸ். ஆறுமுகம்

துரை இராமு பதிப்பகம்

# இங்கே, ஸ்ரீராமன் தீக்குளிக்கிறான் !

பூவை எஸ். ஆறுமுகம்

துரை இராமு பதிப்பகம்
6, பிள்ளையார் கோயில் தெரு
பழைய தாம்பரம், சென்னை-600 045.

Title :

INGAY SRIRAMAN THEEKKULIKKIRAN
(Short Stories)

Author :

POOVAI S. ARUMUGAM

First Edition : December, 1991

Paper used : 11.6 kg. Cream Wove

Pages : 184 + 8

Printers :

ARULVEL ACHAGAM
39, Vembuliamman Koil Street,
Palavanthangal, Madras-600 114.
2342854 P.P.

Publisher :

Durai RAMU Pathippagam
6, Pillaiyar Koil Street,
Old Tambaram, Madras-600 045.

Price : Rs. 24-00

துரை இராமு
பதிப்பாளர்

6, பிள்ளையார் கோயில் தெரு,.
தாம்பரம்.
25—12–91

# பதிப்புரை

பூவை. எஸ். ஆறுமுகம் சிறந்த எழுத்தாளர். அவருக்கு அறிமுகம் தேவையில்லை. கடந்த நூற்றாண்டிற்கு மேல் அவரது எழுத்துக்கள் வாசகர்களைக் கவர்ந்துள்ளன.

மிகச்சிறந்த எழுந்தாளர் ஒருவரின் குறு நவீனங்கள் மூன்றினை ''இங்கே ஶ்ரீராமன் தீக்குளிக்கிறான்! என்ற தலைப்பில் வெளியிடுவதில் மகிழ்ச்சி.

எழுத்தாளர் பூவையின் எழுத்துக்கள் உங்கள் கையில், நல்ல தீர்ப்பு வழங்கிட வேண்டுகிறேன்.

துரை. இராமு
பதிப்பக உரிமையாளர்,
துரை இராமு பதிப்பகம்.

# முன் உரை; என் உரை:

வாழ்க்கை என்பது சத்தியச் சோதனை !— சத்தியம் சோதிக்கும் போதும், அந்தச் சத்தியம் சோதிக்கப்படும் போதும் தான், வாழ்க்கை வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையாக அமையும்; அமைய முடியும் ; அமையவும் வேண்டும் !

வாழ்க்கை என்றால், சோதனை ! சோதனை என்றால், வாழ்க்கை ! வாழ்க்கையின் சோதனையிலே, அல்லது, சோதனையின் வாழ்க்கையிலேதான், பொய்யான இம் மண்ணில் மெய்யாகப் பிறந்தவர்கள் ஆண்—பெண் அடங்கலாக விளையாடுகிறார்கள்; விளையாட்டுக் காட்டு கிறார்கள். இவ்விளையாட்டு, மனிதர்களின் விதியாக மட்டுமல்லாமல் விதியின் மனிதர்களாக இவர்கள் மாறவும் மாற்றப்படவும் வேண்டிய சோதனைகள் சூடு பிடிக்கவும் தலைப்படுகின்றன !— அந்தச் சோதனையின் வெற்றி — தோல்வியிலேதான், வாழ்க்கையின் விதி — தலைவிதியும் நிர்ணயம் ஆகிறது ; நிர்ணயிக்கப்படுகிறது ! — இந்நிலையின் முடிவிலேதான், வாழ்க்கையின் 'ஐந்தொகைக் கணக்கும்' சரிபார்க்கப்படுகிறது !

வேடிக்கைதான் !
வாழ்க்கையே ஒரு வேடிக்கைதான் !
இந்த வேடிக்கைதான் வாழ்க்கை !
நல்ல வேடிக்கைதான், அப்பனே ! அம்மையப்பனே!
சரி :

வாழ்க்கை வெறும் சோதனை மட்டிலுந்தானா ?

ஊகூம் !

வாழ்க்கையே ஒரு கதையும் கூடத்தான் !

ஆடி அடங்கும் இந்த மணவாழ்க்கையின் கதை சாமான்யப்பட்டதா ? என்ன ?

ஆடி அடங்காத இந்தக் கதை வாழ்க்கையும் அற்ப சொற்பமானதல்லவே ?....

இந்நிலையிலேதான், வாழ்க்கையும் கதையும் பின்னப் பிணைந்து அழகு காட்டவும், அழகு கூட்டவும் தலைப்படுகின்றன.

எண்ணிப் பார்க்கிறேன்; எண்ணங்களிலே, மீண்டும் இவ்வுண்மைகள் புதிய புலரியின் பொன்விடியலாகப் பளிச்சிடுகின்றன :

பெண் ஒரு புதிரல்லள்;
அவள் ஒரு புதுமை!
தெய்வம் ஒரு புதுமையல்ல;
அது ஒரு புதிர்!
குழந்தை ஒரு கனவல்ல;
அது ஒரு வாழ்கை !
அன்பு ஒரு சோதனை அன்று;
அது ஒரு உண்மை!
சத்தியம் ஓர் ஆணை அல்ல;
அது ஒரு தர்மம்!
இலட்சியம் ஓர் எல்லையல்ல;
அது ஓர் ஆன்மா !
காதல் ஒரு விளையாட்டு அன்று;
அது ஒரு தவம்!
வாழ்க்கை ஒரு பிரச்சனை அல்ல;
அது ஒரு சாதனை!

பொன்விடியல் பூச்சொறிகின்ற இந்த வாழ்க்கையின் நிலைகள் பற்றின சிந்தனைகளிலேதான் என்னுடைய தமிழ்ப் படைப்பிலக்கியத்தின் உண்மையான, சத்தியமான, தருமமான என்னுடைய வாழ்க்கைப் பணியும் இரண்டறக் கலந்து உங்கள் 'பூவை' சொக்கப்பச்சை என்கிற உண்மையை — சத்தியத்தை — தருமத்தை உங்களுக்கு இந்த நாற்பத்தைந்து ஆண்டுக்காலமாக 'இனம்' காட்டியும் வருகிறது அல்லவா?

அன்று, கவிச்சக்கரவர்த்திக்கு மிதிலைச் செல்வி சீதைதான் விதியின் நாயகியானாள்!

இன்று எனக்கு அந்தக் கோசலைச் செல்வன் ஸ்ரீராமனும் விதியின் நாயகனாக ஆகின்றான்!

விளைவோ, சூடானது; சுவையானது!

"இங்கே, ஸ்ரீராமன் தீக்குளிக்கிறான்!'' என்னும் பொன் மகுடமேந்திய இக் குறுநாவல்களின் இணைப்பிலே அடக்கம் தருகின்ற மூன்று பெருங்கதைகளுமே பொன்னானவைத்தான் என்பதை நான் அறிவேன்; நீங்களும் அறிந்திட வேண்டாமா?

அதற்கான நல்லதொரு அன்புப் பாலம் அமைத்துத் தருகின்றார் பதிப்பகத்தின் உரிமையாளர் திருமிகு இராமு அவர்கள்; அவர் பல்கலைச் செல்வர்! —

கவிக்கம்பனுக்கு மட்டிலும் தான் ஒரு சடையப்ப வள்ளல் கிடைத்திட வேண்டுமா, என்ன?

எனக்கும் கூட அந்தப்பாக்கியம் கிடைத்திருக்கிறது!

பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய திருமிகு இராமு அவர்களின் உள்ளன்பு பெரிது! கை தொழுகிறேன்.

இந்நூல் வெளிப்படுத்தப்பட ஆதிமூலமாக அமைந்தவர் பேராசிரியர் உயர்திரு. எம். பூபதி அவர்கள். தமிழ் அறிந்த பூவையின் எழுத்துக்களை ஆங்கிலமும் அறிய பொன்னான வாய்ப்பினை உண்டாக்கித் தருகிறார். அன்னாரின் அன்பிற்கும், நான் கடமைப் பட்டிருப்பேன்.

இலக்கிய ஆர்வலர்களாகிய உங்களை என்னுடைய நாற்பத்து ஐந்து ஆண்டுக் காலத்திலே என்றேனும் உங்கள் பூவை மறந்தது உண்டா?

வாழ்த்துகின்றேன்!

வணக்கம்.

பூவை மாநகர்,

டிசம்பர் 1991.

அன்புடன்,

**பூவை எஸ். ஆறுமுகம்.**



## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இங்கே, ஸ்ரீராமன் தீக்குளிக்கிறான்! | 1 |
| 2. | மழையில் நனையாத மேகங்கள் | 37 |
| 3. | ஊர்வசி | 65 |

# இங்கே, ஸ்ரீராமன் தீக்குளிக்கிறான் !

## 1

**சேரி....**

உலகாளும் ஆத்தா அங்காளம்மன் கோவில் திமிலோகப் படுகிறது. ஆடும் பம்பரமாக, ஆடாமல் சுழன்றார் சாம்பான் பூசாரி. மஞ்சள் கொத்துக்கள், ஒரு புறம். மறுபக்கத்திலே, செங்கரும்புக் கட்டுகள்.

ஈசான்யமுடுக்கில், வாரிப் பின்னப்பட்ட தென்னை ஓலைக் கூந்தல்கள்.

நட்ட நடுவிலே, மாவிலைத் தோரணங்கள் சுருண்டு கிடந்தன.

இதற்கிடையில் —

அந்திசந்தியின் ரம்யமான ஆர்ப்பாட்டம் வேறு. விடிந்தால், சங்கராந்திப் பொங்கல் ஆயிற்றே! அதற்காக

எழில் சேர்த்து ஒயில் சேர்ந்த இந்தப் பொன் அந்தி மாலைப் பொழுதிலே, சேரியிலே மாத்திரம் தைப் பண்டிகை எட்டிப் பார்க்கக் கூடாதென்று சட்டமா, என்ன? சட்டத்துக்குச் சாதி சம்பிரதாயம் ஏது?

சாம்பான் பூசாரி நயமாகவும் விநயமாகவும் சிரித்துக் கொண்டார். மண்ணில் பிறந்த நாள் முதல் அதுவரை வாழ்ந்த—வாழ்ந்து காண்பித்த வாழ்க்கையின் ஐந்

தொகைக் கணக்கைப் பார்த்ததால் — எண்ணிப் பார்த்ததால் விளைந்திட்ட சிரிப்பு அது. ஆதாயமான சிரிப்பு அல்லவா ?

மெய்யாகவே, ஆதாயமான சிரிப்புத்தான் ! ஆவணத்தான் கோட்டைத் தேவர் குடியிருப்பிலிருந்து கண்டிச் சீமைக்கங்காணி ரேக்ளாவிலே வந்திருந்தார். தாம்பூலம் தரித்துக் கொண்டார். நாளைக்குத் தம்முடைய மாடி வீட்டிலே நடைபெறவிருந்த சமபந்தி விருந்துக்கு அழைத்தார். கும்பிடு கொடுத்தவர், கும்பிடு வாங்கிக் கொண்டார்; புறப்பட்டார்.

இப்படிப்பட்ட சமூகமாற்றம் ஆதாயம் இல்லையா, பின்னே ?

காந்தி மகாத்மா செத்துப்போய் விட்டாரென்று நாக்கிலே நரம்பில்லாமல் யாரால்தான் பல்மேல் பல் போட்டு நெஞ்சு துணிந்து சொல்லிவிட முடியுமாம் ?

ஆரோக்கியமான எண்ணங்களிலும் நினைவுகளிலும் சாம்பானுக்கு நெஞ்சு வலிகூட லேசாகக் குறைந்துவிட்ட மாதிரி தோன்றுகிறது.

"மச்சான்காரவுகளே ! ஆத்தாளோட சந்நதி வாசல் நெடுக நறுவிசாக் கூட்டிப் பெருக்கிப்புட்டேனுங்க; சாணி தெளிச்ச கட்டாந்தரையும் பொட்டுப் பொழுதுக்குள்ளாகவே துப்புரவாய்க் காய்ஞ்சும் போயிடுச்சுங்க. சரிபார்த்துக்கிடுங்களேன் !"

உயிருக்கு துணை நிற்கப்பழகிய மங்கத்தா சத்தியத்துக்கும் துணை நிற்கப் பழகியிருந்தாள்.

"சரி, புள்ளே ! நீ சொன்னாச் சரிதாண்டி !"

மங்கத்தாளுக்கு வாய்முச்சூடும் பல் ஆயிற்று. பொக்கை வாயென்றால், சிரிப்புக்குத் தடை விதிக்க முடியாதுதான்

சாம்பான் சுற்றுமுற்றும் விழிகளை உன்னிப்பாகவே விரித்தார். ''பலே! சபாசு! என்றார். அவருக்கு மட்டிலும் பொக்கை வாயிலே புன்னகைப்பூ மலராதா, என்ன ?

கன்னிப் பொங்கல் திடல் நாணயமான கண்ணியத்தோடு பளிச்சிடுகிறது.

என்ன அதிசயக்கூத்து இது!

அந்திக்கட்டிலேயே, நாலைந்து கன்னிமார்கள் சேரிக் கம்மாயில் குளித்து முழுகிப் பூவும் பொட்டும் மணக்க ஈரப்புடவையும் ரவிக்கையுமாக ராத்திரிப் பூராவிலும் கண்விழித்துக் கன்னி நோன்பு மேற்கொள்ளக்கூடி விட்டனரே? — செண்பகம், கண்ணாத்தா, பூங்காவனம், செல்லாயி மற்றும் தில்லைக்கண்! — பெயர் வரிசை நீண்டது! ஒவ்வொருத்தியும் பாசமும் நேசமாகவும், அன்பும், பண்புமாகவும் என்னென்ன பிரார்த்திக்கப் போகிறாளோ? ஒவ்வொருத்தியும் கைப்பிடியாக பற்றியிருந்த வேப்பிலைக்கொத்து என்னென்ன தீர்ப்பை படிக்கப் போகிறதோ?

சாம்பானின் இடுக்கு விழுந்த கண்கள் தளும்பின!— 'கன்னி நோன்பு இருக்கிற கன்னிக்கழியா பொண்டுங்க மனச்சுத்தத்தோட நாயப்படி நேர்ந்துக்கிட்டா, அவங்களோட வேண்டுதலையை நியாயப்படியே தீர்த்து வைக்கிறதில ஆத்தா அங்காளம்மை ரொம்ப, ரொம்ப கெட்டிக்காரி! உதாரணத்துக்கு அந்நியம் அசலுக்குப் பறிவானேன்! எங்க தங்கம் அது ஆசைப்பட்ட நேச

மச்சான் வீரமுத்துவுக்கே வாழ்க்கைப்பட்டு முந்தானை விரிக்கிறதுக்கு ஆயி எழுதிப் போடலையா..? ஈரம் நன்றியின் உணர்வில் சிலிர்த்தது; கசிந்தது.

சுகமான ராகமும் வேப்பங்காற்றும் ஒன்று! காக்கையும் குருவியும் அம்மன் பிரசாதம் வேண்டிக்கூட்டம் சேர்க்க தலைப்படுகின்றன.

சாம்பான் பெருமைப்பட்டார். அவரது மனிதாபிமானம் பெருமிதம் அடைந்தது. அவர் சாமான்யமான புள்ளியா, என்ன? வாழ்க்கைதடத்தில் கிட்டத்தட்ட எழுபத்தேழு தொலைக் கற்களை மதிப்போடும் மரியாதையோடும் நிமிர்ந்த தலையை நிமிர்த்தியபடியே தாண்டிவிட்ட 'மானி' ஆயிற்றே!

கைநொடிப் பொழுது கழிந்தது.

தலைவாசலிலே, இரையாமல் இறைந்து கிடந்த அத்தனை பொருட்களும் இப்போது உட்பிரகாரத்தில் மடப்பள்ளியை அடுத்திருந்த 'கிட்டங்கி'யில் இடம் பெற்றன; இடம் கண்டன.

சாம்பான் கிழவருக்கு மூச்சு வாங்கியது.
மங்கத்தாக் கிழவிக்கும் மூச்சு இறைத்தது.
பெரியவர் அம்மன் சந்நதிக்கு மடங்கினார். மடங்கியதும், தீயை மிதித்துவிட்ட பாவனையில் திடுக்கிட்டார்; மலைத்தார்; திகைத்தார்; தவித்தார்! — 'மூத்தவளே! நான் கனா-கினா காணுறேனங்காட்டி' உள்மனம் ஓலமிட்டது; ஓட்டமாக ஓடி வந்து ஒட்டிநின்ற ஆசைக் கண்ணாட்டியின் இதயக் குமுறலும் அவரது உள்ளத்தில் எதிரொலித்திருக்கலாம்!

அங்கே—

எரிந்து கொண்டிருந்த அம்மன் தீபங்களுக்கு எதிரே—

எரியாத தீபமாகவும் பாதாதிகேசம் வரையிலும் ஈரம் சொட்டச் சொட்டவும் மூடிய விழிகளோடும், மூடாத நெஞ்சோடும் கூப்பிய கரங்கள் கூப்பியபடியே, அங்காளம்மனைப் போலவே, கற்சிலையாக நின்று கொண்டிருக்கிறாள் தெய்வானை ! — காலடியில் நனைந்த பூக்கள் நனையாமலே கிடந்தன !

கன்னங்கள் இரண்டிலும் ஊசி குத்த இடம் வைக்காமல் பட்டை தீட்டின கணக்கிலே நகக் கீறல்களும் ரத்தத் தழும்புகளும் பளிச்சிடுகின்றன.

நெற்றிக் குங்குமம் கசிந்து உருகி வழிந்து, கண்களின் கண்ணீரிலே சங்கமமாகி, மார்பில் இழைந்து கிடந்த மங்கலத் தாலிப் பொட்டிலே சிந்தி சிதறிக் கொண்டேயிருக்கிறது தாலிப் பொட்டுக்கு ரத்தப் பொட்டு வைத்திருக்குமோ ?

"ஆத்தாடியோ ! தெய்வானைப் பெண்ணே !' சாம்பான் அழைத்தார்.

மங்கத்தா கூப்பிட்டாள் ; "தெவ்வி !"

ஊகூம் !

பேச்சு மூச்சு இல்லை !

"மச்சான்காரவுகளே ! அந்தி மசங்கிப் பூடுச்சுங்க ; மணி அடிங்க ; அப்பாலே, ஆத்தா நம்ம மேலேயும் சடனைப்பட்டுக்கிடப் போறா !" என்று நினைவூட்டினாள், கொண்டவள் மங்கத்தா.

உயிர் கொண்டவர் சுயப் பிரக்கினை அடைந்தார்.

சாயரட்சைப் பூஜை நடக்கிறது.

ஆத்தா சிரிக்கிறாள்; சிரித்துக் கொண்டே இருக்கிறாள்!

# [2]

எட்டிக்குச்சு

கொள்ளை, கொள்ளையாகப் பணம் இருந்தும்கூட மனம் கொள்ளை கொள்ளத் தக்க கருணை இல்லாத மேட்டுக்குடிச் சமூகத் துரோகியை ஞாபகபடுத்தும் போக்கில், மிகமிகப் போலித்தனமான பெரிய மனிதத் தனத்தோடு எரிந்து கொண்டிருந்தது சிம்மினி விளக்கு.

பூசாரிச் சாம்பான், கம்மாய்த் தண்ணீரின் அடியில் பதுங்கிப் பதுங்கிச் சுழித்திடும் சுழல்மாதிரி, உள்ளுக்குள்ளேயே மனம் வெதும்பிக் கொண்டிருக்கிறார், இன்னமும்! உலகத்துக்கே மூல முதற்பொருளாக விளங்கிய —விளங்குகிற ஆத்தாளை நினைத்த நெஞ்சாலேயே, அம்மன் சந்நிதானத்தில் கண்ணீரும் கம்பலையுமாக அபலைக் கோலத்தில் காட்சியளித்த தெய்வானையையும் நினைத்தார், நினைத்த நெஞ்சம் மட்டுமல்லாமல், நினைக்காத உடம்பும் நடுங்கத் தொடங்கியது! — ‘ஆத்தாளே! இம்மாம் காலமாய் நான் அனுபவிச்சறியாத ஒரு கவுரப் பிரச்சினை இப்ப எனக்கு ஏற்பட்டிருக்குதே? இந்த இடுசாமர்துப்பு ஊருக்கு ஒசந்த ஒனக்கா தெரியாது? பின்னே, ஏன், இப்படி அந்த அப்பாவிப் பொண்ணு தெய்வானையை அலங்கோலமான நிலைமைக்கு ஆளாக்கிட்டே? போன ஆவணிக் கெடுவிலே, உன்னைச் சாட்சி வச்சுத்தானே, இந்தப் பறச்சேரியே வாயைப் பிளந்து அதிசயப் படும்படியான விதத்திலே, தெய்வானை—வேலாயுதம் கண்ணாலத்தை தெய்வத்துக்குச் சம்மதமான ஒரு நல்ல தீர்ப்பு சொல்லி நானே முன்னே நின்னு நடத்தி வச்சேன்! மறுதக்கமும், அத்தக் குடிகார வேதாயம் முருங்கைப் போத்திலே ஏறிக் குந்திக்கிடுச்சுப் போலே?’’

அதான், தெய்விக்குட்டி இப்படியான அவல நிலைக்கு ஆளாக்கிப் போயிருக்குதுபோலே! தாய்க்குத் தாயான ஆத்தாளே, எனக்கு ஒரு நல்ல பாதையைக் காட்டிப்பிடு; அப்பத்தான், என்னாலே தெய்வானைப் பொண்ணுக்கு ஒரு நல்ல பாதையைக் காட்ட ஏலுமாக்கும்!''—மூக்கைச் சிந்தி வீசினார்; புகையிலை எச்சிலைக் காறித்துப்பினார். பொழுது பட்டு ஆறு, ஆறரை நாழிகைப் பொழுது ஆகியிருக்கும்; போனதும் வந்ததுமாகத் திரும்பமாட்டாளா இந்த மங்கத்தாக்குட்டி!

பாறையொலி கர்ணகடூரமாகக் காற்றிலே மிதந்து வந்தது

சாம்பான் செவிகளைப் பொத்திக் கொண்டார் 'அக்கரை சீமையிலே படுபாவி சிங்களவன் கிட்டேயிருந்து தலை தப்பினது தம்பிரான் புண்ணியம் அப்படின்னு உயிர் தப்பிக் கள்ளத்தோணி ஏறி ஓடியாந்து இப்பைக்கு மேலத் தெருவிலே குந்தியிருக்கிற சின்னத்துரை தான் இப்படித் தப்புத் தப்பாய்த் தப்புக் கொட்டிக்கிட்டு இருக்க வேணும்! சே! இடுப்பின் அடிமடியில் செருகப்பட்டிருந்த சுருக்குப் பையைத் துழாவிஎடுத்தார் அவர்; அதற்குள், கிழவருக்குக் கிழவியைப் பற்றின கிலேசம் மிஞ்சவே. எச்சரிக்கையாகக் குனிந்து வெளியே வந்தார்.

ஜாதி முல்லைப் பூக்களைக் கொட்டி விட்டாற்போன்று படர்ந்திருந்த பிறை ஒளியில் அங்கும் இங்குமாக முளைத்திருந்த குடிசைகள்கூட அழகாகவே தெரிந்தன.

சொறி நாய் தென்திசையினின்றும் ஊளை இடுகிறது.

சாம்பானுக்குத் திகீரென்றது இப்போது அவருக்குத் தெய்வானையின் சோக நினைவு மீண்டும் திரும்பி விட்டது. 'தெய்விப் பொண்ணு எனக்குச் சொந்தம் கிடையாது; ஆனாலும், நல்ல பொண்ணா. எங்க தங்கம்மான்னா அதுக்கு உசிரும் பிராணனும் தெய்வானை மனசு விட்டுச் சிரிச்சாத்தானே நானும் சிரிக்க வாய்க்கும்? அப்பத்தானே, சேரியிலே

ஒண்ணடி மண்ணடியாக் குடியிருக்கிற நாப்பத்தெட்டுக் குடிபடைங்களுக்கும் தலைக் கட்டுக் கொண்ட தலைப் புள்ளி என்று நான் சூட்டப்பட்டிருக்கிற பட்டத்துக்கும் மரியாதைக்கும் ஒரு சத்தியமான, தருமமான அர்த்தமும் கிடைக்க முடியும்? மனிதாபிமானத்தின் மேன்மையில் அவர் தலைநிமிர்ந்தார். 'எப்படியும் இந்தச் சாம்பன் நாட்டாண்மை அம்பலம் ஏறியாகணும்!' வைராக்கியம் சிலிர்க்கிறது.

கீழத்தெரு அங்கப்பன் தன் பட்டாளத்தோடு கொம்பும் தப்பும் சுமந்து, சாராய வெறியையும் சுமந்து, சுடுகாட்டிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தார், "பெரியவுகளுக்குத் தண்டமிடுறோங்க!" என்று கும்பிட்டபடி நடந்தார்

"சரி, சரி!" என்றார் சாம்பான்.

சாக்குருவி கத்தியது.

மயிர் பிளந்து நியாயம் வழங்குவதில் மன்னரெனப் பேர் பெற்ற சாம்பானுக்கு உரிய மரியாதையை வழங்குவதில் சேரிக்குடி படைகள் என்றைக்குமே சோடை போக மாட்டார்கள்; சோடை போகவும் முடியாது! ஏன் தெரியுமா? — இங்கே சாம்பான் வாக்குத்தான் வேதவாக்கு! — அன்றைக்கு வேலாயுதத்துக்கும் தெய்வானைக்கும் ஊடே ஊடாடிய சிக்கலுக்கு ஒரு நல்ல தீர்ப்பைச் சொல்லி நல்ல பேரைச் சம்பாதித்துக் கொண்ட சாம்பானைப் பற்றிச் சேரியிலும் சரி, அக்கம் பக்கத்து ஊர்களிலும் சரி எவ்வளவு பெருமையாகப் பேசிக் கொண்டார்கள்.

மாட்டுக் கொட்டகையில் பசுவும் கன்றும் குரல் கொடுத்தன. பரணிலிருந்து 'வைக்கோல் பிறி' உதிர்ந்தது.

கால் மிஞ்சிகள் கெஞ்சுகின்றன.

மங்கத்தா, "நானுதானுங்க", என்று தன் வருகைக்கான அச்சாரம் கொடுத்தாள். "வயிறு பசிக்குமே, மூத்தவுகளே?" என்றாள்.

"வயிறு பசிக்கல்லே, புள்ளே; மானம்தான் பசிக்குதாக்கும்!"

சாம்பானின் மானம் தெய்வானையின் மானாபிமானச் சிரிப்பில் தான் ஊசலாடிக் கொண்டிருக்க வேண்டும்!—"நம்ம தெய்வயானைப் பொண்ணைப் பத்தின காரண காரியச் சங்கதி ஏதாச்சும் காதுக்கு விழுந்திச்சா ?" என்று வினவினார்.

'ஊம்' கொட்டினாள் உடையவள்.

தேள் கொட்டின பாங்கிலே, தவித்தார் உடையவர்.

"மச்சானே! நீங்க கொஞ்சம் முந்தி அம்மன் கோயிலைப் பூட்டிக்கிணு திரும்பையிலே நின்ன மாதிரியேதான் தெய்வானைப் பொண்ணு ஆத்தா சந்நதியிலே கல்லு சிலைக்கொப்ப இன்னுமும் நின்னுக்கிணு இருக்குதாமுங்க!"

"என்னவாம் சங்கதி, மங்கத்தா?"

"போன கடுத்தம் கன்னி விரதம் இருந்தப்ப என்னமோ தப்பு கிப்பு ஏற்பட்டதாலேதான் தன்னோட கண்ணால வாழ்க்கை தன் மனசுக்கு ஒப்பினாப்பிலே நல்ல தனமாக வாய்க்கலைன்னு நெஞ்சு ஒடுஞ்சி போன தெய்வீ இப்ப.... இப்ப...." என்று தொடர்ந்த பேச்சைத் தொடரமுடியாமல் தயங்கினாள்.

"ஊம், ஆரம்பிச்சதை முடிச்சுப் போடு", என்று ஆசை மனைவியைத் தூண்டினார் ஆசைக் கணவர்.

'தெவ்விப்பொண்ணு இந்த வாட்டி ரெண்டாந் தடவை யாகவும் கன்னி நோம்பு இருக்கத் துணிஞ்சிருக்குதாமுங்க, மச்சான்!'' ''மெய்யாமா ?''

''மெய்யாலுமே தானுங்க!''

''அப்படின்னா?''

''தெய்வானை தனக்கு வேலாயுதம் கட்டின தாலியை அவன் கையிலேயே கழற்றி வீசிப் போட்டுப்புட்டு, இப்ப தன் மனசுக்கு ஒப்புற ஒரு நல்லவனை — மெய்யாலுமே நல்ல வனாக இருக்கிற ஒரு நல்ல மனுசனைத் தேடுறத்துக்காகத் தான் இப்ப மறுதக்கமும் கன்னி விரதம் இருக்கத் துணிஞ்சிருக்குதாம்!''

சாம்பான் மனம் அதிர்ந்தார். ''அநியாயம் இல்லையா இந்த நடப்பு ?'' என்று வேதனைப்படலானார்.

''அந்த வேலாயுதம் குடி குடிச்சுப் போட்டு, ஒரு பாவ மும் அறியாத — வேலாயுதத்துக்கு வாழ்க்கைப்பட்டதைத் தவிர வேறே ஒரு பாவத்தையும் அறிஞ்சிராத இந்த அபலைப் பொண்ணு தெவ்வியைக் கண்ணும் மண்ணும் புரி யாமல் அடியோ தண்டம்னு புளியம் மிலாறினாலே அடிச் சுப் போட்டது பத்தாதின்னு, அதோட கன்னம் ரெண்டி லேயும் நகத்தாலே கீறிக் கிழிச்சது மட்டும் அநியாயம் இல்லையாங்காட்டி ?'' — ஆத்திரம் தாங்காமல் கொதித் தாள் மங்கத்தா.

தலைக்குடுமி அவிழ்ந்ததுகூடத் தெரியாமல் வாய டைத்தார் சாம்பான் பூசாரி ''கட்டாயமா அநியாயந்தான்; இந்தப்பாவம் ஆத்தாளுக்கே அடுக்காதுதான் !'' என்றார். மயிர்பிளந்து 'நாயம்' படிக்கும் அவருடைய மனஇயல்பு கட்டி சொன்ன சத்தியத்துக்கு ஓர் ஆமோதிப்பாகவே அமைந்தது அவரது பேச்சு.

"அதனாலேதான், ஆத்தா தூண்டியோ என்னமோ நம்ம தெய்வானை அவளோட மச்சானையே—மஞ்சள் தாலி பூட்டின புருசனையே பதிலுக்குப் பதில் கை நீட்டவும் செஞ்சிடுச்சு! இப்ப வேலாயுதத்தை ரத்துப் பண்ணிட்டு வேறொரு நல்லபடியான நிழலிலே அண்டவும் மனசு துணிஞ்சிருக்காக்கும்"! — மங்கத்தாவுக்கு மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கிற்று.

வரும் விதி வழித்தங்குவது கிடையாது!

ராத்திரியானாலும், பகலானாலும் அதுவேதான் விதியின் விதியாக இருக்கலாமோ?

ஆகவேதான் —

தெய்வானை ரோசமும் வைராக்கியமும்முட்டி முயங்கிட, இரவு முழுவதும் அம்மனைச் சாட்சி வைத்து மறுபடியும் கன்னி நோன்பு மேற்கொள்ள திட்டமிட்டு விட்டாளோ?

சாம்பான் மிடறு விழுங்கினார்... 'தன்னோட உசிருக்கு நேசமான தெய்வப் பொண்ணை ஆயுள்பரியந்தம் தன் கூடவே வச்சிருக்கிற பொறுப்பும் குடிக்காரப்பயமவன் வேலாயுதத்துக்கு ஆயிமகமாயி எழுதிப் போடல்லே போலே! அதான், விதி கூட்டத்திலே கோவிந்தா [போட்டுக் கூத்தடிக்குது!' — மனிதத்தன்மையின் ஈரம் நினைவுகளை புல்லரிக்கச் செய்திருக்கலாம்.

'கவுச்சி சேராத' அழுகின குழம்பின் வாசனை எட்டு ஊருக்கு வீசத் தொடங்கியது.

"சோறு ஆறிடப் போவுதுங்க, மச்சானே!"

"ஊம்"!

தெய்வானை மனம் ஆறமாட்டாளா?

# [3]

விடிந்தால், சங்கராந்திப் பண்டிகை!

வழக்கமாக வெற்றிலை போட்டுக் கொள்ளும் சமயங்களில் எல்லாம் சாம்பான் மனச் சந்துஷ்டியோடு இருப்பது பழக்கம். ஆனால், இப்போது, அவர் உள்மனம் வெகுவாகவே சலனம் கண்டிருந்தது. 'இனிமே, பொளுது பளார்னு விடிஞ்சதும்தான் தெவ்விப் பொண்ணைக் கண்டுதண்டிப் பேச வாய்க்கும்!— கற்றாழை நார்க்கட்டில் உடலுக்கு இதம்பதமாகத்தான் இருந்தது! பனங்குளம் மாப்பிள்ளைக்காரன் வீரமுத்து, பெண்ணைக் கொடுத்த இந்த மாமனுக்காக நாலு நாழிகைப் பொழுது கை கடுக்கப் பின்னிக் கொடுத்தது அல்லவா அது? — மகள் தங்கம்மா கருக்கலிலேயே வளமைப் பிரகாரம் குடும்பத்தோடு விருந்துக்கு வந்து விடுவாள்! — பாசத்தில் கூடுப் பாய்ந்த நெஞ்சுக்குருத்து என்பியது; தணிந்தது. நிமிர்ந்து குந்தினார் அவர்.

மங்கத்தா புகையிலைக் காம்பை கிள்ளி நீட்டுகிறாள்.

பூசாரிக்கு உணக்கை வந்தது.

"ஒங்களைத்தானே! ஒரு சங்கதி ரோசிச்சுப் பார்த்தீகளா?"

"என்னடி புள்ளே?"

"உங்களோட ஆகி வந்த கைராசிக் கையாலேதான் நீங்க தெய்வானை-வேலாயுதம் சோடிக்குக் கண்ணாலத்தை நடத்தி வச்சீங்க!

"அதுமட்டுமல்ல; ஒரே நேரத்திலே, இன்னொரு சோடியான வள்ளி முத்தையனுக்கும்தான் கண்ணாலம் நடந்திச்சு!

"ஆனா "

"ஆனாவும் ஆச்சு ; ஆவன்னாவும் ஆச்சு, விசயத்தைப் புட்டுச் சொல்லு !"

இப்பைக்குப் புருசன் பொண்டாட்டியாக இருக்கிற தெய்வானை - வேலாயதம் வீம்போட போட்டுக்கிட்டு இருக்கக் கூடிய வம்புச் சண்டையினாலே இந்தச் சேரி நம்ம பேரிலே வீண் பழி பாவத்தை நாளைக்குப் போட்டிடுமோ, என்னமோ ?"

"ஓகோ ! அப்பிடியா?"

"ஊர் வாயை நாம எப்பிடிங்க மூட ஏலும் ?"

"ஊரும் ஆச்சு ; தேரும் ஆச்சு. ஊருக்காக நாம வாழல்லே ; நமக்காகவும் நம்மளோட மனசுக்காகவும் தான் வாழ்ந்தோம் ; வாழுறோம் ; இனி, வாழவும் செய்வோம் ! தெவ்வானை - வேலாயுதம் தவசல் என்னை மாதிரியே, ஒன்னையும் உறுத்த ஆரம்பிச்சிருக்குது ! ஆனா, ஒரு காரண காரியத்தை நீயும் மறந்து போயிடப் படாதாக்கும் ! தெய்வானை - வேலாயுதம் தம்பதியோட இந்த இடுசாமச் சிக்கல் அவங்களோட சொந்தப் பிரச்சனை ; பந்தப் பிரச்சனையாக்கும் ?"

"நூத்திலே ஒரு சேதிங்க, மச்சான்காரவுளே !"

"அப்பாலே, ஆத்தா விட்டவழி !"

"அதுவும் சத்தியம்தாங்க !"

மங்கத்தா கொட்டாவி விட்டாள்.

நிலவு பூச்சொரிந்தது.

சாம்பான் எச்சிலை ஒழுங்கையில் உமிழ்ந்தபின், திரும்பி வந்து குந்தினார் அவருக்குத் தூக்கம் — போய் விட்டது. எதை நினைப்பார் அவர்? அவர் எதை மறப் பார்? — நினைவும் மறதியும்தான் வாழ்க்கையா?

வாழ்க்கை வேடிக்கையாகத்தான் விளையாடுகிறது. விளையாட்டுக் காட்டுகிறது!

இந்த விதியை விலக்கி வைத்து விட்டு, தெய்வானை யோ அல்லது, வேலாயுதமோ வேடிக்கை பார்க்கவோ, இல்லை, வேடிக்கை காட்டவோ முடியுமோ?

நடந்த கதை நடந்து காட்டியது:

சேரியில், கீழத் தொங்கலில் இருந்த தெய்வானையும் வள்ளியும் உயிருக்கு உயிரான தோழிமார்கள்; அதற்கு சமதையாகவே, மேலக்கோடியிலிருந்த வேலாயுதமும் முத்தையனும் உயிரும் பிராணனுமான சேக்காளிகள்.

ஆதியிலிருந்தே, தெய்வானைக்கு முத்தையன் என்றால் ஒரு கண்; நேசக்கண் அது. அவனுடைய நேசக்கண்ணாடி யாக ஆகிவிட வேண்டுமென்று சொப்பனம் கண்டாள் அவள்.

அதுபோலவே —

வள்ளியின்மையல் வேலாயுதத்தின் பேரிலே நிலைத்தது.

இருதரப்பு ஆண்பிள்ளைச் சிங்கங்களும் கரும்பு தின்னக் கூலி கேட்க வில்லைதான்!

இப்படிப்பட்ட நிலையில் — சூழ்நிலையில்தான், எதிர் பாராத சோதனையொன்று பேயாட்டம் போட்டது.

"ஒரு கமுக்கமான துப்பு தெரியுமாங்காட்டி? நம்ம தெய்வானைக் கன்னிக்கு இஷ்டப்பட்ட முத்தையன் குடிகாரனாமே? கூத்திக் கள்ளனாமே?"

கேணியடியிலும் ஊருணிக்கரையிலும் சந்தைக் கூட்டத்திலும் ஊர்வாய் முணமுணத்தது.

ஜாதி ரோஜா அனலில் கால்இடறியும் கால் தவறியும் விழுந்து விட்டால், அது வாடாதா? வதங்காதா? தெய்வானை ஏங்கினாள்; தவித்தாள்!

சேதி அறிந்த கூட்டுக்காரி வள்ளிக்கும் ஒரு புதுப்பயம் ஈரல் குலையைத் துளைத்துக் குலைய வைத்தது. ‘நான் நேசம் வச்சிருக்கிற வேலாயுதம் மச்சான் இதுமட்டும் நல்ல ஆளுன்னுதான் பேரெடுத்திருக்குது; ஆனாலும் அதோட சுயரூபத்தை யார் கண்டது? எந்தப் புற்றிலே எம்மாங்கொத்த பாம்பு ஒளிஞ்சிருக்குமோ?'' — வேதனையில் நெட்டுயிர்த்தாள்; ஏமாற்றத்தில் குமைந்தாள்.

அன்றைக்கு பூராவும் சிநேகிதிகள் இருவரும் சோறு தண்ணீர் சாப்பிடவில்லை; அவர்களுக்கு இரவு சிவராத்திரி ஆனதுதான் மிச்சம். மறுநாள் விடியல் வேளையிலே, இருவரும் கள்ளுக்கடை நாவல்பழ மரத்தடியில் சந்தித்தனர். கூப்பிடு தொலைவில் கூப்பிடாமலே தெரிந்த தாராடி சாமியை நேந்து கொண்டனர்.

“அடியே வள்ளி! மனசுக்கு மனசுதான் சாட்சி; மற்றதுக்குச் சாமிதான் காட்சின்னு ஒரு பேச்சு எங்க அப்பத்தா சொல்லும் அதொத்து, நாம்பளும் நமக்கு உண்டான வாழ்க்கையை நேசத்தோடவும் பாசத்தோடவும் சீராக்கிட வேணும். நம்ப விதி, நாம தாழ்ந்த சாதியிலே பொறந்துபூட்டோம்; ஆனாலும் ஒசந்த சாதியிலே ஆண் - பெண் காதலுக்குக் கொடுக்கற மரியாதையைக் காட்டிலும், நாம நம்புற மனச்சுத்தமான ஆண் பெண் நேசத்துக்கு நாம ரொம்பவும் உண்டனவே முதல் மரியாதை செலுத்துகிறோம். மனசுக்கும் மனசுக்கும் ஊடாலே பிறக்கிற நேசம் பூர்வ ஜென்ம விளையாட்டுக்

கணக்குத்தான். இது, கரணம் தப்பினால் மரணம் மாதிரியான விளையாட்டாக்கும் !'' என்று பேச்சைத் தொடங்கினாள் காட்டு ரோஜாத்தி தெய்வானை.

"ஆமாம்டி தெவ்விக்குட்டி ! நீ ஊர்நாட்டிலே அழகிலே மட்டும் ஒசத்தி இல்லே ; புத்திசத்தியிலேயும் நீ ஒசந்த வளாச்சே ? நீதான் நமக்குள்ள சிக்கில் தீர ஒரு நல்ல வழியைக் காண்பிக்கோணும்படி'', என்று கெஞ்சிக் கொஞ்சினாள், வள்ளி.

வள்ளி, எம்மச்சான் முத்தையனுக்கு நான் மூணாம் பேருக்குத் தெரியாம ஒரு பரீட்சை வைக்கிறேன். அதிலே அவர் தேறி, இனிமேயாச்சும் அந்த ஆம்பளை திருந்திடு வாரா என்கிறதுக்கு உண்டான துப்புக் கொடுத்தால் சரி; இல்லாட்டி, அந்த ஆளைக் கைகழுவிப்புடுவேனாக்கும்! சரி, உன் கதை காரணத்துக்கு வாரேன். நீ அன்பு பாராட்டுற வேலாயுதத்தைப் பத்தித்தான் அக்கம்பக்கத்திலே இன்னிக்கு வரைக்கும் அடாவடிப் பேச்சு ஒண்ணுமே மூச்சுப் பறியலையே! அந்த மட்டுலும் நீ கொடுத்துவச்ச குட்டி தான். உன் மச்சான் வேலாயுதம் இப்பவும் மனசும் புத் தியும் தடுமாறாம, நல்ல ஆம்பளையாவேதான் இருக்குது என்கிற சங்கதியை நீ புரிஞ்சுக்கிட்டு, நல்ல முடிவு கிடைச்சிட்டால், நீ உன் நேசக்காரன் வேலாயுதத்தை உன்கனாப்படி நீ கண்ணலாம் கட்டிக்கிடலாமே ?''என்றாள் தெய்வானை.

காதலுக்குத் தேர்வு நடந்தது.

தெய்வானை மோகினி அவதாரம் எடுத்தாள்; முத்தையனைச் சோதித்தாள்.

முத்தையன் நயமாகவே சிரித்தான். தெய்வானைப் புள்ளே! நீ ஆளான மாசி மாசத்திலே உம்மேலே ஆசை வச்சேன் நான்! ஆனா, நல்லவனான என்னோட அண்ணை

விதி நடுவிலே மறைச்சிடுச்சு; எனக்குக் கெட்ட புத்தி வந்துடுச்சு. நான் கெட்டுப்போனது பொய் இல்லே!', ஆனா, இப்ப நான் மிருகம் இல்லே; மனுஷன்! நல்ல வனாகத் திருந்தியதுக்கு, நீ எம்பேர்லே வச்சிருந்த நம் பிக்கெதான் காரணம்! என்னை மனப்பூர்வமா நீ நம்ப லாம்; தெய்வானைக் கண்ணே!'' என்று கூறிக் கண்ணீர் வடித்தான்.

தெய்வானை ஆத்தாளை நன்றியோடு நினைத்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்.

அது போலவே—

வள்ளி, தனக்கு உரியதான நேசப்பரீட்சையைத் தன் பங்கிற்காகவும் நடத்தினாள். திரை மறைவில் நின்று ஒரு நாடகத்தைப் போட்டாள்.

''ஏ புள்ளே வள்ளி! நான் நல்லவன். நல்லவன்தான்; குடி, கூத்தி எதுவுமே இப்பிறப்பிலே என்னைக் கெட்ட வனாக ஆக்கிப்புடவே முடியாது!'' என்று சவால் விட் டான்; வேலாயுதம்.

வள்ளி ஆனந்தக் கூத்து ஆடினாள்.

தோழிமார்கள் தெய்வானை, வள்ளியின் திருமணங் கள் சேரியிலேயே நிச்சயிக்கப்பட்டன

தெய்வானை — முத்தையன், வள்ளி — வேலாயுதம் கலியாணங்களுக்கான பரிசமும் நடந்து, தேதியும் வைக்கப் பட்டது.

அந்நேரத்திலேதான், எதிர்பாராத அச்சம்பவம் நடந் தது. சேரியையே உலுக்கிக் குலுக்கிய நடப்பு ஆயிற்றே அது?

விதி யாரை விட்டதாம்?

ஒருநாள், பொன் அந்தி வேளையில், அழகே உருவான கன்னிப் பூஞ்சிட்டு தெய்வானை அம்மான் கம்மாயில் நீராடி அழகே உருவாகச் செவ்வந்திப் பூப் போலப் புன்னகை செய்த வண்ணம், வண்ணக்கலாப மயில்போல் குடிசைக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, அவளுக்குப் பின்புறத்திலே ஓடி வந்த வேலாயுதம் போதை வெறியில் அவளைக் கட்டியணைத்துப் பலாத்காரம் செய்யவே, அவனிடமிருந்து தன்னையும் தன் பெண்மையையும் கற்பையும் தற்காத்துக் கொண்டு வீரிட்டாள். அம்மன் சந்நதியிலே நெடுஞ்சாண் கிடையாகப் போய் விழுந்து கதறிக் கதறி அழுதாள்! கெட்டவன், நல்லவனாக ஆவதற்கும், நல்லவன் கெட்டவனாக உருமாறுவதற்கும் கைந் நொடிப்பொழுது போதும் போலும்!

"ஆத்தாளே மூத்தவளே! இம்மாம்பெரியசோதனையை எனக்கு வச்சுப் பூட்டியே! நான் மனசறிஞ்சி ஒரு பாவத்தையும் செஞ்சதில்லையே? .. ஆமா; என்னைக் கை நீட்டித் தொட்ட அந்தப் புதுப்பாவி வேலாயுதம்தான் இப்ப கைதொட்டு எனக்குத் தாலிகட்ட வேணுமாக்கும்! இதுக்கு நீயேதான் பொறுப்பு!" என்று விம்மி வெடித்தாள்.

காதலின் பாதை பிரிந்து விட்டதே!

சேதி சேரியெங்கும் காட்டுத் தீ ஆயிற்று.

வள்ளி தீச்சுடுபட்டுத் துடித்தாள். எந்தப் புற்றில் எந்த பாம்பு குடியிருந்ததென்ற ரகசியம் அவளுக்குப் புரிந்திருக்காதா!

வள்ளியைத் தேடி ஓடிவந்தாள் தெய்வானை. "வள்ளி, விதிகிட்டே நாம ரெண்டு பேருமே தோத்துப் போயிட்

டோம்! இன்னும், உன் மச்சான் வேலாயுதம் எனக்குப் புருசனாக்கும்! ... எம்மச்சான் முத்தயனை நீ மனசு தேறிக் கொண்டுகிட்டு நல்லா இரு!'' என்று புலம்பினாள்.

தெய்வானையின் வாக்குதான் முத்தையனுக்கு வேத வாக்கு!

ஆனால், வேலாயுதம் மனித மிருகமாகி, "நானு அந்தத் தெவ்விக் குட்டியைக் கட்டிக்க ஒப்ப மாட்டேன்!'' என்று அழும்பு பேசினான்; 'முரண்டு' பிடித்தான்!

தெய்வானை வழக்கைச் சேரிப் பஞ்சாயத்திற்குக் கொண்டு வந்தாள். சாம்பான் பூசாரி தீர்ப்புச் சொன்னார் கன்னிகழியாப் பொண்ணு தெய்வானையைத் தொட்ட வேலாயுதம் தான் அவளுக்கு கழுத்திலே மஞ்சள் தாலியைக் கட்டித் தீரவேணும்!'

வேலாயுதத்திற்கு வாழ்க்கைப்பட்டாள் தெய்வானை. 'நான் தெவ்விக் குட்டியாக்கும்! புதுசாக் கெட்ட சவகாசத் தினால குடிக்க பழகியிருக்கிற எம்புட்டு வேலாயுதம் மச்சானை மறுபடி நல்ல புள்ளியாகவே ஆக்கிப்பிடு வேனாக்கும்!'' என்று அவள் கண்ட ஆசைக்கனவு அவள் வரை பொய்கனவாகவே ஆகிவிட்டது, பாவம். அவள் அழுதாள்!—அழுது கொண்டேருயிந்தாள்! — பாவம்!

வள்ளி — முத்தையன் தாம்பத்தியம் ஒச்சம் இல்லாமே நடந்தது.

ஆனால், தெய்வானை — வேலாயுதம் தம்பதியிடையே புயல் விசியது தான் மிச்சம்!— வள்ளியை வேலாயுதத்தால் மறக்க முடியவில்லையாம்!— தீயாக எரிந்த வள்ளியை அவனால் எப்படி அண்டி ஒண்ட முடியும்? ஆகவே

அவன், வேலாயுதம், தன் ஆத்திரம் பூராவையும் அபலை தெய்வானையின் பேரில் கொட்டிக் கொட்டி அளந்தான். கொண்டவன் படி அளந்த லட்சணம் இது!

நினைவுப் பூக்கள் சிதறி முடித்தன!

சாம்பான் பூசாரி சுயப்பிரக்கினை ' அடையலானார். 'ஆத்தாளே! நாளைக்கு உனக்குப் பொங்கல் பண்டிகை ; எங்க தெய்விப் பொண்ணுக்கு, ஒன்னோட தெய்வானைக் குட்டிக்கும் சத்தியமான, நாயமான, தர்மமான ஒரு நல்ல பொங்கல் வைபோகத்தை உண்டாக்கிக் கொடுத்துப்புடு. மூத்தவளே ! ?— ஈரவிழிகளிலே ஈரம் கசிகிறது; கசிந்து கொண்டேயிருக்கிறது !

# [4]

பூந்தேறலுக்கு மேம்பட்டதாகவும், பூப் போன்ற புலரிப்பொழுது பூவாகவே மணக்கிறது !

ஊராண்டு உலகாளும் திரிசூலி அங்காளம்மன் பூப் போலச் சிரிக்கிறாள் ; சிரித்துக் கொண்டே இருக்கிறாள் !

தீபங்கள் எரிந்தன.

'பள்ளயம்' படைத்த படையலிலே ஊதுவத்தி எரிகிறது.

பறைகள் கொட்டுகின்றன.

கொம்புகள் முழங்குகின்றன.

சேகண்டி ஒலிக்கிறது.

மணி ஓசை மிஞ்சுகிறது.

பூஜை நடக்கிறது.

தீபாராதனை முடிகிறது !

சுற்றிலும் தமிழ் பொங்கற்பண்டிகை. கொண்டாட்டம் போட்டது. கும்மி கொட்டியது; கோலாட்டம் ஆடியது.

கரக ஆட்டம் உச்சாடனம் பெறுகிறது.

மறு கணத்தில் —

எதிர் அணியிலே, அணி வகுத்து அணிசேர்ந்திருந்த கன்னிப் பெண்கள் அத்தனைப் பேரும் வேப்பிலையும் கையுமாக உருவேறி, உருக் கொண்டு, உச்சாடனம் பெறத் தொடங்கினர்! —"ஆத்தாளே" என்ற குரல்கள் ஒலித்தன; எதிரொலித்தன

வேப்பிலைக்காரிக்குச் சிரிக்கத்தானா தெரியாது? — அவரவர்களின் விதிப்படியும் வினைப் பிரசாரமும் வாக்குகளை விதித்திட அவளுக்குத் தெரியாதா, என்ன?

தலைக்குடுமி அவிழ்ந்து விழவும், விபூதி பட்டைகள் மேனிநெடுக்கிலும் துலாம்பரமாய்ப் பளிச்சிடவும் ருத்திராட்ச மாலை புரளவும் சிலை என நின்ற சாம்பன் பூசாரி இன்னமும் கூட சிலையாகவே நின்றார். அவர் நீக்கமறச் சுழன்றாள்; சுழல்கிறாள்!.... கண்ணீர் துளிகளிலே அவர் சுழல, அவரைச் சூழ்ந்து கண்ணீர்த் துளிகளும் சூழல்கின்றன!

"ஆத்தாளே, மூத்தவளே! ஆதி பராசக்தியே! அங்காளம்மைத்தாயே! எங்க சேரித்தங்கம் தெய்வானைப் பொண்ணுக்கு நம்மோட தமிழ்ச் சாதிப் பண்புக்கு அனுசரணையான நல்லதொரு பாதையத் திறந்து விட்டுப்புடு; அப்பத்தான், எங்க தெய்வானைக் குட்டிக்கு அதோட மாங்கல்யம் நல்லதனமாவும், நிரந்தரமாவும் நாயமாவும், சத்தியமாவும் நிலைச்சிருக்க ஏலும்? தெய்வானைப் பொண்ணுக்கு அதோட ஆத்திரத்தையும் கோபத்தையும் கலைச்சு, நல்ல புத்தியைக் கொடு; அப்பத்தான் அவள்

நல்வாக்கைப் பாவிமகன் வேலாயுதத்துக்கு — அவளோட மச்சான் வேலாயுதத்துக்கு — அவள் முந்தானை விரிச்ச குடிக்காரப் புருஷன் வேலாயுதத்துக்குத் தாரைவார்க்கவும் முடியுமாக்கும்! ''

வெயில் பளிச்சிடுகிறது.

உணர்ச்சி சுழிப்பில் நீந்திச் சுழன்ற பெரியவர் மனம் விட்டுப் பேசி, வாய்விட்டுக் கதறினார்!

கூட்டத்தில் புண்ணிய பூமியின் நல்லமைதி நிலவுகிறது.

மனிதர்கள் விம்முகின்றனர்!

# [5]

"ஆத்தா!''

வீரிட்டு அலறிக் கதறிக் கொண்டே, தலைவிரிகோலமாக ஈரம் சொட்டச் சொட்ட ஒரு புனிதமான நியாய வெறியோடு ஓடிவந்தாள் தெய்வானை; ஓடிவந்தவள், அப்படியே அம்மன் சந்நதியிலே அடித்து விழுந்தாள். விம்மினாள்; வெடித்தாள்; வேப்பிலைக்கொத்துக்கள் மாத்திரமல்ல, பூங்கொத்துக்களும் சிந்திச் சிதறுகின்றன!

வள்ளி கண்ணீரும் கம்பலையுமாக நின்றாள். உடன் அவள் புருஷன் முத்தையனும்தான் நின்றான்.

"ஆத்தாளே''

மீண்டும் வீறிட்டாள் தெய்வானை.

ஆனால் —

ஆத்தா அங்காளம்மன் இப்பொழுதும் சிரித்துக் கொண்டுதான் இருக்கிறாள்! சிலையிலே ஜீவனாகிச் சிரித்துக் கொண்டே இருக்கிறாள் ஆத்தா.

உணர்ச்சி வசப்பட்ட நிலையிலேயே, தலையைத் தூக்கி எழுந்தாள் தெய்வானை; நெற்றித் திலகத்தில் ரத்தத்துளிகள் கலந்து கரைத்தன. கன்னங்களின் தழும்புகள் கரையாமல் கரைந்தன.

''ஆத்தாளே! நீதான் வெறும் செம்பாரங் கல்லாகிப் பூட்டியே? அதனாலேதான் நானும் கல்லாகிப் போயிட்டேன்! ஒனக்குத் தெரியாத கதையா, காரணமா? மறுதக்கமும் நினைப்பூட்டுறேன். கேட்டுக்க; என்னோட மனசான மனசை தொடுறதுக்கு .லாயக்கு இல்லாமபோன மேலத் தெரு வேலாயுதம் நல்லவனாட்டம் நடிக்க குடி வெறியிலே என்னோட மேனியைத் தொட்டதாலேதான், நான் அந்த ஆம்பளைச் சிங்கத்துக்கு எந்தலையைக் கொடுத்து, அந்த மிருகத்தையும் ஒரு நல்ல மனுசனாக ஆக்கிப்பிடலாம்னு கனாக்கண்டு, அந்தப் புறம்போக்கு ஆளுக்கு வாழ்க்கைப்படவும் துணிஞ்சேன் ஆனா எனக்கு நல்ல தாலிப் பொசிப்பு நல்லபடியாகவும் நல்லதனமாகவும் வாய்க்கலே. வாய்க்கவே இல்லே! ஊர் உலகத்தையெல்லாம் கல்லாக இருந்துக்கிட்டே ஆளுற ஆத்தாளான ஒனக்கு, ஒன்னோட அருமைக்குஞ்சான என் பேரிலே ஈவிரக்கம் ஏற்படாமலேயே பூடுச்சு. எனக்கு மச்சானாகப் புதுப் பெருமையை வலுக்கட்டாயத்தின் பேரிலே சூட்டிக்கிட்ட அந்த வேட்டி கட்டின ஆம்பளைக்கு தன் தப்புப் புரியாமலே பூடுச்சு. என் அருமையும் விளங்காமல் பூடுச்சு. இதுதான் என்னோட விதின்னு சொல்லுறியாக்கும்? அப்படின்னா சரி! என் விதியை நான் பார்த்துக்கிடுவேன்! சவால் விட்டு சமாளிச்சுக்குடுவேன். ஆமா, சொல்லிப் புட்டேன். நல்லா கேட்டுக்கிட்டியா, ஆத்தாளே?''

வெறிபிடித்தவளாக ஓடினாள் தெய்வானை

அம்மன் சந்நிதானத்தைக் குறி வைத்து, வீறு கொண்டு ஓடினாள் தெய்வானை!

பூசாரி சாம்பான் திடுக்கிட்டார்:, தெய்வானைப் பொண்ணே! நில்லு! நில்லு! என்று ஓலம்பரம்பினார்

தெய்வானை நிற்கவில்லை; நிலைக்கவும் இல்லை.

அம்மன் இப்போதும் சிரித்தாள்; சிரித்துக் கொண்டே இருந்தாள்! "ஆத்தாளே!"

மறுபடியும் ஓலமிட்டாள் தெய்வானை. உள்ளம் அதிரவும், உடல் அதிரவும் கதறினாள். தலைமுடியைப் பிய்த்துக் கொண்டு கதறினாள், — மங்கலத்தாலியும் அலறிக் கதறியது! மறு இமைப்பில் ஆத்தாளின் பாதார விந்தங்களில் சரண் அடைந்தாள். திருமாங்கல்யம் புடை சூழ, நித்திய சுமங்கலியாகவே தரிசனம் தந்த ஆத்தாவின் காலடியில் படீர் படீ'ரென்று முட்டிக் கொண்டாள். மோதிக் கொண்டாள்.

பீறிட்டது ரத்தம்.

வீறிட்டது ரத்தம்.

"ஆத்தாடி, தெய்வானைப் பொண்ணே!"

அலறிப் புடைத்துக் கொண்டே பாய்ந்தார் சாம்பான் பூசாரி, தெய்வானையை கையைப் பிடித்துத் தடுத்தார்.

தெய்வானை கேட்டால்தானே?

அவள் தெய்வானைதானா?

இல்லை....

எல்லைக் காளியாக ஆகி விட்டாளா இந்த தெய்வானை?

ரத்தம் பீறிட்டுக் கொண்டே இருந்தது.

மறுகணம்....

"ஆத்தாளே, தெய்விக்குட்டியா" என்று மண்ணும் விண்ணும் முட்ட ஓங்காரமாக ஓலமிட்டவராகத் தெய்வானையின் பாதங்களிலே விழுந்தார் சாம்பான் பூசாரி.

"ஐயையோ – பெரியவுகளே !"

தெய்வானை பதறித் துடித்தவளாகப் பெரியவரின் கைகளைப் பற்றித் தூக்கி நிறுத்தி விட்டுக் கையெடுத்துக் கும்பிட்டாள். "உதவாக்கரைச் சின்னப் பொண்ணுங்க நான் அய்யா! நீங்க இந்தப் பாவியோட காலிலே விளுந்திட்டீங்களே? இந்தப் பொல்லாப் பாவம் ஆத்தாளுக்குக்கே கூட அடுக்காதுங்களே", என்று வெடித்தாள். ரத்தத்துளிகள் விழி முனைகளினின்றும் வெட்டிப் பாய்ந்தன.

சாம்பான் சிரித்தார்; வேதனை தாளாமல் சிரித்தார் சிரித்து விட்டு விம்மத் தொடங்கினார்.

"ஐயா....ஐயா! நீங்க அழப்படாதுங்க. நான் ஒருத்தி அழுவுறது போறாதுங்களா.

மூத்தவரின் விழி வெள்ளத்தைத் துடைத்து விடுகிறாள் தெய்வானை.

தெய்வானையின் தங்கக் கரங்களை எடுத்துக் கண்களிலே ஒற்றிக் கொண்டார் பூசாரி. "தெய்விப் பொண்ணே! நீ எம்புட்டுக் கண்ணீரைத்துச் சடுதியிலே துடைச்சுப்புட்டே! ஆனா, என்னாலே தான் உன் கண்ணீரைத் துடைக்க முடியாமலே போயிடுச்சு! நான் பாவி! நான் முன்னே நின்னு தீர்ப்புச் சொல்லி, அந்தப் படுபாவி மிருகம் வேலாயுதத்துக்கு உன்னைக் கட்ட வச்சேனே? இப்ப, நானும்தானே உன் பாவத்துக்கு ஆளாகிப் புட்டேன், தெய்வானைப் பொண்ணே!" — புலம்பினார்.

தெய்வானை ஏறிட்டு விழித்தாள். திடீரென்று வாய் விட்டுச் சிரித்தாள்; மறுநொடியில் மீண்டும் செருமத் தொடங்கினாள்.

"ஐயாவே! ஆத்தா கல்லு; ஆனதாலே, அவளுக்குப் பேசத் தெரியாது; பேசவும் வராது! அதனாலே, நான் இப்ப ஒரு நல்ல முடிவுக்கு வந்திருக்கேன்; அந்த முடிவைச் சொல்லிப்பிடறேன். ஆத்தா கேட்டாலும் சரி, கேட்காமல் போனாலும் சரி; அதைப்பத்தி எனக்கு ரவையத்தனை அக்கறையோ, கவலையோ கிடையவே கிடையாது! நீங்க கேட்டுக்கிடுங்க! கன்னிப் பொண்ணுங்கதான் கண்ணாலம் கட்டிக்கிறதுக்கோசரம் கன்னி விரதம் இருக்கிறது நாட்டிலே வழக்கம். ஆனா, நானும் ராத்திரி முச்சூடும் முழிச்சிருந்து கன்னி நோம்பு இருந்தேன். ஏன், தெரியுங் களா? ஊர் என்ன நினைச்சிருக்குமோ? — தெரியாதுங் நான் இன்னொரு கண்ணாலம் கட்டிக்கிறதுக்கத்தான் — இந்தக் குடிகாரப் புருஷன் வேலாயுதத்தோட தாலியை அந்த ஆள் கையிலே கழற்றிக் கொடுத்துப்புட்டு, வேறொரு ஆளைத் தேடிக்கட்டிக்கிடுறதுக்காகத்தான் நான் இப்படி! கன்னி நோம்பு பிடிச்சேன்னுகூட ஊர்நாட்டிலே நாக்கிலே நரம்பில்லாமல் கூட பேசிக்கிட்டிருப்பாங்க! ஆன, நான் கண்ணியமான ரத்தத்துக்குப் பொறந்த பொண்ணாக்கும்! எனக்கும் சூடு, சுரணை, ரோசம், வைராக்கியம் எல்லாம் சாதி சம்பிரதாயம் பார்க்கிற ஒசந்த குடிக்காரங்க மாதிரியே எனக்கும் உண்டுங்க, மூத்தவுகளே! கண்ணாலத்துக்கு முந்தித்தான். நாயப்படி நான் கன்னி விரதம் இருந் திருக்க வேணும். ஆனா, அதுக்கு வாய்க்காமல் பூடுச்சு; என்னோட கண்ணாலம் திடுதிப்னு நடந்து முடிஞ்சிருக்குதுங் களே? அதாலேதான், அந்த விரதத்தை இப்ப நடத்தினேன். ஏன், தெரியுங்களா? என்னோட கழுத்திலே ஊசலாடிக் கிடக்கிற இந்தத் தாலி எப்பவுமே என் கழுத் திலே, பூவும், மஞ்சளும், பொட்டும் குலுங்க எப்பவுமே ஊஞ்சலாடிக்கினு கிடக்கவேணும்னு தானுங்க நான் கன்னி

நோம்பு இருந்தேன்! ஆனா, ஒண்ணுங்க; மிச்சம் மீதம் இருக்கிற என்னோட ஆயுள்கால வாழ்க்கைக்கு இனிமே இந்தத் தாலி மட்டும்தான் எனக்குச்சதம்! இந்தத் தாலி மாத்திரம்தான் இனி எனக்குத் துணை! ஆமா, சொல்லிப்பூட்டேனுங்க, பெரிய ஐயாவே!"

தெய்வானை பேச்சை நிறுத்தினாள். மேல்மூச்சு, கீழ் மூச்சு வாங்கியது.

பெரியவர் சாம்பான் வாய் அடைத்துக் கதிகலங்கிய நிலையில் மலைத்து நின்றார், ஆத்தா அங்காளம்மையை ஆற்றாமையோடு பரிதாபமாகப் பார்த்தார். "ஆத்தா, இதுதான் உன்னோட முடிவா, என்ன? நீ காண்பிக்க வேண்டிய நல்ல பாதை இதுவே தானாடி, ஆத்தாளே?" உச்சாடனம் பெற்றவராகக் கூச்சலிட்டார், பூசாரி.

தெய்வானை விழிகளை நெற்றிக்கு உயர்த்தினாள். நெற்றிக் கண்ணைத் திறக்கப் போகிறாளா?

"ஐயாவே! ஆத்தா நல்ல புண்ணியவதி! நான் செஞ்ச பாவத்துக்கு அவளை — ஆத்தாளை ஏசப்புடாதுங்க: அது தர்மமும் ஆகாதுங்க! கெஞ்சுகிறாள் தெய்வானை.

பூஜாரி சாம்பான் சிலையானார்.

வள்ளி தவித்தாள்.

வள்ளியின் அன்பு மச்சான் முத்தையன் திகைத்தான்.

சேரி மக்கள் ஏங்கினர்.

அடுத்த நொடியிலே —

"எந்தெய்வமே!"

அலறிப் புடைத்துக் கதறித் துடித்தவனாக, 'சடுகுடு' ஓட்டமாக ஓடிவந்த வேலாயுதம். அப்படியே ஆத்தா. மூத்தவள் அங்காளம்மையின் காலடியிலே அடித்து வீழ்ந் தான். எழுந்தான். பின்பு, எந்தேவதையே! தெய்வித் தங்கமே!'' என்று ஓலம்பரப்பிக் கூப்பாடு போட்டவாறு, தெய்வானையின் பாதங்களிலே அடைக்கலம் அடைந்தான்

தெய்வானை காட்டேரி ஆகிவிட்டாளா? காலடியிலே கிடந்த வேலாயுதத்தை — தாலி கட்டி மச்சான் ஆன வேலாயுதத்தை எட்டித் தள்ளிவிட்டாள், அவள்.

வேலாயுதம் தரை மீனாகத் துடித்தான். மேனியில் ஒட்டிக்கிடந்த மணலைத் தட்டக்கூட நினைவிழந்து எழுந்தான். அவனுடைய முகத்தில் பதித்துக் கிடந்த நகக்கீறல்களின் தழும்புகளும் இப்போது கதிர்களின் ஒளி வீச்சில் பளிச்சிடுகின்றனவே!

தெய்வானை ஓங்காரச் சிரிப்பைக் கக்கத் தொடங் கினாள்.

"தெவ்விப்புள்ளே!''

விம்மினான் வேலாயுதம்.

"சீ!.... இன்னொரு கடுத்தம் என்னைப் பேர்சொல்லி அழைக்காதே! நீ மிருகம்!''

"நான் இப்ப மிருகம் இல்லே, தெய்வானை! நான் இப்ப மனுசனாத் திருந்திப் பூட்டேன் புள்ளே!''

மறுதக்கமும் நாடகமா ஆடுறே நீ? உம்புட்டுக்கூத்தும், சம்பமும் சவடாலும் இனிமே எங்கிட்டே ஒருக்காலும் பலிக்காது; பலிக்கவே பலிக்காது!.... மிருகமான ஒன்னை மனுசனாக மாத்த நான் திரிகரண சுத்தியோட பாடு பட்டதுக்காக, நீ என்னைச் செத்த சாரைப்பாம்பை

அடிக்கிறதாட்டம் அடிச்சு நொறுக்கிப் போட்டியே? அதை நான் மறந்தாலும், என்னோட கன்னத் தழும்புங்க மறக்கவே மறக்காதே? . ஐயையோ, பாவி நீ! பாழாய்ப் போன மிருகம் நீ!''

தெய்வானை, கட்டுமீறின வெஞ்சினத்தைத் தாள மாட்டாமல் பற்களை 'நறநற வென்று, கடித்துக் கொண்டாள். பற்களுக்கு இடையிலே நசுங்கின ஆத்திரம் பேய்ச் சிரிப்பாக மாறியது.

வேலாயுதம் உயிர்க்குலை நடுங்கத் துடிதுடிக்கலானான் ''ஏ, புள்ளே! நான் இனிமே ஒருநாளும் மிருகமாக ஆகிப் புடவே மாட்டேன்! என்னை நம்பு. தெய்வி, நம்பு!'' தொண்டை அடைக்கச் செருமினான், ஆண்பிள்ளைச் சிங்கம்.

பாய்ந்து வந்த தெய்வானை, முகத்திலே எள்ளும் கொள்ளும வெடிக்க வேலாயுதத்தின் சட்டையைப் பற்றியவளாக, நீ இனிமே மிருகமாக ஆக மாட்டேங்கிறதுக்கு நான் மன சொப்பி நம்புறதுக்கு என்னா சாட்சி வச்சிருக்கியாம்?'' என்று கேட்டாள்.

விதிக்குக் கேள்வியையும் கேட்கத் தெரியுமோ ;

வேலாயுதம் விழித்தான்; ஆடு திருடிய கள்ளனாக **விழித்தான்!**

தெய்வானை தீப்பொறி பறந்திட, விழிகளை ஏறிட்டு உருட்டினாள்.

நீ எப்பவுமே வெறும் மிருகந்தானாக்கும்! இப்பைக்கு என்னமோ துளியத்தனை மனுசத்தனம் சிலுப்பிக்கிட்டு உம்மனசிலே எழும்பியிருக்குது. அதனாலேதான் நீ இனிமே மிருகமாக ஆகமாட்டேன்னு வாயடி அடிக்கிறே! ஆனாலும் உம் பேச்சை நம்புறதுக்கு உண்டான ஆதாரத்தை உன்

னாலே எனக்கு மெய்ப்பிச்சுக் காட்ட முடியல்லே!'' போன சனிச் சந்தைக் கெடுவிலே நீ நூறாவது வாட்டி குடிச்சுப் புட்டு என்னை நதக்கிப் போட்டே; நானும் தொண்ணூத்து ஒம்பது தரம் பொறுமையா இருந்துப்புட்டு, நூறாவது வாட்டியிலே பத்ரகாளி ஆகி, உன்னை — எனக்கு மஞ்சள் தாலி பூட்டின உன்னைப் பதிலுக்குக் கைநீட்டியும் அடிச்சிப் போட்டுப் பூட்டேன். அப்பவும் ஒனக்கு சூடு சுரணை உறுத்தல்லே!—இப்ப, நொடிக்கு நூறு தடவை 'நீ, நீ'ன்னு உன்னை, கொண்ட புருசனான உன்னை ஏச்சுப் பேச்சுமா அழைக்கிறதையும், நல்ல பிள்ளை கணக்கிலே கேட்டுக்கிட்டு, ரோசப்படாம குத்துக்கல்லாட்டம் நிற்கிறீயே!— நீயெல்லாம் நாளைக்குப் பொழுது விடிஞ்சப்புமே, மறுபடியும் வேதாளம் முருங்கைப் போத்திலே மறுபடி ஏறின தாட்டம் மிருகமாக ஆகமாட்டே என்கிறது என்னா நிச்சயம்? நான் உன்னை ரத்துப் பண்ணி ஒதுக்கி வச்சுப் பூட்டு, வேறொருத்தனுக்கு வாழ்க்கைப்படப் போறதாக ஊர் நாட்டிலே கிளம்பின வதந்தியைக் கேட்டுக்கிட்டு அந்த அவமானத்தைத் தாங்கமாட்டாமே, இப்ப ஏங் காலடியிலே தண்டம் போட குடுகுடுன்னு ஓடியாந்து, சும்மா கூத்து காட்டி நல்லவன் மாதிரி நடிக்சுப் பாவனை பண்ணுறே! ஆமா; நான் பொய் பேசவே மாட்டேன். ஒன்னை டீாதிரி! ஆமா!''

தெய்வானைக்குக் கோபவேசம் தூள் மறந்தது; அவள் கண்களிலே ஈரம் கட்டித் தீயை உமிழ்ந்த ஆத்திரம் லவலேசமும் குறையவில்லையே? மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கவே, சற்றே ஓய்ந்தாள்.

சுடுநீர் சிலிர்த்திட அப்படியே கதிகலங்கி — பொறிகலங்கி நின்ற வேலாயுதம், சீண்டி விடப்பட்ட கட்டுவிரியனாகப் பொறுமை இழந்து எழுந்து தலையை நிமிர்த்தியவனாக அவளை - தெய்வானையை - அவன் தாலி கட்டின அழகுப் பதுமை தெய்வானையை

நெருங்கினான். நேருக்கு நேராக அவள் எதிரிலே வந்து நின்றான். கண்களை மறைத்த சுடுநீரைக் கைவிரல்களால் வழித்துவிட்டுக் கொண்டே அவளை விழுங்கி விடுபவனைப் போல ஏறிட்டு ஊடுருவினான். அவன் முகம் ஏன் அப்படி மாறி வருகிறது ?— ''தெய்வப்புள்ளே ! இனிமே என்னை ஏசிப் பேசறதுக்கு ஒனக்கு வாய்வார்த்தை தட்டுப்படலையங் காட்டி? அதாலேதான் உன்னோட வாய் ஓய்ஞ்சிருக்கா?' பேசியவன், பேச்சை நிறுத்தி விட்டு, மூச்சையும் நிறுத்தி விடாமல் மீண்டும் அவளைக் கோபம் கொந்தளிக்க நோக்கினான்.

பூசாரி சாம்பன் தவித்தார். 'ஆத்தாளே! வெள்ளம் தலைக்கு மேலே போயிடாமல், ஒரு நல்ல திருப்பத்தைத் தந்திடு !

வள்ளி என்ன நடக்கப் போகிறதோ, ஏது நடக்கப் போகிறதோ என்கிற துப்புப் புரியாமல் கிலேசம் கொண்டு தடுமாறினாள், 'ஊர் நாட்டிலே இருக்கிற நாலுபேர் மாதிரி நல்ல புள்ளியாகத்தானே வேலாயுதம் மச்சான்காரரும் இருந்துச்சு? என்னமோ போதாத காலம் ஏழரைச் சனி பிடிச்சுக்கிணு ஆட்டிப்படைச்சி, இப்ப அலங்கோலம் ஆகிப்புடுச்சு, பாவம்!—இல்லாட்டி அந்த நாளையிலே எம்பேரிலே கொண்டிருந்த மசக்கத்தை மறக்காமலும், என்னையும் மறந்திடாமலும், என்னையே சுத்திச் சுத்தி வந்து தன்னோட அருமைப் பொஞ்சாதி தெய்வானைப் பொண்ணை ஏமாற்றம் தாளாமல் சதா அடிச்சு நொறுக்கிக்கிட்டே நேத்து வரைக்கும் கூட, பித்துப் புடிச்சு அலைஞ்சு திரிஞ்சுக்கிட்டு இருந்திருக்குமா?' நெஞ்சின் ஈரத்திலே சிலிர்த்தவளாகி, நிலைகுலைந்தாள்.

வள்ளியின் நேசமச்சான் முத்தையன் தீயை மிதித்த பாங்கிலே, துடித்தான். 'கட்டின பொண்டாட்டிக்கு உடம்பாலேயும் உள்ளத்தாலேயும் துரோகம் நினைக்கிறது பாவத்திலேயும் பாவம் பெரும் பாவமாக்கும்னு நானும்

எம்புட்டு வள்ளியும் இந்த ஆள் வேலாயதத்துக்கு ஒரு நல்ல பாடத்தைப் புடிச்சுக் கொடுத்ததாலே, இந்த மனுசன் என்னமோ மனசு திருந்தி நல்ல புள்ளியா மாறி இப்ப வந்திருக்கான்! பாவம், வேலாயுதம்! இவனுக்கு இம்மாங் கொத்த சோதிப்பு ஏற்பட்டிருக்கப் புடாதுதான்!'— நல்ல வழியைக் காட்டும்படி அங்காளம்மையை வேண்டிக் கொள்கிறான்.

செங்கதிர்கள் சூடேறின.

மனிதச்சபை மௌனம் காத்தது!

வைத்த விழி வாங்காமலே, அழகுத் தெய்வானையை— தன்னுடைய அருமைப் பொண்டாட்டி தெய்வானையை இன்னமும் பார்த்துக் கொண்கட நின்றான் வேலாயுதம்.

தெய்வானையா, கொக்கா?—அவளும் வேலாயுதத்தை தான் முந்தானை விரித்த தன்னுடைய அருமை மச்சான் வேலாயுதத்தை முறைத்தும் விறைத்தும் பார்த்துக் கொண்டே நின்றாள்!

சேரி நாய் ஊளையிடத் தொடங்கியது.

பற்களை 'நற நற'வென்று கடித்த வேலாயுதம், "ஏ தெவ்விப் பொண்ணே!" என்று விளித்து விட்டு, உலர்ந்து கிடந்த உதடுகளை நாக்கை நீட்டி ஈரப்படுத்திக் கொண்டே வாய் திறந்தான்.

"ஏலே, தெய்விப்புள்ளே!.... பொல்லாத இந்த மண்ணையும் பாழாய்ப்போன இந்த மண் வாழ்க்கையையும் என்னை விடவும் ரொம்ப நல்லாத் துப்பு கண்டு புரிஞ்சிக் கிட்ட சொக்கப்பச்சை நீ என்கிற துப்பு எனக்கும் புரிஞ்சிது. அதாலேதான் நீ உனக்கு மஞ்சள் தாலி பூட்டின என்னை உதறிப் போட்டு புட்டு, அந்நியம் அசலார் வேறே ஒருத்தனை நீ மறு கண்ணாலம் கட்டிக்கிடத்

துணிஞ்சிட்டேன்னு சேரி முச்சூடும் தமுக்குக் கொட்டி பேசிக்கிட்ட பொல்லாப்பேச்சு எம்மானம் மரியாதையைச் சோதிக்க, அந்தக் கேடு கெட்ட அவமானத்தை பொறுக்க மாட்டாமல் ஓட்டமா ஓடியாந்து இப்ப உம் முன்னே நிக்கறதும் மெய்தான். ஆனாலும் அதே நோ்த்திலே உன்னோட வாய்ப்பேச்சையும் நான் கேட்டுக்கிடவும் வாய்ச்சிடுச்சு. இந்த தாலி மட்டுந்தான் இனிமே எனக்குச் சதம். எனக்குத் துணை. அப்படின்னு நீ கொஞ்ச முந்தி நெஞ்சை ஒளிச்ச வஞ்சனை இல்லாம நீ பேசின சத்தியம் என்னையும் ஒரு மனுசனாகவே மாத்த, அந்த நம்பிக்கை யிலேயும் தைரியத்திலேயும் தான் நான் உன்னைத்தேடி இப்ப ஆத்தா சந்நிதியிலேயே ஓடியாந்து நிற்கிறேன் என்கிறதுதான் மெய்தானாக்கும். ஆனாலும் இம்மாம் பெரிய கூட்டத்துக்கு நடுவிலேயும் நீ என்னையோ எம் பேச்சையோ நம்ப மறுத்து, மிருகமாக இருந்த நான் மனுசனாக மாறினதுக்கு உண்டான சாட்சியையும், அதுக்கு உண்டான ஆதாரத்தையும் நீ கேட்கிறே! நீ மனப்பூர்வமா நம்பிக்கிட்டு இருக்கிற உம்புட்டு நெஞ்சு தாலிக்கே ஒரு அருத்தத்தை கொடுத்துக்கிட்டு இருக்கிற நான் மெய்யாலுமே நல்ல புத்தியை மீட்டுக்கிட்ட ஒரு அசலான மனுசனேதான் என்கிற சத்தியத்துக்கு உண்டான சாட்சியை மெய்ப்பிச்சு காட்டினாத்தான், நீ எனக்கு மாப்புத் தருவியா? அப்படின்னா சரி; இப்பவே நான் சத்தியமாவே ஒரு நல்ல புள்ளிதான் என்கிற சத்தியத்தை மெய்ப்பிச்சிக் காட்டுகிறேன்!

வேலாயுதம் தட்டித் தடுமாறியவனாகப் பேச்சை முடிக்கமாட்டாமல், சடக்கென்று நிறுத்தினான்!

அதற்குள்—

"ஐயையோ, தெய்வமே!... நான் நம்பி மதிக்கிற எம்புட்டு நெஞ்சுத் தாலிக்கு புண்ணியமான — சுத்தமான

ஒரு அர்த்தத்தைக் குடுக்கிற என்னோட பூவும் பொட்டும் மஞ்சளும் கலைஞ்சிப்புடுறதுக்குள்ளாறவே, நீ உங்கிட்டே அழைச்சிக்கிடுடி, ஆத்தாளே!'

அலறிக் கதறினாள் தெய்வானை, மறு இமைப்பில், அவள் — தெய்வானை மண்ணிலே வேர் அறுந்த சந்தன மரமாகச் சாய்ந்து விட்டாள்! வாயில் நுரை கக்கியது. அவள் தலைமாட்டிலே, சிவப்புக் குன்றிமணிகள் சிதறிக் கிடக்கின்றன. இப்போது !

அதே நேரத்தில் :

"ஐயோ, எந்தெய்வமே ! சத்தியமாகவும் தருமமாவும் மெய்யாலுமே ஒரு மனுசனாகத் திருந்திப் பூட்ட என்னை ஒரு மனுசனாகவே நம்பியும் மதிச்சும் ஏத்துக்கிடாமலே, நீ இப்படி என்னையும் முந்திக்கிணு மண்ணிலே சாஞ்சுப் பூடுவேன்னு நான் சொப்பனத்திலேகூட நினைக்கலையே? ஐயோ, எந்தெய்வமே ! எந் தெய்விப்புள்ளே !"

வேலாயுதம் ஓலம் பரப்பியவனாகத் தரையிலே வீழ்ந்தான்! — அவன் காலடியிலும் அதே சிவப்புக் குன்றுமணிகள் சிந்திச் சிதறின ! வாயில் பீறிட்ட நுரைத்துளிகளும் சிந்தின ; சிதறின !

"ஆத்தாளே ! என்னா புதுசான சோதனை இது!"

சாம்பான் பூசாரி கூக்குரல் எழுப்பினார்.

வள்ளியும் முத்தையனும் ஜோடி சேர்ந்து அலறினார்கள் ; கதறினார்கள்.

நாய்க்கூட்டம் ஊளையிட்டது.

மனிதக் கூட்டம் தவித்தது.

வேலாயுதத்தின் நெஞ்சைத் தடவிக் கொடுக்கிறாள் வள்ளி.

தெய்வானையின் நெற்றியில் தடவி விடுகிறான் முத்தையன்.

ஆத்தா அங்காளம்மை இப்பொழுதும் சிரிக்கிறாள்; சிரித்துக் கொண்டிருக்கிறாள் !

# [6]

சத்தியத்தின் தரிசனமாகவே, செங்கதிர்கள் மின்னிப் பளிச்சிட்டன, இப்போது.

நாட்டு வைத்தியர் நல்லதம்பிச் சேர்வை நயமாகவும், விநயமாகவும் புன்னகை செய்கிறார். ''ஆத்தாளே, மூத்தவளே ! புருஷனும் பொஞ்சாதியுமான வேலாயுதம்—தெய்வானை ஜோடியோட கண்ணுகளை திறந்துவிட்டுப்புடு ஆத்தாளே, மூத்தவளே !'' என்று விம்மி வெடித்த வண்ணம், உலகத்தாயின் சந்நிதியை நோக்கி கரங்களைக் குவித்தார். கணங்கள், தெய்வக்கணங்களாகவே ஊர்கின்றன.

தெய்வானை கண் திறந்தாள்.

வேலாயுதத்தின் கண்கள் திறந்தன.

சுடு வெள்ளத்திரை விரித்த கண்களிலே தாலியை—மஞ்சள் தாலியை ஒற்றிக் கொண்டே விம்மினாள். ''நேசமச்சாக்காரவுகளே ! எனக்கு மாப்பு கொடுத்துச் சமிச்சுப்புடுங்க. எம்புட்டு தாலியையும் பூ-மஞ்சள்—பொட்டையும் உயிர் கழுவிலே ஊசலாடி செஞ்சுசோதிச்சு அந்த சோதனையையே சாட்சி வச்சி நீங்க மெய்யாலுமே மனுஷன்தான் என்கின்ற சத்தியத் தருமத்துக்குச் சாட்சி சொல்லிப்புட்ட நீங்க மெய்யாலுமே எனக்குத் தெய்வம் ஆகிப்பூட்டீங்க, ஆசை மச்சானே?'' வீரத் தமிழச்சியாகச் செருமுகிறாள் தெய்வானை. அன்பு மச்சானை நோக்கிக் கையெடுத்துக் கும்பிடுகிறாள் !

வேலாயுதம் ஆனந்தப் பரவசத்திலே மெய்மறந்து அழுகிறான். அருமை பெருமையான தெய்விப்புள்ளே! நான் எப்பவுமே நன்றிக் கொண்ட மனுசனாகவே இருந்துப் புடறேன் மிருகமா இருந்தவனை மனுசனாக மாத்தின நீ தெய்வமாக ஆத்தாளாக எனக்கு ஆத்தாளாக இருக்கு வேண்டியது தான் நாயம்!. அதாலே தான், இங்கே ஒரு ராமனும் தீக்குளிச்சுட்டேன் ஆனாலும் நான் ...

தெய்வானை நீங்க என் வரையிலே எப்பவுமே ராமர் தான் என்றும் விம்முகிறாள்.

மனிதர்கள் மகிழ்கிறார்கள்.

சாம்பான்பூசாரி ஆனந்தக்கூத்து ஆடுகிறார், ஆத்தாளே அங்காளம்மை! இந்த வேலாயுதம் தெய்வானையை ஜோடி பிரியாமல் ஜோடி சேர்த்து வச்சு. என்னோட நல்ல கவுரவத்தை நல்லபடியாவே கட்டிக் காப்பாத்தி தந்திட்ட மகராசி நீ ஆச்சே, ஆத்தாளே! விம்மினார் பெரியவர்.

விதிக்கும் விதியான உலகாளும் தாய் அங்காளம்மன் இப்போதும் சிரிக்கிறாள், சிரிக்கிறாள் சிரித்துக் கொண்டே இருக்கிறாள்!

(முற்றும்)



# மழையில் நனையாத மேகங்கள்

மிருகத்தின் மூர்த்தண்ய வெறி இப்பொழுதுதான் அடங்கியதோ ?

மூச்சு, மஞ்சி விரட்டுப் பாய்ச்சலாக மூட்டியது; மோதியது ; சிதறியது.

கண்ணைக் கட்டிக் காட்டிலே விட்டமாதிரி இருந்தது.

அவன் நின்றது காடுதான் ; தாராடிச்சாமிக்குக் குடிக் காணியாட்சிப் பாத்தியம்' கொண்ட காடு ; பொட்டல் காடு ஆனால், அவனுடைய கண்களை யாரும் கட்டி விடவில்லையே ? — இருட்டு, கண்ணை — கண்களை மறைத்தது ; மறைக்கிறது ! – விதியும் மறைத்திருக்குமோ? இருட்டு என்றால், கண்மண் தெரியாத — புரியாத இருட்டு ; பேய் இருட்டு ; கொள்ளிவாய்ப் பிசாசுக்கு இருட்டு என்றால், கொள்ளை கொள்ளையான ஆசை யாமே ? — கொள்ளை கொண்டு ; கொள்ளை கொடுத்த ஆசையோ, என்னவோ? — எண்சாண் உடம்பு 'சூ, மந்திரக் காளி !' போட்டு பாவனையில், ஒரு சாணாகவும் ஒற்றைச் சாணாகவும் கூனிக் குறுகி நடுநடுங்கித் தொலைக்கிறதே ?

மயான அமைதி.

ஓர் ஈ காக்கை மூச்சுக் காட்ட வேண்டுமே !

மூச் !

நரிப் பண்ணைக்கு இப்போது தான் ஊளையிடத் தெம்பு வந்திருக்கலாம்.

அவனுக்குச் சுயப்பிரச்சினை சிலிர்த்தது.

"ஐயையோ !...."

கதறினான்.

அவன் : முத்துலிங்கம்.

வானத்து நட்சத்திரம் ஒன்று வழி தவறி, வழிமாறி மண்ணிலே விழுந்து விட்ட பாவனையில், வெளிச்சத்தின் சன்னக்கீற்று சிதறுகிறது.

பதற்றத்தோடும், தவிப்போடும், ஏக்கத்துடனும், உருக்கத்துடனும் சுற்று முற்றும் பார்த்தான் அவன் இருட்டிலே எதுவும் அவனுக்குத் தெரியவில்லை தான் ; ஆனால், இருட்டிற்குப் பழக்கப்பட்டவன் அல்லவா அவன்?

ஆந்தை ஒன்று ஒற்றையாக மட்டுமல்லாமல், தாக மாகவும் தாபமாகவும் அலறுகிறது ? அதற்கும் நினைத்த படி ஜோடி கிடைக்கவில்லை போலும் !

முத்துலிங்கம் விம்மினான் ; அழுதான்.

நல்லகாலம், இப்போதும் அவனுக்கு இடுப்புக் கிழிசல் வேட்டி நழுவி விடவில்லை !

காற்றுக்கு சரச சல்லாபம் தெரிந்திருக்க வேண்டும்,

புழுவாகத் துடிக்க வைத்தவன் இப்போது புழுவாகத் துடிக்கிறான்.

அவன் : முத்துலிங்கம்.

“ஏலே....!”

“..............”

“எலே, பொண்ணு !”

“..............”

“ஏலே புள்ளே !”

“..............”

விதிக்குத்தான் பேசத் தெரியாது.

இருட்டுக்கும் அப்படித்தானோ ?

அவள் எங்கே ?

யார் அவள் ?

பேர் என்ன ?

எந்த ஊர் ?

"ஐயையோ ! — என்னோட மானம் பறி போனதுக்குப் பொறகாலே, நான் இனிமே என்னத்துக்குப் பாளாப் போன இந்த உசிரை வச்சுக்கோணும் ?"

வாய் விட்டும் மனம் விட்டும் கதறிக் கொண்டே, கிறுக்குப் பிடித்தவனாக, விதிக்குப் பயந்தவனாக ஓடினான் இருட்டையும் காட்டையம் துளைத்துக் கொண்டே ஓடிக் கொண்டிருக்கிறான் ! பிடி கயிறும் தானுமாக ஓடிக் கொண்டேயிருக்கிறான் !

அவன் : முத்துலிங்கம்.

'சடுகுடு வெளையாட்டிலே, விதியையே மண்ணைக் கவ்வ வச்சுப் பூட ரோசிச்சேன் ; அந்தப் பாவத்துக்கு — அந்தப் பழிக்கு இந்தாலே நானே மண்ணோட மண்ணா கிடப் போறேனே ! எம்மாங் காலமா எம்புட்டுக் கற்பை-என்னோட பரிசுத்தத்தைக் கட்டிக் காத்துக் காபந்து பண்ணிக்கிட்டு வந்தேன். பணத்தைப் பூதம் காத்த தாட்டம் ? — ஆனா கடோசிலே, அல்லாமே, கண்ணை மூடிக் கண்ணைத் தொறக்கிறத்துக்குள்ளாற பொய்யாகிப் பூடுச்சு: கனாவாகிப் பூடுச்சு ; பழங்கதையாகவும் ஆகிப் பூடுச்சே ! நான் எம்புட்டு நேசக் கண்ணாட்டி கிட்டக்க வச்ச சவாலிலே நான் தோத்துப்புட்டேனே ! — ஆத்தாளே மகமாயியோ ! எம்புத்தியான புத்தியை ஏண்டி ஆத்தா திசை மாத்தினே ? அவதார மோகினி கணக்கிலே ஒரு சின்னக்குட்டியை — ஒரு புதுக் குட்டியை ஏதுக்கு இந்தக்

காட்டு வெளியிலே குறுக்கு மறிக்க வச்சியாம்? ஐயையோ, நான் வச்ச சவாலை நம்பியும் மதிச்சும் எனக்காகக் காத்துக்கிணு இருக்கிற என்னோட ஆசைக்கிளி அன்னக் கிளி, என்னோட சவாலிலே நான் ஜெலிச்சடியும் என்னைக் கொண்டுக்கிடத்தவம் கெடந்துக்கிணு இருக்கிற இந்த நேரத்திலே, நானு பாவி ஆகிப்புட்டேனே?— பழிகார னாகிப் பூட்டேனே! நானு இல்லாங்காட்டி, என்னோட நேசக்கிளி அன்னக்கிளி அப்பாலே இந்த மாங்குடி மண் ணிலே உசிர் தரிக்கவே மாட்டாதே? ஊருக்கு ஒசந்தவனே, இந்தத் துப்பு ஒம்புத்திக்கு எட்டவே இல்லையாடி ........?

முத்துச் சிரிப்பென, கூன் பிறை கண் சிமிட்டத் தலைப்படுகிறது.

வேப்பமரம் பளிச்சிட்டது!....

அவன் ஓலமிட்டான்; "அன்னக்கிளியோ!"

அன்னக்கிளி!....

அவள் பூவாக மலர்ந்து, பூவின் புனிதமாக நிமிர்ந்து பூ மணமாகத் தன் அழகை வாரி வாரி வழங்க ஆரம்பித்து விட்டால், அன்னம் அதிர்ச்சியால், அதிசயத்தால் அப்படியே மலைத்து சிலையாகி விடாதா? — அவளுக்கு முன்னே தான் எம்மாத்திரமென்று கிளி வெட்கமடைந்து வாயடைத்துப் போய் விடாதா?

அன்னக்கிளி!

பருவத்திற்குப் பதவுரை அவள்!

அன்னக்கிளி!

அவள் நாணயத்தின் செலாவணி!

அன்னக்கிளி!

நாணத்திற்கு விதி அவள்!

அன்னக்கிளி

விதியின் நாயகியும் அவளே !

'அன்னக்கிளிப்புள்ளயோ !' அரிசி முறுக்கைப் பருந்திடம் பறி கொடுத்து விட்டுப் பச்சைப் பாலகன் செருமுவானே, அப்படிச் செருமினான் முத்துலிங்கம். 'அன்னக்கிளிக்குட்டி, இனிமை எப்பொறப்பிலே ஒன்னை நான் காணப் போகுறேன் ? நானு பாவியிலேயும் கேடுகெட்ட பாவியாகிப் பூட்டேனே !' பழிகாரனாவும் ஆகிப்பூட்டேனே நெஞ்சம் அழ நினைவுகள் அழுதன மனம் அழ, மனச்சாட்சி அழுதது. உள்ளம் அழ, உள்ளத்தின் உணர்வுகள் அழுதன.

கஞ்சிப் பொழுதிலே நடந்தது ;

சாலையிலிருந்து கிளை பிரிந்து, பூவத்தக்குடிக்கு வழி காண்பிக்கும் ஒற்றையடிப்பாதையில், செல்லத்தேவன் ஊருணிக்குக் கீழ் வசத்தில் 'அன்னம் வந்திடும்; வளமைப்படி வந்து குதிச்சுப்பிடும்' என்று எண்ணி எண்ணி, மகிழ்ந்து மகிழ்ந்து காத்துக்கிடந்தான் அவன்.

அவள் வந்தாள்.

வந்தவள் அன்னக்கிளி.

சுட்டுப் பொசுக்கின உச்சி வெய்யிலில், சுடாமல் வந்தாள் புண்ணியவதி, தேடி வந்த சீதேவியும் அவளாகவே இருக்கலாம்.

அன்னத்தைக் கண்டதுதான் தாமதம் ; அவன் வாய் கொள்ளாமல் சிரித்தான் ; மனம் கொள்ளாமல் சிரித்தான். "வந்திட்டியா, புள்ளே !" என்று அன்பாக, ஆசையாகக் கேட்டான். ஐந்து வயதிலே, அறியாப் பவருத்திலே 'ஒழுங்கை'யின் மணல் வெளியிலே 'புருசன்—பொஞ்சாதி; விளையாட்டுக்கு உயிர் தந்த, உயிர்ப்புத்தந்த அன்னக் குட்டியின் புனிதத் தரிசனம் பூவாக மணக்கிறது; பூநாகமாக நெளிகிறது.

"மச்சானே, மச்சானே! நூறுகடுத்தம் கிளிக்குப் படிக்கனே புட்டுப் புட்டுச் செப்பியும் கூட, இந்தப் பாளத்த 'புள்ளே' பாடத்தை மறக்கவே மாட்டீங்க போலிருக்கே?— ஊரறிய, ஆயி மகமாயி அறிய, ஒரு நல்ல பொழுதிலே நீங்க ஒங்க கையினாலே எங்கழுத்திலே எண்ணி மூணு முடிச்சுப் போட்டதுக்குப் பொறகால தான் நீங்க என்னை 'புள்ளே' அப்படீன்னு கூப்பிட வாய்க்குமாக்கும்!"

"ஓ! அம்புட்டுத்தானாங்காட்டி"

"ஊம்!"

காணாத அதிசயத்தைக் கண்டு விட்ட பாங்கில், அவன் கை கொட்டிச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் அவனுடைய மனப்பலம் பக்குவமாக முகம் பார்த்துக் கொள்ளத் தவறி விடவில்லை. அவனுக்கு அவள் வைத்த சோதனைகள் ஒன்றல்ல; இரண்டல்ல!

"மச்சானே!"

"......!"

"பேச மாட்டிங்களாங்காட்டி?"

"ஊக்கூம்!"

"ஏனாம்?"

"நீ மட்டுக்கும் என்னை 'மச்சான்' முறை கொண்டாடலாமாக்கும்? நீ என்னைக் கொண்டுக்கிட்டதுக்கப்பாலே தானே, 'மச்சான்' அப்படின்னு என்னை அழைக்கலாம்!"

"நான் தான் ஒங்களைக் கொண்டுகிடப் போறேனே?— கட்டிக்கிடப் போறேனே?— நான் மச்சான்னு தான் ஒங்களை அழைப்பேன். ஆனா; நீங்க என்னை 'புள்ளே' முறை கொண்டாடி விளிக்கோணுமின்னா—நீங்க என்னைத்

தொட்டுத் தாலிகட்டி — திருப்பூட்டி, பொஞ்சாதி என்கிற சொந்தம் வச்சு 'புள்ளே' அப்பமடீன்னு விளிக்கோணு மின்னா, இன்னம் ஒரேயொரு சங்கதியிலேயும் நீங்க கெலிப்புக் காட்ட வேணுமாக்கும்!''

''எனக்கு நீ என்னமோ சோதனை வச்சே!— குந்த நிழலைத் தேடிகிடச் சொன்னே; தேடிக்கிட்டேன்; உழைக்க மண்ணைத் தேடச் சொன்னே; அதையும் கண்டு தண்டிக் கிட்டேன்; ஊர் மெப்பனைக்காக, நாலு காசைச் சேர்த் துக்கிடவேணும்னு சட்டம் போட்டே; சேர்த்துக் காட்டினேன்; கள்ளுத் தண்ணியை நாடப்புடாதீன்னு விதி வச்சே; அந்தச் சங்க நாத்தமே கெடையாதின்னு முச்சரிக்கை எழுதிக் குடுத்தேன்; ஊர் நாட்டிலே ரோக் கியமானப் புள்ளின்னு நல்ல பேர் எடுக்கோணும்னு புத்தி சொன்னே; நல்லவன்னு பேரெடுத்தேன்! இன்னம் என்ன செய்யோணும், அன்னம்?''

''மச்சானே!''

''ஊம்!''

''நீங்களும் நானும் நம்பளுக்கு உண்டான தடைங் களையெல்லாம் தாண்டிக் கடந்து, எதிர்த்து மல்லுக்கட்டி, நாம ரெண்டு பேரும் புருசன் — பொண்டாட்டி ஆக வேணும்னு ஒரு நல்ல முடிவுக்கு வந்தடியும், நான் ஒங்களை ஒரு கேள்வி கேட்டேனுங்களே, யாபகம் இருக்குங்களா, மச்சானே?''

''ஆமா; இது பரியந்தம் நான் மற்றெந்தக்குட்டியையும் தொட்டதும் இல்லை; தெரட்டு அனுபவிச்சதும் இல்லே அனுபவிச்சுச் சுகம் கண்டதும் இல்லே என்கிற சத்தியத்தை யும், தருமத்தையும் ஒன்னோட கேள்விக்கு விடையாகச் சொன்னேன்!''

"பலே—உங்களுக்கு நல்ல யாபகம் இருக்குதுங்க! — ஒங்க பேச்சு எம்பூட்டு நெஞ்சிலவும் எழுதி கெடக்குது தான்!— ஆனாக்க, இது மட்டுக்கும் நீங்க ஒங்களோட பரிசுத்தத்தை — ஆண்மையைக் கட்டிக் காத்துக்கிட்டது ஒசத்தி இல்லே! — இன்னிக்கு ராவுப் பொழுது மூச்சூடும் நீங்க திரிகரண சுத்தியோட இருந்து, ஒங்க வீரியத்தையும் ஆண்மையையும் கட்டிக் காத்துக் காபந்து செஞ்சுக் கிட்டீங்கன்னா, பொழுது விடிஞ்சதும் ஆயி மகமாயி சந்நிதானத்திலே நான் ஒங்களுக்குத் தாலிகட்டின பொஞ் சாதியாக ஆகிப்புடுவேனுங்க! ஒங்க தருமமும் சத்தியமும் பொய் இல்லே என்கிற நடப்பை நான் உண்மையின்னு நம்பிட்டேன்னா, அப்பாலே, நம்ப ரெண்டு பேருக்கும் ஊடாலே குறுக்குச்சாலோட்ட வேற எந்த முட்டுக் கட்டையுமே கெடையாதுங்க, மச்சானே!''

"ப்பூ! — இம்பூட்டுத்தானே? துல்லியமான என்னோட நெஞ்சிலேயும் நினைவிலேயும் பரிசுத்தமான நீ குடியிருந்து, என்னோட சீவனுக்கே சீவனாய் நீ உருக் கொண்டு இருக்கையிலே, நான் வேற ஒரு குட்டியை ஏறெடுத்துப் பார்க்கிறதுக்கு நான் ஒண்ணும் பாவி இல்லேயாக்கும்! நல்ல விந்துக்கு பொறந்தவனாக்கும் நான்! இந்தச் சத்தியத்தையும் தருமத்தையும் கூட, நான் நிலை நாட்டி உங்கிட்டே மெய்ப்பிச்சும் காட்டிப்புடுறேன், அன்னக்குட்டி!''

"சபாசு, மச்சான், சபாசு! ஆத்தா மகமாயிதான் ஒங்களுக்குத் துணை இருக்க வேணுமுங்க!''

"நீயும் தான் துணை நிற்கோணும்!''

புனிதமான சிரிப்பையே புனிதமானதொரு விதியாக ஆக்கிப் படைத்துவிட்டு, கன்னிப்பூ அன்னம் மறைந்து விட்டாள்!

அந்தக் கஞ்சிப் பொழுது, மெல்ல மெல்ல, மெள்ள மெள்ளக் கால்பாவி நடந்தது.

அந்திசந்தி வந்தது.

மன்மதனுக்கு ரதி ஒருத்திதான்!

ஆனால் முத்துலிங்கத்தைக் கைப்பிடியாகப் பிடித்துக் கன்னி வலையில் வீழ்த்தித் தள்ளிவிட கூத்துப் போட்டனர் ஆளான பெண் சிட்டுக்கள் அலமேலுவும் அஞ்சலையும்.

முத்துலிங்கத்துக்கு அன்னகிளி ஒருத்தியே தான் ஊர் உலகம் எல்லாம்!

அன்னம்தான் அவனுக்கு உயிர்.

அன்னக்கிளியிடம் வைத்த சவால் தான் அவனுக்கு எதிர்காலம்.

அவன் — முத்துலிங்கம் வெற்றிப் பெருமிதத்தோடு, மனிதனாக மனிதாபிமானம் பெற்ற மனிதனாகத் தலை நிமிர்ந்து நின்றான்.

இரவு வந்தது.

இனிமே, என்னை எவ மயக்கிச் சாய்ச்சி மண்ணைக் கவ்விப்புடச் செய்ய ஏலும்? மோகினி அவதாரமா ஒரு பூலோக ரம்பையே வந்து குதிச்சாலும், நான் என்னை இழந்துப்புடவே மாட்டேன்; என்னோட கற்பு நெறியை எம்பூட்டுப் பரிசுத்தத் தவத்தை எனக்கு உண்டான ஆண்மைச் சொத்தை ஒரு நாளும் களவு கொடுத்துப் புடவே மாட்டேன்! மனசு கொண்டது மாளிகைன்னு எங்க மேலத் தெரு நொண்டி அப்பத்தாக்காரி நொடிக்கு நூறு கடுத்தம் செப்பும், என்னோட மனசான மனசு என்னோட கனவுக்கிளியான அன்னக்கிளிக்கேதான் சொந்தம்! — ஊருக்கு ஒசந்த போத்தக் குடி மாணிக்கம், குள

மங்கலம் குப்பன் அல்லாரையும் தூக்கியெறிஞ்சிப் புட்டு சர்வசாதாரணமான என்னைக் கட்டிக்கிடுறதுக்கு மனசு இரங்கிய புண்ணியவதியாச்சே அன்னக்கிளி! — அன்னக்கிளி கிட்டே என் பரிசுத்தத்தை ரூபிச்சுக் காட்டிப்புட, இனிமெ அட்டியும் இல்லை; துட்டியும் இல்லே! தாராடிக் காட்டுக் கம்மாயிலே விழுந்து எந்திருச்சு நேரா குடிசைக்குப் பறிஞ்சு துணியை உதறிக் கையைத் தலைக்கு அணை வச்சுக்கிணு படுத்திட்டேன்னா, அப்பாலே; விடிபொழுது என்னைத் தட்டி எழுப்பிப்பிடும்.. ஓட்டமா ஓடி, என்னோட கிளிகிட்டக்க நான் பரிசுத்தமான புள்ளி என்கிற சத்தியத்தையும் தர்மத்தையும் சொல்லிக் காட்டி அவளை — எம்பூட்டு 'புள்ளெ' யைக் கும்மாளம் போட வச்சிட்டேன்னா. அப்பவே, ஆயி, மகமாயிக்கு முன்னரிக்கே அவ கழுத்திலே மூணு முடிச்சுச் போட்டுப் புடுவேனே!.... ஆகா! — நானு ரொம்ப ரொம்பக் கொடுத்துவச்சவன் தான்! — அதுதான் என்னோட ஆசைக்கிளியை எடுத்துக்கிடப் போகுறேனே!''

ஆகாயத்துக்கும் பூமிக்குமாகக் குதித்தான் முத்து லிங்கம். நடந்தான்; குளித்தான்; திரும்பி நடந்தான்; திரும்பிப் பார்க்காமலே நடந்தான். அன்னக்கிளியின் துணை சேர்த்து நடந்தான். சுள்ளி கட்டிச் செல்லக் கையுடன் கொண்டு வந்த பிடிகயிறு குலுங்கிட நடந்தான்.

சோதனைக்கும் 'மோகினி அவதாரம்! எடுக்கத் தெரியுமோ?

''ஐயையோ!''

சுயப் பிரக்கினை மறுபடி சிலிர்த்தது.

அந்த வேப்பமரம் இப்போது பளிச்சென்று பூதாகார மாகத் தரிசனம் தந்தது! வேப்பமரந்தானா? — இல்லை, காவு கேட்கும் ராட்சத அவதாரமா

'ஐயையோ ! .. என்னோட ஆசைக்கண்ணாட்டியான அன்னக்கிளியைக் கண்ணாலம் கட்டிக் கொண்டுக்கிட்டு, அவளை என் பொஞ்சாதியாய் அனுபவிக்கிறதுக்கு உரித் தான ஒரு பொசிப்பும், லவிதமும், பாக்கியமும் இல்லாமப் பூட்ட பாவியான எனக்கு, என்னோட பாவத்துக்கு— நான் செஞ்ச பாவத்துக்கு உண்டான கூலியைச் செலுத் துறத்துக்கு உள்ள நேரம் நெருங்கிக்கிட்டிருக்குது ! . பாவியிலேயும் பாவி, கேடு கெட்ட பாவியான என்னை இனியும் பூமித்தாய் தாங்கமாட்டா ; தாங்கவே மாட்டா!'

கூலியை — பாவத்தின் கூலியைச் செலுத்தக் கயிறு வேண்டாமா ?

வேண்டும் ! — வேண்டும் !

என்னவோ உறுத்திற்று.

மனச்சாட்சியாக இருக்குமோ ?

பிறைச்சிதறலில் இடுப்பில் செருகப்பட்டிருந்த கயிறு தட்டுப்பட்டது.

அவன் சிரித்தான்.

அவன் : முத்துலிங்கம்.

இன்னும் யார் சிரிப்பது ?

கயிறா சிரிக்கிறது ?

கயிற்றுக்குச் சிரிக்கத் தெரியுமோ ?

விதிக்குச் சிரிக்கத் தெரிவது இல்லையா ?

முத்துலிங்கம் எப்படிச் சிரிப்பான், பாவம் ? ....

பாவம் ! ...

பாவமாவது, புண்ணியமாவது !

ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை !

'ஐயையோ ! ஆத்தாடியோ!''

கைப்பிடிக்கயிறு பூநாகமாக நெளியவே. அவன் 'ஓ' வென்று ஓலமிட்டான். இத்துணை நாழிகைக்கு அக்கயிறு கை நழுவிப் போய்விடாமல், காலைச் சுற்றின பாம்பென எப்படித்தான் அவனிடம் பாசமாகவும் நேசமாகவும் தப்பியதோ? உருவி எடுத்தான்; கைக்குச் சுளுவிலே எட்டி விடாத கிளையொன்றைக் கணித்து, அந்தக் கயிற்றை வீசினான். கால்களைத் தூக்கி எம்பி எகிறி நின்றால், அழும்பு பண்ணாமல், வீம்பு புடிக்காமல், வம்பு பிடிக்காமல் கழுத்திற்கு லகுவாகவே எட்டி விடும்படியான அளவிற்கு அதைச் 'சமட்டியாக இழுத்துச் சரி சேர்த்துச் சரி பார்த்துச் செம்மைப் படுத்தலானான். பலே! — அந்தப் பிடிகயிறு, பிடிக்குக் கட்டுப்பட்ட மோகினிப் பிசாசாகக் கனகச்சிதமாகவும் அமைந்து விட்டதே!

அந்தக் கயிறு இப்போதுதான் விதியொத்து நமட்டுச் சிரிப்பை நைச்சியமாக வெளிப்படுத்தத் தொடங்குகிறது.

சாமானியமான கயிறா அது ?

பாசக்கயிறு !

நேசக்கயிறு !

என்னமோ, இருந்திருந்தால் போலே கனைப்புச் சத்தம் ஒன்று கேட்கின்றதே ? நரிப்பண்ணைக்கும் பாழாய்ப் போன மனிதாபிமானம் இல்லாத இந்த மனித மந்தை மாதிரி கனைக்கத் தெரிந்துவிட்டது போலிருக்கிறது !

சுற்று முற்றும் பார்த்தான் அவன். சுற்றிச்சூழவும் பார்வையிட்டான் அவன். அவன்: முத்துலிங்கம் ஆயிற்றே!

யாரையும் காணோம்!

'ஏ, புள்ளே! ஊர் பேர் தெரியாத எம்புள்ளே! விதியாட்டமா வந்தவ, வினையை விதைச்சுப்பிட்டு, விதியாட்டமே கண்ணுக்குக் காணாமல் மறைச்சி பறிஞ்சிட்டியே? நா வெதைச்ச வினையை நானே அறுவடை செஞ்சுப்புடப் போறனாக்கும்!'— இதயம் வீரிட்டது

கயிறு ஊசலாடுகிறது.
அவன் உயிரைப் போலவா?

சுடுசரம் சுட்டது; "பொண்ணாப் பொறந்தவ ஒருத்தியோட விலை மதிக்க முடியாத மானத்துக்கு விலை பேச, உப்புப் புளிக்கு உதவாத கேவலம் இந்த முழக்கயித்தையே கருவியாக்கிக்கிடத் துணிஞ்சேனே பாவி நான், நானு போகுடிச் செம்மம்; ஈனப் பொறப்பு ஆகிவிட்டேன்; நாதியத்த பாவி நான்; கதி மோட்சம் கெடைக்க மாட்டாத கேடுகெட்ட பாவி ஆயிப்புட்டேன்; — நான் செஞ்சிருக்கிற பாவம் மூணாம்பேருக்குத் தெரியாது; நான் சுமந்திருக்கக் கூடிய பழி எனக்கு மட்டுந்தான் அத்துப்படி! துப்புத் தெரியாத எம் பாவத்துக்கும் பழிக்கும் பாவ புண்ணிய ஐந்தொகைப் படிக்கு உண்டான சம்பளக் காசைக் கட்டுறதுக்கு — கூலிப் பணத்தைச் செலுத்துறத்துக்கு இப்ப இதே கயித்தையே நானும் கருவியாக்கிக்கிட வேண்டிய அவலத்துக்கு என்னை ஆளாக்கிப்பிட்ட மகமாயியோட — ஊர் பேர் தெரியாத எம்புள்ளெயைப் போலவே ஊர் பேர் தெரியாத மகமாயியோட நயமான சகத்துக்கு ஈடேது, எடுப்பேது?'

விம்மல் வெடித்தது; இனி, அவன் நெஞ்சம் வெடித்து விட வேண்டியது தான். ஊஹூம், வெடித்து விடும்! பாவம்! ...

**பாவமாம், புண்ணியமாம்!**

**சே!**

நரியின் ஊளைச்சத்தம், சத்தம் கேட்காமலே கிடு கிடுக்கிறது.

முத்துலிங்கத்தின் ஈரல்குலை நடுநடுங்குகிறது. அவன் தன் காதலுக்குக் குறுக்கே நின்ற போட்டியாளர்களிடமெல்லாம் "நானு பனங்காட்டு நரியாக்கும்!' என்பானே!

இருள் கனத்தது.

நிலவும் கனத்தது.

அவன் மறுபடி விம்மி வெடித்தான். ஆனால், இன்னமும் அவன் நெஞ்சம் வெடித்து விடவில்லை! மனம் பொங்குமாங்கடலாக ஆர்ப்பரித்தது; ஆரவாரம் செய்தது; முழக்கம் போட்டது. எல்லாம் தன்னைத் தானே 'தரிசனம் செய்து கொண்டதன் விளைவு; எதிர் விளைவும் கூட செருமல் உள்வட்டமாகச் சுழிக்கத் தொடங்குகிறது; "ஏலே, பொண்ணு! ஒன்னை யாருன்னும் எனக்குத் தெரியாது; இன்ன பேரின்னும் புரியாது; எந்த ஊர் அப்படின்னும் விளங்கல்லே. இம்மாங்கொத்த அருப்புருவமான இடுசாமக் கூத்துக்கு ஊடாலே தான், நீ விதியாய் நின்னே, என்னோட விதியாவே நின்னே. மோகினி அவதாரமே எடுத்துக்கிட்டுத்தான் வந்தீயோ, என்னமோ? — என்னோட பாளத்த மோகம் ஒன்னை மட்டும் அழிச்சிடல்லே. இந்தாலே, என்னையும் அழிச்சிப்புடப் போவுது! நான் அழியறதைப் பத்தி இத்தியும் கிலேசப்படல்லே; கிலேசப்படவும் மாட்டேன். நான் அநியாயமா அழியறது தான் நாயம்! ஆனா, ஒரு பாவமும் அறியாத — புதுக் கருக்குக் குலையாத சமைஞ்ச குட்டியான நீ அநியாயமாய் அழிஞ்சிட்டியே, அந்தப் பொல்லாத விதியை — விதியோட பிசகைத்தான் இன்னமும் கூட என்னாலே நாயப்படுத்திப் பார்க்க ஏலவே மாட்டேங்குது!... ஒன்னோட விதியின் எழுத்தையே சுக்கல் நூறாய்க் கிழிச்சுப் போட்டதாலே தானே, ஒங்கதையே திசைமாறிப் பூடுச்சு! ஐயையோ, தெய்வமே எந்தெய்வமே!"

குறி வைத்துப் பறந்து வந்து வட்டமடிக்கிறது சாக்குருவி ஒன்று.

சிணுங்கல். அழுகை மீண்டும் தூள் பறக்கிறது: ஏ, புள்ளே! 'புள்ளே, அப்படின்னு உசிருக்குசிரான என் அன்னக்கிளியை ஒண்டியுந்தான் சொந்தம் கொண்டாடி அழைக்கோணும்னு நான் ரோசத்தோடவும் மானத்தோடவும், வைராக்கியத் தோடவும் நினைச்சேன்; கனாக் கண்டேன்; தவம் செஞ்சேன். ஆனா ஊரு பேரு தெரியாத ஒன்னை — உருவம் கிருவம் தெரியாத ஒன்னை — உள்ளம் கிள்ளம் தெரியாத ஒன்னைத் தான் 'புள்ளே' அப்படின்னு கூப்பிடுறதுக்கு எந்தலையிலே எழுதிப்போட்டிருக்கு, அந்த எழுத்தைத் திரிகரணசுத்தியோட கையெடுத்துக் கும்பிட வேண்டியவன் நான். என் வரைக்கும் ஒசத்தியான புண்ணியவதியாக்கும்! ஒன் புண்ணியம் என் பாவத்துக்குப் பரிகாரம் செய்ய ஏலாதுதான்.

நாணு மகாபாவி! — தேவலோகத்துப் பாரிஜாதப் பூவுதான். பூவிலேயே ஒசத்தியானதின்னு நான் செல்லையா அண்ணாச்சி சாயாக்கடையிலே வாசிச்சிருக்கேன். அப்படிக் கொந்த ஒசத்தியான ஒன்னை எச்சல்துப்பிக் காயிற ரவை நேரத்துக்குள்ளாற சசக்கி மோந்து காலடியிலே போட்டு நசுக்கிப் பூட்டேனே பாவிநான்? — தேவதை கணக்கிலே நீ எனக்குத் தரிசனம் கொடுத்தே! — வானத்துத் தேவதை அல்பத்தனமான வெறும் மனுசனான எனக்குக் கெடைக்கிறது லேசா? — அதாலதான் எம்புத்தியான புத்தி ஆண்மைத்தனமான எம்புத்தி சத்திமருள் கொண்டு பூடுச்சுப் போலே! — அதோட, நீ மோகினிப் பேயாய் நின்ன அந்தக் கோலம் எம்புட்டுப் பருவக்கிளர்ச்சியைத் தூண்டி விட்டுச்சு; அப்பத்தான் நீ இருட்டுக் கம்மாயிலே தலை முளுகிட்டு வந்திருக்க வேணும்: ரவிக்கை ஒம்மேனியிலே இல்லே; ரவிக்கை போடவேண்டிய லக்கிலே, ஈரச்சேலை ஊடாலே, சொக்கப் பச்சை நிறத்திலே தரிசனம் தந்த

ஒம்புட்டு அழகான, புதுசான, வாளிப்பான நெஞ்சோட காம்பு ரெண்டும் என்னைக் கொத்திக் கொதறிப் போட்டிடுச்சு; மனுசனா இருந்தவன் அசல் நாட்டான்தான் அதிலும், என்னோட நேசக்காதலிக் கன்னி அன்னக்கிளிக்கு உடைமை கொண்ட முத்துலிங்கம் மச்சானாக இருந்த நல்ல ஆம்புளைச் சிங்கம்தான்!

ஆனா, நான் என் அன்னத்துக்கிட்டே விட்ட சவால் படி என்னோட ஆண்மையைக் களவு போகவொட்டாமல் காபந்து செஞ்சிக்கிட்டிருந்த சோதனைப் பொழுதைக்கூட மறந்திட்டு, என் சவாலிலே நான் கெலிச்சு, என் கிளியை என்னோட 'புள்ளே'யாக ஆக்கிக்கிட பொழுது எப்ப விடியும்னு தவங்கிடந்த அந்த லட்சியத்தையும் மறந்திட்டு, உன் அழகுக்குப் பலியானேன்; நான் பலியானதாலே தான் ஒன்னையும் பலி வாங்கிட்டேன்; பலி கொடுத்தும் புட்டேன்!

ஒன்னை வலுக்கட்டாயப்படுத்தி மண்ணிலே தொபு கடீர்னு தள்ள வேண்டி, ஒன் முதுகுப்புறத்திலே ஒளிஞ்சிருந்தேனாக்கும்; நீ அடி சாஞ்சிட்ட மரமாக் கீழே மல்லாக்க விழுந்தே; ஒன் கவர்ச்சி கொப்பளிச்ச அழகை என் கண்கள் அனுபவிக்கல்லே; என் கைங்க அனுபவிச்சது. மைபிலேயிருந்த பிடி கயித்தைக் கொண்டு ஒம்புட்டுக் கை ரெண்டையும் இறுக்கி முறுக்கி முடிஞ்சு கட்டி, உன் வாயிலே என் வேட்டியைத் தாறக் கிழிச்சுத் திணிச்சு, தலை முடிங்களை ஒதுக்கி, மாராப்புத் துணியையும் விலக்கி, எனக்குத் தேவைப்பட்ட ஒன்னோட துல்லியமான—புத்தம் புதுசான அழகுகளையெல்லாம் என் கைகள் அனுபவிக்க, நான் ஒன்னைப் பலாத்காரம் செஞ்சு ஒன்னோடு; இன்பம் அனுபவிச்ச அந்தப் பொட்டுப் பொழுது என் மட்டிலும் விலை மதிக்க வாய்க்காத ஒரு சிரஞ்சீவிப் பொழுதுதான்; அந்த வரையிலும் நான் பாக்கியவான் தான்; என்னையும் ஒரு பாக்கியவானாக ஆக்கின புண்ணியவதி இல்லையா நீ—?

அந்தப் பெரும் புண்ணியத்துக்குப் பாக்கியவான் நிலையி லேருந்து நான் ஒனக்கு 'நன்றி' சொல்லிப்பூடத்தான் ஒன்னைச் தேடித் தேடி அலைஞ்சேன்! இருந்திருந்து இந்தக் கலிகாலத்திலே தெய்வமானது மனுசங்களுக்குத் தரும தரிசனம் கொடுக்கிறதாவது? நான்பாவி! ஐயையோ!

கூதல் அடித்தது.

சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரம் முழங்கால் மட்டாம்!

அவனுக்கு முழங்கால் முட்டிகள் வலித்தன. அதனால் தான் அவன் திரும்பத் திரும்பப் புலம்புகிறானோ? "ஏ,— புள்ளே! விட்டகுறை — தொட்டக்குறை என்கிறது பொய் இல்லைன்னுதான் எனக்குப் படுது இல்லாட்டி நம்பளுக் குள்ளாற ஒரு சொந்த பந்தம், பந்தபாசம் எப்படி ஏற் பட்டிருக்க முடியுமாம்?

அது சரி; ஒன்னை ஒரேயொரு நொடிக்குக் கொத் தடிமை ஆக்கிக்கிட்டு, மறுநொடியிலே ஒனக்கு விடுதலை கொடுத்திட்டேனே? — அதுக்கப்பாலே, நீ ஏன் ஓடினாய்? எங்கே ஓடினே ஊம்; தெய்வாதீனமாய் ஒரு வேளை நீயே மனசு மாறி, மனசு இறங்கி, மனசு துணிஞ்சு என் முன்னாடி வந்து குதிச்சால், உன்னோட கூந்தல் வாசனை ஒண்டியுந் தான் ஒன்னை எனக்கு இனம் காட்ட உதவும்!

நீ யாராம்? எந்த ஊராம்! என்ன பேராம்? ஒன் கற்பைச் சூறையாடிப்புட்ட சமிக்க ஏலாத மாபாவத்துக்கு ஒங்கிட்டக்க 'மாப்பு'க் கேட்டுத் தப்பிச்சுக் கிடத்தான் நான் ஒன்னைத் தேடி அலைகிறேன்னு மட்டும் நீ தப்புக் கணக்குப் போட்டியோ. மறுகா எனக்குக் கெட்டாப்பிலே கோபம் பொத்துக்கினு வந்திடுமாக்கும்!

சத்தியமும் தருமமுமான ரெண்டொரு சங்கதிகளை தாக்கல்களை' நீ மனசிலே வாங்கிக்கிட வேணும்னுதான் நான் ஒன்னைத் தேடி அலைஞ்சேன்! நீ கெடைக்கலே மறுபடியும் எனக்குப் பாவமே தான் மிச்சம் காட்டுது !— ஐயையோ! ஒன்னோட கற்பு பறிபோன ஆறாத துயரத்திலே, இந்நேரம் எம்மாதிரியே நீயும் சாவோட சந்நிதானத்திலே நின்னுக்கிட்டு இருக்கியோ. என்னமோ?—

நான் எத்தனை பெரிய பாவத்தைச் செஞ்சுப்புட்டேன்! நான் சுமக்க வேண்டிய பாவத்தைச் சுமந்து என்னை ரட்சிக்கச் சிலுவையைச் சுமக்கக்கூடிய இன்னொரு சிலுவைச் சாமியா இனி பிறக்கப் போறார் ?— ஊகூம் !— ஆனாலும் ஒனக்கு ஆயுசு கெட்டின்னுதான் என் உள் மனசுக்குத் தோணிக்கிட்டு இருக்குது. அதாலே, நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிப்புடணும், எனக்கு நேரமாகுது இல்லையா ? அதுக்காவத்தான் இப்படி அவசரப்படுறேன்.

கேட்டுக்க புள்ளே காலே வீசம் நாழிக்கு முன்னாலே கூடிக் கலந்து, பின்னிப் பிணைஞ்சு நான் இன்பம் அனுபவிச்சது ஒன்னை இல்லே!— என்னோட அன்புக்கிளியான அன்னக்கிளியைத் தானாக்கும் நான் இன்பம் அனுபவிச்சேன். பிறந்த மேனியாய் என் அன்னத்தை அழகு பார்த்த அந்த மோகக்கிறக்கத்தோடதான் நான் இன்பத்தை அனுபவிச்சேனாக்கும்!— தாராடிச்சாமிக்குப் பொதுவாகச் செப்புற சத்தியப் பேச்சு இது. இந்த அதிசயப் பேச்சை நீ நம்பவும் வேணும்.

என்னோட சத்தியத் தருமத்தின் நாயம் எம்மனசுக்கு— என் நெஞ்சிலேயும் நினைவிலேயும் அல்லும் பகலும் குடியிருந்துக்கிட்டு இருக்கிற எம்புட்டு மனசுக்கு மட்டுமே தான் புரிய முடியுமாக்கும்! எம்மனசை நீயும் புரிஞ்சுக்கிட்டா, அதுவே எனக்கு ஒரு பாக்கியமாகவும் அமைஞ்சிடும் !

நடந்த விதிக் கூத்தை என் அன்னத்துக்கிட்டே விளக்கிச் சொன்னால், அவ எம்மனசைக் கட்டாயம் புரிஞ்சுக்கிடவே செய்வா, ஆனா அவகிட்டே விட்ட சாவலிலே தோத்துப் போனதுக்குப் பொறகு, அந்தத் தெய்வத்தை அற்பனான நான் எந்த முகத்தைக் கொண்டு காண வாய்க்குமாம்? பாவம். அன்னக்கிளி எங்கிட்டேயிருந்து நல்ல தகவலை எதிர்பார்த்து ஏங்கிக் கிட்டு இருக்கும்! ஐயையோ, தெய்வமே! — என் தெய்வம் நான் இல்லாங்காட்டி, இந்த மண்ணிலே ஒரு இம்மிப் பொழுதுக்குக் கூட உயிர் தரிக்க மாட்டாதே!

ஆத்தாளே மூத்தவளே! எம்புட்டுப் பொஞ்சாதிப் பொண்ணு எங்கண்ணுக்குப் புலப்படாததாட்டமே, நீயும் எங்கிட்டேரா ஏனோ கண் மறைவா இருக்கியே? இனிமே நான் எந்தக் கோயில் மண்ணிலே விழுந்து புரண்டு அழுவேன்? . ஐயையோ, மகமாயித் தாயே! என்னாலே ஒனக்கும் பழி ஏற்பட்டுப் போயிடுச்சே? நான் பாவி! மகாபாவி! இனியும் இந்தப் பாவியைப் பூமித்தாய் தாங்கவே மாட்டா, தாங்கவும் கூடாது! புள்ளே அன்னக்கிளியோ! எம்புட்டு அன்னக்கிளிப்புள்ளே!"

ஆந்தைகள் இணை சேர்ந்து, பிணை சேர்த்துச் சரசம் ஆடின.

நிலவின் களங்கத்திற்குப் பொறுப்பு அந்த மேகம் தான்! மகமாயி!....

முத்துலிங்கத்திற்குக் கத்திக் கதறவோ, இல்லை, அழுது புலம்பவோ இனி நெஞ்சிலே வலுவே இல்லை, வல்லமையும் இல்லை.

சோதித்த இருட்டு இன்னமும் சோதிக்க வேண்டுமா?

'நல்ல பூமி'யின் அமைதி அழகுடன் ஆட்சி நடத்துகிறது.

சுயப் பிரச்சினையை மீட்டுக் கொண்டான் அவன்.

அவன் : முத்துலிங்கம் !

திடீரென்று என்னவோ சிரிப்புச் சத்தம் கேட்கிறதே?

விதிக்குச் சிரிக்கத்தான் தெரியும்.

அவனுக்கோ அழத்தான் தெரிகிறது.

திசைகள் மாறின; மறுகின.

சிரித்தது யார் ?

விதியே தானா ?

அந்த விதி எங்கே ?

யாரையுமே காணோம் !

இப்போது அவனும் சிரிப்பைக் கக்கத் தலைப்படுகிறான்!

முட்ட நனைந்த பின் முக்காடு எதற்கென்றா?

சுருக்குக் கயிறு அதோ, அவன் கழுத்தை இறுக்கி முறுக்கத்தயாராகி விட்டது !

அவன் உந்திக் கமலத்திலிருந்து அழுதான். மனத்தின் அழுகையில், கண்களினின்றும் புதுவெள்ளம் பெருகியது; பெருக்கெடுத்தது. சுடுநீர் அல்லவா? சுடாதா, பின்னே ? ஏலே, புள்ளே! எம்புள்ளே அன்னக்கிளியோ!' தூண்டில் புழு இப்படித்தான் துடிதுடிக்குமோ ?

மகமாயி!

ஒன்று!....

இரண்டு!

மூன்று!....

"ஆ!"

அவன் வீரிட்டான்.

அவன், முத்துலிங்கமேதான் !

தூக்குக் கயிறு அறுபட்டு மண்ணில் விழுந்தவன் ஏறிட்டுப் பார்த்தான்.

சிறையினின்றும் விடுதலை பெற்ற பிறைக்கன்னி வெகு சுதந்திரமாக ஒளியை உமிழத் தொடங்கி விட்டது.

"ஆ! நீயாங்காட்டி ?"

நாணயக் குறுக்கலாகப் பூஞ்சிரிப்புச் சிதறுகின்றது! அன்னக்கிளிப் பொண்ணே!"

"ஊம்! ..." அவிழ்ந்து தொங்கி இடுப்பைத் தொட்ட கூந்தலுக்கு நடுவிலே, அவள் வதனம் முகிலிடைப் பிறைத் துண்டமென ஒளிர்ந்தது.

கூதல் !

விழுந்தவன் எழ வேண்டாமா ?

எழுந்தான்,

ஆனால், அவனது மீசையிலே மண் ஒட்டவில்லை ! அவன் : முத்துலிங்கம்.

பதட்டம் மூள எழுந்தவன், தட்டித் தடுமாறியவனாகக் கால்களைத் தரையிலே ஊன்றிக் கொள்ள முயற்சி செய்தபோது, நிதானம் தப்பி, அன்னக்கிளியின் மார்பிலே சாய்ந்து விட்டான். 'ஐயையோ!" என்று வீரிட்டு அலறினான், ஆடிப் புனலாய்க் கண்ணீர் ஓடத் தலைப்பட்டது. சுடுநீர் அது? சுட்டுப் பொசுக்கியது. திரை விரித்த விழி வெள்ளத்திற்கு ஊடே, அவளது பூக்கரங்களில் சுழன்ற 'தாம்புக் கயிறு' சுழல்கிறது. அவன் தவித்தான்; தடுமாறினான்; உருகினான்; உருக்குலைந்தான். "ஆ! நீயா ?.... அன்னக்கிளிப் பொண்ணே ; நீயா;" என்று கூப்பாடு போட்டான். வாசனை ஏறியிருந்த நாசித் துளைகள் புடைக்கின்றன.

அழுகை பாளை வெடிக்கிற பாவனையில் வெடித்துச் சிதறுகிறது.

அன்னக்கிளி விம்முகிறாள்.

நெற்றித் திட்டில், ரத்தத்தின் பிசிறு, நெற்றிப் பொட்டெனப் பளிச்சிட்டது.

முத்துலிங்கத்திற்குப் பித்து பிடித்து விட்டதா, என்ன? எட்டிப் பாய்ந்து, அன்னக்கிளியை ஒட்டி நெருங்கியவனாக, அவளுடைய குழல் கற்றைகளை வாரி அள்ளி நுகர்ந்தான். "ஐயையோ ?" என்று விண்ணும், மண்ணும் அதிர்ந்து குலுங்கிடக் கூக்குரலிட்டான்.

தாராடிக் கோயிலும் அதிர்ந்திருக்குமோ ?

"அன்னக்கிளிப் பொண்ணே !"

அவன் கதறினான்.

"அன்னக்கிளிப் புள்ளேன்னு கூப்பிடுங்க, மச்சானே!"

அவள் விம்மினாள்.

முடிச்சவிழ்ந்த கொட்டடி ரவிக்கையிலும் சுங்கடிச் ரத்தக்கறை மின்னுகிறது!

நரிகள் சிணுங்கின.

நெஞ்சோடு நெஞ்சம் தழுவி, முகத்தோடு முகத்தைச் சேர்த்துக் கெஞ்சியும் கொஞ்சியும் அவளை — அன்னக்கிளியை வாரி அணைத்துக் கொள்கிறான் அவன் — முத்துலிங்கம்! — "கொஞ்ச முந்தி நான் பலவந்தப்படுத்தி இன்பம் அனுபவிச்சது ஒன்னைத்தானா? ஒன்னையே தானாங்காட்டியும்?" என்று விக்கல் மேலிட, விம்மல் மேலிட வினவினான்.

"ஊம்," கொட்டினாள் அவள், ம்'.... ம்.... ஆமாங்க நேசமச்சானே! அதாலதான் ஒங்களைச் சாக வொட்டாமல், தடுத்துப் பூட்டேனுங்க. ஆசை மம்முத ராசாவே!" கற் பின் கனலாகச் சூடு தூள் பறக்கக் கதறுகிறாள்.

கூந்தலின் நெடியில் இன்னமும் அவன் கிறக்கம் தெளியவில்லை! "நானு பாவி! என்னைச் சமிச்சு எனக்கு "மாப்புக் கொடுத்துப்புட மாட்டியாடி, புள்ளே இருந் திருந்து என்னோட இஷ்ட தெய்வத்தையே பயங்கர மானதொரு சோதிப்புக்கு ஆளாக்க நேர்ந்துப்பூட்ட என்னோட பாழும் விதியோட பாவத்தை என்னான்னு செப்பட்டும்? .." ஓலம் கூடியது.

அவனுடைய கண்ணீரைத் துடைத்து விட்டாள் அன்னக்கிளி. தன் கண்ணீரையும் துடைத்துக் கொண்டாள். ஆசை மச்சானை அன்புடன் ஊடுருவினாள் "ஒங்களைச் சோதிக்சுப் பார்க்க எத்தனிச்சேன்! நானே சோதனைக்கு ஆளாகிப்புட்டேன்! ஆமாங்க, மச்சான்காரவகளே! ... அலறி அழுதாள்.

பிறைக்கும் கள்ள விழிப் பார்வை உண்டு!

அன்னப் பொண்ணே!

"புள்ளேன்னு விளியுங்க, மச்சானே!"

"....புள்ளே! ஊரறிய, நாடறிய ஒனக்கு மூணு முடிச்சுப் போட்டு ஒரு நல்ல புண்ணியத்தைக் கெலிப்போடவும், மானத்தோடவும் ரோசத்தோடவும் கட்டிக்கிடக் கனாக் கண்ட நான், ஊரறியாமல், நாடறியாமல் ஒரு பாவத்தை ஒனக்குச் செஞ்சுப்புட்டேனே, அன்னக்கிளியோ! என்னோட பாவம் என்னோடவே அழியட்டும்! என்னைத் தடுக்காதே புள்ளே!"

"அப்படின்னா, என் திட்டப்படியே என்னையும் சாக விட்டுப் பூடுங்க!"

"அன்னப் பொண்ணே, இப்பைக்கு என்னை என்னா பண்ணச் சொல்லுறே?"

'ஒங்கள்ள மூச்சுப் பறியாமல், என் பின்னே வரச் சொல்லுறேனுங்க, மச்சானே!

அன்னக்கிளி நடத்தாள்.

முத்துலிங்கம் தொடர்ந்தான்.

நிலவிலே, தாராடிக் கோயில் நீராடிக் கொண்டிருக்கிறது!....

"மச்சானே!"

"புள்ளே!"

"இந்தாங்க, மஞ்சள் தாலி; எனக்கு திருப்பூட்டுங்க?"

"ம்"

நரிப்பண்ணையின் மகிழ்ச்சி ஆரவாரம் மிஞ்சுகிறது.

"புள்ளே!"

"ஊம்!"

பூஞ்சிட்டுக் கன்னங்கள் ஜோடி சேர்ந்தும், ஜோடி சேர்த்தும் சிவந்து கொள்கின்றன.

நெற்றிப் பொட்டு, கண்ணுக்குப் புரிந்த விதியாகப் பளிச்சிட்டது!....

இருட்டிலே—பேய்த்தனமான அந்தப் பயங்கர இருட்டிலே, ஒரு புனிதச் சொர்க்கம் உருவாகிறது! 'உரு' காட்டுகிறது.

மயான அமைதியிலே, ஒரு மயமான அமைதி அணைகிறது. அணைக்கிறது.

"மச்....சானே !

"....புள்....ளே !

"நம்மளோட தமிழச்சாதிச் சமுதாயத்துக்கு நாம ரெண்டு பேருமே ஒரு நல்ல பாதையை நாயத்தோடவும், தருமத்தோடவும், சத்தியத்தோடவும், அன்போடவும் காண்பிக்கத் "தவறிப்பூட்டோம் ! — ஆனபடியாலே நாம செஞ்ச தப்புத் தவற்றுக்கு உண்டான தண்டனையை நாம ரெண்டுபேருமே விட்ட குறை – தொட்ட குறை இல்லாம அனுபவச்சுத் தீரவேண்டியது தான் நாய மாக்கும் ! ஆசையுள்ள மச்சானே ! அதான் தருமமும் கூட ! — தருமம் செலிச்சுப்பூட வேணாமுங்களா ? "

"ஓ' எம்புட்டுத் தெய்வத்தோட விதியேதான் எனக்கும் விதி ! .... ஆமா; புள்ளே ! ...."

பொழுது விடிகிறது ! ..

அதோ பார்த்தீர்களா ?

அழகான இரண்டு மரக்கிளைகளிலே, அழகான இரண்டு உடல்கள், அழகான சல்லாபத்துடன், அழகாகவே ஊசலாடிக் கொண்டிருக்கின்றனவே !

பாவம் !

பாவம் !

அழாதீர்கள் !

பாவம் !....

(முற்றும்)

# ஊர்வசி

## [1]

அழகு, தவக்கோலம் பூண்டிருந்தவேளை அது !

தன்னை மறந்த லயத்தின் கட்டுப்பாட்டுணர்வுடன் விமரிசனத்தின் எழுத்துக்களை உருவாக்கிக் கொண்டே யிருந்த அம்பலத்தரசன், எழுதி முடித்த தாள்களின் வரிசையில் மேலும்ஒருதாளை எழுதி முடித்து இணைத்து விட்டுத் தலையை நிமிர்த்திய போது, அவனிடமிருந்து ஆழ்ந்த பெருமூச் சொன்று வெளிப்பட்டது. நெஞ்சில் எழுந்த சலனத்தைச் செம்மைப்படுத்த முடியாமல் தவித்த அப்பெரு மூச்சுக்கு இதம் அளிக்கும் வகையில், அவன் புதிய உணர்வின் தெம்போடு அடுத்த சிகரெட்டைப் பற்றவைத்துப் புகையை இனம்புரியாத வெறியுடன் ஒரே மூச்சாக இழுத்துக் கலக்கினான்.

உள்ளடங்கிப்போன புகைச்சலின் விளைவாக, புகைச்சல் இருமல் வெளிப்பட்டது; இரண்டு மூன்று தரம் இருமினான். ஏற்கெனவே கலங்கிவிட்டிருந்த கண்கள் இப்போது இருமலின் காரணமாக மேலும் கலங்கின. விழிமுனைகளில் முத்துக்கோத்திருந்தது. உள்ளத்தின் படப்படப்பும், உடலின் ஆற்றாமையும் இன்னமும் அப்படியேதான் இருந்தன. மேஜைமீது அவன் பார்வை ஊர்ந்தது. எழுதப்பட்டிருந்த தாள்களின் அருகில் லோட்டா இருந்தது. லோட்டாவில் தண்ணீர் மிச்சம் இருந்தது. பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்குள்ளாக எத்தனை மிடறு தண்ணீர் குடித்துவிட்டான் அவன் !

இப்போதும் ஒருவாய் பருகினான். இடது கை விரலிடுக்கில் புதைந்து கொண்டிருந்த சிகரெட்டின் நெடி அல்லது வாடை அவனுக்கு உணக்கையாகவே இருந்தது.

மீண்டும் நெட்டுயிர்ப்பு.

உருவான - உருக்கொண்ட எழுத்துக்களை மறுபடி அவன் படித்துப் பார்க்க ஆசைப்பட்டான். வழக்கமாகத் தோன்றும் ஆசைதான் இது. எழுதிய விமரிசனத்தை ஒன்றிய இலக்கிய மனத்துடன் படித்து ரசிப்பதென்பது அவனுக்கு நிரம்பவும் பிடித்தமான செயல்; ஆகவே சிகரெட்டின் புகையை இழுத்துத் துப்பினான்; எரிந்த சிகரெட்டுத் துணடத்தை வீசினான்; 'க்ளிப்' போட்டிருந்த தாள்களை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டான்; மேஜை விளக்கின் வெளிச்சம் அதன் பாதத்தில் துல்லியமாகப் படர்ந்தது. அகில இந்தியக் காங்கிரஸ் தலைவரை ருஷ்யப் பிரதமர் இன்முகம் காட்டி வரவேற்ற காட்சியில் வெளிச்சம் விழ தப்பவில்லை !

வெண்ணிறச் சுவரில் மகாத்மா கொலுவீற்றிருந்தார்!....

தான் விமரிசகனாக அமைந்து எழுதிய அந்த நாடக விமர்சனத்தை இப்போது ரசிகனாக அமைந்து படிக்கத் தொடங்கினான் அம்பலத்தரசன். மேடையில் அழகின் நிலவாகத் தோன்றிய கதாநாயகி குமாரி ஊர்வசி சிரித்த சிரிப்பும் அழுத அழுகையும் அவனுள் திரும்பவும் சலனத்தை உண்டாக்கிவிட்டன. விமரிசனத் தாள்களை அப்படியே மேஜையில் போட்டுவிட்டு. அறையிலிருந்து வெளிப்புறம் வந்தான்.

வான் பிறை. நிலவையும் அழகையும் இயற்கையின் சீதனமாக உலகத்துக்கு வாரி வழங்கிக் கொண்டிருந்தது.

காற்று சுகமாகத் தவழ்ந்தது.

அமைதி படிந்து, படர்ந்திருந்த நேரம்.

ஆம்; அழகு தவக்கோலம் பூண்டிருந்த வேளை அல்லவா ?

தறிக்கெட்டுச் சுழன்ற அவனது உள்ளம், இயற்கையின் மோகனக் கவர்ச்சியில் முழுமையாக ஒட்ட மறுத்தது. திரும்பத் திரும்ப, நாடக நாயகிதான் அவன் இதய அரங்கத்தில் தோன்றிச் சுழன்று கொண்டிருந்தாள். 'ஊர்வசி' எத்துனை இயற்கையாக நடித்தாள் ! — கதைத் தலைவி சுந்தரியாகவே மாறி விட்டாளே ? பரிதாபத்துக்குரிய பெண் அவள் — கதையில் அனுதாபத்துக்குரிய பெண் அவள் — நாடகத்தில் !' அவன் மனம் தனக்குத்தானே பேசிக் கொண்டது.

பேச்சின் ஒலியும் எதிரொலியும் தடம் தேய்வதிற்குள் அவனுக்கு அன்று காலை வந்த அன்னையின் கடிதம் நினைவுக்கு வந்து விட்டது. ஏதேதோ சிந்தனை விரிசலுடன் ஓர் அரைக்கணம் 'அவன் தவயோகியின் நிலைப்பில் கண் மூடி நின்றான், நிலவின் சீதளத்தை அவனால் நன்கு உணர முடிந்தது.

டெலிபோன் மணி 'கண கண' வென்று சத்தமிட்டது. தவம் கலையப் பெற்ற பரிதவிப்புடன், கண்களைத் திறந்தான். அம்பலத்தரசன். இமைகள் படப்படத்தன

'மணி பத்து இருபது' என்று சொன்னக் கைக்கடிகாரத்துக்கு மானசீகமாக நன்றி சொல்லிவிட்டு, அழைத்த தொலை பேசியை நாடி விரைந்தான் அம்பலத்தரசன், ஸ்பீக்கிங் ஹியர் ஓ..! 'பூ' காரியாலயங்களா! சந்தோஷம் ட்ராமா ரெவ்யூதானே ? எழுதி முடிச்சிட்டேனே ! ஒரு க்ளான்ஸ் பார்த்திட்டுக் கொண்டு வரலாம்னு ஸார் .... ஆமாம், விமர்சனத்தோடதான் ! ... ஒகே !'' பேசி முடித்தான். செய்தி வாங்கியை அதற்குகந்த இருப்பிடத்தில் பொருந்திய சத்தத்தை அவன் காதுகள் ஏற்றுக்கொண்ட அதே நேரத்திலே, மாடிக்கதவுகள் 'படபட' வென்று

தட்டப்படும் அரவத்தையும் அவன் காதுகள் ஏற்றுக் கொள்ளவேண்டிய ஓர் இக்கட்டு உருப்பெற்றது. சலனம் அரவமாய் நெளிந்தது.

'நேரம் கெட்ட நேரத்திலே யார் வந்து இப்படி அவதி யோடு கதவைத் தட்டுகிறார்களோ, தெரியவில்லையே! 'பூ' விலிருந்து ஆபீஸ் பையன் வருவதற்கும் மார்க்கம் இல்லை! பின் யாராக இருக்கக்கூடும்? சீமான், மகன் பூமிநாதனாக இருக்கலாமோ? அவர் வில்லனாக நடித்த நாடகத்தைப் பற்றி என்ன விமர்சனம் எழுதியிருக்கிறேன் என்று கேட்டறிய வந்திருப்பாரோ? அவர் ரொம்பவும் மென்மையாக அல்லவா கதவைத் தட்டுவார்? மென் மையை உணர்ந்த நல்லவராயிற்றே அவர்? யாருக்கோ, இவ்வளவு அவசரமாகக் கையை இடிக்கிறார்கள்!— இப் படிக் கதவை உடைப்பதை வீட்டுக்காரர் கேட்டால், உயிரையே விட்டு விடுவாரே? — அவர் உயிரைப் போக்கடிக்கச் செய்து விடலாகாது! பாவம்! உயிரைக் கொடுத்து இக்கட்டடத்தைக் கட்டிய அருமை அவருக்குத் தான் தெரியும்! ...' என்று ஒரே வினாடியில் ஒரு சில நினைவுகளைப் பின்னிய வண்ணம், மாடிப்படிகளின் வழியை அடைந்தான்; அவன் தாழ் விலக்கினான்

என்ன விந்தை இது!

நாடகக்காரி ஊர்வசி தலைவிரி கோலமாக நின்று கொண்டிருந்தாள்! நாடகத்தில் வில்லனால் கற்பழிக்கப் பட்ட கட்டத்திலே தோற்றம் தந்த அதே கோலத்துடன் காட்சி தந்தாள்! நாடகம் முடிந்து நெடுநேரம் ஆகி விட்டதே! பின் ஏன் இந்த நிலை அவளுக்கு ஏற்பட்டது? வேடத்தை—புனை வடிவத்தை மாற்றிக் கொள்ள மறந்து விட்டாளா, என்ன?

"ஐயா!...."

அம்பலத்தரசன் அவனை ஏறிட்டு நோக்கினான்.

குமாரி ஊர்வசி ஆத்திரம் பொங்கிப் புரள நின்றாள். பட்டுக் கன்னங்கள் கன்றியிருந்தன. அங்கங்கே நகக்கீறல்கள் சில தட்டுப்பட்டன. வேடம் புனைய உதவிய அரிதாரத் தூள் காதோரங்களில் இன்னமும் திட்டுத் திட்டாகத் தெரிந்தது.

''என்னம்மா?'' என்று பரிவுடன் விசாரித்தான் அவன்.

''ஐயா ! நாடகக் கதையிலே பொய்யாக ஒருவன் – ஒரு வில்லன் என்னைக் கற்பழிச்சான் ! இப்போது நிஜமாகவே ஒருவன் என்னைக் கெடுத்திட்டானுங்க ஐயா!'

அவள் கையிலிருந்து அழகான டைரி ஒன்று கை நழுவியது.

அம்பலத்தரசன் மெய் விதிர்த்து நின்றான். 'ஐயையோ! அப்படியா ! என்று பதட்டத்தோடு கேட்டான். அவன் குரலில் கட்டுக் கடங்காத நிலையும், ஆத்திரமும் இருந்தன. கேட்டுவிட்டு, மீண்டும் அவளுடைய முகத்தைப் பார்த்தான் அவன். இமைகள் துடித்தன.

பால் வழிந்த நிலவில் குனிந்த அந்தப் பால் வழியும் வதனத்தில், இப்போது வைராக்கியத்தின் சுடர் ஒளி காட்டித் திகழ்ந்தது. அடிபட்ட பெண்மானின் வேதனையையும் அவள் முகம் மறைத்து விட முடியவில்லை. எழில் செழித்த அவளது மார்பகம் எம்பி எம்பித் தாழ்ந்தது.

''உங்கள் அறையென்று தெரிந்துதான் தப்பியோடி வந்தேன்....ஆமாம், என்னுடைய மானத்தைப் பறிகொடுத்திட்டு, உயிருக்குப் பயந்துதான் இப்போது ஓடோடி வந்திருக்கேன்! '' என்று செருமினாள் ஊர்வசி. இமை வரம்புகளில் ஈரம் தட்டியது; கசிந்தது; வழிந்தது.

அவளைப் பார்க்கப் பார்க்க, அம்பலத்தரசனுக்கு வியப்பு ஒரு பக்கம் ஏற்பட்டது ! வேதனை மறுபுறம் உண்டானது. "இப்போது நான் உங்களுக்காக என்ன செய்ய வேணும். ஊர்வசி?" என்று பாசத்தோடு வினவினான் அவள் தன்னிடம் எதிர்பார்த்து வந்த உரிமையின் — இனம் விளங்காத உரிமையின் - உறவு பிரதிபலிக்கும் வகையில் அவன் பேச்சு அனுசரணை காட்டத் தவறவில்லை.

ஊர்வசி நளினமாகச் சிரித்தவண்ணம் அவனை ஆழ்ந்து நோக்கினாள்.

அந்தச் சிரிப்பின் நளினம் அவனுக்கு மேடை நாயகி ஊர்வசியின் ஒயில் நகையை நினைவூட்டியது. ஓர் அரைக் கணம் அவன் தன்னை மறக்க வேண்டியவன் ஆனான்.

சிரிப்பு அலையலையாக விரியத் தொடங்கியது

அவன் தன்னுணர்வு எய்தினான்

"மிஸ்டர் அம்பலத்தரசன்! நீங்க இன்னைக்கி ராத்திரி நடந்த நாடகத்துக்கு வந்திருந்தீங்க! மேடை நாடகத்தில் நான் கற்பழிக்கப்பட்ட போது, அந்தத் துன்பம் தாளாமல் அம்பிகையைச் சரண் புகுந்தேன். பிற்பாடு, நான் தற்கொலை செஞ்சுக்கிட எண்ணி கடலலைத் தஞ்சம் அடைஞ்சேன்! .. ஆனால் இப்போது, கற்பழிக்கப்பட்ட அபாக்கியவதி நான் உங்க முன்னே நிற்கிறேன்! எனக்குத் தஞ்சம் தர அலையெறி கடல் இப்போதும் ரெடியாகக் காத்துக்கிட்டு இருக்குது! .. ஆனா, எனக்கு ஆபத்துக்கு கைகொடுக்க அப்போது முன் வாராத அதே தெய்வம் இப்போதும் முன் வரவில்லை! இப்போதுள்ள நிலையிலே எனக்கு நானே காப்பாக ஆக வேண்டுமென்ற என் கனவை விதி அழித்து விட்ட நிலையிலே, இந்த ஒரு முடிவுக்கு நான் வருவதைத் தவிர வேறு மார்க்கம் ஒண்ணுமே எனக்கு மட்டுப் படலே!

'வாழ்ந்து காட்டுவதற்குத்தான் வாழ்க்கை! அப்படின்னு ஒரு அழகான—உண்மையான—இயல்பான ஒரு வசனத்தை எனக்கு நாடகத்தின், தொடக்கத்திலே நிழல் தந்த நல்லவர் ஒருவர் பேசினாருங்களே, உங்களுக்கு நினைப்பிருக்குமே ! அந்த மாதிரியேதான், இப்போது என் மனசும் முடிவு செஞ் சிருக்குது. வாழ்க்கை என்கிறது வாழ்ந்து காட்டக்கூடிய ஒரு கடமை, ஒரு சந்தர்ப்பம், ஒரு பயன் என்கிறதை எனக்கு நானே செய்து காட்ட செய்து பார்க்கப் போகிறேன்! இந்த ஒரு சோதனைக்கு நீங்கதான் புகல் தரவேணும் உங்களால் தான் எனக்கு அடைக்கலம் தரவும் இயலும், அம்மாதிரி யான ஒரு பக்குவமும் பரிவும் பாசமும் கடமையும் உங்களு டைய மனத்துக்குத்தான் உண்டு! உங்களுடைய மனிதாபி மானத்துக்குத்தான் உண்டு!.... உங்களுடைய மனிதத் தன் மைக்குத்தான் உண்டு! ''

உணர்வுகளின் செறிவு துலங்க உணர்ச்சி வசப்பட்டுப் பேசினாள் ஊர்வசி, மூச்சு வாங்கியது.

அப்போதைக்கு அவள் பேச்சு முடியட்டுமென்று காத் திருந்தாற்போல, டெலிபோன் மறுமுறையும் கூப்பாடு போட்டது.

சலனத்தின் உச்சத்திற்குக் கொணர்ந்து நிறுத்தப்பட்ட அம்பலத்தரசன், புதிய சிகரெட் பெட்டியைப் பிரித்து ஒரு சிகரெட்டை எடுத்துக்கொண்டு எடுத்த சிகரெட்டைப் பற்ற வைக்க வேண்டுமென்னும் நினைவற்று, தொலைபேசியை நெருங்கினான்.

'பூ' அலுவலகத்தினின்று வந்த நினைவூட்டல் குரல் அது.

அவன் திரும்பினான். ''என்னைத் தயவுசெஞ்சு மன்னிச் சிடுங்க. வந்த உங்களை உட்காரச் சொல்லக்கூட ஞாபக

மின்றி, பேசிக்கிட்டிருந்திட்டேன், உட்காருங்க. இதோ ஒரு நொடியிலே பாரிஸ் கார்னர் வரை போய்த் திரும்பிடு றேன், மிஸ் ஊர்வசி.''

ஊர்வசி சலனத்தின் பிசிறு எதுவும் தடம்காட்டாத ஒரு பார்வையை நம்பிக்கையோடு அவன்பேரில் வீசி விட்டுப் புத்துணர்வுடன் மூரல் சிந்தினாள். ''ஆல் ரைட்! யூ மே டேக் யுவர் ஓன் டைம்'' என்று விடை அளித்துவிட்டு, கூடை நாற்காலியில் வெகு சுவாதீனத்தோடு குந்தினாள் ஊர்வசி. பூக்கள் மலர்ந்துசிரித்த மாம்பழ வர்ண நைலக்ஸ் புடவை யைச் சீர்ப்படுத்திக் கொண்டாள்.

அவளை நோக்கி, மீளவும் அதிசயப்பட்ட நிலையில் பார்த்துவிட்டு, விமரிசனத் தாள்களோடு அங் கிருந்து கிளம்பினான் அம்பலத்தரசன் ''ஊர்வசி, கதவை நன்றாகத் தாளிட்டுக்கங்க'' என்று எச்சரித்தான் அவன். சுருட்டை மயிர்கள் சில நெற்றித் திட்டில் தட்டின்றிப் புரண்டன.

''கதவு திறந்தே கிடக்கட்டுங்க. நான் உங்க ரூமுக்குக் காவல் இருப்பேன், நாணயத்தோடு'' என்றாள் அவள். ஓர் உறுதிப்பாடு மிளிர்ந்தது பேச்சில். கழுத்துச் சங்கிலி மார் பிடை பதிந்திருந்தது.

தீப்பெட்டி கிடைத்து விட்டது.

இதழ்க்கங்கில் நகை மிளிர அந்நகை இணைப்பில் சிகரெட்டு புகை இழைய, அங்கிருந்து புறப்பட்டான் அம்பலத்தரசன்.

முத்துமாரி செட்டித் தெரு வழி விட்டது.

# [2]

'பூ' என்னும் நாள் இதழின் அலுவலகம்—

அங்கே அடியெடுத்து வைத்த அம்பலத்தரசனை வெகு ஆவலோடு வரவேற்றவர்கள் இருவர். அவர்களில் முதல் நபர், 'பூ' ஆசிரியர் பூவேந்திரன். இரண்டாம் ஆள் பூமிநாதன்.

இருவருக்கும் ஒருசேர வணக்கம் செலுத்தியபின் ஆசனத்தில் அமர்ந்தான் அம்பலத்தரசன்.

விடிந்ததும் வெளிப்படுத்த வேண்டிய 'பூ' வின் கலைப் பகுதியில் 'வாழ்வதற்கே' என்ற நாடகத்தின் விமரிசனத்தையும் சூடுமாறாமல் சேர்த்துவிட விரும்பினார் ஆசிரியர். அவர் வசம் தான் எழுதிக் கொணர்ந்திருந்த நாடகக் கருத்துத் தாள்களைச் சேர்ப்பித்தான் அம்பலத்தரசன்.

தன் பக்கம் திரும்பிய அம்பலத்தரசனை ஆர்வத்தோடு நோக்கிய பூமிநாதன், தன் முகத்தை மஸ்லின் வேஷ்டி முனை கொண்டு துடைத்துக் கொண்டு, ''உங்களுக்காக நான் ரொம்ப நேரம் காத்துக்கிணு இருக்கேன், மிஸ்டர் அம்பலத்தரசன்'' என்று தெரிவித்தான். தொடர்ந்து, ஆமா உங்கள் முகம் என்னவோ போலக் களைத்துச் சளைத்து இருக்கே, என்ன விசேஷம்?'' என்று கேட்டான்.

அம்பலத்தரசன் மெல்லிய சிரிப்பின் இழையை நெளிய விட்டவனாக, ''ஒன்றுமில்லையே நாடகம் பார்த்த அசதியாக இருக்கலாம். வேறு விசேஷம் எதுவும் இல்லை'' என்று சொன்னான். ஜிப்பாவின் கிழக்கரையை எடுத்து ஒருமுறை தன் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

''உங்கள் போர்ஷன் குறைவாக இருந்தாலும், ரொம்பவும் கச்சிதமாகச் செய்து விட்டீங்க, பூமிநாதன்'' என்று தன் பாராட்டுதலைத் தெரிவித்தான் அம்பலத்தரசன்.

''ரொம்ப தாங்ஸ், ஸார்! உங்க பாராட்டும் தூண்டுதலும் தான் எனக்கு எப்போதுமே உற்சாகம் கொடுத்து வருது. நீங்க ரெண்டு வரி எழுதிட்டா, அதோட பலனே பிரமாதமாக அமைஞ்சிடும். இந்த மட்டுக்கும் எனக்கு நிம்மதிதான்.''

''நீங்க கற்பழிச்ச அந்தக் கட்டத்திலே ரொம்பவும் தத்ரூபமாய் நடிச்சிட்டீங்க உங்க நடிப்பு ரொம்பவும் ரியலிஸ்டிக்காக இருந்துச்சு. ரெண்டு வரி என்ன, நாலுவரி உங்களைப் பற்றி எழுதியிருக்கேன் காலம்பற பேப்பரிலே படியுங்க. நீங்க இன்னும் சந்தோஷப்படுவீங்க.''

''அப்படியா? ரொம்ப நன்றிங்க, அம்பலத்தரசன்!''

''நாடகத்திலே கதையம்சம் அழுத்தம் குறைஞ்சிருந்திச்சு. ஆனாலும், தொன்று தொட்டு வளர்ந்துக்கிட்டு வருகிற நாடகக் கலைக்கு உயிரும் ஊட்டமும் கொடுப்பதில் உங்க பங்கை நீங்களும் செய்திருக்கிறதுக்காக நானும் உங்களுக்கு நன்றி தெரிவிக்கத்தான் வேணும். நாடகக் கலை வளரவில்லைன்னு வழக்கமாய்க் குறை சொல்லும் ஒரு கோஷ்டிக்கு இந்த நாடகமும் கட்டாயம் ஒரு நல்ல தெளிவையும், ஒரு பயனுள்ள பலனையும் உண்டாக்குமென்கிறது என்னோட சொந்த அபிப்பிராயம்!''

''அப்படியா?'' மைனர் செய்னை நெருடி விட்டுக் கொண்டான், பூமிநாதன்.

''ஆமாம், நிச்சயமாகத்தான்!''

''பிறரைக் குறை சொல்லித் தாங்கள் உயர நினைப்பவர்கள் போலிருக்கு அவர்கள்,''

"ஆமாம்!

"அப்படியானால், இவங்களையும் குற்றப் பரம்பரை லிஸ்டில் சேர்க்க வேண்டியதுதான் என்று சொல்லுங்க' என்று ஒரு போடு போட்டான் பூமிநாதன்.

இதற்குப் பதில் எதுவும் சொல்லாமல், பூமிநாதனின் அபிப்பிராயத்தை ஏற்பவன் போன்று, விநயமாகச் சிரித்து வைத்தான் அம்பலத்தரசன். அவன் பூமிநாதனைத் தலை உயர்த்திப் பார்த்தபோது, பூமிநாதனின் முகம் இருந்திருந்தாற்போல சிந்தனையின் பிடியில் சிக்கியிருக்கக் கண்டான்.

"என்ன மிஸ்டர் பூமிநாதன்! பலத்த சிந்தனையில் அமிழ்ந்திட்டீங்க?" என்று கேட்டான்.

சிந்தனையின் கலவரம் மாறினாலும், அவனது கண்களின் கலக்கம் மாறவில்லை என்பதை அம்பலத்தரசனால் கணிக்கக் கூடாமல் இல்லை.

மறந்து விட்டேனே! மிஸ் ஊர்வசியின் நடிப்பு எப்படி இருந்துச்சுங்க, ஸார்?"

"பாவம், பரிதாபத்துக்குரிய பெண் அவள்!" என்றான் அம்பலத்தரசன்.

பூமிநாதன் ஏதோ பதட்டம் அடைந்தான். பதட்டத்தின் சூடு மாறாமல், அம்பலத்தரசனை ஊடுருவி நோக்கினான்.

"நீங்க என்ன சொல்றீங்க?" என்று கேள்வியைச் சொடுக்கினான் அவன். டெர்லின் சட்டையின் வெள்ளை நிறம் குழல் விளக்கில் மேலும் மின்னியது.

அம்பலத்தரசனுக்கு அப்பொழுதான் தன் நா தடுமாறி விட்ட தவறு புரிந்தது. தவற்றை உணர்ந்த சிந்தையோடு, "ஆமாங்க! நாடகத்திலே ஊர்வசியின் நிலை அப்படித்

தானே ஆகிவிட்டது'' என்று சமாளித்துக் கொண்டான். பிறகு, ஊர்வசியின் நடிப்பைப் பத்திச் சொல்லணும் இல்லீங்களா? ரொம்பவும் அற்புதமாய் நடிச்சாங்க; நீங்க ஊர்வசியைக் கெடுக்க எத்தனம் செய்த போதும், அந்தக் கண்டத்திலிருந்து தப்பிக்க அவங்க பட்டபாடும், பின்னாலே அந்தப் பழியிலிருந்து தப்ப வழியில்லாமல் கெடுக்கப்பட்டதை அறிஞ்சதும் அவங்க தன்னோட நிலைமையை எண்ணி மூச்சு விடாமல் கண்ணீர் வடிச்சதும் ரொம்பவும் இயல்பாய் இருந்திச்சு. அந்தப் பயங்கரக் காட்சிகளைக் கண்டதும் எனக்கு உங்களைக் கொன்று போட்டுப்பிட வேணும்னு ஒரு கொடுமையான ஆத்திரம்கூட வந்திச்சு. அவ்வளவு தொலைவுக்கு என் மனம் சலனம் அடைஞ்சிடுச்சு. ஒரு பெண்ணைத் கற்பழிக்கிறதும், ஒரு பெண் கற்பழிக்கப்படுறதும் எத்துணை பெரிய கொடுமை என்கிறதை நிதர்சனமாய் என்னாலே காண முடிஞ்சது.''

''நல்லவேளை; நான் பயந்து விட்டேன், சற்று நேரத்துக்குள்ளே! வாஸ்தவமாகவே, எனக்கு அந்தக் கட்டத்தில் நடிக்கவே மனசில்லே. கலையார்வத்தினாலே தான், ஊர்வசியைக் கற்பழிக்கும் பாகத்தை ஏற்க வேண்டியிருந்துச்சு.''

பூமிநாதனின் கண் கடையில் ஈரம் இருந்தது.

''நல்ல உள்ளம் படைச்ச உங்களுக்கு ஒரு சோதனை போலத்தான் அந்த நிகழ்ச்சி — அந்த நடிப்பு — அமைந்திருச்சு. கலையம்சத்தைப் பொறுத்த மட்டிலே உங்களுக்கு அந்நடிப்பு ஒரு வெற்றியாகவே அமைந்திடுச்சுங்க, மிஸ்டர் பூமிநாதன்'' என்று நிறுத்தினான் அம்பலத்தரசன்.

பூமிநாதன் பேசிய பேச்சுக்கு இயந்திர ரீதியாகப் பதில் சொன்னானே தவிர, அவன் மனத்தில் சற்று முன்னம் தன் அறையில் நிகழ்ந்த அந்த 'அடைக்கலக் காதை'யின்

நினைவும், நிழலும் தான் பிரதானமாக இருந்து வந்தன. ஏதேதோ சிந்தனையின் சிதறல்கள் அவனது உள் மனத்தை ஆட்டிப் படைக்கத் தொடங்கி நிமிஷங்கள் பல கடந்து விட்ட உண்மையை அவன் அறிந்திராதவனா, என்ன ?

அந்தக் கட்டத்தில் உலக உருண்டை எவ்வளவு அந்தரங்கமாகச் சுழல்கிறது !

மேல்விட்டத்தில் சுழன்று கொண்டிருந்த மின் விசிறியின் சன்னமான ஒரு வகைச் சத்தத்தைக் கடந்து, "மிஸ்டர் அம்பலத்தரசன்" என்ற குரல் கேட்கவே அம்பலத்தரசன் திரும்பினான் ; அழைத்த ஆசிரியரின் பக்கமாக நிமிர்ந்தான்.

"உங்க ரெவ்யூ ரொம்பவும் க்ளாஸாக இருக்குறதுங்க."

"ரொம்ப நன்றிங்க எடிட்டர் ஸார். நாடகமும் க்ளாஸாக இருந்திச்சு. என் விமர்சனமும் அதையொட்டி அமைந்திடுச்சுங்க" என்று வழக்கம்போலவே தன்னடக்க மாகக் கூறினான் அம்பலத்தரசன்.

"மிஸ்டர் அம்பலத்தரசனுக்கு இயல்பாகவே இளகிய மனசு ; கல் மனத்தையும் கரைக்கச் செய்யக்கூடிய நாடகக் கதை அம்பலத்தரசனின் இரக்க நெஞ்சை மேலும் உருக்கி யிருக்க வேணும்" என்று குறுக்கிட்டான் பூமிநாதன் — 'இரட்டைக் குரல்' மாறிவிட்டது.

அப்பேச்சு அம்பலத்தரசனுக்குப் புல்லரிப்பை உண்டு பண்ணியது. அவன் கண்கள் கலங்கின ; இதயம் மேலும் நெகிழ்ந்தது 'இரக்கம் என்பதே ஒரு பெருஞ் சோதனை தான். அதனால்தான் எனக்கென்று இந்தச் சோதனையை விதி ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றதா ? தெய்வமே அந்த அபலை ஊர்வசியைக் காப்பாற்று !'

'ரோட்டரி' இயங்கிய சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. இனியும் அவனால் காலந் தாழ்த்த இயலாது. ஆகவே புறப்பட்டான்.

''இருங்க ; நம்ம டாட்ஜிலேயே போகலாம். வழியில் உங்களை ட்ராப் செய்கிறேனுங்க'' என்று மொழிந்தான் பூமிநாதன். பவ்யமாக வேண்டினான் அவன்.

பூமிநாதனின் உபசாரம் அவனுக்குத் தலைக் கிறு கிறுப்பை உண்டாக்கியது. 'தலைவலி போய் திருகுவலி வந்த கதை'யாக ஆகிவிடுமே! பூமிநாதனோடு புறப் பட்டால் அறையின் வாசலில் இறக்கி விட்டுவிட்டு, அத்துடன் போக மாட்டாரே பூமிநாதன்! அறைக்கும் வந்து விடுவாரே! வந்தால், இங்கு அடைக்கலப் பொருளாக இருக்கும் குமாரி ஊர்வசியையும் அல்லவா அவர் பார்க்க நேரிடும்? ஊஹூம், வேண்டாம் இந்தத் தலைவேதனை! என்னைப் பற்றி அவர் ஐயப்படுவது இருக்கட்டும்! ஆனால், ஊர்வசியின் நிலைமையும் அல்லவா தர்மசங்கடமாகி விடும். ஊஹூம், வேண்டாம் இந்த விஷப் பரீட்சை!

பூமிநாதன் பற்ற வைத்த சிகரெட்டுடன் கிளம்பத் தயாராக எழுந்து காரின் அருகே வந்து, ''புறப்படலாமா ஸார்?'' என்று கேட்டான். சட்டையைத் தூக்கி விட்ட போது, அவனது மார்புப் பகுதியில் பெரிய ரத்தத் தழும் பொன்று தெரிந்தது.

''காலம் கடந்திட்டுது நீங்க புறப்படுங்க. நான் 'காலி'யை ஒரு க்ளான்ஸ் பார்த்திட்டுத்தான் வரவேணும்'' என்று பொய் சொன்னான் அம்பலத்தரசன்.

''அப்படியானால், நானும் வெயிட் பண்ணுறேனே! உங்கள் விமர்சனத்தை நானும் சூட்டோடு சூடாகப் பார்த்த மாதிரியும் ஆகிடுமே'' என்று தெரிவித்தான் பூமிநாதன். கழன்று விட்டிருந்த பொத்தானைப் போட்டுக் கொண்டான் அவன்.

மீள முடியாத தவிப்பில் சிக்கிக் கொண்டான் அம்பலத் தரசன். மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் ஒரு கணம் திண்டாடிப் போனான் அவன்.

அவனுடைய தவிப்பைக் கண்டு மனம் இளகிய ஆண்டவன் அந்நேரத்தில் அங்கு பூமிநாதனின் தந்தை ஸ்ரீமான் சாந்தமூர்த்தியை அனுப்பி வைத்து, அம்பலத்தரசனுக்கு விடுதலை அளித்தான்!

"ட்ராமா முடிஞ்சு ரொம்ப நேரமாகிட்டுதே! உன்னை எங்கெல்லாம் தேடுகிறது, தம்பி?" என்று வருந்தினார் சாந்தமூர்த்தி.

விடை பெற்றான் பூமிநாதன்.

சாந்தமூர்த்தியின் 'பாண்டியாக்' முன்னே செல்ல பூமிநாதனின் 'டாட்ஜ்' பின்னே சென்றது.

'கடவுளே!' என்று கிளம்பினான் அம்பலத்தரசன், வேர்வை ஆறாகப் பெருகிக் கொண்டிருந்தது!

சீதளத் தென்றல் வீசியது!

நிலவு சிரித்துக்கொண்டே இருந்தது.

## [3]

இந்தச் சோதனைகள் விதிக்குச் சொந்தமா?—இல்லை, தெய்வத்திற்குத்தான் உரிமையா?

தவிர்க்க முடியாத ஒரு விபத்துமாதிரி அமைந்துவிட்ட அந்த சோதனையைச் சமாளித்தாக வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தோடு, அம்பலத்தரசன் மாடியிலிருந்த தன் இருப்பிடத்தை அடைந்தான். திறந்திருந்த மாடியின் வழியை அடைத்து வரத் திரும்பி மீண்டான்.

அறைக் கதவுகள் திறந்தபடியே இருந்தன.

"மிஸ் ஊர்வசி" என்று கூப்பிட்டான் அவன்.

எடுத்த எடுப்பில் அவனது பார்வைக்கு இலக்கானது அவளுடைய ஒயில் மண்டிய முதுகுப்புறம்தான். இடைவெளி விட்டிருந்த முதுகுப் பகுதியின்மேல் வசமாக ஒரு பெரிய நகக்கோடும் தென்பட்டது. நிலாக்கோடு அந்த நகக்கோட்டில் அழகாக விழுந்திருந்தது, கழுத்துச் சங்கிலியின் தங்கச் சரம் வரம்பு கட்டியிருந்தது.

அவன் கொடுத்த குரல் அவளுக்குக் கேட்கவில்லை போலும்!.

அவள் தன்பாட்டில் என்னவோ எழுதிக் கொண்டிருந்தாள்.

அவன் மூச்சு விடாமல் அறைக்குள் நுழைந்து, அங்கு கிடந்த ஒரு பிரம்புச் சோபாவில் உட்கார்ந்து கொண்டான். காலடியில் விழுந்துக் கிடந்த அன்றையச் செய்தித் தாளை எடுத்துக் கண்களில் ஒற்றிக்கொண்டு அதை மேஜையின் மறு ஓரத்தில் பதமாக வைத்துவிட்டு, ஊர்வசியைப் பார்த்தான். இன்னும்கூட அவன் வந்ததையோ, அல்லது வந்து அமர்ந்ததையோ அவள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அவள் சிந்தை பூராவும் அவள் செயலிலேயே கட்டுண்டிருந்திருக்க வேண்டும்!

எழுதிய தாளின் அடியில் 'எஸ் ஊர்வசி' என்று கையெழுத்துச் செய்ததை அவன் கண்டான்.

"குமாரி ஊர்வசி" என்று மெல்லிய குரலெடுத்துக் கூப்பிட்டான் அம்பலத்தரசன்.

அவள் தலையை உயர்த்தி அவனை நோக்கினாள். "குமாரி ஊர்வசி!' என்று வேதனையின் விரக்தியுடன் தனக்குத் தானே ஆற்றாமையோடு சொல்லிக் கொண்டாள். பிறகு, குரலில் சற்றே அழுத்தத்தைக் கூட்டி, "நீங்க வந்து நேரமாச்சோ?" என்று கேட்டாள் அவள்.

தான் வந்து சில வினாடிகள் தாம் ஆகியிருக்குமென்று மறுமொழி உதிர்த்தான் அவன். சொல்லிவிட்டு அவன் அவளைப் பார்த்த போது, சரிந்து விழுந்த மாரகச் சேலையை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தாள் அவள். சோலி மினு மினுத்தது. அவன் கண்கள் தாழ்ந்தன. அதே நேரத்தில், அவள் நயனங்களும் கீழே இறங்கி மேலே உயர்ந்தன.

''மிஸ்டர் அம்பலத்தரசன்!''

''சொல்லுங்கள், குமாரி ஊர்வசி!'

''ஐயா, தயவு செஞ்சு என்னை ஊர்வசியென்றே அழைங்க இனி!'

சற்றுமுன் அழைத்த அழைப்பிலிருந்த சத்து இப்போதைய வேண்டுதலையில் வடிந்திருந்தது. அவன் பெருமூச்சோடு 'ஆகட்டும்' எனச் சொல்லி, அவளை நன்றாகப் பார்வையிட்டான். அவள் அங்கு வந்தபோது, அவள் முகம் காட்டிய அந்தச் சலனம் இப்போது மறைந்து விட்டிருக்கக் கண்டான் அவன். அந்நிலை அவனுக்கு ஓரளவு ஆறுதலாகவும் இருந்தது. அமைதியையும் ஓரளவுக்கு அக்காட்சி கொடுத்திருக்கவும் கூடுமே!

''நீங்க சாப்பிட்டீங்களா, என்ன?' என்று விசாரித்தாள் ஊர்வசி, பசுங்கிளியின் செங்கனி வாய்ச் சிவப்பு அவளுக்குச் சொந்தமான இதழ்களில் ஒட்டியிருந்தது.

''நான் உங்ககிட்டே கேட்க வேண்டிய கேள்வியை இப்போது நீங்க என்கிட்டே கேட்கிறீங்க' நான் நாடகம் முடிஞ்சு வருறப்பவே பாலும் பழமும் பிராட்வேயில் சாப்பிட்டிட்டேன் உங்களுக்கு இப்போது தேவை எதுவென்று சொல்லுங்க' என்று கேட்டான்

''எனக்கு இப்போ தேவையானது உங்க அன்பு தான்!'

''அந்த அன்பு உங்களைப் பொறுத்த மட்டிலே எப்போதுமே உங்களுக்குக் கிடைக்கும்'!

''ரொம்ப நன்றிங்க. உங்க அன்பை இப்போதுதானா நான் அறிஞ்சிருக்கேன்!''

''சரி, இப்போ உங்களுக்குப் பாலும் பழமும் வாங்கி வருகிறேன்'' என்று சொல்லி, பிளாஸ்கை எடுத்தான் அம்பலத்தரசன்.

''நீங்க வீணாச் சிரமப்படாதிங்க. இப்போது நான் உங்களுக்கு கொடுத்திருக்கிற சிரமமே போதுமுங்க எனக்குப் பசியில்லை பசியை உணரத் தக்க நிலையிலேயும் நான் இல்லேங்க என்னை மன்னிச்சிடுங்க. உங்க அன்புக் கையாலே ஒரு டம்ளர் தண்ணீர் கொடுங்க போதும்!''

அவன் கொடுத்தான்; அவள் குடித்தாள்.

கூப்பிடு தூரத்திலிருந்தது, 'டக்கர்' மாதாகோயில். அங்கு இருந்து ஒலித்த மணிச் சத்தம் பன்னிரண்டு தவணை ஒரே சீராகக் கேட்டது.

கடற்காற்றின் வாடை நயமாக இருந்தது.

சிகரெட்டையும், தீப்பெட்டியையும் எடுத்து வைத்துக் கொண்டு, ''சிகரெட் '' என்று இழுத்தான் அம்பலத்தரசன்.

அவனைத் தலை நிமிர்ந்து பார்த்த ஊர்வசி ஒயிலான சிலிர்ப்புச் சிரிப்புடன், ''எனக்குச் சிகரெட் வேண்டுமான்னு மரியாதைக்காகக் கேட்கிறீங்களா? நாடகத்திலே அந்த வில்லன் செங்கோடனை ஏர்ப்பதற்காக சிகரெட் பற்ற வைத்து பிடிச்சேன். சிகரெட் என்றால் அவனுக்குப் பிடிக்காது என்று அறிந்த நான் அந்த உபாயத்தைக்

கையாள வேண்டி வந்திச்சு. ஆனா, எனக்குச் சிகரெட் பிடிக்கும் பழக்கமோ நாகரிகமோ இன்னும் ஒட்டல்லேங்க நீங்கபிடியுங்க'' என்றாள்.

''நான் 'சிகரெட் என்றுதானே சொன்னேன் ? அதாகப் பட்டது, நான் சிகரெட் பிடிக்கிறதிலே உங்களுக்கு யாதொரு ஆட்சேபனையும் இல்லையே என்கிறதைத் தெரிஞ்சுக்கத்தான் அப்படிக் கேட்டேன்.''

''பேஷாகப் பிடியுங்க !''

புகைச் சூழத் தொடங்கியது.

''ஸார் !''

''சொல்லுங்க !''

''நான் இப்போது உங்ககிட்டே அடைக்கலப் பொருளாக வந்திருக்கேன் !''

''அதைத்தான் சொன்னீங்களே முன்னமேயே ?'

''அப்படியானால், அந்த நிலையை நீங்க உணரலையா?'' என்று குரலை உயர்த்திக் கேட்டாள் ஊர்வசி.

''ஏன் அப்படிக் கேட்கிறீங்க ? உணர்கிறேனே, அந்த நெருக்கடி நிலைமையை'' என்று விடை அளித்தான், அம்பலத்தரசன்.

அவன் பேச்சு நின்றதும் அவனை உற்றுப் பார்த்தாள் அவள். அவனுடைய கண் விளிம்புகளிலே கண்ணீர் கரை கட்டி நின்றது.

''ஐயா, என்னோட நிலைமையை நீங்க உணர்ந்து கிட்டதற்காக இந்தக் கண்ணீர் ?''

கைந்நொடிப் பொழுது அவன் மௌனம் சாதித்தான்.

"அன்புக்கு, ஒரு அடையாளம் வேணுமில்லே" என்றான் அவன்.

"அந்த அன்பை நம்பித்தான் நான் உங்க சந்நிதானத்தைத் தேடி வந்திருக்கேன்!" அவள் நா தழுதழுத்தது.

"சரி, நேரமாகுது. உங்களுக்கு அசதியும் களைப்பும் மிஞ்சியிருக்கும். இப்போது என் கடமை என்னான்னு சொல்லிடுங்க. ஊர்வசி..." — முடிவுச் சொல் கோரும் பாவனை அப்பேச்சில் இருந்தது.

ஊர்வசி விழிகளை நிமிர்த்தி அவனை ஊடுருவிப் பார்த்தாள். அவன் கண்களில் என்ன மாயத்தைத் தரிசித்தாளோ, அவளுடைய கண்கள் புதிய ஒளிகூட்டித் திகழ்ந்தன. நீலப் பாதரஸ விளக்கில் அவனுடைய அழகு முகம் மேலும் அழகுடன் விளங்கியது.

"நான் உங்ககிட்டே அடைக்கலப் பொருளாய் வந்திருக்கேன். இந்த உண்மையை நீங்க உணர்ந்திருக்கீங்க உணர்ந்திருக்கிறதாகவும் உங்க வாயாலே சொல்லவும் சொன்னீங்க. பின்னே, நீங்க என்னை எதிர்க் கேள்வி கேட்கிறீங்க! அதான் எனக்கு மலைப்பைத் தருதுங்க" என்று தாழ்குரலில் செப்பினாள்.

"உங்க பேச்சையும், உங்க நிலைமையையும் என்னாலே புரிஞ்சுக்க முடியாது; உணர்ந்துக்கவும் செய்கிறேன். ஆனா, உங்க முடிவைக் கொஞ்சம் வெளிப்படையாகவே சொல்லிடுங்க. அது தான் நம் இருவருக்குமே நல்லது!"

"இன்றிரவு நடந்த 'வாழ்வதற்கே' என்ற நாடகத்தில் நான் கற்பழிக்கப்பட்டதாக ஒரு பொய்யான கட்டம் கதைக்கென உருவான சமயத்திலே, நான் எனக்குரிய

முடிவை நானே தேடிக் கொள்ள, கத்தும் கடலை சரணாகதி அடைஞ்சேன். அதுவும் கதைக்கான ஒரு பொய் முடிவு. அது. கதாசிரியர் மன்மதனின் முடிவு !

ஆனால், இப்போது நான் மெய்யாகவே கற்பழிக்கப் பட்டவள். எனக்கு மெய்யாகவே சாவதற்கு வழி தெரியும். ஆனால் சாக விரும்பல்லே ! வாழ்வதற்கு ஆசைப்படுறேன். ஆனதாலே வாழத்தான் வழி கேட்கிறேன் உங்ககிட்டே என் தோல்விக்குப் பின்னாலேயும் ஒரு வாழ்க்கை இருக்குது; எனக்கேற்பட்ட களங்கத்துக்கு அப்பாலேயும் ஒரு கதை இருக்குது என்கிறது என்னோட சித்தாந்தம் ! வாழவேணும் வாழ்ந்தாக வேணும் என்கிற திடமான வைராக்கியத் தோடே நான் வந்திருக்கேன், உங்க நிழலை நாடி—உங்க அன்பைத் தேடி !

என்னுடைய முதல் நாடகமான 'காதலே, வா'யிலே இப்படித்தான் ஒரு கட்டம் உருவாச்சு. எழுத்தாளர் ஒருவர் — தன்னோட புரட்சிக் கருத்துக்களாலே பிரபல மானவர், எனக்கு — அதாவது நாடகத்திலே 'வழுக்கி விழுந்தவளாக' வந்த எனக்கு — அன்பு தந்து, நிழல் தந்து என்னைத் தன்னோட இனிய பாதியாகவும் ஆக்கிக் கிட்டார்.

இந்த ஒரு நல்ல முடிவை வரவேற்பதாகவும் இம்மாதிரியான சூழ்நிலை பிரத்யட்ச வாழ்க்கையிலே உருவாகும்போது, நெஞ்சுள்ளவங்க தங்கள் தங்கள் கடமையைச் செய்து காட்ட முன் வரவேணுமென்றும் அந்த நாடகத்துக்குத் தலைமை தாங்கிய நீங்க சொன்னீங்க அந்த ஒரு பேச்சுத்தான் இப்போது என்னை உங்க நிழலுக்குக் கொண்டு வந்து சேர்த்திருக்குது !"

யாரோ எழுதிக் கொடுத்த வசனங்களை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பதுபோல அவள் பேசினாள். உணர்ச்சி வசப்பட்டுப் பேசினாள். அவளுக்கு யார் எழுதிக் கொடுப்

பார்கள்? அவளது நெஞ்சுரம் எழுதிக் கொடுத்த வசனங்களை அவனிடம் அவள் ஒப்புவித்தாள் — அல்ல, ஒப்படைத்தாள்! — அவ்வளவுதான்!

சிலையாக மலைத்துப் போயிருந்தான் அம்பலத்தரசன். அவன் கண்களில் தீவிரமான சிந்தனை இருந்தது. நெற்றியில் பச்சை நரம்புகள் புடைத்திருந்தன. ஜிப்பாவைக் கழற்றி வீசினான். மேஜை மீதிருந்த படிகத்தில் எரிந்து கொண்டிருந்த சிகரட்டை மறந்து விட்டான். புதிய சிகரெட் ஒன்றைக் கொளுத்தினான். புகையும், புகைச்சல் இருமலும் ஒன்றாக வெளிப்படலாயின. வலது கை விரல் அமிர்தாஞ்சனச் சீசாவைத் திறந்தன. இடது கைவிரல்களும் ஆபத்துக்கு ஒத்தாசை செய்யத் தவறிவிடவில்லை

ஊர்வசி இருக்கையை விட்டு எழுந்தாள் சேலையைச் சீர் செய்து கொண்டாள். கழுத்தில் விளையாடிய தங்கச் சங்கிலியோடு ஒளிப் புள்ளிகள் விளையாடின. அவனை அண்டினாள். அமிர்தாஞ்சனத்தை தனது வலது கைப் பெருவிரல் கொண்டு எடுத்தாள்.

"இருங்க, நான் தடவித் தேய்த்து விடுகிறேன் என்னால் உண்டான தலைவலியை நான்தானுங்க தீர்க்க முடியும்! இந்தப் பாவியாலேதான் உங்களுக்கு எத்தனை பெரிய சோதனை முளைச்சிருக்குது!'' என்றாள்.

அன்பின் நெருக்கத்தோடு அவளைப் பார்த்த அவன் கண்கள் கண்ணீரில் மிதந்தன,

தலைவலிக் களிம்பைத் தடவினாள் அவள்.

"அழறீங்களா நீங்களும்? நான் அழுதது போதாதுங்களா?'' என்று கேட்டுவிட்டு, அவளும் அழுதாள்.

அவள் கண்ணீரைத் துடைத்து விட்டான் அவன்.

அவனுடைய கைகள் நிதானமாகச் செயல்பட்டன.

அந்தக் கைகளை எடுத்துத் தன் கைகளில் பக்தியோடு ஒற்றிக் கொண்டாள் ஊர்வசி.

"நீ பாவியல்ல இனிமேல்....! இனிமேல் நீ பாக்கியவதி, ஊர்வசி!"

அவள் மகிழ்ச்சிக் கண்ணீர் வடித்தாள்,

"நேரம் ஆகிடுச்சு, விடிஞ்சதும், மிச்சப் பேச்சை வச்சுக்கலாம். நீ இங்கே தூங்கு ; நான் வெளியிலே படுத்துக்கிறேன்" என்று அறிவித்தான் அம்பலத்தரசன்.

"உங்களை நம்பியிருக்கிறவள் நான். நீங்களும் இங்கேயே படுத்துக் கொள்ளுங்கள் ! நம் இருவர் மனமும் நமக்குக் காவல் புரியட்டும்"

அண்ணல் மகாத்மா அருட் புன்னகை சிந்திக் கொண்டிருந்தார் ...

ஒளி அணைந்தது !

அறையின் கதவுகள் திறந்தே கிடந்தன !

## [4]

காந்தி அடிகளின் 'சத்திய சோதனை' அம்பலத்தரசனின் நெஞ்சில் கோயில் கொண்டிருந்தது.

உருவாகி விட்டிருந்த சத்திய சோதனையில் தான் வெற்றி கொண்டு விட்டதாகவே அவன் உள்ளூற எண்ணினான். அவ்வெண்ணத்தின் பிரதிபலிப்பாக அவனுள் முகிழ்த்த மகிழ்ச்சியின் சிலிர்ப்பு அவன் மேனியை ஆட் கொண்டிருந்தது. அவன் மனச்சான்று ஆறுதல் பேணி முறுவல் பூத்தது.

சூடான சாயா மேஜையில் காத்திருந்தது. ஆவி பறந்தது. வாசம் பிரிந்தது.

அதில் ஒருவாய் சப்பிப் பருகினான் அம்பலத்தரசன். அந்தத் தேநீரின் சூடும் சுவையும் அவனது அடி மனத்தைத் தொட்டிருக்க வேண்டும்.

பன்னிரண்டு மணிக்கு மேல் தொடர்ந்த இத்தகைய சிந்தனைகள் புதுப்புது உருவத்தோடும் புதுப்புது உள்ளத்தோடும் அவன் மனத்தில் ஒளிவீசி ஒளிகாட்டிக் கொண்டேயிருந்தன. அவளை என்னென்னவோ கேட்க வேண்டுமென்று 'பூ! அலுவலகத்திலிருந்து திரும்பி தம்புச் செட்டித் தெருவில் நடந்து, அங்கிருந்து மறுகி அரண்மனைக்காரத் தெருவில் அடிவைத்து, மீண்டும் மடங்கி, அந்தப் பிள்ளையாரப்பனுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு, முத்துமாரிச் செட்டித் தெருவில் வந்த சமயம் நினைத்திருந்தானே? ஒரு கேள்வியையாவது அவனால் கேட்க முடிந்ததா? இல்லை! அதற்குகந்த சந்தர்ப்பத்தை அவள் கொடுத்தால்தானே?

ஊர்வசியைப் பற்றி எண்ணமிட்டான். அவ் வெண்ணத்தை நினைப்பதற்கு மீண்டும் சக்தி தேவைப் பட்டதை உணர்ந்திருந்தவன் போல, அடுத்த தடவை யாகச் சாயாவைக் குடித்தான். ஒரே மூச்சாகக் குடித் தான். இப்போது அவன் சிந்தனைக்குப் புகைச் சூடும் தேவைப்பட்டது. ஊதினான். நெஞ்சின் வலது விலாப் புறத்தில் லேசாக வலிப்பதாகவும் அவனால் உணர்ந்து கொள்ள முடிந்தது. வழக்கமாக விழுங்கும் 'பிப்ளெக்ஸ்ஃ பார்ட்'டில் இரண்டைப் போட்டுக்கொண்டு ஒரு குவளை தண்ணீர் ஊற்றினால் வலி தீர்ந்துவிடும் என்ற உபாயமும் அவனுக்கு அத்துப்படிதான்!

ஊர்வசியைப் பற்றிய அழகிய நினைவை நெஞ்சக் கிழியில் பதித்துச் சிந்தித்த போது தன்னையும் அறியாத பான்மையில் ஒரு புது உரிமையும் ஒரு புது உறவும்

தோன்றிச் செழித்ததையும் அவன் நன்கு அறிந்தான். கடந்த சில மணி நேரத்தில் அவன் தனக்குத்தானே பக்குவப்படுத்திக் கொண்டிருந்த புதுத்தெம்புக்கு அந்தப் புது உறவும் புது உரிமையும் நளினம் மிகுந்ததொரு சூழலை உண்டாக்கிக் கொண்டிருந்ததையும் அவன் நறுவிசாக அறிந்திருந்தான்.

தேடிவந்தாள் ஊர்வசி.

தேடிவந்த தெய்வமா அவள்?

விட்டகுறை — தொட்டகுறை என்பார்களே, அந்தப் பந்தத்தின் விளைவா அது?

அதன் விளைவாகத்தான் ஊர்வசி அவனைத் தேடி வந்தாளா?

ஒரு நினைவு மலர்ந்தது.

ஊர்வசியை அவன் முதல் முதலாகச் சந்தித்தது. பொங்கல் திருநாளில், ஒரு நாடகத்தில்,

பெண்களும் ஆண்களும் ஏழெட்டுப் பேர்கள் பழக்கப் படுத்தப்பட்டார்கள்.

ஊர்வசிதான் அவன் நெஞ்சில் நின்றாள், நினைவில் நின்றாள்.

உலகாளும் மாதாவாக — அன்பின் அருள் பாலிக்கும் தெய்வமாக 'வேஷம்' புனைந்திருந்தாள் ஊர்வசி. கதாநாயகிகளின் தந்தை பூஜை செய்வதற்காக அவள் இவ்வாறு லோகத் தாயாகத் தோன்றினாள். மூன்று 'சீன்' கழித்து இவளே கதைக்கு நாயகி. ஆனால் அந்தத் தெய்வ வடிவம் அவனுள் ஒரு பக்தியுணர்வையே உண்டுபண்ணியது பிறந்த வீட்டுக் குழந்தையின் கள்ளமில்லாத்தனத்தை அவள் முகம் காட்டியது. கயல் விழிகளிலே ஒரு கனிவு. கனி இதழ்களிலே ஒரு பரிவு செழித்த மார்பகத்தில் கச்சை. அவள் பாங்கு சேரச் சிரித்து வணங்கினாள். அந்தச்

சீரார் சிரிப்பை நெஞ்சில் வாங்கிக்கொண்ட அம்பலத்தரசன் இமைப் பொழுதிற்குத் தன்னையே மறந்துவிட்டான். வணக்கம் தெரிவிக்க சில வினாடிப்போது கழித்துத்தான் அவனுக்கு ஞாபகம் வந்தது.

"உங்களைச் சந்தித்ததிலே எனக்கு ரொம்பவும் சந்தோஷம் ஐயா !" என்றாள் அவள். "உங்க விமர்சனங் களை நான் தவறாது படிப்பேனாக்கும் !" என்றாள்.

அவள் குறித்த பாராட்டுரை எதுவும் அவன் இதயத்தில் பதியவில்லை. ஆனால் அவளது தூய எழில் வடிவம்—ஆதிபராசக்தியின் தெய்வக்கோலம் — மட்டுமே அவனுள் பதிந்திருந்தது உள்ளத்தெழுந்த தெய்வ ஒளி அவனுடைய கைகளுக்கு பாய்ந்தது; அந்தக் கைகள் குவிந்தன. குவித்த வண்ணமே இருந்தன. விழிமலர்களில் நீர் முத்துக்கள் தத்தளித்தன

சூழ இருந்தவர்கள் அதிசயித்தார்கள்.

சூழல் உணரப்பட்ட தருணத்தில், அம்பலத்தரசன் தன்னை உணர்ந்தான். ஊர்வசியைப் பார்த்தான். மறு தரமும் அவள் சிரித்தாள். எந்நேரத்தில் சிரித்தாளோ, அந்தச் சிரிப்பு அவனுள் பதிவாகிவிட்டது.

அவள் தெய்வமாகி நின்றாள் — அன்று.

இன்று அவளே தெய்வமாகி வந்தாளோ ?

தெய்வம் தேடிவரக் கூடாதா, என்ன ?

தெய்வம் பேஷாகத் தேடிவரலாம் ! — இதோ தேடி வந்து விட்டதே !

எரிந்த சிகரெட் அவன் விரல் நுனியைச் சுட்டதும் தான், அவனுக்கு தான் இருந்த ஹோட்டலின் ஞாபகம் சுட்டது; எழுந்தான். பத்துக் காசைக் கல்லாப்பெட்டியில் வைத்தான் ! வாசலுக்கு விரைந்தான். இடது பக்கம் திரும்புவதற்குப் பதிலாக வலப்புறம் மடங்கினான்.

பிராட்வே வந்தது. முச்சந்தியில் வந்து நின்றான். அவன் மம்மல் பொழுது சிறுகச் சிறுக வடியத் தலைப் பட்டது. குளிர்காற்றின் வாடை லேசாக உறவாடியிருந்தது.

தேடி வந்த ஊர்வசியைப் பற்றின ஞாபகம்தான் அவனுக்கு இப்போது கிளர்ந்தெழுந்தது.

''யாருமே வேடதாரியாகவோ, கோழையாகவோ ஆகி விடக்கூடாது!' என்று சுவாமி விவேகானந்தர் மொழிந்த அருள் வாசகத்தை எண்ணிச் சிந்திக்கச் செய்தவள் ஊர்வசியே அன்றோ?

தான் கற்பழிக்கப்பட்டவள் என தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொண்ட அவளது வெகுளித்தன்மையும் துணிச்சலும் சேர்ந்து ஓர் அதிசயமான உருவத்தை அவன் முன் சமைத்துக் காண்பித்தது. அந்த உருவத்துக்குச் சொந்தக்காரி ஊர்வசி என்பதும் இவனுக்குப் புரியாத உண்மையல்லவே!

அவள் தன் நிலைமையை எவ்வளவு அப்பட்டமாகத் தெளிவுப்படுத்திக் காட்டிவிட்டாள்! ஆனால், நான்'? தன்னைப் பற்றிய கேள்வியை, தன்னுணர்வை மீறிய ரீதியில் தன் மனச்சாட்சி கேட்டு நிறுத்தியதை அவன் நுணுக்கமாகத் தான் உணர முடிந்தது. தன்னைப் பற்றிய ஆய்வில் அவன் ஈடுபடவேண்டுமென்று அவனது சுயப் பிரக்ஞை கட்டளை பிறப்பித்தது. ஆனால் அக்கட்டளையை அவன் செயற் படுத்த முனைந்தபோதோ அவனது உள்மனம் ஏனோ பின் வாங்கியது.

அதற்குள், அவனுடைய மனப்புள் வெறொறு கிளைக் குப் பறந்து விட்டது. 'பாவம், ஊர்வசி! அவளைக் கெடுத்த அந்தப் பாவி யார்? அதைப் பற்றி எதுவுமே சொல்ல வில்லையே? ஏன்?.... தன்னை—தன் விலை மதிப்

பற்ற பெண்மையை—சேம நிதியான கற்பைக் காப்பாற்றிக் கொள்ள அவள் சக்திகொண்ட மட்டும் பாடுபட்டுத்தான் இருப்பாள்! அதற்குச் சந்தேகமேயில்லை! .. பாவம், விதி! அவளைச் சோதித்து விட்டது.

அவளைக் குறித்த அனுதாபமே அவனது இதயமாகப் பரிமளித்தது. கண்கள் கலக்கம் கண்டன.

சமுதாயத்தின் கண்களை அவன் அறியானா?

குறுக்கு மறித்துப் பறந்த சைக்கில் அவன் பேரில் மோதியது அவனுக்குச் சுய நினைவை ஊட்டத்தான் அப்படி மோதியதோ? அவன் சுயஞாபகம் பெற்ற உண்மையை அறிந்ததும், சைக்கிள்காரன் 'கடலே கதி' என்று மீண்டும் பறந்து விட்டான்.

வேஷ்டியைத் தட்டி விட்டவனாக அங்கிருந்து புறப் படத் தயாரானான் அம்பலத்தரசன். பட்டணம் விழித் துக் கொண்டபின், அவன் தூங்கிக்கொண்டு இனிமேலும் அங்கே நின்று கொண்டிருக்க முடியுமா?

அவன் புறப்பட்டான்.

புறப்பட்டவனின் முன்னே 'டாட்ஜ்' எதிர்ப்பட்டது. பூமிநாதன் உள்ளே' இருந்தான். கார் ஆடி அசைந்து நிற்க முனைந்தது. "ஸார், ஊர்வசியை ராத்திரியிலே யிருந்து காணலையாம்; அவங்க அம்மா சொன்னாங்க!.... பாவம்!" என்று தெரிவித்தான் பூமிநாதன்.

அவனது குரலின் துயரம் அம்பலத்தரசின் நெஞ்சத்தைத் தொட்டது. "அட பாவமே!" என்று வருத்தத்தைத் தெரிவித்தான்.

ஒரு ஹோட்டல் பாக்கியில்லே, தேடிப் பார்த்திட்டேன் விவரமும் கிடைக்கலே! அவங்க மதர் என் வீட்டுக்கு போன் செஞ்சாங்க ராத்திரி!" என்று மேலும் விளக்கம் கொடுத்தான் சீமான் பெற்ற செல்வம்.

நண்பனிடம் நடப்பைச் சொல்லிவிட்டால் என்ன வென்று துடித்தான் அம்பலத்தரசன். ஆனால், அச்செயல் அவ்வளவு விவேகமாகப் படவில்லை. ஆகவே, கட்டுப் படுத்திக் கொள்ள வேண்டியவன் ஆனான் அவன்.

பூமிநாதனின் கார் சீனத்துக் கடை வீதியை இலக்கு வைத்தது.

அம்பலத்தரசன் மருள் கொண்டவனாக அப்படியே நின்றான். அதுவரை தோன்றாத புதிய புதிய பயங்கள் அவனை ஆட்கொள்ளத் தலைப்பட்டன. இரவு ஊர்வசி நடத்திய சோதனையில் வென்றவன் ஏன் இப்போது இப்படி வெல வெலத்துப் போய் நிற்கிறான்?

'தெய்வமே! என் ஊர்வசியைக் காப்பாற்று! நெஞ்சமே உன் ஊர்வசிக்கு விடிவு காட்டு! மனச்சாட்சியே! என் மனிதாபிமானத்தை ரட்சித்தருள்! ... விடிகின்ற பொழுது கள் நல்ல பொழுதுகளாகவே விடியட்டும்!....'

விடிந்தது.

# 5

"குட்மார்னிங், அத்தான்" என்று காலை நல் வணக்கம் சொல்லி, ஒயில் காத்துச் சிரித்தாள் ஊர்வசி.

'குட்மார்னிங், குட்மார்னிங்' என்று பதில் வணக்கம் சொல்லி, அழகு காட்டிச் சிரித்தான் அம்பலத்தரசன்.

அவள் முகம் அழகு கனிந்த நிம்மதியோடு விளங்கியது. ட்டாமாவுத் துகள்கள் அவளது கன்னக் கதுப்புக்களில் காஞ்சம் கூடுதலாகவே காணப்பட்டன. அவளது நளினம் மிகுந்த நேத்திரங்களில் புதிய அமைதி இழைந்தது. அக் கண்களிலே தான் எத்துணை கவர்ச்சி!

"ராத்திரி நீங்க நிம்மதியாய்த் தூங்கலே போலே" என்று மெல்லிய குரலில் கேட்டாள் ஊர்வசி.

இரவு பூராவும் நிம்மதி இழந்து தவித்துப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்ததை அவன் எண்ணிப் பார்த்தான். இரவு பன்னிரண்டரை மணியிலிருந்து விடிகாலை நான்கு மணி மட்டும் அவன் தூக்கம் பிடிக்காமல் தவித்த தவிப்பை அவன்தான் அறிவான். இப்போது அத்தவிப்பை அவளும் அறிந்திருந்தாளோ ?

"நான் நிம்மதியாய்த்தான் தூங்கினேன். நீங்க .... நீ நல்லாத் தூங்கினே, இல்லையா ?"

"நான் நல்லாத் தூங்கினேன்னுதான் முன்னமேயே சொல்லிட்டேனுங்களே!"

அன்றையப் புதுப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்தான் அம்பலத்தரசன்.

ரேடியோவை 'ட்யூன்' பண்ணிக் கொண்டிருந்தாள் ஊர்வசி. பூகரங்களில் இழைந்த தங்க வளையல்கள் நயம் சேர்த்துக் குலுங்கின.

"அப்புறம் உன் திட்டம் என்ன, ஊர்வசி?"

மேஜையின் அடித்தளத்தில் தன்னுடைய எழிலார்ந்த நெஞ்சைப் பதித்து ரேடியோவைக் கேட்டுக் கொண்டிருந்தவள், எழுந்து அவனைப் பார்த்துக் கொண்டே, "என்னையே உங்ககிட்டே நான் ஒப்படைச்சிட்ட பிற்பாடு, தனியே பிரிச்சு என்கிட்டே என்னோட திட்டத்தைப் பத்திக் கேட்கிறீங்களே" என்று சொன்னாள்.

'நீ சொல்றது மெய்தான். அதற்காகச் சொல்லலே. மேற்கொண்டு என்ன நடக்க வேணுமிங்கறதைப் பற்றி நான் தெரிஞ்சுக்க வேணுமில்லையா, அதுக்காகவே கேட்டேன்" என்று தன் கேள்விக்கு விளக்கத்தை எடுத்துக் காட்டினான் அம்பலத்தரசன்.

அவள் என்னவோ சொல்ல வாயெடுத்தாள். அந் நேரத்தில், கீழ்த்தளத்தில் இருந்த வீட்டின் சொந்தக்காரர் மாடிக்கு வந்து சேர்ந்தார். அன்றாடப் பத்திரிகைச் செய்திகளை இனாமாகப் படித்துச் செல்லும் மாமூல்படி அன்றும் வந்தார் அவர். அவருக்கும் பெயர் உண்டு. அது குஞ்சிதபாதம் என்பதாகும். வந்த மனிதர் தம்முடைய பன்றி முடியை—நரை திரண்டிருந்த அம்முடியை—இடது கைவிரல் கொண்டு கோதி விட்டவராக ஊர்வசியை 'ஒரு மாதிரி'யாகப் பார்த்தார்.

'இந்த நாடகக்காரி எங்கே இங்கு வந்தது?' என்ற ஐயப்பாட்டோடு அவர் பார்வை இருந்ததை அம்பலத் தரசன். யூகம் செய்து கொள்ளத் தவறவில்லை.

' ராத்திரி நாடகத்திலே நடிச்ச பெண்தானே இது?'' என்று கேட்டார் குஞ்சிதபாதம்.

''ஆமாங்க அந்தப் பெண்ணே தான். எனக்குச் சொந்தம் முறைமைக்காரப் பெண்ணுங்கூட'' என்றான் அம்பலத் தரசன். வீட்டுக்காரர் உண்டாக்கிய அதிர்ச்சி இன்னமும் அப்படியே இருந்தது.

''ஓ ஹோ, உங்க அம்மா ஊரிலேருந்து லெட்டர் போட்டிருந்ததாகச் சொன்னீங்களே, அது இந்தப் பொண்ணைப் பத்தித்தானா ஸார்?''

''ஆமாங்க!''

கேள்வி கேட்ட புண்ணியவானே ஒரு பதிலுக்கும் 'கோடி' காட்டி விடவே, அம்பலத்தரசன் மேற்கொண்டு விடை சொல்லச் சிரமப்படவில்லை.

''இதுக்குப் பேர்?''

''இருக்குங்க. ஊர்வசின்னு பேர்!''

''சுந்தரியின்னு சொன்னாங்களே!''

''அது நாடகத்திலே வச்ச பேர்.''

''பாவம், இத்தனை நல்ல பெண்ணைக் கெடுக்கவும் ஒரு பாவிக்கு மனசு வந்திச்சே'' என்று வருந்தினார் குஞ்சிதபாதம்.

அவர் வருத்தம் அவனுக்குத் திகிலை யூட்டியது. ஓர் அரைக்கணத்தில் அத்திகில் மறைந்தது. நாடகக் கதையிலேயே இன்னமும் அவர் நின்று கொண்டிருந்ததை அவன் அனுமானம் செய்து கொண்டான்.

''ஆமாங்க. பாவி ஆனபடியாலேதானுங்க, அவனுக்கு அத்தனை பெரிய பாவத்தைச் செய்யத் துணிச்சல் வந்திச்சு; மனமும் வந்திருக்கு.''

பெரியவர் ஏனோ ஊர்வசியை விழுங்கிட எண்ணினார்

அப்பார்வையை அவள் தாங்க வலிவு இழந்தாள் அப்பார்வை அவளுக்கு வலியைத் தோற்றுவித்தது.

''ஐயா, பேப்பரிலே பெரிய அதிசயமெல்லாம் இருக்குதுங்களே'' என்று அவரைத் திருப்பி விட்டாள். ஊர்வசி.

கஞ்சப் பிரபுவானாலும், சிரிக்க மறக்கவில்லை, வீட்டுக்காரர் பத்திரிகையைப் புரட்டினார்.

''ஐயா, வீட்டுக்கு எடுத்திட்டுப் போய் பார்க்கலாமே! ஆபீஸ் விட்டு வந்ததும் நானே வந்து வாங்கிக்கிறேனே! கடையிலேருந்து, மத்தியான்னச் சாப்பாட்டுக்கு வரப்போ, வீட்டிலே கொண்டு வந்து பேப்பரைப் போட்டிடுங்க!'' என்று அடைத்த பொறுப்பாகச் சொன்னான் அம்பலத்தரசன்!

குஞ்சிதபாதத்தோடு அன்றையச் செய்தித்தாளும் சென்றது.

தான் சொன்ன தமாஷை எண்ணி அவள் சிரிக்க, அவள் சொன்ன நகைச்சுவையை அவன் ரசித்துச் சிரித்தான்.

போன மனிதர் திரும்பி வந்து, "இதுக்கும் உங்க தஞ்சாவூர் தானோ?" என்று கேட்டு வைத்தார்.

இப்போதும் அவர் தம் கேள்விக் குறியின் விடையையும் சொல்லாமல் சொல்லிவிடவே, இப்போதும் அவனுக்கு விடையிறுப்பதில் லவலேசமும் கஷ்டம் உண்டாகவில்லை.

"ஆமாங்க" என்றான்.

"நாங்க ஆவணியிலே தஞ்சாவூர் போவோம். அப்போது மறந்து விடாமல் உங்களுக்குக் குடமிளகாய் ஒரு மூட்டை வாங்கி அனுப்பி வைச்சிடுறோமுங்க, ஐயா!" என்று சிரிக்காமல் கொள்ளாமல் செப்பினான்.

"தங்கச்சிக்கு ஜோஸ்யம்கூடத் தெரியும்போல இருக்குது! நான் மனசிலே நெனச்சதைக் கனகச்சிதமாச் சொல்லிட்டுது!... மறந்திடப்பிடாது" என்று தேன் குடித்த நரியாக நின்றார் குஞ்சிதபாதம். ஒரு மூட்டை குடமிளகாய் 'ஓசி'யில் கிட்டிவிடுமென்று மனப்பால் குடித்தாரோ, என்னவோ?

"மறந்திட மாட்டோம் என்று இருவரும் ஒரே குரலில் அவருக்கு 'அபாயம்' அளிக்கவே, பல்லெல்லாம் தெரியக் காட்டிச் சிரித்து விட்டு, அவர் தமது குஞ்சர மேனியைக் கீழே இறக்கிக் கொண்டு மறையலானார்!

மாடிக் கைப்பிடிச் சுவரருகே இருந்த தொட்டித் துளசியின் தளிர்களுக்கு இளம்பொற் கிரணங்கள் முத்தம் கொடுத்து பழகிக் கொண்டிருந்தன.

''நம் திட்டத்தைப் பத்தி நீங்க சொல்லலே. ஆகையாலே நானே சொல்லிடுறேன். இப்போ நான் என்னோட ஜாகைக்குப் போகவேணும் என்னை ராத்திரி பூராவும் காணாமல் என்னைப் பெற்ற தாய் தவிச்சுக்கிட்டிருப்பாங்க'' என்றாள் அவள். அவள் பேச்சில் கலவரம் இருந்தது.

''உன்னை உங்க அம்மா காணாமல் தவிச்சுக்கிட்டிருக்கிறதாக பூமிநாதன் கொஞ்சம் முந்தி வழியிலேயே கண்டு சொன்னார்'' என்றான் அம்பலத்தரசன், சொல்லிக் கொண்டே அவளை நோக்கினான் அவன்.

அவளுடைய முகம் கணப் பொழுது துணுக்குற்றது. பின், தன் நிகிலை மாற்றிய வண்ணம், ''அப்படியா?' என்றாள். அவள் குரல் சகஜமாகப் படவில்லை அவனுக்கு.

'உம்' கொட்டினான் அவன். பாவம், தன்னைக் காணாமல் வேதனைப்பட்ட அன்னைக்காக அவள் இவ்வாறு திகிலடைந்திருக்க வேண்டும்!'

''அப்படியென்றால் நீ நேரத்தோடே புறப்படு, ஊர்வசி!''

அவள் விநயமாகப் புன்னகை செய்துவிட்டு, ''நான் மட்டும் புறப்படவா? என்னோடே நீங்களும் வந்தாக வேணுமுங்க'' என்றும் அறிவித்தாள்.

சற்றேனும் சிந்திக்கவில்லை அவன். இந்த முடிவை அவன் அவளிடமிருந்து எதிர்நோக்கியிருந்தவன் போன்று, ''ஆகட்டும். நாம் இருவருமே புறப்படலாம் இதோ, ஒரு நிமிஷத்தில் குளித்து விட்டு வந்து விடுகிறேன்' என்றான் அவன்.

''பத்து நிமிஷங்களுக்குள் நீங்க குளிச்சிட்டு வந்தால் யதேஷ்டம்'' என்றாள் அவள்.

நல்ல மனதில் நகைச்சுவை தோன்றுவது இயல்பு என்ற உண்மையை, அறிந்தவர்கள் சொல்லக் கேட்டிருந்தான் அவன்.

'ஊர்வசி வாஸ்தவமாகவே நல்லவள்தான்! ஆனால் பாவம் ?'

அவன் அவள் பேச்சை அனுபவித்தவாறு குளிப்பதற்குப் புறப்பட்டான்.

டவல், சோப்புப் பெட்டி ஆகியவற்றை எடுத்து நீட்டினாள், ஊர்வசி.

''என் அம்மாதான் இங்கு இருக்கும்வரை இம்மாதிரி' டவலையும், சோப்புப் பெட்டியையும் எடுத்துத் தருவாங்க!'

''இப்போது அந்தப் பாக்கியம் எனக்கு விதிச்சிருக்குது இல்லீங்களா?''

''உம்!''

அவன் குளியலறைக்குப் போய் விட்டான்.

அவள் இரவு எழுதி முடித்திருந்த அந்தக் கடிதத்தை மீண்டும் உறையினின்று எடுத்து, மீண்டும் படித்து விட்டு உறைக்குள் திணித்து ஒட்டினாள்.

''அன்பர் திரு அம்பலத்தரசன் அவர்களுக்கு!'' என்று எழுதினாள். பெருமூச்சு வந்தது அத்துடன் கண்ணீரும் வந்தது. ஒரு துளி உதிர்ந்து, அவள் எழுதிய— உறையின் மீது எழுதிய எழுத்துக்களில் தெறித்தது. அன்பர்' என்ற எழுத்துக்கள் மட்டும் லேசாகக் கலைந்தன. அவ்வெழுத்துக்களில் மறுபடி விளம்பினாள், டைரியை மேஜையின் மையத்தில் வைத்தாள். அம்பலத்தரசனின் பார்வைக்குப் பளிச்சென்று படும் விதத்தில் எடுப்பாக வைத்தாள்.

காலடியோசை கேட்கவே, திரும்பினாள்.

தூய்மை மிளிர வந்தான் அம்பலத்தரசன்.

"இருங்க துணிகளை எடுத்துத் தாரேன்'' என்று சொல்லி அறையின் வடமூலையில் காணப்பட்ட திறந் திருந்த தோல் பெட்டியைத் தடவினாள். மேலாக இருந்த ஃபின்லே வேஷ்டியையும் ஸில்க் ஜிப்பாவையும் எடுத்து நீட்டினாள்.

''இருங்க, இருங்க'' என்று சொல்லிக்கொண்டே அடியில் கையைத் திணித்து எதையோ தேடினாள். புகைப்பட மொன்று சிதறி வந்து தரையில் நழுவியது. பார்த்தாள். அது ஓர் அழகியின் படம்! பார்த்துவிட்டு, அதைப் பெட் டியில் வைத்தாள், பின்னர் அவள் மறுபடியும் துழாவினாள்.

''ஊர்வசி, நீ தேடறது அங்கே இல்லை. பனியனும் அண்டர்வேரும் அடுத்த அறையில் இருக்கு'' என்று சொல்லிக்கொண்டே அவன் நகர்ந்து திரும்பினான். அவனோடு சலவை வேட்டியும் சென்றது- மீண்டான் தும்பைப் பூவாகப் பளிச்சிட்டது வேஷ்டி.

''தலை வாரிக்கங்க'' என்று கூறி 'காந்தரால்' ஹேர் ஆயில் புட்டியை கழற்றி வைத்தாள்.

''ஒரு நிமிஷம்'' என்று சொல்லிவிட்டு, அறைக்கு வெளியே வந்தான். உதய சூரியனின் திசை நோக்கிக் கரங் கூப்பிக் கை தொழுதான். ஒரு நிமிஷம் அல்ல, ஒன்பது நிமிஷங்கள் வரை அவன் பிரார்த்தனை செய்தான். பிறகு திரும்பி வந்தான். வாரிக் கொண்டான் — ஆமாம், தலை முடியைத்தான் வாரிக் கொண்டான். சுருட்டை முடிகளில் அற்புதமாக வாசம் கமழ்ந்தது.

''நான்கூட இந்த ஆயில்தான் உபயோகிப்பேன்.''

''ஓஹோ'' என்று சொல்லி விபூதி மடலிலிருந்து ஒரு துளியை நகக் கண் கொண்டு எடுத்துப் பூசிக்கொண்டான்.

"நீ விபூதி பூசிக் கொள்றது தானே?"

"ஆஹா!"

திருநீறு ஏந்தப் பூங்கரம் நீட்டினாள் ஏந்திழை.

ஆனால் அதற்கு வேலையின்றி அவனே அவளுக்கு பூசி விட்டான்.

"நம்ம ரெண்டு பேருக்கும் இந்தத் திருநீறும் தெய்வமும் தான் இனிக் காப்பு" என்று உணர்ச்சிப் பெருக்குடன் உரைத்தான் அவன்.

சிவந்த நெற்றியில் வெண்ணீறு துலாம்பரமாக விளங்கிற்று.

"இனிமேலாச்சும் இந்தத் திருநீறும் தெய்வமும் என்னைக் காக்கட்டும்" என்றாள் ஊர்வசி, வேதனையின் நெட்டுயிர்ப்புடன்.

"கடந்தது கனவாகவே தொலையட்டும். இனி நல்லதே நடக்கும்னு நம்பு" என்று தேற்றினான் அவன்.

அவள் தன்னை மறந்து கைகூப்பினாள். அவளுக்கு நேரே நின்றவன் அம்பலத்தரசனே! அவன் சற்று தள்ளி நிற்க முனைந்தான். தெய்வத்துக்குக் குறுக்கே நிற்க ஒப்பவில்லை அவன்.

"உங்களைக் கும்பிடத்தான் கை குவிச்சேன். அப்படியே நில்லுங்க, நகராமல்!" பாங்குடன் அஞ்சலி செலுத்தினாள், பாவை.

அவன் மனம் உருகியது.

"புறப்படலாமா ?"

"ஓ!"

ஜிப்பாவைப் போட்டுக் கொண்டான் அவன்.

''டாக்ஸி பிடிச்சிட்டுப் போயிடலாம் !''

''ஆகட்டும்!''

''போர்ச்சுகீஸ் சர்ச் தெருதானே? பழைய வீடுதானே?''

''ஆமாம்!''

''நான் எப்போது திரும்பலாம் ?''

''ஏன் என் உத்தரவைக் கேட்கிறீங்க ? உங்க இஷ்டப் பிரகாரம் திரும்பிடலாம், ஆமா, உங்களுக்கு ஆபீஸ் பத்து மணிக்குத்தானே ?''

''ஆமாம்!''

''ஆபீசுக்குப் புறப்பட்டுப் போறதுக்குத் தோதாய் உங்களை அனுப்பி வைச்சிடுவேன், அந்தக் கடமையிலே எனக்கும் இனிமே பங்கு உண்டில்லையா ?''

''ஓ ...கே!''

''ஒரு விஷயம். இந்த லெட்டர் உங்களுக்கு, நான் எழுதினது. ஆபீஸிலே ஓய்வு கிடைக்கையில் அதாகப் பட்டது, ஆபீஸ் வேலைக்குக் குந்தகம் ஏற்படாத வகையிலே ஓய்வு கிடைக்கையிலே—இதைப் படிச்சுப் பாருங்க. இதோ பாருங்க, என் டைரி இது! நானே வேண்டு மென்றேதான் இதை விட்டு விட்டுப் போகப் போறேன்! இதை உங்க விருப்பப்படி பார்க்கலாம் !''

டைரியை ஏதோ ஞாபகத்தோடு எடுத்துப் புரட்டினாள். பத்து ரூபாய்த் தாள்களைக் கொத்தாக எடுத்துக் கொண்டாள். ''நாடகக் கூலி இது' என்று சொல்லி நாட் குறிப்பை முன்வைத்த இடத்தில் வைத்தான். தன் கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே எழுந்தாள்.

"இந்தாங்க உங்க ரிஸ்ட் வாட்ச் !"

மணி ஆறு நாற்பது!

"புறப்படுவோமா ?"

"நல்லதுங்க!"

அறைக் கதவுகளையும் மாடி வழிக் கதவையும் பூட்டிக்கொண்டு அவன் இறங்கினான்.

அதற்குள் படிதாண்டிக் கீழ்த்தள முகப்பை அடைந்து விட்டாள் ஊர்வசி

பொருட்காட்சி சாலைப் பொருளைப் பார்ப்பதுபோல பலப்பல கண்கள் அவளை மொய்த்திருந்தன.

அம்பலத்தரசன் படிகளைத் தாண்டிக் கொண்டிருந்த அதே நேரத்தில், அவன் அறையிலிருந்த டெலிபோன் 'கண கண' வென்று ஒலிக்கத் தலைப்பட்டது !

அவ்வுண்மையை அவன் அறியான் !

"வா போகலாம், அதோ டாக்ஸி !"

# 6

"டாக்ஸிக்குச் சிறகுகள் இல்லை அல்லவா ? பின் எப்படிப் பறந்தது அது ?

போர்த்துக்கீசிய மாதா கோவில் தெருவின் நடுமையத்தில், வீதியின் மேலோரத்தில் நின்ற பண்டைய வேப்ப மரத்து நிழலிலே கொலு வீற்றிருந்தாள் ஸ்ரீ தண்டு மாரியம்மன். மிகவும் சக்தி படைத்த தாய் அவள், ஊராளும் உலகாளும் அன்னையின் சக்திக்குக் கேட்கவா வேண்டும்?

அவள் சந்நதியில் நின்றாள் ஊர்வசி. நின்றவள், கைகளைக் குவித்துக் கும்பிட்டாள். மாலை மாலையாகக் கண்ணீர் தொடுத்தாள், தன்னை மறந்த நிலையில் அவள் இருந்தாள்.

வினாடிகள் ஒன்று, இரண்டு என்று எண்களை உயர்த்திக் கொண்டிருந்தன.

அவளது அக் கோலத்தைக் கண்ட அம்பலத்தரசன் ஒரு கணம் மனம் அதிர்ந்தான்.

"தாயே! ஏன் என்னை இப்படிச் சோதித்துவிட்டாய்! இப்போது என் தாய்க்கு நான் என்ன பதில் சொல்வேன்? எப்படிப் பதில் சொல்லப் போகிறேன்?"

ஊர்வசி கண்மலர்ந்து, வாய் விட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அபயக்கரம் ஏந்தி, அருட்சிரிப்பும் ஏந்தி, கூர்மிகுசூலாயுதமும் ஏந்திக் கல்லாய் நின்றாள் அம்மன், ஊர்வசியின் கேள்விக்குப் பதில் ஏதும். சொல்லக் காணோம்! கல் பேசாதா? தெய்வத்திற்குப் பேச வாய் இல்லையோ?

அவனுக்கு மேனி புல்லரித்தது; கண்கள் குளமாயின.

செருமினாள் அவள், காதளவோடிய கயல்விழிகள் துவளத் துவளச் செருமினாள்.

அவள் அழுதாள்.

களங்கப்பட்டு நின்ற பெண்மை அழுதது.

கறைப்படுத்தப்பட்ட கற்பு அழுதது.

ஊர்வசி அழுதாள்!

சுடுநீர் மாலை மாலையாக நீண்டது.

அன்னைக்கு மாலை சூட்டவா இந்தச் சுடுநீர் மாலை?

"ஊர்வசி, உன் வீடு வந்திட்டுது. வா. போகலாம்," என்று அவளை அழைத்தான் அம்பலத்தரசன்.

ஆஸ்பத்திரியை நோக்கிச் சீசாவும் கையுமாக, நோயும் உடம்புமாகப் போய்க் கொண்டிருந்த கிழவர் ஒருவர் அம்பலத்தரசனையும் ஊர்வசியையும் மாறிமாறி—மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டே சென்றார்.

அவன் கொடுத்த அழைப்பை அவள் செவி மடுத்ததாகத் தோன்றவில்லை

அவள் தோளைத் தொட்டு, "ஊர்வசி," என்று கொஞ்சம் அழுத்தப் பதித்துக் கூப்பிட்டான் அவன்,

அவளுக்குத் தன்னுணர்வு சிலிர்த்தது. அவள் ஏறிட்டு விழித்தாள். கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். சுற்று முற்றும் நோக்கினாள். "வீடு வந்திட்டுதே! வாங்க போவோம்" என்றாள் குரலில் இருந்த அவசரம் அவளது பாதங்களில் இருக்கவில்லை. என்றாலும், ஜன நடமாட்டம் கூடுதல் படவே, அவள் சூழலை அனுசரித்து, 'சடக்' கென்று திரும்பி நடந்தாள்.

எதிர்த்திசையில் அவள் குடியிருந்த வீடு இருந்தது.

இருவரும் வீதியைத் தாண்டி நடந்தார்கள்,

காலை இளங்காற்றில் சாய்ந்தாடிய சீமைக் கொன்றைகள், அவர்கள் இருவரையும் வரவேற்றன.

தவறு இழைத்த குழந்தை தாய் முகம் காண அஞ்சுமே அந்தப் பாவனையில் அஞ்சிச் செத்தாள் ஊர்வசி. ஆனால் அவளுக்கு உயிர் கெட்டி!

"நான் இருக்கேன், பயப்படாதே நீ!

அவளை அவன் அழைத்துச் சென்றான்.

நீதியின் வாசலைக் கடக்கத் தனக்கு அருகதை இல்லை என்பதுபோல, அவள் தன் வீட்டின் வாசலில் எள்ளத் தனை பொழுது அப்படியே சிலையாகி நின்றாள். அவளைக் கைப்பிடித்து இட்டுச் சென்றான் அவன்.

வாசல் வழி விட்டது.

குடியிருப்பு மனையின் முதற்பகுதி நிலைப்படியில் காத்துத் தவம் கிடந்த முதியவள் ஒருத்தி ஊர்வசியைக் கண்டவுடன் ஆனந்தக் கடலாடி, ''ஊர்வசி! வந்திட்டி யாடி அம்மா? ராத்திரி முச்சூடும் என் வயித்திலே நெருப்பைக் கட்டிக்கிட்டு இருந்தேனே அம்மா? நல்ல வேளை, என் வயித்திலே பாலை வார்த்தியே!'' என்று ஆனந்தப் பெருமூச் செறிந்து, மகளை வரவேற்றாள்; கண்கள் கசிந்தன. வெள்ளைப் புடவையின் நுனியைக் கொய்து மூக்கைத் துடைத்துக் கொண்டாள்.

''அம்மா!' என்று சொல்லிய ஊர்வசி தன் தாயின் மார்பில் சாய்ந்தாள். பிறகு, அம்பலத்தரசனைச் சுட்டிக் காட்டி "இவங்களைத் தெரியுமில்ல அம்மா?" என்றாள்.

அப்பொழுதுதான் அம்பலத்தரசனைக் கவனித்தாள் இந்த அம்மாள்; "வாங்கய்யா. இவங்களையா தெரியாது?... நீ நடிச்சமொதல் நாடகத்தைச் சிலாகிச்சு எழுதியவங் களாச்சே?'' என்றாள்.

''ஒருவாட்டி நான் இங்கே வந்தப்ப— என்னை உங்க பொண்ணு அழைச்சிட்டு வந்தப்ப—தஞ்சாவூர் டிக்ரி காப்பி யாட்டமே காப்பி போட்டுக் குடுத்த மீனாட்சி அம்மாளை நான் மறக்கவே மாட்டேனுங்க'' என்று நன்றியறிவு மாறாமல் வெளியிட்டான் அம்பலத்தரசன்.

"வாம்மா. உள்ளே நீங்களும் வாங்காய்யா" என்று கூறிக் கொண்டு, அவள் முன்னே நடந்தாள்.

கூடம் வந்தது.

உள்ளே இருந்த தண்ணீர்க் குடத்தை எடுத்து வெளிப் பக்கம் வைத்தாள் பாயை உதறிப் போட்டாள்.

"உட்காருங்க" என்று உபசரித்தாள் மீனாட்சி அம்மாள்.

அம்பலத்தரசன் சம்மணம் கோலிக் குந்தினான். சட்டைப் பையிலிருந்த ஊர்வசியின் உறைக்கடிதம் உறுத்திக் கொண்டிருந்தது. அதை மடிப்பு நீக்கி வைத்துக் கொண்டான். அவன் ஊர்வசியைத் தேடியபோது, அவள் கண்கள் அவனைத் தேடின.

"வாம்மா. உள்ளாற" என்று மகளை அழைத்துச் சென்றாள், பெற்றவள். சமையல் கட்டுக்குச் சென்றாள், ஊர்வசி.

கீழ்த் தொங்கலில் சீமை ஓடு உடைந்து இருந்தது. அவ்வழியே கதிரொளி பாய்ந்த வண்ணம் இருந்தது. சிட்டுக் குருவிகள் பறந்தன.

"ராத்திரி நாடகம் முடிஞ்சதும் எங்கேம்மா போனே? கன்னி கழியாப் பொண்ணு, அந்நியம் அசலிலே ராத் தங்கலாமா? பாதி சாமத்துக்கு மேலே, ஒரு யோசனை ஓடுச்சு. பக்கத்து பங்களாவுக்கு ஓடிப்போய் பூமிநாதனுக்குப் போன் பேசினேன். உன்னோட நாடகத்திலே நடிச்ச பிள்ளை யாச்சேன்னு, போன் பண்ணினேன்! தங்கப் பிள்ளை அது. உடனே தூக்கத்திருலேயிருந்து எழுந்து வந்து பேசிச்சு நாடகம் முடிஞ்சதும் நீ வீட்டுக்குப் புறப்பட்டிட்டதாச் சொல்லிச்சு சொன்னதோடே நிற்கலை; இங்கே வேறே வந்திச்சு விடியற வரைக்கும் எங்கெல்லாமோ தேடிச்சாம். நீ தட்டுப்படலையாம்!"

பேசிக் கொண்டே புதல்வியை நிமிர்ந்து பார்த்தாள் மீனாட்சி அம்மாள். மகளின் கலக்கமடைந்திருந்த அந்த முகத்தைக் கண்டதும் பெற்ற வயிறு பதறி விட்டது.

''ஊர்வசி! ஏனம்மா கலங்கிப் போய் நிற்கிறே? எங்கேம்மா போயிருந்தே ராத்திரி? உன்னைப் பத்தி நீ ரொம்ப அக்கறையும் கவலையும் கொண்ட தங்கக் கம்பியாச்சே நீ? பின்னே எங்கேம்மா ராத்திரி தங்கியிருந்தே? சொல்லம்மா ஏன் பேசாமல் நிற்கிறே, பேயடிச்ச வளாட்டம் ''

மீண்டும் ஊர்வசி மௌனம் சாதித்தாள்.

அவளை நெருங்கினாள் முதியவள்.

''நம்ம தமிழ்ச் சமுதாயத்திலே பொம்பளைக்குள்ள கட்டுத் திட்டங்கள் ஜாஸ்தி. ஆனா நமக்குள்ள எல்லை களோ குறைச்சல்! இப்படிப்பட்ட நிலையிலே, கன்னிப் பொண்ணான நீ ராத்திரி வீட்டுக்கு வரவில்லையின்னா, அதிலே உண்டாகக் கூடிய பின் விளைவுக உனக்குப் புரியாதாம்மா? உன்னை மாலையும் கழுத்துமாகப் பார்த் திட்டுச் சாகிறதுக்காகத்தான் தாயே நான் என் உசிரை வச்சுக்கிட்டிருக்கேன். சத்தியமாய் இதானம்மா நடப்பு! கம்மனாட்டி வளர்த்த கழுசடைக் குட்டி என்கிற அவப் பேரை என்னாலே தாளமுடியாதம்மா! சொல்லு, மகளே! என்ன நடந்திச்சு? எங்கே ராத்திரிப் பொழுதைக் கழிச்சே? ஏன் அயலிடத்திலே ராத்திரி தங்கினே? சொல்லு!'' என்று கர்ஜித்தாள் மீனாட்சி அம்மாள்.

மீண்டும் மௌனம் காலத்தைக் கபளீகரம் செய்யவே அந்நரக வேதனையை மேலும் வளர்த்த விரும்பவில்லை அந்த அம்மாள்.

''சொல்ல மாட்டே?'' என்று ஏங்காரமாக முழங்கிக் கொண்டே, ஊர்வசியின் கன்னங்களில் 'பளீரென்று' அறைந்தாள்.

ஊர்வசி விரக்தியோடும் அச்சத்தோடும் தன் அன்னையைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

''பாவி ஒருத்தன் என்னைப் பலாத்காரம் பண்ணிக் கெடுத்திட்டானம்மா! என்னை நான் காப்பாத்திக்கிட எத்தனை முயற்சி செஞ்சும், விதி அவனுக்குச் சாதகமாக இருந்திடுச்சம்மா! என்னைத் தெய்வம் ஏமாத்திடுச்சம்மா'' என்று கூக்குரல் பரப்பினாள் ஊர்வசி. பெற்றவளின் பாதங்களைச் சரணடைந்து கதறினாள்.

''ஐயையோ! தெய்வமே!''

அலறினாள் மீனாட்சி அம்மாள். மண்டையில் ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டாள் அம் முதியவள். மாளாத விழிநீர் வழிந்தது. தளர்ந்திருந்த உடல் அல்லாடியது.

பூகம்பம் வெடித்ததோ?

''அடிப்பாவி! என்னை உசிரோட கொன்னுட்டியே? கெட்ட கழுசடை அங்கிட்டே போய்க் கடலிலே விழுந்து சாகாமல் ஏன் எங்கண்ணிலே வந்து விழிச்சே?'' என்று நல்ல பாம்பாய் மீனாட்சி அம்மாள் சீறினாள்.

''அப்படிச் செத்துப் போயிடுறது. இப்போதும் எனக்குச் சுலபம்தானம்மா! ஆனா, அப்படி நான் செத்திட்டா மாத்திரம், எனக்கு உண்டான அவப் பேரும், களங்கமும் மறைஞ்சிடுமா அம்மா? இதுக்கு விடை சொல்லிடு. இப்பவே போய் நான் கடலிலே விழுந்து செத்துப் போயிடுறேன்! ஆண்டவன் அதுக்கு உண்டான தைரியத்தைக் கொடுத்திருக்கான்! உன்னோட அன்பும் கண்டிப்பும் அதுக்கு உண்டான மனசைக் கொடுத்திருக்கு சொல்லம்மா, சொல்லு'' என்று விரக்தியின் அழுத்தத்தோடு — நெஞ்சுரத்தின் — வலுவோடு நேர்மைத் திறனில் தனக்குள்ள ஈடு பாட்டின் துணையோடு அவள் வினா விடுத்தாள்.

அவள் : ஊர்வசி !

காலடியில் கிடந்த அருமைப் புதல்வி நெஞ்சடியில் வீசிய கேள்விக்கு இன்ன பதில் சொல்வது என்று பட்டும் படாமல் விழித்தாள் தாய். தாய்ப்பாசம் ரத்தக் கண்ணீரை வடித்தது. குனிந்து மகளை ஏந்தித் தூக்கினாள் பெற்றவள். தூக்கின சடுதியில், மீனாட்சி அம்மாளின் தளர்ந்த கைகள் ஊர்வசியின் நெஞ்சில் அழுந்தி விட்டன போலும் !

ஊர்வசி துடியாய்த் துடித்துப் போனாள். அவள் தன் மார்பகத்தை மேலாகத் தடவி விட்டுக் கொண்டாள்.

"இப்போ என்னை என்னம்மா செய்யச் சொல்லுறே நீ ?" என்று வேதனையின் உச்சத்தில் நின்று கேட்டாள் ஊர்வசி.

"நீ இப்போ என்ன சொல்லச் சொல்லுறே என்னை? அதை முதலிலே சொல்லு" என்று கெஞ்சினாள் அன்னை.

"நீ செத்திடாமல் இருந்தால் அதுவே போதுமம்மா" என்று இறைஞ்சினாள் மகள்.

"நீயும் செத்திடாதேம்மா" என்று விம்மினாள் தாய்—அம் மகளை ஈன்ற மாதா.

"சரியம்மா !"

"நானும் உசிரோட இருக்கிறேன், தாயே!" —மகளின் கன்னங்களைத் தடவிக் கொடுத்தாள் அவள்.

அன்னையின் கண்ணீரைத் துடைத்தாள் மகள்.

மகளை ஆரத் தழுவினாள் மீனாட்சி அம்மாள் ஏதோ சிந்தனை வசப்பட்டாள், ஒரு வினாடி. பிறகு ஆத்திரம் பொங்கியது, அவளது தளர்ந்தொடுங்கிய வதனத்தில்.

"உன்னைக் கெடுத்த அந்தப் பாவி யாரம்மா? சொல்லு இப்பவே போய் அவன் ரத்தத்தைக் குடிச்சிட்டு வந்திடுறேன்! சொல்லு மகளே" என்று கேட்டாள். பழி வாங்கத் துடித்தாள் அவள்.

"அந்தப் பாவியின் ரத்தத்தைக் குடிக்கிற கடமை என்னோடேயே இருக்கட்டும். நீ ஆத்திரப்படாதேம்மா! அந்தத் துரோகியைப் பத்தி இப்போ ஒண்ணும் சொல்ல மாட்டேன், நான்! அவனை நானே உன் முன்னாலே கொண்டாந்து நிறுத்திடுறேன். அம்மா! என்னை நம்பும்மா' என்று உறுதி மொழிந்தாள் அபலை ஊர்வசி. கையடித்துக் கொடுத்தாள்!

'அம்மா மகளே! நீதானே என்னோட நம்பிக்கை, நாணயம் எல்லாம்! நீ இல்லைன்னா, நான் மாண்ட இடம் எப்பவோ புல் மண்டிப் போயிருக்குமே! சரியம்மா! உம்.... இனி உன் கதி?.... என்று புதிய பிரச்னை ஒன்றைக் கிளப்பி விட்டு, மீண்டும் விம்மத் தொடங்கினாள் மீனாட்சி அம்மாள்.

அன்னைக்குப் பதில் சொல்ல வாயைத் திறந்தாள் புதல்வி.

அப்போது, அங்கே தோன்றினான் அம்பலத்தரசன். மீனாட்சி அம்மாளின் அருகில் வந்து நின்றான்.

"அம்மா! உங்க மகள் தனக்கு ஏற்பட்ட துர்பாக்கியத்தை ஒரு புது சக்தியோடு சுமந்துக்கிட்டு, என்னை நம்பி வந்துடுச்சு, ராத்திரி. தேவதையைக் கண்ட மாதிரி இருந்திச்சு எனக்கு. நடப்பைச் சொல்லி, என்கிட்டே அடைக்கலம் அடைஞ்சுது. என் பேரிலே அதுக்கு இருக்கிற அந்த நம்பிக்கையையே என்னோட கடமையின்னு கருதி, அதோட இஷ்டப்பிரகாரமே அதை என் சொத்தாய் ஆக்கிக்கிடுறதாகவும் உறுதி கொடுத்தேன். ராத்திரி என் அறை

யிலே தான் படுத்திருந்திருச்சு! என் பேரிலே அது கொண்ட நம்பிக்கையைக் காத்துக்கிட்டேன். இப்போது என் வாக்கைக் காப்பாத்திட வேண்டிய ஒரு கடமையும் காத் திருக்குது! அதுக்கு உங்க தீர்ப்புத்தான் வேணும்! உங் களோட நல்வாக்கு எனக்கு —எங்களுக்கு கிடைச்சிட்டால், அப்புறம் இந்த லோகமே துச்சம்தான்!

உங்க மாதிரி எனக்கும் ஒரு வயசான தாய் இருக் கிறாங்க. அவங்க இந்தக் கதையைக் கேட்டு என்னை மாதிரியே இளகுவாங்கன்னுதான் நம்புறேன்! மற்றவங்க எங்களை பத்தி என்ன நெனைச்சாலும், என்ன பேசினா லும் அதெல்லாம் ஒரு பொருட்டல்ல எங்களுக்கு! தான் ஏமாந்ததாலே மனசொடிஞ்சு தற்கொலை முயற்சி எதை யும் கையாளாமல் இருந்திருச்சே ஊர்வசி, அதான் விதியின் விளையாட்டு! அம்மா, இனிமே நீங்கதான் தர்மம்! சொல் லுங்க உங்க முடிவை! எங்க ரெண்டு பேர் வாழ்க்கையின் ஆரம்பமும் முடிவும் இனி உங்க வாக்கிலேதான் இருக்குங்க, அம்மா!''

இதற்குமேல் அவனுக்குப் பேசத் திராணி இல்லை. தொண்டையை அடைத்தது.

சிறு குழந்தை போலத் தேம்பிய மூதாட்டி மீனாட்சி அம்மாள். ''மாப்பிள்ளை'' என்று உணர்ச்சிச் செறிவுடன் புது உறவு சேர்த்து விளித்தாள்.

அமைதி பூத்துப் புன்னகை பூத்தாள் ஊர்வசி.

அப்போது, அந்த வீட்டு வாசலை விட்டு 'டாட்ஜ்' புறப் பட்டுக் கொண்டிருந்தது.

# [7]

மனிதனை மனிதனாக அங்கீகரிக்கும் முதற் பட்டயமாக விளங்கவல்லது அவனுடைய மனிதாபிமானம்!

ஆம்; இந்த மனிதாபிமானம் எனும் மகாசக்திதான் தூய்மையின் உருக்கொண்டு அம்பலத்தரசனை ஒருபடி உயர்த்திக் காட்டிவிட்டது. விதி எனும் தீக்குளிப்பில் மூழ்கி எழுந்த அவன் இப்போது புது மனிதனாகவே உருமாறி விட்டிருந்தான். அவனது மனிதத் தன்மையின் அந்தப் புது உணர்வும் புதுச் சக்தியும் தான் ஊர்வசியை ஏற்றுக் கொண்டு அவனை வாழ்த்தும் கடமைத் தெம்பை அவனுக்கு நல்கின. அதன் காரணமாகவே அவன் கோழையாகவும் ஆகவில்லை; வேடதாரியாகவும் ஆகவில்லை, அதன் விளைவாகவே, ஊர்வசிக்கு வாய்த்த களங்கத்தையும் தானே வலிய ஏற்றுக் கொள்ளவும் துணிந்தான். விஷத்தை தன் கண்டத்தில் தாங்கிக் கொண்ட ஐயனைப் போலே!

மனம் ஓர் ஆழி. நெஞ்சில் அலைகள் ஆர்ப்பரித்தன.

'என்னை யார் வாழ்த்தினாலும் வாழ்த்தாவிட்டாலும், என் ஊர்வசியும் என் மகாத்மாவும் கட்டாயம் என்னை வாழ்த்துவார்கள் அது போதும் எனக்கு!' — இந்த ஓர் அமைதியே அறமாகத் தோன்றியது அவனுக்கு.

'நான் நல்லவன் இல்லை. என் பருவ இச்சையைத் தணிக்க இரண்டொரு விலை மாதர்கள் நேற்றுவரை காத்திருந்து வந்திருக்கிறார்கள். நான் நேற்று வரை நல்லவனாக இருந்தது இல்லைதான். ஆனாலும் என்னை நம்ப ஒரு பெண் துணிந்தாள். அத்துணிவில் தான் என்னை நாடி வந்தாள் ஊர்வசி. கெடுக்கப்பட்ட நிலையில் தான்

வந்தாள். இருந்தால் என்ன? ஆனாலும், என்னை நம்பினாள். தனக்கு ஒரு புகல் கிட்டுமென்று தவம் இருந்தவள் போல என்னைத் தேடி வந்தாள் அவள்.

அவள் முடிவு விதியின் கையிலோ, அல்லது, அவளைப் படைத்த ஆண்டவன் கையிலோ இல்லை நேற்று இரவுவரை! என் கையில்தான் அவள் விதியும் அவள் வினையும் இருந்தன. கெட்டவனுக்குக் கெட்டவள்தான் சதம் என்னும் முடிவாக இந்நிலையை நான் ஏன் கருத வேண்டும்? ஆதரவற்ற நிலையில் அபலையாக வந்தாள் அவள்; உயிருக்குயிராகக் கட்டிக் காத்த கற்பைப் பறிகொடுத்த பரிதவிப்புடன் வந்தாள். சாகத் தெரிந்தவள் அவள். ஆனாலும் சாவை விரும்பவில்லை. வாழ்வை விரும்பினாள் அதன் காரணமாக, அவள் என்னை நம்பினாள்; அடைக்கலமானாள்.

அவள் நடித்த முதல் நாடகத்திலே 'வழுக்கிவிழுந்த' அவளை ஏற்றுக் கொண்ட ஓர் எழுத்தாளரின் அந்தத் தர்மத்தை சிலாகித்துப் பேசிய என் தலைமைப் பேச்சை நம்பியே வந்தாள் என்னிடம், அந்த நம்பிக்கையைக் காப்பாற்றிக் கொண்டு விட்டேன். அந்த நம்பிக்கையைக் காப்பாற்றிக் கொடுத்து விட்டேன்!.... பிறவியின் கடமையை உணர்ந்தாள் ஊர்வசி. எனக்கும் பிறவியின் கடன் புரியும்! அம்மா இம் முடிவை வாழ்த்துவார்கள்!

அபலைகளுக்கு ஆதரவளிக்கும் லட்சிய நோக்கம் கொண்டவர்கள் அம்மா, ஆவணியில் முகூர்த்தம் வைப்பதற்கென்று தனக்குப் பிடித்த மருமகளையும் நிர்ணயம் செய்து இருக்கிறார்கள். அம்மா அந்தப் பெண்ணின் படத்தையும் எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். அநேகமாக, கூடிய விரைவில் புறப்பட்டு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லைதான், வந்ததும் எனக்குப் பிடித்த மருமகளை அவர்களுக்கு அறிமுகப்

படுத்தி வைக்க வேண்டும். இனி, எனக்கு என் குடும்பத்தைப்பற்றியும், ஊர்வசியின் குடும்பத்தைப் பற்றியும் தான் கவலை. ஊர் வாய்க்கு மூடி ஏது? ஊர்வசிக்கு புனர்ஜென்மம் கொடுத்துவிட்டேன்; அவளுக்குப் புது வாழ்வு கொடுக்கப் போகிறேன்! இனி நான் நல்லவன் நல்லவனாகவே இனிமேல் இருப்பேன். இனி எனக்கு வாழ்வு ஊர்வசியேதான்!'

எண்ணங்கள் ஓடி நிலைத்தன. அவ்வுணர்ச்சிச் சுழலில் அவனது கவிதை மனம் விழிப்புக்கொண்டது. தொடக்கமே, அழகிய கவிதையாக வழியத் தலைப்பட்டது. ஊர்வசியின் சிரிப்பு அவன் மனத்தில் சிற்றலை எழுப்பியது. தன்னை மறந்தான்.

அப்போது,

'என்ன தீவிரமான சிந்தனையிலே லகிச்சுட்டீங்களே மிஸ்டர் அம்பலத்தரசன்? பாலன்ஸ் ஷீட்டை பூராவும் டைப் செய்திட்டு பாக்கிச் சிந்தனையைத் தொடாக் கூடாதா? என்று வருந்தினார் முதலாளி. இரும்புக் கடையில் வழங்கிய மனிதர் அவர். செம்பு தாஸ் தெருவில் பழம் தின்று கொட்டை போட்டவர். அவர் தின்று போட்ட கொட்டைதான் இப்படி இரும்புக் கடையாக உருமாறி விட்டதோ என்னவோ?

"மன்னிச்சிடுங்க என்னை. ஏதோ சிந்தனை!" என்று தன் தவற்றை உணர்ந்து ஒப்புதல் தெரிவித்த நிம்மதியுடன், 'ரெமிங்க்டனைச்' சரணடைந்தான் அவன்.

சாவி கொடுக்கப்பட்ட காலக் கடிகாரம் ஒழுக்கம் கெடாமல் பணி இயற்றுவதே ஒரு விந்தைதான்!

'பாலன்ஸ் ஷீட்' மூன்றாம் தடவைதான் உருப்படியாக உருப்பெற்றது.

சாப்பாட்டு வேளை வந்தது.

அம்பலத்தரசன் சாப்பாட்டுக்கு மண்ணடிக்கு விரைந்தான். சாப்பாடு பரிமாறப்பட்டிருந்தது. ஆனால் அவனோ ஊர்வசியின் கடிதத்தைப் பிரித்துப் படிப்பதில் ஈடுபட்டான்.

கடிதம் பேசுகிறது.

''அன்பிற்குரியீர் !''

பறிக்கப்பட்டுவிட்ட பெண்மையின் அலறல் அமைதிப் பட்ட நிலைமையில் நான் உங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். கறைபட்ட பெண்ணாக நான் உங்களை நம்பி வந்தேன், என் நம்பிக்கையை நீங்கள் காத்துத் தந்து விட்டீர்கள். இவ்வாய்ப்பை நான் பயன் படுத்திக்கொள்ள விழைகிறேன்.

என்னை ஆள வந்த தெய்வமாக நீங்கள் எனக்குத் தரிசனம் தருகிறீர்கள்.

என் நிமித்தம் என் களங்கத்தையெல்லாம் வலிய ஏற்கத் துணிந்த உங்களது மனிதத்தன்மையை மனிதாபிமானத்தை — என் ஆயுள் பரியந்தம் மறக்கவே முடியாது ; மறக்கவும் மாட்டேன்

உங்கள் கடமை பொறுப்பு மிகுந்தது !

எனக்கென ஒரு காப்பு வேண்டுமென்று நான் பல காலமாகவே கனவு கண்டு வந்திருக்கிறேன். அந்தக் காப்பு காலங் கடந்து எனக்குக் கிட்டியிருக்கிறது.

நான் நடித்த முதல் நாடகத்துக்குத் தலைமை தாங்கினீர்கள் நீங்கள், வழுக்கி விழுந்தவளாக நான் நாடகத்தில் நடித்த போது, கற்பு நிலை தவறிய என்னை-நாடகத்தில் அவ்வாறு ஆக்கப்பட்ட என்னை - நாடகத்தில் ஏற்றுக் கொள்ள முன்வந்த கதாசிரியரின் சமூகப் பணிச் சீர்திருத்தத்தைத் தாங்கள் வெகுவாகப் பாராட்டினீர்கள். இம் மாதிரி விதிவசத்தால் கெட்டநிலை அடைந்த அபலைகளைச் செயல் முறையிலும் ஆதரிக்கும் நிலை வளர வேண்டும் எனவும் தாங்கள் காந்திஜீயின் உரையை உதாரணம் காட்டிப் பேசினீர்கள்.

அந்தப் பேச்சு என் நெஞ்சத்தைத் தொட்டது. அப்போதே தாங்கள் என் நெஞ்சில் இடப் பெற்றுவிட்டீர்கள். உங்களை ஒரு முறை அப்புறம் வழியில் சந்தித்து என் இல்லத்துக்கு அழைத்து வந்தபோதே, என் இதயத்தைத் தங்களிடம் திறந்து காட்ட வேண்டுமென்று துடித்தேன். ஏதோ ஒன்று அப்போது தடுத்துவிட்டது. அதற்குப் பெயர்தான் விதியோ?

இப்போது தான் என்னுடைய அந்தக் கனவு பலிதமடைந்திருக்கிறது.

நான் மோசம் போன அபாக்கியவதி சாகத்தான், இருந்தேன். ஆனால் என் அன்னையின் நினைவும் ஏமாற்றப்பட்ட என் பெண்மையின் வெஞ்சினமும் என்னைச் சாக அனுமதிக்க மறுத்தன.

நாடகம் முடிந்தது.

என் நாடகக் கோலத்தை அழித்துக் கொண்டிருந்தேன் நான். என் சொந்த உடைகளைத் தரித்துக் கொண்டு புறப்பட ஆயத்தப்பட்டேன். அப்போது நல்லவன் ஒருவன் — அக்கணம் வரை நல்லவனாகவே

நடந்து கொண்ட ஒருவன் - தனக்கு மயக்கமாக இருப்பதாகச் சொல்லி என் உதவியைக் கோரினான் நாடக அரங்கில் வேறு ஒரு ஈ காக்கை கூட இல்லை அப்போது நான் அவனுக்குத் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருந்தேன்•

அதுவரை மனிதனாக இருந்த அவன் க்ஷணப் பித்தம் கொண்ட நிலையில் மிருகமாக மாறி, என்னை மடக்கிப் போட்டுத் தன் வெறியைத் தணித்துக் கொண்டு விட்டுப் பறந்து விட்டான். என் நகங்களாலும் பற்களாலும் கூட என்னைக் காப்பாற்ற இயலாமல் போயிற்று. அந்தப் பாவியை — அந்த மிருகத்தை – அந்தத் துரோகியைப் பழிவாங்கியே தீருவேன்! அந்த ஒரு கடமைக்காகவே நான் உயிரோடு இருக்க வேண்டும்!

அந்தப் பாவியைத் தாங்களும் அறிவீர்கள்.

ஆனால், அவன் பெயரை நானாகச் சொல்லும் காலம் வரும் வரை, நீங்களாக என்னை அவன் பெயரைச் சொல்லும்படி தூண்டக் கூடாது.

ஒரு ஆணையையும் உங்கள் முன்னே வைக்கிறேன்.

என்னைப் பற்றி நம்பிக்கை குறைந்தாலோ, அல்லது என்னைப் பற்றிய நல்லெண்ணம் மாறினாலோ, எப்போது வேண்டுமானாலும் தாங்கள் என்னை நிராகரித்துவிடலாம். இதற்கு நான் மனப்பூர்வமாக இணங்குகிறேன்.

இப்போது பத்திரிகைக் கதைகள் சில என் நினைவிற்கு வருகின்றன.

வழுக்கி விழுந்த ஓர் அபலையின் வயிற்றுப் பிள்ளைக்குத் தந்தையாக இருக்கமட்டுமே ஒப்புகிறான் ஓர் அறிவாளி ஆனால் அந்தத் துரதிருஷ்டக்காரிக்கு நிரந்தரக் கணவனாக மட்டும் இருக்க ஒப்பவில்லை அவன் இப்படி ஒரு கதை.

இன்னொன்று :

கெடுக்கப்படுகிறவள் ஒரு அழகுக் குமரி. அவள் தலையில் ஒரு குடம் தண்ணீரைக் கொட்டி அவளது கறை படிந்த கற்பைத் தூய்மைப்படுத்துகிறாளாம் அவள் தாய். வினோத மான பண்பாடாகத் தோன்றவில்லையா இது? இந்தக் கதையைப் படித்துவிட்டு அந்தத் தாய்க்காகக் கண்ணீர் சொரிந்தேன் நான்.

மற்றொரு கதை :

பெண் ஒருத்தி களங்கமடைகிறாள். அவளை ஆதரிக்கத் துணிகிறான். ஒருவன். ஆனால் அவனுடைய மனம், சமையல்காரனின் வாய் வேதாந்தத்தால் மாறி, அந்த அபலையைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டுக் கதவை தாளிட்டுக் கொண்டு விடுகிறான் அவன். கோழை அவன்!

இவைகளில் ஒன்றாவது வாழ்க்கையைச் சொல்கின்றதா? ஊஹூம்!

கதை, வாழ்க்கையாகவே மாற வேண்டும்!

வாழ்க்கையே கதையாக மாற வேண்டும்!

நான் நாடகக்காரி. ஆனாலும் இன்று இரவு பத்து மணிவரை நான் பண்பும் பண்பாடும் கொண்டவளாகவே ஒழுகி வந்தேன்.

மீண்டும் சொல்கிறேன். நான் நிரபராதி! இது சத்தியம்!....ஒரு விண்ணப்பம்,

விதி வசத்தால் என் வயிற்றில் 'கரு' உருப்பெற்றால் அந்த ஒரு முடிவுக்குக் குறுக்காகத் தாங்கள் நிற்கவே கூடாது!

நம்மிடையே புதிரோ பிரச்சனையோ சிக்கலோ எழக் கூடாது. அதற்காகவே இந்த லெட்டர்.

எஸ். ஊர்வசி''

கடிதத்தை உறைக்குள் திணித்து சட்டைப் பையில் சொருகிக் கொண்டான் அம்பலத்தரசன். நெஞ்செலும்பு உருகியது. கண்ணீர் சொட்டுக்கள் தெறித்தன!

# [8]

அம்பலத்தரசனின் கருத்தைத் தாங்கிய 'பூ' ஏடு. அம்பலத்தரசனின் பார்வைக்கென வந்து காத்திருந்தது.

மாடிக் கதவைத் திறந்ததும் அவன் பார்வையில் விழுந்தது. அந்தப் பத்திரிகைதான். 'பூ' காரியாலயப் பையன் கொணர்ந்து போட்டுச் சென்றிருந்தான். கார்டு ஒன்றும் கிடந்தது எடுத்தான்

அவனுக்குத் தெரிந்த நண்பன் இரங்கநாதன் எழுதி யிருந்தான் 'இ' போடாமல் தன் பெயரை எழுத மாட்டான் அந்த நண்பன். சென்னையிலிருந்து திருச்சிக்கு மாற்றலாகிப் போயிருப்பவன். ஏதோ அரசாங்க 'இன்டர்வ்யூ' விஷயமாக வருவதாகவும், தங்குவதற்கு ஒரே ஒரு நாள் மாத்திரம் அறையில் இடம் கொடுக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டிருந்தான் இரங்கநாதன்.

இரங்க அம்பலத்தரசன் தயாரானான். பிறருக்காக இரக்கம் காட்டுவதென்பது அவனது ரத்தத்தோடு ஒட்டிய குணமாக அவனுக்கு அமைந்திருந்தது. 'உங்களைப் போல நல்லவர்கள் நாலு ரெண்டு பேர் இந்தப் பூலோகத்திலே இருக்கக் கண்டுதான் மிஸ்டர் அம்பலத்தரசன், மழைகூடப் பெய்கிறது' என்று அவனுக்குப் புகழ் மாலை சூட்டுவார்கள், அவன் தோழர்கள்.

அந்தி வெய்யில் சிந்தூர வண்ணம் காட்டியது.

அறையைத் திறந்து வந்து சோபாவில் சாய்ந்தான் அவன். அறையைச் சுற்றிச் சூழக் கண்ணோட்டமிட்டான் ஊர்வசி இல்லாத அறை வெறிச்சோடிக் கிடப்பதாகவே அவனுக்குத் தோற்றமளித்தது. அந்நினைவு அவன் இதயத்தை என்னவோ செய்தது வேதனை சாடியது மனத்தை வெய்துயிர்ப்பு விளைந்தது

அலுவல் முடிந்த கையோடு ஊர்வசியின் இல்லத்துக்குச் சென்று திரும்ப வேண்டுமென்றுதான் நினைத்திருந்தான் அவன். ஆனால், அறைக்கு வரவேண்டி வந்தது. அதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. அவனது உற்ற நண்பனான பூமிநாதன் இங்கு மாலையில் வருவதாகத் தொலைபேசி மூலம் அறிவித்திருந்தான். இச் செய்தியை அவனுக்குச் சொல்லவும் அவன் அலுவல் மனை உதவியது.

காலையில் ஊர்வசியின் வீட்டில் நடந்த ராஜோபசாரத்தை நினைத்தான் அந்நினைவில் புத்துருக்கு நெய் மணத்தது; சீரகச் சம்பா இட்டிலியும் புதினாத் துகையலும் சுவை கூட்டின. அத்துடன் ஊர்வசியின் கொள்ளை அன்பும் அவன் மனத்தைக் கொள்ளை கொண்டது. மதியச் சாப்பாட்டையும் அலுவல் பார்க்கும் இடத்துக்கு அனுப்பி வைப்பதாக மன்றாடினாள் மீனாட்சி அம்மாள், ஆவணி பிறந்து அப்படிச் செய்து கொள்வதே உசிதமென்று சொல்லி விட்டான் அவன்.

சட்டையைக் கழற்றிப் போட்டான் அம்பலத்தரசன். சட்டைப் பையில் இருந்த ஊர்வசியின் கடிதத்தை மறந்து விடாமல் தோல் பெட்டியின் அடியில் வைத்துவிட்டு மூடப் போன சமயத்தில் மேலே தெரிந்த புகைப்படத்தைக் கண்டான். அதை எடுத்துப் பார்க்க நினைத்தவன், அவ்வாறு செய்யாமல். அதைப் பெட்டியின் அடியில் போட்டு வைத்

தான். அந்த நிழல் படத்தைக் காலையில் ஊர்வசி பார்க்க நேர்ந்ததையும் அவன் மறந்து விடமாட்டான். இந்தப் படத்தை ஒரு நாளைக்கு நூறு தரமாவது பார்க்காமல் இருந்ததில்லை அவன்?

இப்போது 'பூ' அவன் கண்களை உறுத்தியது. 'வாழ்வதற்கே' விமர்சனம் மிகவும் நேர்த்தியாக இருந்ததென்று அவனுக்குத் தெரிந்தவர்களும் அவனைத் தெரிந்தவர்களும் சொன்னார்கள். விமர்சனம் நேர்த்தியாக இருக்க வேண்டுமென்றுதான் அவனுக்குச் சன்மானமாக மாதத்திற்கு நூறு ரூபாய் தரப்படுகிறது என்கிற விஷயம் அவர்களுக்குத் தெரிந்திருக்குமோ என்னவோ?.... யார் கண்டார்கள்?

தன் நாடக விமர்சனத்தை ஒருமுறை மேலோட்டமாகப் பார்த்தான் அம்பலத்தரசன்

"....நாடகத்திற்கு நாயகியாக அமைந்திட்ட குமாரி ஊர்வசி மிகவும் இயல்பாகத் தோன்றினார். பண்பட்ட நடிப்புத்திறம் அவரிடம் சுடர்விட்டது. நயவஞ்சகன் ஒருவனால் பலாத்காரமாகக் கற்பழிக்கப்படவிருந்த கட்டத்தில் அவள் நடத்தும் போராட்டமும், அத்துன்பத்திலிருந்து விடுபடச் செய்யும் முயற்சியும் வெகு தத்ரூபம். அபலை ஒருத்தி இப்படிப்பட்ட அநியாயத்திற்கு இலக்காகும் நிலையைக் காணும்போது, மயிர்க்கூச்சம் ஏற்படுகிறது. தன் எத்தனம் பலன் காட்டாத நிலையில், அவள் கற்பு பறிபோகிறது.

உடனே தனக்கு விதித்த துர்பாக்கியத்தை நினைத்து, நினைத்து மௌனமாக அவலக் கண்ணீர் வடிக்கும் கட்டமும், அம்பிகையின் முன்னே விழுந்து, பெண்ணாகப் பிறந்திட்ட, நீ ஒரு பெண்ணின் கற்பைக் காத்துத்தரும் பொறுப்பை ஏற்றிருக்கக் கூடாதா, தாயே? நானோ அபலை, நீயோ சர்வ வல்லமைக்காரியாயிற்றே! உன் திரிசூலம் எங்கே? உன் வெஞ்சினம் எங்கே? நீயும் அந்த நயவஞ்சக

மிருகத்துக்குப் பயந்தொடுங்கிப் போய் விட்டாயோ? நீ வெறும் கல்தான் என்று அந்தப் பாவி நினைத்துத்தான் என்னைப் பழிகாரியாக்கி விட்டான்! ஆமாம், எனக்கு நீ இனி காப்புத் தரவேண்டாம் அந்தக் காப்பும் இனி எனக்குத் துச்சம்! என்னைக் காக்க கடல் இருக்கிறது!' என்று வசனம் பேசி, கடலை நாடி ஓடும் கட்டமும் ஊர்வசிக்குச் சிறப்பை நல்கும்.

கதாசிரியருக்கு ஒரு யோசனை.

அநீதியான முறையிலே கற்பழிக்கப்பட்ட பெண்களுக்குக் கடலைத்தான் முடிவாகக் காட்ட வேண்டுமா? அவர். இம்மாதிரியான கதை, சிருஷ்டியின் தத்துவத்திற்கே சோதனையாகி விடாதா? படைக்கப்படும் உயிர்கள் வாழ்வதற்காகவே படைக்கப்பட்டவை, இதுதான் உயிரின் தத்துவப் பொருள்! இதை மறந்தார் கதாசிரியர்! இம்மாதிரியான அபலைகள் இம்மாதிரியான அவல நிலைக்கு ஆளாகும் ஆளாக்கப்படும் முடிவுகள் கைவிடப்படவேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கைக்குரிய உள்நோக்கம் நிறைவேறும். 'வாழ்வதற்கே' என்ற நாடகத் தலைப்பும் சிறப்புறும் வாழ்க்கை வாழ்வதற்குதான்! வாழ்வதற்கேதான்!

அடுத்தப்படியாக நம் கவனத்தைக் கவர்கிறார் வில்லனாக—அபலையைக் கற்பழிக்கும் பாத்திரம் ஏந்திய தீக்குணனாக நடித்த பூமிநாதன் அவர் சாகஸமாக நடித்தார் சாகஸத்தையே பிறப்புரிமையாகக் கொண்ட பாங்கில் அவரது நடிப்பு இருந்தது. மனிதனுள்ளே மிருகமும் வாசம் செய்யும் என்னும் உட்கருத்தைச் செம்மைப் படவே நிருபணம் செய்து காட்டி விட்டார் அந்த அன்பர்.

நாயகனாக நடித்தவர் நம் அனுதாபத்துக்குரியவர்.

விதியைச் சாடும் நெஞ்சுரம் உள்ளவன்தான் காதல் எனும் புனித வலையையும் விரிக்கத் தகுதி பெற முடியும்.

தியாகம் என்கிற திறனும் எல்லோருக்கும் வந்துவிடாது காதலித்தவளைக் கைவிட்டுவிடும் பத்தாம் பசலியாகக் காட்சி தரும் அவர் அழகனாக மட்டுமே தோன்றுகிறார். கோழையாகவே நாம் அவரை மதிப்பிடுகிறோம். கோழைகளுக்கு வாழ்வே இல்லை! வேடதாரிகளுக்கும் வாழ்வு இல்லை!

எந்த ஒரு நிலையிலும், எந்த ஓர் அபவாதத்தையும் ஏற்க — அப்படி ஏற்பதால் இன்னொரு ஜீவனுக்கு வாழ்வு கொடுக்க முடியுமென்கிற புண்ணியக் கடமை காத்திருக்குமென்று தோன்றினால், அத்தகைய அவதூறை ஏற்கச் சித்தமாக இருக்கவேண்டும், மனிதன்! அதுவேதான் நாகரிகமான சமுதாயத் தொண்டாக ஆகமுடியும்! தமிழ்ப் பண்பாட்டுக்கு இந்நிலை மூலம் ஒரு புதிய பொருளும் கிடைக்குமல்லவா?

இக்கருத்தைச் செயல்படுத்த இக்கதாசிரியர் இனியேனும் முயல்வாராக!"

விமரிசனம் முடிந்தது.

மின்விசைப் பொத்தான் விளக்கை ஏற்றியது.

கையெடுத்துக் கும்பிட்டான் அம்பலத்தரசன். ஊர்வசியின் அழகிய நிர்மலமான முகம் அவனது மனத்தின் கண்களில் நிழலாட்டம் போட்டது. தன்னை மறந்து இரவு தூங்கிய அந்தப் புனித எழிலை அவனால் எப்படி மறக்கக் கூடும்?

படுத்தவன், தூக்கம் பிடிக்காமல் எழுந்தபோது அவள் அலங்கோலமான உறக்கத்தில் கட்டுண்டிருந்தாள் மார்பகத்திலே காணப்பட்ட நகத்தழும்புகள் அவன் நோக்கில்பட்டன, ஒருகணம் அவன் கலங்கினான். ஆனால் மறுகணம், அவனது மனத்தின் ஒரு முடுக்கில் வாசம் செய்த பழைய மிருகவெறி கிளர்ந்தெழுந்தது. அவளையே

பார்த்துக் கொண்டிருந்தான். தன்னுள் ஏற்பட்டிருந்த மோகக் கிளர்ச்சியின் வெறித்தனத்தை விளையாடவிட அவன் ஒப்பவில்லை கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் சில கணங்கள் ஆழ்ந்தான்.

தன்னுள்ளே ஆக்கிரமித்திருந்த பேய்க் கணங்கள் விடுதலைப் பெற்றன. அவ்விடுதலைக்கு மூலாதாரமாக இருந்தது ஊர்வசி தன்பால் கொண்டிருந்த நல்லெண்ணமும் நன்னம்பிக்கையுமே என்பதையும் அவன் கணித்துக் கொண்டான். அப்புறம்தான் அவன் அங்கிருந்து டீக்கடை நோக்கிக் கிளம்பினான்.

பத்திரிகையின் தலைப்புச் செய்திகளில் மனம் சென்றது.

ஆடிக்காற்று வீசியது,

ரேடியோவைத் திருகினான். திருகினால் பாட்டு வருமா ?— திருப்பினான். அதாவது, 'ட்யூன்' செய்தான். இதயத்தைத் தொடும் ட்யூன் மிகுந்தது. அம் மகிழ்வில் திளைத்த அவனுக்கு, நேற்றுச் சுரந்த கவிதையின் ஞாபகம் எழுந்தது. ஊர்வசியின் முதற் சந்திப்பிலே அவள் சிரித்த அந்தப் புனிதச் சிரிப்பை நெஞ்சில் ஒலிக்கச் செய்து ஆனந்தமடைந்தான். அவள் சிரித்த வேளையில்தான் படைப்பின் விட்டகுறை தொட்டுத் தொடர்ந்ததோ? அச் சிரிப்புத்தான் விதியின் சிரிப்புக்கு விடப்பட்ட சவாலோ ?

தன்னை மறந்து சிரித்துக் கொண்டான் அம்பலத்தரசன். கவிதையின் உணர்ச்சித் தீவிரம் அவனை மெய்மறக்க வைத்தது

ஊர்வசியின் நெஞ்சத்திற்குள் கூறிவிட்டுக் கூடுபாய்ந்து மீண்டான், அம்பலத்தரசன்.

டெலிபோனுக்கு ஓய்வில்லை போலும் !

மியூசியம் தியேட்டரில் ஆகஸ்ட் பதினைந்தில் நாடக மொன்று நடப்பதாகவும் அதற்கு அழைப்பு அனுப்புவதாகவும், நாடகத்துக்கு வந்து நாலுவரி எழுத வேண்டுமென்றும் நாடகத்தின் சொந்தக்காரி வேண்டினாள்.

'இதே தேதியில் ப்ரிவ்யூ ஷோ ஒன்று இருக்கிறதே!

பூமிநாதனை எதிர்பார்த்துக் காத்திருந்தான் அம்பலத்தரசன். அவனைப் பார்த்துவிட்டு, ஊர்வசியைச் சந்திக்கச் செல்ல வேண்டுமென்பது அவன் கருத்து.

பங்களாவுக்கும் கடிகாரத்துக்கும் ஒட்டுறவு இருக்க வேண்டாமா?

# [9]

பெரிள் பர்கின் 'பியோனி' புரண்டு கொண்டிருந்தாள்!....

டேவிட், பியோனி கதையின் வாழ்க்கையைத் தொடர விரும்பாமல், அப்படியே அந்நாவலை அம்பலத்தரசன் மூடி வைத்தான். அடையாள நாடா நீலம் பாய்ந்து விளங்கிற்று.

ஊர்வசியின் டைரி அவன் பார்வைக்காகக் காத்திருந்தது. டைரிகளில் சில கதாசிரியர்கள் 'சஸ்பென்ஸ் வைப்பது வழக்கம், ஆனால், ஊர்வசியோ அவன் கவனத்துக்கென்றே சொல்லிவிட்டுத்தான் அதை வைத்துச் சென்றிருந்தாள்.

அவள் விருப்பப்படியே அந்த நாட்குறிப்பைப் புரட்டினான் அவன். தெருவில் பூவிற்றுச் சென்றான். 'இனிமேல் தினமும் பூ வேண்டும்!'

ஒன்று :

'....விமர்சகர் அம்பலத்தரசன் இவர்களைச் சந்திக்கும் பாக்கியம் இன்று கிடைத்தது. என் நெடுநாளைய ஆசை நிறைவேறியது. எவ்வளவோ அன்பாகவும் அடக்கமாகவும் காணப்பட்டார். மன நெகிழ்ச்சி கொண்டவர் என்பது அவர் தலைமைப் பேச்சிலிருந்து விளங்கியது. இனம் விளங்காத ஓர் அன்பு அவர்பால் எனக்குப் பீறிடுகிறது. அவர் இந்த என் முதல் நாடகத்தின் நடிப்பையே இப்படிப் புகழ்கிறாரே ! — இன்னும் என் நடிப்புக் கலை வளர்ச்சி பெற்றால் அப்புறம் அவர் எவ்வளவோ பாராட்டுவாரே ! பெண்மையின் கற்பைப் பறிகொடுத்த அபலையை ஆதரித்து தன் மனையாட்டியாக ஏற்றுக் கொண்ட எழுத்தாளரை வெகுவாகப் பாராட்டினார். இந்தக் கட்டம் என் நெஞ்சைத் தொட்டது போலவே, அவர் மனத்தையும் தொட்டிருக்கிறது ! அவர் அம்பலத் தரசன் 'மனம்' உள்ளவர் ! —

இரண்டு :

'....பெண் ஒருத்தி அழகாக இருந்து விட்டால் உடனே அவளைக் காதலிக்கவும் காதல் கடிதம் எழுதவும் தொடங்கி விடுகிறது இளவட்டக்கூட்டம். எல்லாம் சினிமாவினால் வந்தவினை ! அதற்காகத்தான் பெரியார் சினிமாவே கூடாது என்கிறார் போலிருக்கிறது. பத்து நாளாக என்னையே சுற்றிச் சுற்றி வந்தான் 'தறுதலை' ஒருவன். என் நாடகத்தைக் கண்டு என் மீது காதல் கொண்டுவிட்டானாம் பணக்காரனாம் !. நல்ல 'டோஸ்' கொடுத்துவிட்டேன். என்னைப் பழி வாங்கியே சாவதாகச் சூள் உரைத்துச் சென்றான். அன்பர் பெயர் : நாகசாமி'.

மூன்று :

'..'காதலே, வா !' நாடகம் ஐம்பதாவது நாளாக நடத்தப் பெற்றது. மதிப்புக்குரிய கலைஞர் தலைமை

தாங்கினார். எனக்கு நல்ல எதிர்காலம் காத்திருப்பதாகச் சோதிடம் சொல்லப்பட்டது !''

நான்கு :

' — 'வாழ்வதற்கே !' நாடகத்தில் வில்லனாக நடிக்கும் பூமிநாதன் அவர்கள் ரொம்பவும் தங்கமானவர் நான் கற்பழிக்கப்படும் கட்டத்தின் ஒத்திகை இன்று நடை பெற்றது. 'என்னைத் தயவுசெய்து மன்னித்துவிடுங்கள்' என்று சொல்லிவிட்டு, நாணயத்தோடு ஒத்திகையில் ஈடு பட்டார். பணக்காரப் பிள்ளையானாலும், மிகுந்த அன்புடன் பழகுகிறார்! அமைதியான மனிதருக்கு எப்படிப் பட்ட அருவருப்பான பாத்திரம் கிடைத்திருக்கிறது, நாடகத்திலே !....பாவம் !' ..

ஐந்து :

' . காலாடி ஒருவன் கன்னத்தில் எண்ணி இரண்டு அறைகள் கொடுத்தேன் !'

ஆறு :

' இன்று அரங்கேற்றப்பட்ட 'வாழ்வதற்கே' நாடகத்தில் எனக்கு நல்ல புகழ் கிடைத்தது.

ஆனால் அப்புகழை அனுபவிக்க வொட்டமல், நான் அபலையாகி விட்டேன், என் கற்பை — பெண்மையைக் களவாடி விட்டான் பாவி ! அந்தப் பாவியின் பெயரை நான் நீதிதேவன் சந்நிதியில் சொல்லிவிட்டேன் ! நீதி விசாரணையை ஆண்டவன் நடத்தும்வரை நான் பொறுக்க மாட்டேன் ! நானே ஒருநாள் அவ்விசாரணையை நடத்தியே காட்டுவேன் !

கறைபட்ட நிலவுக்கு அடைக்கலம் தந்தார் என் அன்பர் அம்பலத்தரசன் அவர். என்னுள் தோன்றும் போதெல்லாம் இனம் விளங்காத பாசம் இதுவரை என்னுள் முகிழ்ந்து வந்ததன் தாத்பரியத்தை இன்றிரவு என்னால் உணர முடிந்தது. எனக்கு நல்வாக்குக் கொடுத்து விட்டார்

அவர். அவரது தூய அன்பு என்னை வாழ்த்தும்; அவரது தூய மனம் எனக்குப் புதுவாழ்வு அருளும் என் கனவும் பலித்து விடும். எனக்குக் கிட்டிய தோல்வியைக் கடந்து எனக்கு நிழல் தந்த அவர்தான் மனிதர்!....என்னுடைய களங்கத்தைத் தன் தியாக நெஞ்சிடைத்தாங்கி என்னை ஏற்க துணிந்த அவரே எனக்குக் கடவுள். ஆம்; கடவுளை நான் தரிசித்து விட்டேன்!'

அத்துடன் முடிந்தன நாட்களின் குறிப்புக்கள்.

அம்பலத்தரசன் உணர்ச்சி வசப்பட்டு பரவச நிலையில் அமர்ந்திருந்தான்

அவ்வுணர்வின் நாயகியாகிய ஊர்வசி ஆடினாள் நகை குலுங்க ஆடினாள். அவன் நெஞ்சம் ஆடுகளம் ஆனது. அது ஜோதிகூடித் திகழ்ந்தது. 'என் சொத்து என் ஊர்வசி என் நெஞ்சைத் திறந்து காட்டிவிட வேண்டும் அவளுக்கு அப்போதுதான் எனக்கும் ஆறுதல்; அவளுக்கும் ஆறுதல். கெட்டவனாக இது வரை இருந்த என் நிலையையும் ஒளிக்க மாட்டேன். நெஞ்சை ஒளித்து வஞ்சகம் இருக்கக் கூடாதல்லவா?'

எல்லா நடப்பையும் விளக்கித் தன் தாய்க்குக் கடிதம் போட்டுவிட வேண்டும் என்றும் முடிவு செய்தான். தந்தையின் முகம் அறியாத அவனை தன் உயிரைக் கொடுத்து வளர்த்து ஆளாக்கிய தெய்வம் அவன் அன்னை தஞ்சாவூரில் பாம்பாட்டித் தெருவில் ஆப்பக்காரி. அஞ்சுகத்தம்மாள்' என்ற பட்டப் பெயரைச் சுமந்துதான் அவனை ஆளாக்கினாள். அந்தத் தாய்!

மனம் என்னும் வேள்வியைக் கண்டு செலுத்த, வாழ்க்கை என்னும் தீக்கு, தியாகம் என்னும் ஆஹுதியைப் பயன்படுத்தும் 'பக்குவம்' அவனுள் பண்படத் தலைப் பட்டது. இயல்பாகவே அவனது உதிரத்தில் நிலவத்துப்

பரவியிருந்த மனிதாபிமானமும் மனிதத்தன்மையும் இந் நிலைக்கு என்றென்றும் கைகொடுக்கும் என்றும் அவன் நம்பினான். இனி எனக்கு ஊர்வசிதான் ஆணை. அவள் இஷ்டம் தான் என் எதிர்கால வாழ்வு!' என்ற முடிவும் அவனுள் உருப் பெற்றிருந்தது.

'தன்னைப் பலிகொண்ட நீசனை அவள் ஏன் காட்டிக் கொடுக்க மறுக்கிறாள்; தன்னைக் கெடுத்த பாவி எனக்குத் தெரிந்த ஆள்தான் என்று கோடி காட்டியிருந் தாளோ ?எனக்கு நண்பனாக இருக்கும் ஒருவனோ இந்தப் படுபாதகத்தைச் செய்தான்? எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமென்றே நிர்ணயிக்கக் கூடவில்லையே ?

அவன் உள்ளம் தவித்தது.

நிலவுக்கென்று ஒரு கவர்ச்சியா ? இத்தகைய கவர்ச் சிக்கும் தானே களங்கம் வந்துவிடுகிறது ?

அர்த்த புஷ்டி கொண்ட சிந்தனையாக அவனுக்குத் தோன்றியது, இந்நினைவு.

அப்போது, தொலைபேசி அழைப்பொன்று வந்தது. பூமிநாதனை எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவனிடம் பூமிநாதன் அங்கு வந்தானாவென்று விசாரித்தார். பூமிநாதனின் தந்தையான சீமான் சாந்தமூர்த்தி, விவரத் தைச் சுட்டினான் அம்பலத்தரசன். 'சரி இனிமேல் பூமிநாதனை இங்கு நான் எதிர்நோக்கிக் காத்துக் கொண் டிருப்பது வீண். பணக்காரப் பிள்ளைகளுக்கு ஆயிரம் ஜோலி கள் இருக்கும். 'டாட்ஜ்' கையிலிருக்கையில், தந்தையை 'டாட்ஜ்' செய்வதில் வியப்பேது ?... ஊர்வசி என்னை எதிர்பாத்திருப்பாள், பாவம்!' என்று எண்ணி முடித்துப் புறப்பட்டான், அம்பலத்தரசன்.

அவன் எண்ணத்துக்கு வாய்த்த தூண்டுதலாக, அவனை உடன் எதிர்பார்த்திருப்பதாகத் தொலைபேசி மூலம் தெரிவித்தாள் ஊர்வசி.

மகிழ்வின் புதுக்கனவுடன் அங்கிருந்து கிளம்பினான் அம்பலத்தரசன். 'உடன்' என்று அவள் சுட்டிய அவசரம் அவனது உள்ளத்தின் உள்ளே பரபரப்பை ஊட்டிக் கொண்டேயிருந்தது.

பட்டணம் ராஜகம்பீரத்துடன் பொலிந்தது

# [10]

உள்ளம், உணர்ச்சி, அறிவு ஆகிய மூன்று புள்ளிகளைச் சேர்த்து முக்கோணமாக உருவாக்கிக் கொண்டிருந்தது அம்பலத்தரசனின் மனச்சாட்சி.

பிராட்வே வீதியில் அவன் நடை தொடர்ந்தான்.

விசாலமாக இருந்த அவனது மனவீதியில் எண்ணங்கள் தொடர்ந்தன.

நிலவொளியை அழுத்திவிட்டது மின்னொளி.

நல்லவேளை, காற்றைப் பொறுத்தமட்டில் இயற்கை தான் கொடிகட்டிப் பறந்தது.

புதிய புதிய கனவுகளும் புதிய புதிய கவலைகளும் அவனுடைய மனச் சான்று அமைந்திருந்த முக்கோணத்தில் உள் வட்டமாகச் சுழன்று, தவித்துக் கொண்டிருந்தன. இரண்டுங் கெட்ட அந்தச் சிக்கலில் திக்கு முக்காடிய அவன் ஒரு கணம் அப்படியே செயலற்று நின்றான்.

அவன் மெய்யுணர்வு எய்திய தருணத்தில் 'வாழ்க்கை ஒரு செஸ் விளையாட்டு!' என்று ஆங்கிலப் படத்தின் சுவரொட்டி விளம்பரம் அவன் திருஷ்டியில் பட்டு விலகியது.

'என் வாழ்க்கையும் ஒரு சதுரங்க விளையாட்டாக தான் ஆகிவிட்டது! விளையாட்டின் வெற்றித் தோல்வி யாருக்குச் சொந்தம் ! எனக்கா? என் ஊர்வசிக்கா ? இல்லை விதிக்கா, அன்றித் தெய்வத்துக்கா ?''

அக்கணம் வரையிலும் தோன்றாததொரு புதுப் பிரச்னை அவனுள் பூதாகாரமாக விசுவரூபமெடுத்தது மறுகணத்திலேயே, அவ்வெண்ணத்தை அவன் அலசினான். அவனுடைய மனச்சாட்சியின் முக்கோணத்தைச் சமைத்த உள்ளம் உணர்ச்சி, அறிவு ஆகிய உணர்வுப் புள்ளிகளை வைத்து எடை போட்டான்.

சிந்தனை சூடேறியது.

புகை சூடேற்றியது

'ஏன் இந்தப் புதிர் என்னுள் தோன்றவேண்டும் ? இதில் என்ன சிக்கல் இருக்கிறது ? என்ன புதிர் இருக்கிறது? எதுவும் என் இலட்சியத்துக்குக் குறுக்கே நிற்க முடியாதே? வாழ்க்கை ஒரு சதுரங்க விளையாட்டாக இருக்கட்டும். என்வரை—என் ஊர்வசி வரை ! எங்கள் இருவரது மன நிலைகளும் சதுரங்க காய்களாக இருக்கட்டும் எங்கள் வரை !

ஆட்டம் என்றால் அதன் வெற்றியும் தோல்வியும் எங்கள் இரண்டு பேருக்குத்தானே சொந்தமாகப் போகிறது! நான் ஜெயித்தால், அந்தப் பெருமையில் ஊர்வசிக்கும்— என்னுடைய ஊர்வசிக்கும் பங்கு உண்டு' ஊர்வசி —என் ஊர்வசி ஜெயித்தால் அதில் எனக்கும் பாகம் சேர்த்தி தான்,

இது போலவே, எங்களுக்குள் நிலவுகிற தோல்வியிலும் எங்கள் இருவருக்குமே ஜோடியாகப் பங்கு இருக்கத்தான் இருக்கும். ஆனால், எங்கள் விளையாட்டில்— எங்கள்

வாழ்க்கை எனும் சதுரங்க ஆட்டத்திலே — எங்களையும் மீறி, விதியோ அல்லது தெய்வமோ வெல்லும் ஒரு முடிவை நான் உண்டாக்கிக் கொடுத்திட மாட்டேன்.

ஊர்வசியைப் பற்றித்தான் சிக்கலே இல்லையே! அவள் என்னுள் இணைந்த உயிராக ஆகி விட்டாளே! அவளுடைய திடசித்தமும் வைராக்கியக் குறிக்கோளும் உலகினைச் சாடும் நேர்மைத் திறனும் யாருக்கு வரும்? ஆமாம் ஆவணி பிறந்து ஒரு முகூர்த்தத்தில் அவள் கழுத்தில் மூன்று முடிச்சுகளை நான் இட்டு விடவேண்டும் அப்போது தான் அவளுக்கு நல்லமூச்சு வரும். அவள் நம்பியுள்ள என்னுடைய மனிதாபிமானமும் மனிதத் தன்மையும் நல்ல மூச்சு விடும்.

'இன்று புதிதாய்ப் பிறந்தோம்' என்ற புதிய தத்துவத்துக்கு அப்போதுதான் புதிய அர்த்தமும் உண்டாக முடியும்—எங்கள் இருவர் வரையிலும்! எங்களுக்கும் வாழ்க்கை இருக்கிறது என்னும் புரட்சி முடிவை அப்போது தான் இந்த விந்தை உலகம் அங்கீகரிக்கவும் செய்யும்!'

சிகரெட்டின் எரிந்த சாம்பல் துகள்கள் காற்றில் மிதந்தன.

அம்பலத்தரசன் நடந்தான். பிரபாத் டாக்கீஸில் புரட்சி நடிகரின் சிரிப்பை ரசித்துவிட்டு, எதிர்த் தெருவில் மடங்கினான்.

புரட்சி என்றால் அதன் வசீகரமே அலாதிதானோ?

அப்போது, "ஹல்லோ...." என்ற பழகிய குரல் கேட்கவே, திரும்பிப் பார்த்தான் அம்பலத்தரசன். அழைத்தவன் பழக்கமானவன். 'லாம்ப்ரெட்டா'வில் வீற்றிருந்தான் அவன் கருணாநிதி என்று பெயர் மேல்மட்டப் பிள்ளை. அவனுக்கு உத்தியோகம், பொழுதைக் கழிப்பது, அதாவது பொன்னான காலத்தைத் கொல்வது. அவன் கண்டனுபவிக்காத பொன்னா, என்ன ?

"உங்க ட்ராமா ரெவ்யூ ரொம்ப நேர்த்தியாய் இருந்திச்சு, அம்பலத்தரசன்!'' என்றான் கருணாநிதி.

''ரொம்ப சந்தோஷம், கருணாநிதி'' என்றான் அம்பலத்தரசன். ஆனால் அவன் மகிழ்ச்சியடையவில்லை. மாறாக ஒரு வகை அருவருப்புத் தோன்றியது அவனுடைய முகத்திலே!

''ஆனால் ஒரு சந்தேகம்,'' மிஸ்டர் அம்பலத்தரசன்

''சொல்லலாமே!''

''ஊர்வசி கற்பழிக்கப்படுகிறாள்....'' என்று கருணாநிதி எடுத்த எடுப்பில் பேச்சைத் தொடங்கவே, அம்பலத்தரசனுக்கு அப்பேச்சைக் கேட்டதும், பிரமிப்பு உண்டாகி விட்டது உடனே சமாளித்துக் கொண்டான்.

''அதாவது நீங்க நாடகத்தைப் பற்றிப் பேசுறீங்க, இல்லையா?'' என்று குறுக்கிட்டான்; நினைவூட்டினான்.

''ஓ மை குட்னஸ்! ஆமாம் நாடகத்திலே அந்தப் பெண் கற்பழிக்கப்பட்டதைப் பார்த்த ஞாபகத்திலே, அந்தப் பெண்ணோட அசல் பெயரையே சொல்லிட்டேன். பரவாயில்லை! உம், நாடகக் கதாநாயகி பலாத்காரமாகக் கற்பழிக்கப்படுகிறாள்! சரி அவள் தன்னுணர்வு அடைஞ்சதும் உடனே அவள் அலைகடலை, நாடிச் சரணடைகிறாள்! இது கதையோட நாடக முடிவு, ஆனாஇந்த முடிவு நம்மோட தமிழ்ப் பண்பாட்டை ஒட்டி அமைஞ்சிருந்திச்சு இது தான் நடக்க வேண்டியது, இல்லீங்களா?

ஆனால், நீங்க இந்த முடிவை ஆதரிக்கலே. அப்படித்தான் உங்க க்ரிட்டிஸ்ஸமும் அமைஞ்சிருந்திச்சு. நீங்க சொல்லுற அந்த முடிவுப்படி அந்த நாடகம் முடிஞ்சிருந்

திருந்தால் அப்புறம் நம்ம தமிழ் பண்பாடு என்ன ஆகிறது. இதுதான் என் சந்தேகம்'' என்று சொல்லி நிறுத்தினான் கருணாநிதி.

அம்பலத்தரசன் அவனை உறுத்துப் பார்த்தான் பார்த்து விட்டு வேதனையோடு சிரித்தான்.

''முதலிலே என் சந்தேகத்துக்குத் தயவு பண்ணி விளக்கம் கொடுக்கிறீங்களா? தமிழ்ப் பண்பாடு அப்படின்னு சொல்லுறீங்களே ? - அதுக்கு ஒரு விளக்கம் தர முடியுமா?'' என்று கேள்விக்கு எதிர்க் கேள்வி கொடுத்தான் அம்பலத்தரசன்.

''பொண்ணுக்குக் கற்புதான் உயிர் அத்தகைய கற்பு பறிபோயிட்டால், உடனே அவள் தன் உயிரை போக்கிக்கிட வேண்டியதுதான் பெண்ணுக்குரிய விதி! இதைத்தான் தமிழ்ப் பண்பாடுன்னு சொல்லுறோம் இதுவேதான் காலம் காலமாய் நம் தமிழ்நாட்டிலே பரவலாகக் கடைப் பிடிக்கப்பட்டு வருது'' என்று ஆணித்தரமாகக்குறிப்பிட்டான் கருணாநிதி.

''ஆல்ரைட்! அநீதியாய்க் கற்பழிக்கப்பட்ட பெண்ணுக்கு நீங்க கொடுத்த முடிவு இது! இதைதான் நீங்க தமிழ்ப் பண்பாடுன்னு சொல்றீங்க! ஆனா, அநியாயமாகக் கற்பழிக்கப்பட்ட பெண் கடலிலே விழுந்து செத்திட்டால் மட்டும் அவளுக்கு உண்டான அந்த அவப் பெயரும் அவளோடேய செத்திடும், உடனே நம் தமிழ்ப் பண்பாடு காப்பாற்றப் பட்டு விடும்னு நீங்க நம்புறீங்களா?'' என்று அடுத்த வினாவைச் சொடுக்கினான் அம்பலத்தரசன். மனயாழ் சோகச் சுருதி கூட்டியது.

கருணாநிதி இமைப்பொழுது இமைக்காமல் இருந்தான் லேசாக அரும்பியிருந்தது வேர்வை.

''அந்த அவப் பெயர் எப்படி மறைய முடியும்?'' என்று அம்பலத்தரசனையே கேள்வி கேட்டான் அவன்.

"கற்புநிலை தவறிய அந்நிலைக்குப் பலாத்காரமாக ஆளாக்கப்பட்ட அந்தப் பட்ட அந்தப் பெண், செத்தால் கூட மறையமுடியாத அந்தப் பெயரோடே வாழ்ந்தால் மட்டும் என்ன குடி முழுகிப் போயிடும்? சொல்லுங்க கருணாநிதி, சொல்லுங்க" என்று உணர்வு சுழிப்புடன் பேசினான் அம்பலத்தரசன்.

"அவளை உலகம் தூற்றாதா?"

"உலகம் யாரைத்தான், எப்போதுதான் தூற்ற வில்லை?"

"அப்படின்னா கெட்ட பெண்களுக்கு இந்த லோகத் திலே இடம் உண்டுன்னு வாதாடுறீங்களா அம்பலத்தரசன்".

"கெட்ட பெண்களுக்கல்ல, தங்களையும் மீறிக் கெடுக்கப்பட்ட பெண்களுக்கு இந்த உலகத்திலே தாராள மாக இடம் உண்டு. இதுதான் என் வாதம்! கெட்ட பண்புகளைப் பத்திய பிரச்சனையை நாம் இப்போது பேச வேண்டியதில்லை அது ஒரு தனி உலகம்! இப்போ நான் பேசுறது பிறராலே வலுக்கட்டாயமாகக் கற்பழிக்கப்பட்ட அபலைப் பெண்களைப் பத்தித்தான்! அத்தகைய பெண் களை ஆதரிக்க நம் தமிழ்ப் பண்பாடு பழகிக்கிட வேணும்! உண்மையான உள்ளம் கொண்டவங்களும் நமக்கு முன்னே இந்தப் புரட்சியைத்தான் உண்டாக்கிக் காட்டி நிரூபிச்சும் காட்டியிருக்காங்க!

'அன்புக்கு அடைக்கும் தாழ் இல்லே'ன்னு' சொல்லி யிருக்கார் வள்ளுவர். அவர் வாக்கு, நான் சொல்லுற இத்தப் புதுக்கருத்துக்கும் சாட்சியாக அமையட்டுமே' பிறப்பு என்கிறது ஒரு கடமை. அந்தக் கடமையோடு

தான் பிரம்மா சிருஷ்டிக்கிறரன். அவன் தத்துவத்துக்கு விரோதமாக இயங்குவதற்கு இந்தப் பிறப்புக்கு எவ்வித அதிகாரமும் இருக்கக் கூடாது. 'வாழ்க்கை வாழ்வதற்கு! அப்படின்னு சொல்லுறதாலே மட்டும் தமிழ்ப் பண்பாடு வாழ்ந்துவிட முடியாது !

விதி வசத்தாலே கற்புநிலை கெட்ட பெண்களுக்கும் இந்த உலகத்திலே வாழ வழியிருக்க வேண்டும், இது அவங்களுடைய உரிமை ; பிறப்புரிமை ! அதற்கு உண்டான வழி வகைகளையும் நம் சமுதாயம் செஞ்சுக்கிட்டு வராமல் இல்லை. அவர்களுக்கு நிழலாக ஆசிரமங்கள் இருக்கு. இது மட்டும் போதாது. அவங்களை ஏற்று ஆதரிக்கும் மனபலம் கொண்டவங்களும் நம் நாட்டிலே வளர வேணும் ! அதுதான் மனித தர்மமும்கூட. அதுவே தான் நான் கட்டுகிற தமிழ்ப் பண்பாடுமாகும் !''

அம்பலத்தரசனுக்கு இருமல் வந்தது. மேலும் ஒரு சிகரெட் பற்றிக் கொணடது. இருமலின் தொடர் சுயநலம் கடந்தது.

''ரொம்பவும் பயமான கருத்து உங்களுடையது', என்று தீர்ப்பளித்தான் கருணாநிதி.

' உங்க மாதிரி உள்ளவங்களுக்கு உலகம் என்றாலே, சமூகம் என்றாலே எப்போதுமே ஒரு பயம் இருக்கத்தான் செய்யும். அதெல்லாம் சுத்த ஹம்பக் ! ... .. வெறும் நாடகம் அது ! ... நீங்க அஞ்சுகிறதாகச் சொல்கிற அந்த உலகமும், அந்தச் சமுதாயமும் உங்க பணத்தைக் கண்டு தான் பயப்படுது ! இதுதான் யதார்த்தம் . !''

அம்பலத்தரசன் தொடர்ந்தான். சோளம் பொரிந்தது பேச்சினால்.

''அப்படின்னா கற்பழிக்கப்பட்ட — அதாவது, அவள் இஷ்டம் இல்லாமலே கெடுக்கப்பட்ட பெண் ஒருத்தி உங்களைச் சரண் அடைஞ்சா, நீங்க அந்த அபலைக்கு வாழ்வு தருவீங்க....இல்லையா?'' என்று சவால் விட்டான் கருணாநிதி.

''தாராளமாக அந்த அபலைக்கு நான் வாழ்வு தருவேன். அந்த மனம் எனக்கு இருக்குது! அதனால்தான் இப்படிச் சூளுரைக்கிறேன்! ஆனா, உங்க மாதிரி மட்டும் நான் ஒரு போதும் துரோகியாக ஆகிவிட மாட்டேன்!''

முகத்திரையில் செம்மை படரத் தலைப்பட்டது.

''என்ன சொல்றீங்க நீங்க, அம்பலத்தரசன்?''

பயம் கப்பக் கேட்டான் மேல்மட்டத்துப் பிள்ளை யாண்டான். சில்க் ஸ்லாக்கில் வேர்வை கொட்டியது.

''அதிர்ச்சி அடையாதீங்க. உங்க பாவத்தை நானும் அறிவேன்! உங்க தொழிற்சாலையிலே அலுவலுக்கு வந்த ஒரு ஏழைக் கன்னியை நீங்க வெறிகொண்டு கற்பழிச்சீங்க, இந்தச் சங்கதி அந்தப் பெண்ணோட அப்பனுக்கு எட்டுச்சு. கெடுத்த நீங்களே அந்தப் பெண்ணை ஏற்றுக்கிடும்படி எவ்வளவோ கதறினான் அந்த ஏழை. பணத்தை வீசி எறிஞ்சீங்க. அவன் அதை உங்க மூஞ்சிலே வீசி எறிஞ் சிட்டுப் போயிட்டான். அன்றைக்கே அப்பனும் மகளும் கடலிலே விழுந்திட்டாங்க. தர்மம் அந்த ஏழைகளைப் பொறுத்தவரை செத்திட்டுது ஆனா, நீங்க ஜாம் ஜாம்னு இருக்கிங்க உசிரோடு! உங்க பங்களாசமூகத்தின் வாயை அடைச்சிட்டதாய் நீங்க நினைச்சுக்கிட்டு இருக்கீங்க!...

ஒண்ணு சொல்றேன் கருணாநிதி, தர்மம் சாகாவரம் பெற்றது! அந்த ஏழைப் பெண்ணோட தகப்பனாகவோ அல்லது அவள் சகோதரனாவோ நான் மட்டும் இருந்

திருந்தால். உங்களை அப்பவே சமூகத்தின் முன்னே — நீங்க பயப்படுகிறதாய் நடிக்கிற அந்தச் சமூகத்தின் முன்னே — நீங்க பயப்பட்டாக வேண்டிய அந்தச் சமூகத்தின் முன்னே நிறுத்தி உங்க மனச்சாட்சிக்கு விழிப்பூட்டியிருப் பேன்! உங்க பாவத்தை மறந்து நீங்க மேலும் நடிச்சால், அப்பவே உங்களைக் கடிச்சுக் குதறி உங்க உயிரைக் குடிச்சிருப்பேன்! எனக்காகக் காத்திருக்கும் முடிவு எனக்குத் துச்சம்!

சட்டம் குருடாகலாம்; ஆனா, தெய்வம் ஒரு போதும் கபோதியல்ல! கற்பு என்கிறது பெண்ணுக்குள்ள தனிச் சொத்து மட்டுமல்ல, ஆணுக்கும் உள்ள தனிச் சொத்துத் தான்!....ஒரு அபலையின் வாழ்வு உங்களோட மோகவெறி யாலே — உங்களோட க்ஷணநேர மிருக வெறியாலே அநியாயமாய்ப் பாழடைஞ்சு போச்சு! அந்தச் சரித்திரமும் பாழடைஞ்சு போயிட்டதாய் நினைச்சிருக்கீங்க நீங்க! பாவம்! !'

ரத்தக் களறியாக அம்பலத்தரசன் முகம் விளங்கியது. அவன் ஆத்திரம் சுடர்விட கருணாநிதியை நோக்கினான். அப்போது, கருணாநிதி ஏதும் மறுமொழி உதிர்க்காமல், வெஞ்சினம் கொப்புளிக்க, தன் வலது கன்னத்திலே ஓங்கி அறைந்ததை உணர்ந்து கொண்டான், அம்பலத்தரசன். அவனது ரத்த நாளங்கள் துடித்தன.

பால் கடைக் கூட்டம் அவர்களைச் சூழ்ந்திருந்தது.

அம்பலத்தரசனின் கண்கள் கனல் கக்கின. மறுகணம்! கருணாநிதியின் தலைமுடியைப் பிடித்துக் கீழே தள்ளி, வட்டியும் முதலுமாக அவன் கன்னங்களில் மாறி மாறி— மாற்றி மாற்றி அறைந்தான் அம்பலத்தரசன் "நீ இப் போது பயப்படு! உன்வேஷம் கலைந்த கோலத்தை இதோ, வேடிக்கை பார்க்குதே இதுதான் உலகம் சமூகம் எல்லாம்.... ஆகவே நீ பயப்படு....நீ கற்பழிச்ச அந்த அபலைப் பெண்

ணோட சாபம்தான் இப்போது என் ரூபத்திலே வந்து உன்னை முச்சந்தியிலே பழி வாங்கியிருக்குது! தெய்வத் துக்கும் மனச்சாட்சிக்கும் பயப்படத் பழகாதவன் கதி இது தான்! ஓடு! ஓடிப்போய் உன் பணப் பெட்டியைத் தஞ்சம் அடை! உன் பணம் என்னை என்ன செய்கிறதின்னு பார்க் கிறேன்! ஊம், ஓடு! " என்று ஆவேசமாகக் கூச்சலிட்டான் அம்பலத்தரசன்.

ஒருகணம், கருணாநிதி தலை குனிந்தான்!....

அடுத்த கணம் அவனுடைய பற்கள் நறநற' வென்று சத்தமிட்டன. மூன்றாவது கணத்தில் கருணநிதியின் 'லாம்ப் ரெட்டா' காரினும் கடிது சென்றது ! ...

அம்பலத்தரசன் முகத்தை துடைத்துக்கொண்டு, சிக ரெட்டை எரியவிட்டவண்ணம் நகரலானான்.

அப்போது ரிக்ஷாவாலா ஒருவன் அம்பலத்தரசனிடம் ஓடி வந்து, "ஷார்! நீங்கள்தான் தெய்வம்....சாமி" என்று உருக்கத்தோடு புகழ்ந்தான்.

அம்பலத்தரன் அந்த ஏழையைப் பார்த்தான். "ஐயா, அதோ இருக்குது தெய்வம்!" என்று சொல்லி, கவனிப்பா ரற்றுக் கிடந்த அந்தப் பாழடைந்த கோயிலைச் சுட்டிக் காட்டினான்.

'பெர்க்லி தலையை நீட்டியது.

உடன் வரும்படி ஊர்வசி வேண்டிக்கொண்டதற்கா இந்தச் சோதனை ?

சோதனையா இது! ஆம், கருணாநிதிக்கு இது சோதனை! ஆனால், இது என்னுடைய கடமையின் சாதனை அல்லவா?....

தலைநிமிர்ந்து அவன் நடந்தான்.

....கற்பு என்கிறது பெண்ணுக்குள்ள தனிச் சொத்து மட்டுமல்ல! ஆணுக்கும் உள்ள தனிச் சொத்துத்தான்!...

தான் கருணாநிதியிடம் எடுத்துக்காட்டிய அக்கருத்து இப்பொழுது தன்னையே விழுங்கிக்கொண்டிருந்ததை துல்லியமாக உணர்ந்து கொண்டிருந்தான் அம்பலத்தரசன். அவனது உந்திக்கமலம் வகுத்த ரத்தக் கண்ணீர் அவன் மனச்சாட்சியைக் கழுவிக்கொண்டிருந்ததோ ?

'ஊர்வசி, நீ என்னை மன்னிப்பாயா?' வேதனையின் கழுவாயில் அவன் துன்பம் துடித்தது.

ஓர் 'ஆங்கிலேய இந்தியர்' மனையில் கடிகாரம் எட்டு அடித்தது.

ஊர்வசி சிரிக்க மறந்த வேளை எது ?

## [11]

மொக்கினுள் உயிர் மணக்கும் வாசமெனத் தோன்றினாள் ஊர்வசி.

அழகுணர்ச்சியோடு அழகை அனுபவிக்கும் பந்தந்தோடு பாந்தத்தோடு அவளை ஆழமாகப் பார்வையிட்டான் அம்பலத்தரசன்.

ஊர்வசி புனிதம் ஏந்திப் புன்னகை கூட்டினாள்.

''வாங்க. உங்களுக்கு முந்தி நான் வந்திட்டேன்!'' என்று கூறினாள் அவள். நட்சத்திரப் பூக்கள் அவளது கொண்டைப் பூக்களில் மொய்த்திருந்தன.

அவளது பேச்சு அவனுக்கு விடுகதை போட்டது. அவள் இந்நேரம் எங்கே போயிருந்தாள் ?

அவளது நெற்றித் திலகத்தைச் சுற்றிலும் வேர்வை முத்துக்கள் மின்னின.

உள்ளங் கைகளைத் தடவி விட்ட வண்ணம், வண்ணம் ஏந்திய ஆச்சரியத்தை வினாவாக்கி அவளை மீண்டும் நோக்கினான் அவன்.

கூடம்

"நல்ல பாடத்தைப் பிரத்யட்சமாச் சொல்லிக்கொடுத் திட்டீங்க இதயமில்லாத அந்தம் பெரிய இடத்துப் பிள்ளைக்கு!".... என்று தெரிவித்தாள் அவள், உணர்வின் தீவிரம் பொங்க.

"நீங்க....நீ வந்திருந்தியா, ஊர்வசி?"

"ஊம். உங்களைக் காணோமேயென்று உங்களைத் தேடி வந்துக்கிட்டிருந்தேன். பூரா நடப்பையுமே என்னாலே பார்க்க முடிஞ்சது!"

"அப்படியா?"

"ஆமாம்!"

"தர்மத்தை உணர்த்தியதுக்கு எனக்கு அறை கிடைச்சது! தர்மத்தை உணராததுக்கு அவனுக்கு அறை கிடைச்சது!" என்று ஆறாத வேதனையோடு பேசினான் அவன்.

"அந்தப்பாவி கடைசியிலே உங்ககிட்டே சவால் விட்டதும், 'தன்னிஷ்டமில்லாமல் கெடுக்கப்பட்ட அபலைப் பெண்ணுக்குக் கட்டாயம் வாழ்வு தருவேன், அந்த மனம் எனக்கு இருக்குது!' அப்படின்னு நீங்க விடை சொன்னவுடனேயே நான் வந்து 'இதோ பாரய்யா உதாரணப்

பொருளை, அப்படின்னு நிரூபிக்கத்தான் எனக்கு மனசு துடிச்சது, ஆனால். அதுக்குள்ளே, பேச்சு தடம் மாறிப் போகையிலே நான் கம்ன்னு நின்னிட்டேன் ! உங்க விமர்சனத்துக்கு அப்பாலேயும் நீங்க நல்ல நல்ல கருத்துக் களைச் சொன்னீங்க ! ஆனால், இப்படிப்பட்ட பாவி களையுந்தானே பூமிமாதா பொறுமையோடு தாங்கிக் கிட்டு இருக்கிறாள் ? ''

பேசிவிட்டு அவள் சிந்தனை வசப்பட்டாள். அவளது முகத்தின் எழில் மங்கி வந்தது, அவளது முகமாற்றம்—உள்ளத்துச் சலனம் காரணமாக ஏற்பட்டிருந்த முகமாற்றம் அவனுக்குப் புரிந்தது.

''ஊர்வசி.... பாவிகளுக்கும் இதயமற்ற மிருகங்களுக்கும் தர்மமும் தெய்வமும் கூலி கொடுக்கமால் தப்பாது ! ஆமா, தண்டனை கொடுக்காமல் தப்பவே முடியாது! மனசாட்சிக்குப்பதில் சொல்லாமல், தெய்வத்துக்கும் தர்ம தேவதைக்கும் பதில் சொல்லாமல் தப்பிடுச்சிடுறவங்களுக்கு நம்மைப்போல் உள்ளவங்கதான் தண்டனை கொடுத்தாக வேணும் ?....'' என்று உத்வேகத்தோடு எடுத்துக்காட்டினான் அம்பலத்தரசன்.

இப்பேச்சைக் கேட்டதும், அவளது முகச் சலனம் சமன்நிலை அடைந்தது.

''நம்மைப்போல் உள்ளவங்களாலேதான் பாவிகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவும் முடியும் ! நீங்க சொன்ன பேச்சு நூத்துக்கு நூறு மெய்தானுங்க' என்றாள் ஊர்வசி.

தீவிரமானதொரு வைராக்கியப்பண்பு அவளுள் கனன்று கொண்டிருந்ததை அவளது குரல் கோடிட்டுக் காட்டியதோ ? பற்களை 'நறநற வென்று கடித்துக் கொண்டாள். மறுபடியும் சலனம் கோடு கிழித்தது, அவள் வதனக்கிழியில்.

மறக்கத்தக்க சலனமல்ல அது! மறக்கக்கூடிய சலனமும் அல்லவே !...

''உட்கார், ஊர்வசி !''

அவள் மீண்டும் அமைதி பெற்றாள், ஆனாலும் அவளது நெற்றிச் சுருக்கங்கள் மாத்திரம் கூடி நின்றன. மண்டை உள்ளவரை சிந்தனைக்கு ஓய்வேது ?

அவன் உட்கார்ந்த பிறகு அவள் உட்கார்ந்தாள். சின்னாளப்பட்டிக் கோர்வைச் சேலை அவள் அழகைக் கூட்டியது. 'இரும்புத் திரை' ரவிக்கைக்கும் ஊதாவர்ணப் புடவைக்கும் கனபொருத்தம்! உள்பாவடையின் பிசிறு அவளது பாதச் சிவப்பை மறைத்தது.

''வந்த உங்களை உட்காரச்கூடச் சொல்ல ஞாபகமில்லாமல் நான் பாட்டுக்குப் பேசிக்கிட்டு இருந்திட்டேன்.''

''அதனாலே என்ன ? என் அறையிலே நீ எனக்கு உபசாரம் செஞ்சே நேற்று ராத்திரி. இன்னக்கி ராத்திரி உன் வீட்டிலே நான் உன்னை உபசாரம் செஞ்சிட்டேன், இதெல்லாம் சர்வ சகஜந்தானே !''

அவன் சிரிக்க, அவள் சிரித்தாள்.

நினைவோடு அவளிடம் சொல்ல வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தவன் போல, ''பாவமன்னிப்புப் பெற வேண்டிய கட்டம் ஒண்ணு மிச்சமிருக்குது! என்று ஆரம்பித்தான் அம்பலத்தரசன்.

அவனைத் திகிலுடன் நிமிர்ந்து பார்த்தாள் ஊர்வசி மாரகச் சேலையை ஒழுங்குப்படுத்திக் கொண்டு, பாவ மன்னிப்பா ? ஆமாங்க பாவமன்னிப்புப் பிரார்த்தனையை என் ஆண்டவனான கடவுள் கிட்டேயும் என்னை ஆண்டவரான உங்க கிட்டேயும் மான சீகமாய் அப்பவே செஞ்சிட்டேனே!'' என்றாள்.

நான் குறிப்பிட்டது, நான் செய்துக்க வேண்டிய பாவமன்னிப்புப் பிரார்த்தனையாக்கும்!''....

''என்ன சொல்றீங்க நீங்க?''

''நான் ஒண்ணும் சொல்லலே இனிமேல் தான் சொல்லப் போறேன், அதையும் சொல்லிடுறேன், அப்பத்தான் என் மனசாட்சி எனக்குப் பாவமன்னிப்பு வழங்கும், ஊர்வசி நான் பாவி!''

''பாவியா? நீங்களா பாவி! அத்தான்?''

''அமாம், நானேதான் பாவி! உன்னை நேத்து ராத்திரி சந்திக்கிற மட்டுக்கும் என் பாவச் சுமையை நானேதான் சுமந்துக்கிட்டு, போலியாய் இருந்து வந்தேன். சுருக்கமாக சொல்லிடுகிறேன். தங்களுக்கு விதிச்சிட்ட தலையெழுத்துப்படி வாழ்வைக் கழிச்ச இரண்டொரு விலைமாதர்களோடே எனக்கும் தொடர்பிருந்து வந்திச்சு. என் பருவக் கோளாறு செஞ்ச சூது அது. நான் செஞ்ச பாவம் அது!....

உன்னைச் சந்திக்காமல் இருந்திருந்தா, இன்னமும் அந்தப் பாவம் என்னைத் தொடர்ந்துக்கிட்டுத்தான் இருக்கும். இப்போ அந்தக் கெட்ட ஞாபகமே என்னை விட்டு அஞ்சி ஓடிட்டுது!... உன்னைச் சந்திச்ச வேளையோட மகிமை இது! இதுதான் உண்மையுங்கூட!—சத்தியமாச் சொல்லுறேன் இனி நான் உன்னைத் தவிர வேறெந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்க்கமாட்டேன்—இது சத்தியம்! இந்த நடப்புகளை உங்ககிட்டே சொல்லி பாவமன்னிப்பு வாங்கிக்கிட வேணும்னுதான் ஞாபகமாக நினைச்சுக்கிட்டே வந்தேன்!....''

அவன் முடித்தான், ஆனால் கண்ணீர் முடியவில்லை.

''அத்தான். உங்களோடே இந்த மனசு யாருக்கும் வராதுங்க—!'' அவளும் கலங்கினாள்.

அப்போது அங்கு வந்தாள் மீனாட்சி அம்மாள் விருந்தாளியை வரவேற்றாள். பிறகு மகளைப் பார்த்து, "மாப்பிள்ளைக்கு போன் பேசினதுக்குள்ள சமாசாரத்தைச் சொல்லலையாம்மா?" என்று பையக் கேட்டாள் முதியவள்.

'இல்லையே!' என்கிற பாவனையில் வருத்தம் காட்டினாள் ஊர்வசி. "உங்களைத் தேடிக்கிட்டு ஒரு பொண்ணு வந்திச்சு. ரொம்ப முடியாமல் இருக்குது. உள்ளே படுக்க வச்சிருக்கோம்" என்று குறிப்பிட்டாள்.

ஊர்வசியைத் தொடர்ந்து உள்ளே சென்றான் அம்பலத்தரசன். அவன் கால்கள் பின்னுக்கு இழுத்தன சமாளித்தப்படி உள்ளே நுழைந்தான்.

உடல் நலிந்தும் அழகு நலியாமல் படுத்த படுக்கையாகக் கிடந்தாள் பெண் ஒருத்தி.

அவளைப் பார்த்தான் அம்பலத்தரசன். பார்த்த மாத்திரத்திலே, அவனிடமிருந்து கண்ணீர் பெருகிற்று

"உங்களுக்கு சொந்தமா இந்தப் பெண்?"

"சொந்தம் போலத்தான். சற்று முன்னே சொன்னேனே என்னோட பழைய திருவிளையாடலைப் பத்தி, அந்த விளையாட்டிலே பங்கு கொண்ட இவளும் என் தோழிகளிலே ஒருத்தி!...." என்று சூட்சமமாகச் சொல்லிவிட்டு, அந்தப் பெண்ணின் தலைமாட்டில் குந்தினான் அம்பலத்தரசன்.

ஸ்மரணை தப்பிக் கிடந்த அவளது நெற்றியைத் தொட்டுப் பார்த்த அவன் கைகள் விரைத்தன. ஆனால் மறுகணம் அவன் கரங்கள் பின்னடைந்தன. அவன் மேனி நடுங்க, குரல் நடுங்க, "மங்கையர்க்கரசி" என்று கூப்பிட்டான்.

குரலின் முதல் தொடுப்பிலேயே அந்த 'மங்கையர்க்கரசி விழித்துக் கொண்டாள்.

"ஆ! நீங்களா? வந்திட்டீங்களா? நல்லா இருக்கீங்களா?'' என்று குசலம் விசாரித்தாள். ஜீவனற்ற சிரிப்பு வெளுத்த உதடுகளில் இழைந்தது.

அவள் அன்பு கறை படாதது. அது அவன் அன்பைத் தொட்டது. 'நான் நல்லா இருக்கேன். ஆனா, நீ நல்லா இல்லையே?'' என்று தேம்பினான்.

"நான் இப்போ அனாதையுங்க. என்னை எல்லாரும் கை விட்டுப்புட்டாங்க. கடைசியாக எனக்கு உங்க ஞாபகம் வந்திச்சு. ஆனா உங்க இடம் எனக்குத் தெரியாது. காலம்பற நீங்க இங்கே வந்ததாக என் சிநேகிதி ஒருத்தி சொன்னாள், இந்தக் காய்ச்சலோட வந்தேன் உங்களைத் தேடி! தொட்டுப் பாருங்க, உடம்பு கொதிக்குது!''

அவன் மௌனமாக வீற்றிருந்தான்.

அவனுக்குப் பதிலாக ஊர்வசி அந்தப் பெண்ணின் மேனியைத் தொட்டுப் பார்த்தாள். வலது கை மோதிர விரலின் மோதிரம் 'டால்' அடித்தது.

"ஐயா! உங்களுக்குக் கடன்பட்டவன் நான், என்னை அனாதை பிணமாக்கிடாமல் கரை சேர்த்திடுவீர்களா ஐயா? இந்தப் பாவியை ஒரு ஈ, காக்காய்கூட ஏறெடுத்துப் பார்க்க ஒப்பாதுங்க.''

அவள் அழுதாள்.

"நீ அழாதே! உன்னைக் காப்பாத்துறது என் கடமைகளிலே ஒண்ணு! உன் அன்புக்கு நானும் கடன் பட்டவன்தான்! இனி நீ அனாதையில்லே! நீ பிழைச்சிடுவே!

இதோ பார், இதுதான் என் சம்சாரம்! கொஞ்ச முந்தித் தான் என்னோட பழைய அந்தரங்க விளையாட்டைப் பத்திச் சொன்னேன் இதுகிட்டே! என் பேச்சுக்குச் சாட்சி சொல்ல நீ இங்கே இருந்திட்டே! இனிமே நான் பாவியல்ல!

மங்கையர்க்கரசி கண்களை உயர்த்தி அம்பலத்தர சனையும் ஊர்வசியையும் பார்த்தாள்.

"ரொம்பக் கொடுத்து வச்ச பொண்ணு இது" என்றாள்.

"அதாலேதானே அதை நான் எடுத்துக்கிட்டேன்.

"தங்கச்சியோட பேர் ?"

"ஊர்வசி! '

"அப்படியா? ரொம்ப நல்லாக் கவனிச்சிது இது. உங் களுக்கு வேண்டப்பட்டவன்னு மாத்திரம்தான் நான் சொன்னேன் அதுகிட்டே. ஆனா, இப்போ இந்தப் பாவி யோட கதை தெரிஞ்சப்புறம், என்னை அது முன்னைமாதிரி நேசிக்குமோ, என்னவோ" என்று வருந்தினாள் மங்கையர்க்கரசி.

"அப்படிச் சொல்லாதீங்க. உங்களை எப்பவுமே நேசிக்கத் தவறமாட்டேன், அக்கா எனக்கு பகவான் கொடுத்த சீதனம் இந்த மனசுதான். இந்த மனசிலே உங் களுக்கும் இடமுண்டு, பகவான் சோதிச்சுப் பழகிறத்துக்கு தான் நாம் பிறந்திருக்கோம். உங்களுக்கு ஏற்பட்ட சோதனை ஒரு மாதிரி, ஆனா, எனக்கு ஏற்பட்ட சோதனையை நீங்க அறிஞ்சா, மனசு வெடிச்சுப் போய்டு வீங்க. அப்புறம் கேளுங்க, என் அத்தானை அவங்க சொல் லுவாங்க கதையை—ஆமா, கதையை!"

ஊர்வசி தடுமாறினாள்.

ஐந்தாறு நிமிஷங்கள் சென்ற பின்னரே, மீனாட்சி அம்மாள் வந்தாள். வந்தவள், ஹார்லிக்ஸ் கலந்திருந்த தம்பளரை மங்கையர்க்கரசிக்குக் கொடுத்தாள். காப்பித் தம்பளரை அம்பலத்தரசனிடம் சமர்ப்பித்தாள்.

''ரெண்டு பேரும் சாப்பிடுங்க'' என்று உபசரித்தாள் ஊர்வசி

''தங்கச்சிக்கு '' என்று கேட்டாள் மங்கையர்க்கரசி.

''நான் கொடுக்க மாட்டேனா ?'' என்று உரிமை பற்றினான் அம்பலத்தரசன்.

பாதிக் காப்பி — மீதிக் காப்பி ஊர்வசிக்குக் கிடைத்து விட்டது.

அம்பலத்தரசன் பொய் சொல்வானா?

''அக்கா இங்கேயே தங்கட்டும்'' என்றாள் ஊர்வசி

''வேணாம் ! மங்கையர்க்கரசியை தங்கசாலையிலே எனக்குத் தெரிஞ்ச டாக்டரம்மாளோட நர்ஸிங் ஹோமிலே சேர்த்திட்டு வந்திடுறேன். அதுதான் நல்லது'' என்று எழுந்தான் அவன்; எழுந்து, நடந்து; மீண்டும் திரும்பினான். டாக்சியில் திரும்பினான் அவன்.

மங்கையர்க்கரசியைப் பதனமாக வாடகைக் காரில் ஏற்றி விட்டார்கள், தாயும் மகளும்.

கையெடுத்துக் கும்பிட்டு விடைபெற்றாள் மங்கையர்க் கரசி. கண்முனைக் கசிவு நிற்கவில்லை.

''போய் வருறேன் ஊர்வசி, உன்கிட்டே நிரம்பப் பேச வேணும்'' என்றான் அம்பலத்தரசன்.

''சரிங்க ! ராத்திரி சாப்பாடு இங்கேதான். சீக்கிரம்

வந்து விடுங்க. உங்களுக்குப் பிடித்தமான கோழி பிரியாணி தயாராகிறது உங்களுக்காகக் காத்துக்கிட்டிருப் போம்'' என்று அன்பால் எச்சரித்தாள் ஊர்வசி. வெண் முத்துப் பற்களில் பிறை ஒளிர்ந்தது ; ஒளிந்தது.

''உத்தரவு டியர்!''

பெண் மானாகக் கண்களைச் சிமிட்டினாள் ஊர்வசி!

## [12]

மங்கையர்க்கரசிக்கு நல்லமுத வாக்குக் கொடுத்தாள் லேடி டாக்டர்

அம்பலத்தரசனுக்கு அவ்வாக்கு அமுதாகி இனித்தது.

ஆனால், ஏன் அவள் இப்படி அழுகிறாள்?

''அழாதேம்மா. நீ பிழைச்சிடுவாய்'' என்று ஆறுதல் படுத்தினாள் டாக்டரம்மாள்.

''அம்மா, நான் பிழைச்சிடுவேனோ என்கிறத்துக் காகத்தான் அழுகிறேன் அழுகிப்போன உயிர் இது! இது சீக்கிரம் போனால் தான் தேவலாம். கண் கெட்ட பின் னாலே சூரிய நமஸ்காரம் செய்ய முடியுங்களா, அம்மா?''

''அம்மா, வாழ்க்கைதான் நம்ம கையிலே இருக்கிறதே தவிர, ஜீவன் நம் கையிலே இல்லை. அது ஆண்டவனுக்கு சொந்தம். உன் நிலையும் சிக்கும் எனக்கு புரிஞ்சிட்டுது! நீ பிழைச்சு எழுந்திடுவாய் புதிசாய்ப் பிறந்ததாட்டம் நினைச்சுக்கிட்டு, இனிமே நல்லதனமாய் வாழ்ந்திடு, போதும். கடந்ததையெல்லாம் கனவாகவே நினைச்சிடு. அம்பலத்தரசன் உனக்கு ஆதரவு தருவார். அவரை நீ நம்பலாம்'' என்றாள், லேடி டாக்டர் மரகதம்மூர்த்தி.

லேடி டாக்டரின் எம்.பி.பி எஸ். படிப்பு மங்கையர்க் கரசிக்குப் புது வாழ்வும், புது உயிரும் நல்கிவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது அம்பலத்தரசனுக்கு. சிகிச்சைக்குரிய கட்டணத் தொகையை டாக்டரம்மாளிடம் கொடுத்து விட்டு, மங்கையர்க்கரசியிடம் சென்றான். அவளுக்கு ஆறுதல் சொன்னான்.

"தவறுகளை உணர்கிறதுதான், வாழ்க்கையிலே கிடைக்கக் கூடிய மகத்தான ஆறுதலாகும். இந்த வகையிலே உனக்கும் ஒரு பெருமையுண்டு. மிச்சமிருக்கிற வாழ்க்கையை நீ நல்ல விதமாய் வாழ்ந்தால் போதும். நாணயமான உன் வயிற்றுப் பிழைப்புக்கு நான் வழி காட்டுறேன்! நானும் என் தவற்றை சில மணி நேரத்திலேருந்துதான் புரிஞ்சு உணர்ந்துகிட்டேன் ஊர்வசியைப் பத்தி உன்கிட்டே நான் சொல்லி விட்டேன். அந்த ஊர்வசிதான் என்னோட இந்த மாறுதலுக்கு வித்திட்ட புண்ணியவதி. உன்கிட்டே நான் மன்னிப்பு வாங்கிக்க வேணும். சோதனை இல்லாட்டா, வாழ்க்கையே சுமையற்றுப் போயிடும் போல! நீ திடமாயிரு, அப்பத்தான் எனக்கும் தெம்பாயிருக்கும். நான் அடிக்கடி வந்து உன்னைக் கவனிச்சிடுவேன். போய் வரட்டுமா?"

ஒளி வெள்ளம் வழிந்தது.

அவள் அன்பின் விழிகளை மலர்த்தி, போயிட்டு வாங்க சார்" என்று வலது கையை அசைத்தாள்.

வெளுத்துப் போயிருந்த அவளது கவர்ச்சி மிகுந்த முகத்தில் புன்னகைக் கீற்று வெடித்தது; அவளது குவளைக் கண்கள் நீர்ப்பீலியாயின.

அம்பலத்தரசன் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு புறப்படலானான்.

சந்தடி மிகுந்த தங்கசாலை பின் தங்கியது.

ஒளியும் நிழலும் கலந்த இயற்கையின் செயற்கைக் கோலத்தை ரசித்தவனாக, அடி வைத்து அடிபிரித்து நடந்த அம்பலத்தரசன், ஸ்டான்லியை நெருங்கிய தருணத்தில் ஆஸ்பத்திரிக்குரிய வாடையையும் நெடியையும் அனுபவித்து நடந்தான். அப்போது அவன் பார்வையில் காட்சியொன்று ஏடு விரிந்தது.

தான் ஈன்ற குட்டிகளைப் பாசம் பொங்கப் பார்த்து அவற்றை ஒவ்வொன்றாகப் பாசத்தோடு நக்கிக் கொண்டிருந்தது தாய் நாய் ஒன்று.

இக்காட்சியை இமை வலிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் அவன். அப்போது அவன் மனம் 'தாய் நாய் இருக்கிறது! ஆனால் தந்தை நாய் எங்கே?' என்று ஒரு கேள்வியை வீசியது. அவன் சுற்றிச் சூழ நோக்கினான். தாய் மட்டும்தான் தட்டுப்பட்டது!

அவன் தடுமாறிக் கொண்டே நடையைத் தொடர்ந்தான். ஊர்வசியின் நினைவுடன் அவன் மனமும் தொடர்ந்தது விதி வசத்தால் தன் வயிற்றில் கரு வளரும் நிலை ஏற்பட்டால் அந்த ஒரு முடிவுக்குக் குறுக்கே தான் என்றென்றும் நிற்கக் கூடாது என்று 'தனக்கு ஆணை' இட்டிருந்த அவளது கடிதத்தின் இதயம் இப்போதும் அவனைத் தொட்டது. உணர்வு கலங்க உள்ளம் கலங்க அவன் ஒரு வினாடி அப்படியே சிலையாக நின்றான். மீண்டும் ஊர்வசியைச் சூழ்ந்தது அவன் மனம்.

'ஊர்வசியைப் பலவந்தமாகக் கெடுத்த அந்தப் பாவி யாராக இருக்கும்? என்னிடம மட்டுமல்லாமல், அவள் தாயிடமும் அவள் அந்தப் பாவியின் பெயரை ஏன் சொல்லமறுத்து விட்டாள்? இதில் சஸ்பென்ஸ் என்ன இருக்க முடியும்? பாவி, அவள்! அந்தத் துரோகியை மட்டும் நான் அறியமுடிந்தால், அவனை ஊர்வசிக்கு முந்திக்கொண்டு பழி வாங்கி விடுவேனே! தன் ஆத்தரம் முழுவதையும் சுழலாக்கித் தன் நெஞ்சக் கடலிலே மறைத்து வைத்திருக்கிறாள் ஊர்வசி! அவள் மனம் எனக்குப் புரிகிறது. அவள் வேதனையை நானும் அனுபவிக்கிறேன். சுழல் என்றைக்கு அந்தப் பாவியைச் சிக்க வைக்கப் போகிறதோ, தெரியவில்லை!'

அம்பலத்தரசன் இப்போது தன்னைப் பற்றியும் ஊர்வசியைப் பற்றியும், மங்கையர்க்கரசியைப் பற்றியும் நீதிதேவன் இருப்பிடத்தில் அமர்ந்து எண்ணிப் பார்த்தான். ஊர்வசி மட்டுமே நிரபராதியாக அவனுள்

தோற்றம் கொடுத்ததை அவளது உள்ளுணர்வு எடுத்துக் காட்டியது.

'வாழ்க்கை ஓர் உயிர் மரணப் போராட்டமேதான்! பிறவிச் சோதனையை வெல்ல தியாகப் பண்பும், சுயநல மற்ற தன்மையும், ஈரச் சித்தமும் வேண்டும். இத்தகைய குணச்சீர்கள் மனித மனத்துக்குக் கிட்டிவிட்டால், அப்பால் வாழ்க்கை ஓர் ஆனந்தமயமான ஆறுதலாகவே அமையும்! ஊர்வசியின் எதிர்காலத்தைப் பேண நான் எடுத்துள்ள இப்புதுப் பிறவி எனக்குக் கை கொடுக்கும்; என் மனமே எனக்கு வழிகாட்டியாக அமையும். என் மனத்துக்கு நானும் வழிகாட்டியாக அமையமுடியும்!'

அவன் போர்த்துக்கீசிய மாதா கோவில் தெருவில் திரும்பினான். 'எனக்குக் கோழி பிரியாணி பிடிக்குமென்று யார் சொல்லியிருப்பார்கள், ஊர்வசியிடம்? ஆமாம், மங்கையர்க்கரசிதான் சொல்லியிருக்கக்கூடும்!' தனக்குத் தானே முறுவல் பூத்தவனாக நடந்தான் அம்பலத்தரசன்.

வானக் கப்பல் சிவப்புப் புள்ளியாக நட்சத்திரங் களுக்கு மத்தியில் பறந்து சென்றது.

ஆங்கிலச் செய்திகள் படிக்கப்பட்ட நேரத்தில், அவன் ஊர்வசியின் குடிவீட்டை அடைந்தான்.

வழிமேல் விழிவைத்து எதிர்பார்த்திருந்தாள் அவள்.

"வாங்க, அத்தான்!"

'அத்தான்' என்ற உறவுச் சொல்லின் புதுமையை அவன் அப்போதும் துல்லிதமாக உணரலானான்.

' வாங்க சாப்பிடலாம் '' என்றாள் மீனாட்சி அம்மாள்.

சொல்லிக்கொண்டே, கூடத்தில் 'தடுக்கைப்' போட் டாள். சாப்பாட்டுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் சுறு சுறுப்பாகச் செய்தாள்...

ஊர்வசி தண்ணீர்ச் செம்புடன் வந்து அவனிடம் நீட்டினாள்.

"கை கழுவுங்க" என்றாள்.

"இதோ வருகிறேன் ...." என்று அவன் மூலைப் பகுதியை நோக்கினான்.

நேரே போங்க. வழுக்கும் பார்த்துப் போங்க. வழுக்கி விழுந்திடாதீங்க!"

அவன் புன்னகை கொண்டு அவள் சுட்டிய பகுதிக்கு எச்சரிக்கையுடன் போய்த் திரும்பினான். கை கால்களைக் கழுவிக்கொண்டு உள்ளே நுழைந்தான். பெரிய இருமலொன்று வெடித்தது.

"இனிமே நீங்க சிகரெட்டைக் குறைச்சுக்கங்க. அதாலேதான் இப்படி இருமுது."

அவள் அவனைப் பரிதாபத்துடன் பார்த்தாள். அப் பார்வையில் நம்பிக்கை இருந்தது.

"ஆகட்டும் என்று சொல்லித் தலையை இணக்கமுடன் உலுக்கினான் அவன். அவள் வேண்டுகோளை அவன் ஆணையாகவே மதித்தான்.

கோழிப் பிரியாணி படைக்கப்பட்டது. அதன் சூடு தலை வாழை இலையின் ஓரப் பகுதிகளைக் கன்றச் செய்தது.

"சாப்பிடுங்க!"

"நீயும் சாப்பிடு!"

"எனக்குப் போடலையே ?"

"நான் போடுறேனே" என்று சொல்லித் தன் இலையில் இருந்த பிரியாணிச் சோற்றையும் கரித் துண்டங்களையும் ஒரு முனைக்கு ஒதுக்கி, எஞ்சியிருந்த இலையை அளவு பார்த்துக் கிழிக்க முனைந்தான்.

அப்போது மீனாட்சி அம்மாள் ஓர் இலையுடனும், எவர்சில்வர் பிளேட்டில் பிரியாணியுடனும் அங்கு வந்து, நீங்க சாப்பிடுங்க ஊர்வசிக்கு இதோ தனியே வைக்கி றேன்'' என்று கூறினாள்.

ஊர்வசியும், அம்பலத்தரசனும் ஒருவரையொருவர் அர்த்த புஷ்டியோடு பார்த்துச் சிரித்தவாறு, சாப்பிடத் தொடங்கினார்கள்.

மீனாட்சி அம்மாள் உள்ளே போய்விட்டாள்.

அவன் தன் இலையிலிருந்து அவள் இலையில் கொஞ்சம் பிரியாணியை அள்ளிப் போட்டான்.

அவள் மகிழ்வின் நிறைவுடன் அதை உண்டாள்.

''நான் போட்டேனே அதற்குப் பதிலா நீ எனக்குத் தரவேணாமா ?...

அவனை அவள் வெட்கத்துடன் நோக்கினாள்.

''இது எச்சில்!'' என்றாள்.

''இனிமேல் எச்சில் நம்மளைக் கடந்ததாக்கும் ! இல் லையா ?''

அவள் கூடுதலாகவே தன் இலையிலிருந்து பிரியாணியை எடுத்து அவன் இலையில் வைத்தாள்.

''எனக்குத்தான் லாபமாக்கும்!''

''ஊஹூம், எனக்குத்தான்!''

' எப்படி?''

' உங்க அன்பை நான் அடையக் கொடுத்து வச்சதிலே எனக்குத்தானுங்களே லாபம்?''

''அப்படியா? நம் இருவர் அன்பும் அப்படிப் பார்த்தால் லாப நஷ்டம் கடந்தது! ஆமாம், ஊர்வசி!''

''உங்க கொள்கையும் மெய்தானுங்க, அத்தான்!''

அவன் வெங்காயத் தயிர்ச் சட்டினியில் மிச்சமிருந்தக் கரித்துணுக்குகளைத் தோய்த்துச் சாப்பிட்டான். எலும்புத் துணுக்குகள் ஒதுங்கின. எலுமிச்சம் பழத்துண்டைச் சப்பித் துப்பினான். குவளைத் தண்ணீர் காலி!

அவள் எழுந்து முதலில் கையலம்பினாள். அவனுக்குத் தண்ணீர் கொடுத்தாள்.

அவன் கையை டவலினால் துடைத்துக்கொண்டு உட்கார்ந்தான்.

ரேடியோவின் வீணா கானம் அதியற்புதமாகப் பரிமளித்தது 'ஹம்ஸத்வனி' ஆயிற்றே!

கலையுணர்வின் பரிணாமத்தால் நிறைவெய்தினான் அம்பலத்தரசன்.

அம்பலத்தரசன் தன் சட்டைப் பையில் கையை விட்டான் அப்போது, ஊர்வசியின் கடிதம் கைவிரல் ஸ்பரிசத்தில் தட்டுப்பட்டது. தன் நெற்றியில் அவள் நேற்றிரவு தலைவலி மருந்தைத் தடவியபோது, அவள் கைபட்டவுடன் நான் அனுபவித்த அந்த 'ஸ்பரிச சுகம்' மீண்டும் புனர் ஜன்மம் எடுத்திருக்க வேண்டும். இமை கொட்டும் நேரம் அவன் அந்தக் சுகத்தில் திளைத்திருந்தான். சுய சிந்தனை சிலிர்த்தது.

''ஊர்வசி, உன் லெட்டரைப் படிச்சுப் பார்த்தேன். உன் கடிதத்தை அப்படியே நான் அங்கீகரிக்கிறேன். உன்னையே அங்கீகரித்துக் கொண்டவன் அல்லவா நான்....'' என்று 'தீர்ப்பு வழங்கினான் அம்பலத்தரசன். அவளை உன்னிப்பாகப் பார்வையிட்டான்.

''என் உயிர் உடலிலே தரித்திருக்கும்வரை, என் உருயிக்கு நீதான் மூச்சு, ஊர்வசி!''

அவளது கோல விழிகளில், ஆனந்தக் கண்ணீர் இட்டிருந்தது.

''என் பாக்கியமே பாக்கியம், அத்தான்!''

உருக்கத்துடன் மகிழ்ந்தாள் அவள்.

மீனாட்சி அம்மாள் தலையைக் காட்டினாள்.

''அப்புறம் என்னத் திட்டம், மாப்பிள்ளை?'' என்று கேட்டாள்.

''எனக்கின்னு இனிமேல் தனித்திட்டம் எதுவும் இல்லீங்க''.

''அப்படியானால் ஆவணியிலேயே முகூர்த்தம் வச்சிப்பிட வேண்டியதுதானுங்களே!''

''ஆஹா!''

நாணமும் முயங்கின.

அவன் புறப்பட எழும்பினான்.

''இங்கேயே நீங்க படுத்திருக்கலாமே, அத்தான்?''

மெல்லொலியில் சொன்னாள் ஊர்வசி.

''ஆவணி பிறந்திடட்டும், ஊர்வசி!''

மெல்லொலியில் சிரித்தான் அம்பலத்தரசன்.

அவளுடைய மார்பகத்தில் பதிந்திருந்த தங்கச் சங்கிலியின் பதக்கம் ஊசலாடிக் கொண்டிருந்தது.

நான் இப்போது சொன்னதானது சாதாரண அர்த்தத்திலே தானுங்களே!''

'நம் இதயங்கள் வாழத் தொடங்கி விட்டன. நாம் வாழத் தொடங்குவதற்காகத்தான். ஆவணியை எதிர்பார்க்கிறேன். நானும் சாதரணமாகத்தான் சொன்னேன்.''

நேற்றிரவு அவர்கள் இருவரும் கண்ணுறங்கிய அந்தப் புனிதப் பொழுது, அவர்கள் இருவருக்கும் ஒரே சமயத்தில் நிழல் ஆடிக்காட்டியதோ ?

"போய் வரட்டுமா?"

"போய் வாருங்கள்!"

"நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை. நீ என் அறைப்பக்கம் வாயேன், பேசிக் கொண்டிருப்போம்!"

"உத்தரவு, டியர்!"

உதட்டுப் புன்னகையைக் கண்கள் ஏந்தின.

கண்களின் புன்னகையை உதடுகள் ஏந்தின.

பர்மா ஸ்லிப்பர்கள் மறையத் தொடங்கிப் பத்து நிமிஷங்கள் ஆகியிருக்கும் !

## [13]

**வி**டிந்தது — ஞாயிற்றுக்கிழமைப் பொழுது.

தளர்ந்து வந்த கோடையின் புலரியில் துயிலெழுந்து, பல் துலக்கிக் காப்பி சாப்பிட்டு விட்டு, அந்தச் சூட்டோடு காலைச் செய்திகளையும் நெஞ்சிலேற்றிக் கொண்டு, குளித்து, புத்துடை தரித்துப் புறப்பட்டான் அம்பலத்தரசன் பக்தி சிரத்தையுடன் காளிகாம்பிகை — காமடேஸ்வரர் தரிசனத்தை முடித்தான். 'எங்கள் வாழ்வை நலத்துடன் அமைத்துக் கொடுங்க!' என்று ஜோடித் தெய்வத்தைப் பிரார்த்தித்துக் கொண்டான்.

தானும் ஊர்வசியும் தொடங்க விருக்கின்ற அந்தப் புது மண வாழ்வின் தாம்பத்தியம் சிறக்க வேண்டுமென்ற தவிப்புடன் அஞ்சலி செலுத்தி, அந்த அஞ்சலியில் தன் பிரார்த்தனை ஈடேறிவிடுமென்ற தன்னம்பிக்கையைப் பெற்றுத்

திரும்பி நடந்தான். புதிதாக உருவாகி வளர்ந்து வாழ்ந்து கொண்டிருந்த உறவும் பாசமும், துடிப்புமும் கடமையும் அவனைப் புதுப்புதுப் புவனத்துக்கு அழைத்துச் சென்று கொண்டிருந்தன. வாழ்க்கையின் பால் அவனுக்கு இருந்த ஆர்வமும் கவலையும் அவன் மனத்தைப் பண்படுத்திப் பக்குவப்படுத்திக் கொண்டிருந்தது.

முதற் பிரார்த்தனைக்குரிய மணி அருகிலிருந்த புனித மேரி மாதா கோவிலிலிருந்து ஒலித்தது.

அம்பலத்தரசன் இடது புறமாக மடங்கினான்.

தொப்பிக்காரச் சாய்பு ஒருவர் பாதங்களில் கொதி எண்ணெயை ஊற்றிக் கொண்டிருப்பவர் போன்று வேர்க்க விறு விறுக்க எங்கோ விரைந்தார்.

நல்ல வேளை, அவர் பேரில் அவன் மோதிடவில்லை. விலகிக் கொண்டான். கையோடு கை இணைத்து ஒயிலாடிக் கொண்டே சென்ற புது ஆங்கிலத் தம்பதி அவன் மீது மோதி விடவில்லை; தன் காதலியைக் கெட்டிக்காரத் தனமான காதலால் கட்டுண்டு கடைபிடித்துச் சென்றான் காதலன். புதிய காதல் உறவு இணைத்த புது இணையாக அவர்கள் இருக்கலாம். அடுத்த விபத்தையும் சமாளித்த படி அவன் ஹோட்டலைக் குறிவைத்து நடந்தான்.

ஹோட்டல் வாசலில் பிச்சைக்காரி ஒருத்தி தன் பிள்ளைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள் தன்னைக் கண்டதும், "தரும தொரையே!" என்று பல்லை இளித்தாள்; அவளுக்கு விளம்பரப் பல்பொடியின் அருமை தெரியாது போலும்! அவன் சிரித்துக் கொண்டே ஒரு பைசாவை அந்தத் தாய்க்குப் போட்டான். வெறிநாய் ஒன்று விழுந்தடித்துக் கொண்டு தலை தெறிக்க ஓடியது. அவன் சுற்றிலும் ஒரு முறை கண்ணோட்டம் பதித்தான். 'மனிதர்களிலே வெறியர்களைத் தடம் கண்டு கொள்வது இயலாத காரியம் போலிருக்கிறதே?"

ராமபவன் இட்டிலி என்றால் அம்பலத்தரசனுக்கு ஒரு பிடித்தம். இட்டிலிக்கு ஊற்றப்படும் சட்டினியின் மீதுள்ள பற்றுத்தான் இட்டிலியின் மீதும் அவனுக்கு ஏற்பட்டிருந் தது. சாப்பிட்டு விட்டுத் திரும்பினான்; 'பில்'லைக் கொடுத்து விட்டுத்தான் திரும்பினான். 'பில்'லை மட்டும் வாங்கிக் கொள்ளும் ஹோட்டல் அல்ல அது!....

வெற்றிலைப்பாக்குக் கடைக்கு வந்தான். இதுவும் அவனுக்கு ஒரு வாடிக்கைக் கடை. இலக்கியச் சர்ச்சைக்கு கந்த இடம் அது. அமரர் புதுமைப் பித்தனுக்கு அந்நாளில் இம்மாதிரியான வாடிக்கைக் கடைகள் அதிகம் இருந்ததாக அவன் சொல்லக் கேட்டதுண்டு, கடையின் அதிபர் அந்தக் கடைக்கு வாய்த்த நல்ல விளம்பரம் மனிதர் கும்பகோணம் வெற்றிலையைக் காம்புகிள்ளி நரம்பு நீக்கிப் போட்டுக் கொண்டு பன்னீர்ப் புகையிலையை உள்ளடக்கிப் பேசும் பேச்சைப் பார்த்தால், தாம்பூலப்பித்து யாரையும் ஒரு கலக்கு கலக்கியே தீரும். அம்பலத்தரசனும் இப்படிப்பட்ட பழக்கத்துக்கு அடிபணிந்தவன்தான். வெற்றிலை தரித்துக் கொண்டான் அவன். நீட்டப்பட்ட சிகரெட்டை வாங்கிய அவன், ஊர்வசியின் 'ஆக்ஞை'யைச் சிந்தையிற் கொண்டதும், அதைத் திருப்பிக் கொடுத்தான். கடைக் காரர் அதிசயம் பூத்தார்.

'சரி, இந்த வருஷம் தமிழ்நாட்டு அரசாங்கத்தின் சார் பிலே தமிழில் சிறந்த நூல்களுக்குப் பரிசளிக்கப்பட்டதே, அதைப் பற்றி இந்தப் பத்திரிகைகக்காரர்கள் அவ்வளவு தூரம் உரிய விளம்பரம் கொடுக்கலையே, கவனிச்சிங்களா ஸார்?'' என்று கேட்டார் கடை முதலாளி.

''வாஸ்தவந்தான். இரண்டொரு ஏடுகள் நல்லமுறை யில் பாராட்டி எழுதின. இரண்டொருவர், கட்டின வீட்டுக்குக் குறை சொல்லவென்று கடுவன் பூனையாட்டம் காத்திருந்து குறை சொல்லவும் தவறவில்லையே அதையும் கவனிச்சிங்களா, சாமிநாதன்?''

''ஆமாம், அதுதான் நம் தமிழ் இலக்கியத்துக்கு ஏற்பட்டு வருகிற ஒரு தலைவலியாச்சே? ... இப்பத்தான் ஞாபகம் வருது தமிழிலே நாடக இலக்கியம் உண்டாக வில்லையாம். ஒரு சாரார் பேசி கொண்டுதானே வரு கிறாங்க! இவங்களுக்கு நீங்க இன்னும் பலமான ஒரு அடி கொடுக்க வேணுமுங்க. உங்க பூ' மூலம்! தட்டிக் கேட்கிறதுக்கு ஆள்' இல்லாட்டா தம்பி சண்டப் பிரசண்டன்னு நம்ம ஜில்லாப் பக்கத்திலே ஒரு பேச்சு உண்டில்லையா? அதன் பிரகாரம், அப்போதைக்கப் போது, குறை சொல்லுறவங்களுக்கு மண்டையிலே அடிச்சாத்தான் நல்ல புத்தி வரும்! தமிழிலே நாடக இலக்கியம் தொன்று தொட்டு வளர்ந்து, வாழ்ந்து வருகிற உண்மைப்பத்தி நீங்க எடுத்துச் சொன்னதாகவும், இந்நாளிலே நடத்தப் படும் அமெச்சூர் நாடகங்கள் எத்தனையோ நாடக வளர்ச்சிக்கு, உதவுகிற நடப்பை நீங்கச் சுட்டிச் சொன்ன தாகவும் பூமிநாதன் நேற்றுக் காலம்பற எங்கிட்டே ஞாபகப் படுத்தினார்.

''அப்படியா? பேஷ் பேஷ்!''

பூமிநாதனின் பெயரைக் கேட்டதும், அவன் தன்னைச் சந்திக்க இரவு வருவதாகத் தெரிவித்து வராமல் போன விவரத்தை அம்பலத்தரசன் எண்ண வேண்டியவன் ஆனான்.

"கூடிய சீக்கிரம் உங்க இஷ்டப்படியே ஒரு விமர்சனக் கட்டுரை எழுதிடுறேன். எனக்கும் அந்தத் தூண்டுதல் ரொம்ப நாளாய் இருந்துகிட்டுத்தான் வருது."

''பேஷ்? செய்யுங்க!.... ''

அன்றையக் கணக்கைக் குறித்துக் கொள்ளச் சொல்லி விட்டு நகர்ந்தான் அம்பலத்தரசன்.

தெருவில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன ஆகாயத்தில் விமானம் பறந்தது.

"அந்தாப் பாருடா மணி, அந்த விளையாட்டு ஏரோங் டேனைத் தாண்டா நாளைக்கு எங்கப்பா எனக்கு வாங் கித் தந்தார்டா!" என்றது குழந்தை.

"போடா, அது எங்க வீட்டு ஏரோப்ளேனுடா. எங்கம்மா சொல்லிச்சுடா, பாலு!" என்றது இன்னொரு குழந்தை.

குழந்தைகளின் இலக்கணம் கடந்த அந்தச் சின்னஞ் சிறு உலகத்தினின்றும் தப்பிப் பிழைத்த விமானத்தை அண்ணாந்து பார்த்து நகைத்தவனாக அவன் நடந்தான்.

மூத்துமாரிச் செட்டித் தெருவின் செம்பாதி பின் தங்கியது.

அறையைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த அம்பலத்தரசனுக்கு ஊர்வசியின் நினைவு கிளர்ந் தெழுந்தது. அவள் இல்லாத அந்த இடம் வெறுமையாகக் காட்சியளித்தது. ஊர்வசியைத் தேடிச் செல்லத் துடித்தான் அவளை இங்குவரச் சொன்னதை எண்ணி, அந்நினைவை மாற்றிக் கொண்டான். மேஜையில் இருந்த அவளது டைரியை எடுத்துப் பெட்டிக்குள் திணித்தான். அவளி டம் அவள் டைரியைக் கொடுத்துவிட வேண்டுமென்றும் ஞாபகப்படுத்திக் கொண்டான் அவன். 'மறைந்து கொண் டும், மறைத்துக் கொண்டும் வாழ்ந்து வருகிற மனிதப் பிராணிகள் நலிந்திருக்கிற இந்த உலகத்திலே ஊர்வசி ஓர் அபூர்வம்! அந்த அபூர்வத்தில் எனக்கு ஒரு இடத்தைப் பெற்றுக்கொண்டால் அதுவே எனக்கு ஆத்ம திருப்தி தரும்!......'

அன்றிரவு ஊர்வசி தன் அறையில் நம்பிக்கையின் நிர்மலத்தோடு, நிஷ்களங்கத்தின் நோன்போடு உறக்கம் கொண்டிருந்த போது, அழகு கொஞ்சிய அவளுடைய மார்பகத்தில் காணப்பட்ட அந்த ரத்தத் தழும்பை அவன்

இப்போதும் நினைக்கத் தவறிவிட வில்லை. அதே தருணத்திலே, 'பூ' காரியாலயத்தை விட்டுப் புறப்பட்ட பூமிநாதனின் மார்பில் தெரிந்த அந்த ரத்தத் தழும்பையும் அவன் ஞாபகப்படுத்திக் கொள்ளத் தவறிவிடவில்லை!....

'என் ஊர்வசியைக் கெடுத்த துரோகி யார்? அவனை இனம் காண முடிந்தால், என்னுடைய இன்னொரு கடமையும் பூர்த்தியாகி விடுமே! ஊர்வசி இத்தகைய கொடுமைக்கு இலக்காவதற்கு முன் அவளை நான் அடையும் பாக்கியம் எனக்குக் கிட்டியிருந்தால் ?'

உடலைச் சிலுப்பிக்கொண்டு அம்பலத்தரசன் இடம் மாறிக் குந்தினான்.

பால் காய்ந்தால், சுவை கூடும்.

சோதனை கூடினால், மனம் பக்குவமடையும்!

எண்ணத்தின் சூடு, அவனுள் சுவையான ஓர் ஆரோக்கியத்தைப் பரப்பி விட்டது போலும்!

ஒரேவொரு சிகரெட் தலையை நீட்டி அவனைச் சோதித்தது. நாக்கு ஊறியது. அதைக் கையில் எடுத்தான். ஒருமுறை அதை அருவருப்புடன் பார்த்தான்; அடுத்த கணம், அந்தச் சிகரெட்டைக் கசக்கி விட்டெறிந்தான்!

தத்தளிப்பு மாற, தத்தளிப்பை மாற்ற 'பூ' இதழின் மலரொன்றைப் புரட்டினான், புரட்சிக்கு மறுபெயர் காதல்!' என்ற மட்டும் அவனை வசீகரித்தது புரண்டன ஏடுகள்.

அன்னையின் நினைவு பீறிட்டது.

அம்பலத்தரசன் கடிதத் தாளை எடுத்தான்.

''அன்புள்ள அம்மா அவர்களுக்கு,

இவடம் நான் சுகம். இது போல் அவடம் தங்கள் சுகத்துக்கு எழுதவும், தங்கள் கடிதமும், தாங்கள்

எனக்கென நிர்ணயித்த பெண்ணின் போட்டோவும் கிடைத்தன. உங்களது அன்பின் ஆணையை சிரமேற் கொள்ளப் பழகியவன் நான். ஆனால் இப்போது, தெய்வம் எனக்கு ஒரு புது ஆணையைப் பிறப்பித்துள்ளன. அதன் படி அபலைப் பெண் ஒருத்தியை நான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். இந்த என்னுடைய முடிவைக் கேட்டால் நீங்கள் என்னை ஆசீர்வதிப்பீர்களென்றே நம்புகிறேன். முகூர்த்தத்துக்கு ஆவணியில் நாள் பார்த்துக் கொண்டு அங்கு வந்து தங்களையும் இங்கு அழைத்துக் கொண்டு வர உத்தேசம். தாங்கள் என்னையும் அந்தப் பெண்—அதாவது உங்கள் மருமகள் ஊர்வசியையும் மனப்பூர்வமாக ஆசீர்வதித்து, எங்கள் கல்யாணத்தை நடத்தி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தாங்கள் அனுப்பிய புகைப்படத்தை இத்துடன் திருப்பி அனுப்பியிருக்கிறேன். என் பதில் கடிதம் கண்டு அவ்விடத்தில் வாக்குக் கொடுக்க வேண்டும் என்று முன் கடிதத்தில் தாங்கள் குறிப்பிட்டது நல்லதாகப் போயிற்று. மற்றவை நேரில்.

இப்படிக்கு.
தங்கள் மைந்தன்
ஆ. அம்பலத்தரசன்

பெட்டியைத் திறந்து அந்த நிழற் படத்தை எடுத்து, அதையும் கடிதத் தாளையும் உறைக்குள் இட்டு முகவரி எழுதி ஒட்டிக் கொண்டு தலைமை அஞ்சல் நிலையத்தை நோக்கிப் புறப்பட்டான்.

அவன் இல்லாத வேளையில் பூமிநாதன் அவனைத் தேடிச் சென்ற விவரத்தை அவன் எங்ஙனம் அறிவான்!

# [14]

கோடை மழை பொழிந்தது! நின்றது. க்ஷணப்பித்தம் க்ஷணச் சித்தம் கதைதான்!

தாய்க்கு தஞ்சாவூருக்கு எழுதிய தபாலைப் போட்டு விட்டு வந்ததில் அம்பலத்தரசன் வெகுவாகக் குதூகலம் அடைந்தான். தான் அதிகார பூர்வமாகச் செய்ய விரும்புகின்ற முதற் கடனுக்கு மூலாதாரமாக இருந்த இந்த இரண்டாவது கடமையைக் காலத்தோடு செய்தது அவனுக்கு மன அமைதியைக் கொடுத்தது.

அம்மாவின் சம்மதத்தைத் தானாகவே எடுத்துக் கொண்டது. முகூர்த்தத்துக்கு நாள் பார்க்க வேண்டியது. உடன் தஞ்சாவூருக்குப் பயணப்படுவது, அன்னையின் ஆசிர்வாதத்தின்பின் தானும் ஊர்வசியும் புதுமணத் தம்பதியாக ஆவது-பின்னர் தனிக் குடித்தனம் வைப்பது—இப்படியாக அவன் தன் எதிர்காலத்தை ஊர்வசியின் பின்னணியில் உல்லாசமாகப் பின்னிய நிலையுடன் நடந்தவன், வழியில் 'சிங்கிள் காஃபி' போட்டுக்கொண்டு மீண்டும் நடைபயின்று மண்ணடி வீதியில் ஒரு குழாய் ஊதுவத்தியும் இரண்டு முழம் ரோஜாவும் வாங்கியவனாக அறையை அடைந்தான் அவன். வழியில் தென்பட்ட மினர்வாப் பட விளம்பரத்தைக் கண்டான். 'வாழ்க்கை ஒரு செஸ் விளையாட்டு' என்ற அந்த ஆட்டத்துக்குக் காலைக்காட்சி பார்ப்பதற்குத் தானும் ஊர்வசியும் புறப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் நெருக்கமான ஆசையையும் நெஞ்சில் நினைவால் எழுதி ரசித்தவனாக, தான் அறையில் பிரவேசித்த உன்னத நிலையையும் அவன் மறந்து விட முடியாது.

ஆகவே, அவன் ஊர்வசியின் சிந்தூரப் பாதங்களை எதிர்நோக்கிக் காத்திருந்தான்.

பூப்பொட்டலம் மேஜையின் நடுவில் மணத்தது.

அவன் மனக் கண்ணில் ஊர்வசியின் பூச்சூடிய கூந்தல் அழகு காட்டியது!

''ஸார்!'' என்ற புதிய குரல் கேட்டது.

அறிமுகமில்லாத ஒருவரும், ஸ்திரீ ஒருத்தியும் குழந்தையோடு வந்து நின்றதைக் கண்டான் அம்பலத்தரசன். அவர்களுக்கு முகமன் மொழிந்தான். பாயை விரித்தான்.

''நீங்க தானே மிஸ்டர் அம்பலத்தரசன்?''

''ஆமாங்க!''

'உங்களைச் சும்மா பார்த்திட்டுப் போகத்தான் வந்தோம். என் பெயர் மகாலிங்கம், இவள் என் மனைவி. பெயர் மலர்விழி. இது எங்க குழந்தை. ஊர்வசிக்கு நேர்ந்த துர்ப்பாக்கியத்தைப் போல் இவளுக்கும் ஏற்பட்டு, இவள் என்னை அடைக்கலம் அடைஞ்சாள். இவளை ஏற்றுக்கிட்டேன். பெண்கள் அபலைகளாக ஆகும்போது, தங்களையும் மீறி இப்படிப்பட்ட துரதிர்ஷ்டங்களைச் சந்திக்க நேரிடும்போது, இதயமுள்ளவர்கள் நம்ம மாதிரி முன் வந்து அவங்களுக்குத் துணை நிற்க வேணும். இது தான் படைப்புச் சக்தி உலகத்துக்கு இட்டிருக்கக்கூடிய கட்டளை. உங்க நல்லெண்ணத்தை ஊர்வசி குடியிருக்கிற அடுத்த போர்ஷன்காரர் என்கிட்டே சொன்னார், அது தான் உங்களைப் பார்த்துப் போக வந்தோம்! ''

''உங்க அன்புக்கு மெத்த நன்றிங்க ஐயா!.... உலகத்திலே நாம் அவதரிச்ச கடமைக்கு நம்மாலான கடமைகளையும் எல்லா எதிர்ப்புக்களையும் சமாளிச்சு, எதிர் நீச்சல் போட்டுக்கிட்டு செய்கிறதுக்கு நாம் எப்பவும் ரெடியாய் இருக்கவேணும். நாம் பிறரை நேசிச்சால், நம்மைப் பகவான் நேசிப்பார் என்கிறதுதானே தத்துவம்? ..

''முக்காலும் உண்மைங்க! ''

'இருங்க, இதோ வருகிறேன்' என்று சொல்லி பிளாஸ்குடன் புறப்பட்டு காப்பியுடன் மீண்டான் அம்பலத்தரசன்.

காப்பிக்கு நன்றி கிடைத்தது.

குழந்தை பொக்கை வாய்ப் புன்னகையை மீட்டியது. அதற்குக் காப்பியுடன், அன்புப்பாசம் நிரம்பிய முத்தமும் கிடைத்தது. ஆகவே, அது இரட்டிப்புப் புன்னகை சொரிந்தது.

"இந்தத் தெய்வத்துக்குப் பெயர்....?"

"அங்கயற்கண்ணி...." என்றாள் மலர்விழி.

"பேஷ்!.... நல்ல பொருத்தம்!"

"மிஸ்டர் அம்பலத்தரசன், உங்களுக்கு மேரேஜ் ஆனதும், ஒரு முறை நீங்க தம்பதி சமேதராக எங்க இல்லத்துக்கு விருந்துக்கு வரவேணும்," என்று சொல்லித் தன் இருப்பிட முகவரி அச்சிடப்பட்ட கையடக்கமான அட்டை ஒன்றை நீட்டினார் மகாலிங்கம். சொல்லிக் கொண்டு விடை பெற்றார்கள் அவர்கள். குழந்தை 'டாடா' சொல்லி பூக் கைகளை அசைத்தது.

அம்பலத்தரசன் அறைக்குள் நுழைந்து அமரலானான்.

கீழே காரின் குழல் ஒலி கேட்டது.

அம்பலத்தரசனுக்குப் புரிந்து விட்டது. அதோ, பூமிநாதன் வந்துவிட்டார்!'

அவன் ஊகம் நூற்றுக்கு நூறு சதவிகிதம் பலிதமடைந்தது.

வந்து விட்டான் பூமிநாதன். 'ஈவினிங் இன் பாரிஸ்' வாசம் மூக்கைத் துளைத்தது. 'மார்னிங் இன் மண்ணடி' என்று ஒரு புது வாசனைத் திரவியம் புழக்கத்தில் இருக்கக் கூடாதா?

"வாங்க பூமிநாதன்"

'ஆமாம் என்று சொல்லியபடி பொன் நகை ஏந்தி

அறையில் நுழைந்தான் பூமிநாதன். அவனுடன் இளம் பரிதிக் கதிர்களும் நுழைந்தன.

''உட்காருங்க'' என்று சொல்லிச் சோபாவைக் காட்டினான் அம்பலத்தரசன்.

முகக்ஷவரம் செய்திருந்தான் பூமிநாதன். முதுகைச் சாய்த்து அமர்ந்தான். பவுடர் பூசப்பட்டிருந்த மாநிறக் கன்னங்களில் அங்கங்கே மெல்லிய இழைகளாகக் கீறல்கள் இரண்டொன்று லேசாகத் தெரிந்தன. 'ஃப்யூஜி ஸில்க் சட்டை பளபளத்தது. மைனர் சங்கிலி கழுத்துக்கு வரம் பறுத்திருந்தது. அவன் கழுத்து பத்திரமாகவே இருந்தது.

பூமிநாதனின் மீதிருந்த பார்வையை அழுத்தி விட்ட போது; அவனிடம் நூதன மாறுதல் ஒன்றையும் அம்பலத்தரசன் கவனிக்க வேண்டியவன் ஆனான். ஓஹோ ! .. மீசை புதுசு போலிருக்கு, கனஜோராக இருக்குங்க நாடகத்திற்காக வச்சிருந்த மீசையைச் சாசுவத மாக்கிக்கிட்டீங்க போலே !''

பூமிநாதன் வெட்கத்தோடு சிரித்தான். வெட்கத்திற்கும் ஆண்மை இருந்தது. ஆண்மைக்கும் வெட்கம் புதிதல்ல!

ஊதுவத்தியைக் கொளுத்தினான் அம்பலத்தரசன்.

''ஸ்மெல் பிரமாதமாயிருக்கே !'' பூமிநாதன் பாராட்டினான்.

''தன்னை அழிச்சுக்கிட்டு இந்த ஊதுவத்தி நமக்கு வாசனை கொடுக்குது!''

''ஆமாம், அதோட தியாகம் தான் இந்த வாசனைக்குத் தத்துவமாய் அமைஞ்சிருக்குது !''

''இதேதானே வாழ்க்கைக்கும் தத்துவம் ?''

"செர்ட்டன்லி...." உங்க குறிப்பு அப்பட்டமான உண்மைதான், ஸார்!"

"நேற்று ராத்திரி உங்களுக்காக வெகு நாழி காத்திருந்தேன். கடைசியிலே ஒரு நண்பரைத் தேடிப் புறப்பட்டேன்."

"என்னை மன்னிச்சிடுங்க. உங்களை அநியாயமாய்க் காக்க வச்சிட்டேன்."

"உங்க அப்பாகூட நீங்க இங்கு வந்தீங்களான்னு என்கிட்டே 'போன்' மூலம் விசாரிச்சாங்களே ?"

"ஒரு அவசர ஜோலியாய் வெளியே போனேன். டயம் ஆயிட்டுது. கொஞ்ச முந்தி நான் உங்களைத் தேடி வந்தேன். இப்போ நான் வந்தது இரண்டாம் தடவை ! நேத்தைக்குக் காலையிலே கூட உங்களுக்கு இங்கே போன் செய்தேன். ரெஸ்பான்ஸ் இல்லை !"

"அப்படியா ? தெரிந்த சிநேகிதியோடு கொஞ்சம் வெளியில் புறப்பட்டுப் போக வேண்டி வந்திட்டுது !" என்று அறிவித்தான் அம்பலத்தரசன் தன்னை பூமிநாதன் 'ஜாடையாக ஓரக்கண் கொண்டு பார்த்த பாவனையை அம்பலத்தரசனா கவனிக்காமல் இருப்பான் ?

பிரிந்து கிடந்த செய்தித்தாளைப் புரட்டினான் பூமிநாதன்.

கனடாவிடமிருந்து 50 — யு. எஸ். 'சேபர்' ரக விமானங்களை பாகிஸ்தான் வாங்கியுள்ளது பற்றிய தகவல் பாரதத்துக்குக் கிடைத்து, இவ்விவரத்தை யு. எஸ் சர்க்காரின் கவனத்துக்கு இந்தியா கொண்டு வந்துள்ள விஷயம் தலைப்புச் செய்தியாக விளங்கியது.

பத்திரிகையைப் போட்டுவிட்டு எம்பி உட்கார்ந்தான் பூமிநாதன். அப்போது அவனது சட்டைப் பொத்தான்

சுழன்றது. அவன் மார்பில் அன்று கண்ட அந்தப் பெரிய ரத்தத் தழும்பு துளியளவு கன்றிப் போய்க் காணப்பட்டது.

இக்காட்சி அம்பலத்தரசனை இப்போதும் கவரத் தவறவில்லை. அதே கணத்தில், ஊர்வசியின் மார்பில் தெரிந்த அந்த ரத்தத் தழும்பையும் அவன் தன் நெஞ்சில் ஏற்றிக்கண்டான் !....

''சிகரெட் ப்ளீஸ்!'' உபசரித்து 'ப்ளேயர்ஸ்' பாக் கெட்டை அம்பலத்தரசனிடம் நீட்டினான் பூமிநாதன் 'பூ' என்ற மோதிர எழுத்து ஒளி வீசியது.

''ப்ளீஸ் .. எக்ஸ்யூஸ்மி!''

''ஏன் ?....நீங்கதான் செயின் ஸ்மோக்கராச்சே, அம்பலத்தரசன் ஸார்?''

''அந்தக் கெட்ட பழக்கம் இன்றையிலேருந்து என் கிட்டே விடை பெற்றிடுச்சு'' என்று நிதானமாகச் சொன்னான் அம்பலத்தரசன்.

''நீங்க பரவாயில்லை பலகாலப் பழக்கத்தை ஒரு நாளையிலே மாற்றிக்கிட்டுட்டீங்க ! என்னாலே அப்படிச் செய்ய முடியலை !.... கொட்டாவி புறப்பட்டது.

''மனம் இருந்தால் மார்க்கம் இல்லாமலா போயிடும்?''

''உங்க போக்கே எப்பவும் ஒரு தனி டைப் ஆச்சிங் களே, ஸார்?'' என்றான் பூமிநாதன்.

இதற்கு விடையாக எதுவும் பேசவில்லை அம்பலத் தரசன். அவன் மனம் தீவிரச் சிந்தனையில் வசப்பட் டிருந்திருக்க வேண்டும் !

தலையை தொங்கப் போட்டுக் கொண்டு புகையைக் கக்கிக் கொண்டேயிருந்தான் பூமிநாதன்.

தலையை நிமிர்த்திக்கொண்டு தன் உற்ற நண்ப னையே உன்னிப்புடன் ஆராய்ந்து கொண்டிருந்தான் அம்பலத்தரசன். அவனது மனத்தின் ஒரு புறத்தில் ஒதுங்கித் தூங்கிய 'வக்கிர புத்தி' விழித்துக் கொண்டது.

அவனுடைய பற்கள் கூடி விலகிய அரவம் கேட்ட மாத்திரத்தில், அவனை நிமிர்ந்து உற்றுப் பார்க்கலானான் பூமிநாதன்.

அம்பலத்தரசனின் விழிக்கரைகளில் சினத் தீ ரத்தம் சுட்டி இருந்தது.

"அம்பலத்தரசன், உங்க மூஞ்சி திடுதிப்பென்று ஏன் இப்படி ஆத்திரம் கக்குகிறது?" என்று கேட்டான் பூமிநாதன். அவன் பார்வையில் இப்போது பூப்பொட்டலம் தென்பட்டது.

"ஒன்றுமில்லை, ஒரு துரோகியைப் பற்றி நெனைச்சேன். வேறொன்றுமில்லை."

"யார் அந்தத் துரோகி? சொல்லுங்க! அவனை நான் கவனிச்சுக்கிறேன். சட்டத்தின் பிடியிலே அகப்படாதவன் இந்த உலகத்திலே அப்படி யார் இருக்க முடியும்?"

"அப்படியா?"

"சொல்றேன். அத்யந்த நண்பரான, உங்ககிட்டே கூடிய விரைவிலே சொல்லி விடுகிறேன், அந்தத் துரோகியைப் பற்றி"

"நல்லதுங்க. கெட்டவர்களை நாம் மன்னிச்சு அவர்களை ஒருபோதும் இந்த மண்ணிலே விட்டு வைக்கப் படாதுங்க?" என்று தீர்மானத் தொனி கூட்டிச் சொன்னான் பூமிநாதன்.

"ஆமாம்!" என்று ஆமோதித்தான் அம்பலத்தரசன். அவன் நெற்றித் திட்டில் சிந்தனை ஓடிக்கிடந்தது. "ஏன் ரெவ்யூவைப் பற்றி ஒண்ணுமே சொல்லலையே?" என்று பேச்சின் போக்குக்குப் புது 'வடிகால்' அமைத்தான் அவன்.

பார்த்தீங்களா, மறந்து விட்டேன். எனக்கு ஏதேதோ ஞாபகம்! உங்க விமர்சனம் ரொம்பவும் சரியாக இருந்

திருச்சு! உங்க விமர்சனம் மூலம் என் நடிப்புக்கு ஒரு மவுஸ் பிறந்திட்டுதுங்க. புதுசா ஒரு சினிமா பார்ட்டி எங் கிட்டே 'மூவ்' பண்ணியிருக்காங்க!''

''அப்படியா! கங்க்ராச்சுலேஷன்ஸ்!''

''பேச்சு வார்த்தை முடியட்டும். ஆனா எங்க அப்பாருக்குத் தான் இதிலே துளியும் விருப்பம் இல்லை. நான் கெட்டுப் போயிடுவேன் என்று பயப்படுறாங்க!''

''ஓஹோ!''

''ஊர்வசியைப் பற்றின நாடக விமர்சனம் எப்படி இருந்திச்சுங்க, பூமிநாதன்?''

''மிஸ் ஊர்வசியைப் பற்றித்தான் ஸ்பெஷலாக எழுதி யிருந்தீங்களே! ஒரு விஷயத்தைச் சொல்லணும் கற்பழிக்கப் பட்ட கதாநாயகிக்கு சமூகம் ஆதரவு தர வேணும்னு நீங்க கதாசிரியருக்கு அட்வைஸ் பண்ணியிருந்ததை நானும் வரவேற்கிறேனுங்க, அம்பலத்தரசன்! கெடுக்கப்பட்ட கதாநாயகிக்கு கடல் அடைக்கலம் தந்ததாய் காட்டின முடிவை ஒத்திகையிலே நான் பாராட்டினேன்; ஆனா இப்போ அந்த முடிவு அர்த்தமற்றதாகத்தான் தோணுது எனக்கு! ஆதரவு இழந்த அபலைப் பெண்களுக்கு இப்படிப் பட்ட மோசடிகளுக்குத் தங்களையும் மீறி ஆளாகிற அல்லது ஆளாக்கப்படுகிற அபலைப் பெண்களுக்கு இந்த தமிழ்ச் சமுதாயம் ஈவிரக்கம் காட்டி அவர்களையும் வாழ வைப்பதிலே தான் தமிழ்ப்பண்பாடு செழிக்க முடியும் என்கிற உங்க வாதத்தை நான் மனப்பூர்வமாய் ஆதரிக் கிறேனுங்க. இம்மாதிரியான ஒரு கடமைக்கு எப்போதுமே நான் தயாராகவும் இருப்பேனுங்க!''

''நிஜமாகவா, மிஸ்டர் பூமிநாதன்?''

''நிஜமாகத்தான்!''

''சத்தியமாகவா?''

''சத்தியமாகத்தான் அம்பலத்தரசன்!''

அம்பலத்தரசன் உணர்ச்சி வசப்பட்டு எழுந்து பூமிநாதனை ஆரத் தழுவிக் கொண்டான்.

''நீங்களும் இம்மாதிரியான கடமையைச் செய்து காட்டப் பின்வாங்க மாட்டீங்கண்ணுதான் நான் நம்பு கிறேன்!''

அம்பலத்தரசனை நோக்கிச் சொன்னான் பூமிநாதன்.

''ஆவணி பிறக்கட்டும். உங்களுக்கு என் சித்தாந்தம் புரியும்! நான் அந்த நாடக எழுத்தாளருக்குக் கூறிய யோசனையை நானே செயல்முறையிலே செய்து காட்டத் தான் போகிறேன்! எழுதுபவன் நடிகனாக இருக்கக் கூடாது! நான் அந்தரங்க சுத்தியோடுதான் எழுதினேன் பலாத்காரமாகக் கற்பழிக்கப்பட்ட நல்ல பெண்களுக்கும் புது வாழ்வு கொடுக்கப்பட வேண்டுமென்று! ஆகவே இப் போது என் எழுத்தையே மனோதர்மமாகக் கொண்டு உதாரணமாக்கிக் காட்டத் தயாராகவும் இருந்திட்டு வருகிறேன்! அதற்குகந்த வாய்ப்பும் எனக்குத் தெய்வா தீனமாய்க் கை கூடியிருக்குது! இதோ பாருங்க. இந்தப் பூப்பொட்டலத்தை! இது என் காதலிக்கு! என் அனு தாபத்துக்குரிய அந்த அபலைக்குத்தான் இந்தப் பொட்டலம்!''

முத்துக்கள் அம்பலத்தரசனின் அழகிய விழிகளைத் துறந்தன.

ரோஜா மடல்கள் தெரிந்தன.

''நீங்க ஒரு அதிசய புருஷர், மிஸ்டர் அம்பலத்தரசன்!''

அவனைக் கையெடுத்துக் கும்பிட்டான் பூமிநாதன்.

''கும்பிடாதீங்க. அவ்வளவு பெருமைக்குரியவனல்ல நான். நான் மனிதன்; மனிதனாகவே வாழ விரும்புகிற ஒரு மனிதன் நான். அவ்வளவுதான்!''

''நான்கூட கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கப் போறேன். என் கல்யாண விஷயமாய் உங்ககிட்டே சில

ஆலோசனைகளைக் கலக்கத்தான் உங்களைத் தேடி வந்தேன்'' என்று ஆரம்பித்தான் சீமான் பெற்ற செல்வமான பூமிநாதன்.

"அப்படியா ரொம்ப வொண்டராக இருக்குது! உங்களுக்கு நான் யோசனை கூறுவதா? ம்....! சொல்லுங்களேன்'' என்று அம்பலத்தரசன் அவனைத் தூண்டிக்கொண்டிருக்கையில், வரலாமா?'' என்ற பெண்ணின் நவீனக் குரல் கேட்டுத் தன் செவிகளைத் திருப்பினான் அம்பலத்தரசன். அவனுடைய முகம் மலர்ந்தது; மகிழ்ந்தது!

"வா, ஊர்வசி'' என்று வரவேற்றான் அம்பலத்தரசன்.

# [15]

திரு ஏற, உரு ஏறித் திகழ்ந்த திருநிறைச் செல்வியென வந்து நின்றாள் ஊர்வசி.

"வா, ஊர்வசி!'' என்று மீண்டும் ஒரு தரம் வரவேற்புச் சொன்னான் அம்பலத்தரசன். தன்னை வியப்பு விரிய விழித்துப் பார்த்துக் கொண்டிருந்த பூமிநாதனைக் கடைக்கண்ணால் பார்த்தான் அவன்.

அவள் அந்தமுடன் மூரல் சிந்தி நடந்து வந்து நிலைப்படியில் நின்றாள்.

'வாங்க ஊர்வசி' என்றான் பூமிநாதன். அவளது இதழ்களின் துடிப்பு மிகுந்தது.

"சௌக்கியமாய் இருக்கீங்களா, வில்லன் ஸார்?'' என்று கேட்டுக் கொண்டே, படர்ந்த சிரிப்பு பதறாமல் வினவினாள் ஊர்வசி,

"நல்ல சுகம்தான்!'' — பூமிநாதனின் வாய்ச் சொற்கள் தடுமாறின.

"உட்கார்" என்று குறித்தான் அம்பலத்தரசன்.

அவள் பாங்குடன் குந்திலாள்.

அவளைப் பார்த்துவிட்டு, பூமிநாதனையும் அதே பார்வை'யில் பார்த்தான் அம்பலத்தரசன். அப்போது அவன் நெஞ்சில் பூமிநாதனின் ரத்தம் மண்டிய அந்த மார்புத் தழும்பு விளையாடியது!

மறுகணம், பூமிநாதன் தன்னைத்தானே குனிந்து பார்த்துக் கொண்டு சட்டையின் பொத்தான்களை வாகு பார்த்துப் பொருத்திக் கொண்டிருந்தான்.

"பூவை எடுத்துக் கொள்ளலாமா நான்?" என்று உரிமை பூண்டு அம்பலத்தரசனை வினவிய காட்சி பூமிநாதனுக்கு மட்டில்லாத மயக்கத்தைக் கொடுத்திருக்கும் போலும்! விரிந்த கண்கள் விரிய, சிலிர்த்த இதழ்கள் சிலிர்க்க, அவன் அம்பலத்தரசனையும் ஊர்வசியையும் மாறி மாறிப் பார்த்தான்.

"ஆஹா!" என்று அம்பலத்தரசன் ஓரிரு கணங்கள் கழித்துதான் விடை கொடுத்தான்.

அதற்குள் பூ, பூவையை நாடியது. பூவோடு பூ சேர்ந்தது; மணத்தோடு மணம் கூடியது.

க்ரிட்டிக் ஸார், நீங்க எங்க வீட்டுக்கு இப்போது சாப் பாட்டுக்கு வரவேணும்! வில்லன் ஸார், நீங்களும் எங்க வீட்டு விருந்துக்கு வரவேணும்! அவங்க விமர்சனம் எழு தினவங்க. நீங்க எனக்கு வில்லனாக நடிச்சவங்க!"

அம்பலத்தரசன் மீதிருந்த தன் ஓரக் கண் பார்வையை நயமுடன் திருப்பி பூமிநாதனை உன்னிப்பாகப் பார்த்துச் சொன்னாள் அவள்.

"விருந்துக்கு வராமல் இருக்க முடிமா? பேஷாக வரு கிறேன் என்றான் அம்பலத்தரசன்.

ஆனால் பூமிநாதனிடமிருந்து யாதொரு பதிலும் கிளம்பவில்லை.

“ஐயா, நீங்க....?” என்று தூண்டினாள் ஊர்வசி

“வருகிறேனே!” என்று தடுமாற்றத்துடன் பூமிநாதன் சொன்னான்.

கீழ்த்தளத்துக் கடிகாரம் பதினொன்று அடித்தது.

‘ஊர்வசி, நான் எங்க பங்களாவரைப் போயிட்டுத் திரும்பிடுறேன். கட்டாயம் உங்க விருந்திலே கலந்துக்கிடுவேன். பயப்படாதீங்க, உங்க அன்பை என்னாலே எப்போதும் மறக்க இயலாதுங்க” என்று சொல்லி எழுந்தான், பூமிநாதன்.

ஊர்வசியின் சிவந்த முகம் கறுத்து வந்தது.

“நீங்க அப்படிச் சொல்லக் கூடாது. நானே உங்க வீட்டுக்கு — மன்னிச்சிடுங்க — உங்க பங்களாவுக்கு வந்து உங்களைச் சந்திக்க வேணும்னுதான் யோசிச்சுக்கிட்டிருந்தேன். நல்ல வேளையாக நீங்களே வழி மறிச்சுத் தரிசனம் கொடுத்து நீங்க இங்கே இருந்திட்டீங்க. நீங்கதான் இன்னிக்கி எங்க வீட்டின் பிரதம விருந்தாளி வாங்க, அரை மணிக்குள்ளே உங்களை அனுப்பி வைச்சுப்பிடறேன்’ என்று வற்புறுத்தினாள் அவள்.

“எங்க அப்பா இருந்திருந்தால் என்னோட கலைத் தொண்டைக் கண்டு இந்நேரம் ஒரு பெரிய டின்னருக்கே அரேஞ் பண்ணியிருப்பார்; அவர் காலம் முடிஞ்சு பல காலமாயிடுச்சு. எங்க சொத்து பத்து, நிலம் நீச்சைக் கொண்டு என்னை எங்கம்மா காப்பாத்துறாங்க ஏதோ இந்த ஏழை வீட்டு எள்ளுருண்டையை உங்களைப் போல உள்ள பெரிய இடத்துப் பிள்ளைங்க — பெரிய மனுசங்க — பெரிய மனசு பண்ணிச் சாப்பிட்டால் அதுதான் எனக்குப் பரம திருப்தி தரும்” என்று தொடர் சேர்த்து நிறைத்தாள் ஊர்வசி.

"ஆமாம் மிஸ்டர் பூமிநாதன்! இவ்வளவு தூரம் சொல்றபோது, நீங்க வந்து சாப்பிட்டுப் போறதுதான் பண்பாக இருக்கும்'' என்றான் அம்பலத்தரசன்.

'ஓ கே'' என்று ஆமோதிப்புக் கொடுத்தான் பூமிநாதன். பிறகு வலது பக்கத்துச் சட்டைப் பையைக் குனிந்து பார்த்து, அத்துடன் திருப்தியுறாமல் தடவியும் பார்த்தான், அந்த இடத்தில் அவன் இருதயம் இருக்க நியாயமில்லை!

ஊதுவத்தியின் இருப்பிடம் தெரியவில்லை. அதன் சுகந்தம் மட்டிலும் இன்னமும் கமழ்ந்து கொண்டிருந்தது. சாம்பல் தூள் காற்றில் சிதறியது.

''புறப்படலாமா, பூமிநாதன்?'' என்று எழுந்தான் அம்பலத்தரசன் முகத்தில் தெளித்திருந்த நீரைத் துடைத்தான். சிந்தனையின் லயிப்பில் கட்டுண்டிருந்த பூமிநாதனை தோளைப் பற்றி மெல்லத் தட்டினான் அவன்.

''ஓ! என்று எழுந்தான் பூமிநாதன்.

அறைக் கதவுகள் மூடிக்கொண்டன.

கதவுகளுக்கு இதயம் இருந்தது.

அவர்கள் மூன்று பேரும் வெளியேதான் நின்றார்கள்.

# [16]

ஸ்ரீ தண்டுமாரியம்மன் அப்பொழுது என்றுமில்லாத சிரிப்புடன் — அட்டகாசச் சிரிப்புடன் விளங்கினாள்!

அழகிய 'டாட்ஜி'லிருந்து அழகிய ஊர்வசி இறங்கினாள். பின், ஆணத்தாழ் விலகி மூடிக்கொண்டது.

முன்புறத்திலிருந்து அம்பலத்தரசனும் பூமிநாதனும் இறங்கினார்கள்.

"வாங்க மிஸ்டர் பூமிநாதன். இவளை உங்களுக்கு அறிமுகப் படுத்திவைக்கிறதிலே நான் சந்தோஷப்படுகிறேன்" என்று அம்மனைச் சுட்டி, "நான் நம்பியிருக்கும் என்னுடைய இரண்டாவது தாய் இவள்!" என்று முடித்தாள் ஊர்வசி.

பூமிநாதனின் கரங்கள் கூப்பின; கூப்பிய கரங்கள் ஏன் இப்படி நடுங்கித் துடிக்கின்றன ?

அம்பலத்தரசனுக்குப் பழக்கப் பட்ட தாய் அவள். கைகூப்பிக் கைதொழுதான் அவன். கண்கள் — அவன் கண்கள் ஏன் இப்படி நடுங்கித் துடிக்கின்றன ?

மனம் விரிந்து, கண் விரிந்து, ஜோடி இதழ் விரிந்து கும்பிட்டாள் ஊர்வசி. நித்திலங்கள் கால்விரல்களை முத்தமிட்டன

கை கடிகாரத்தைப் பார்த்தாள் ஊர்வசி. மணி பதினொன்று பத்து,

ஏறுமுகச் சுடரொளி சினம் காட்டத் தொடங்கி விட்டதோ ?

"வாங்க, இதுதான் என்வீடு. வாடகை வீடு," என்றாள் ஊர்வசி

அம்பலத்தரசனைத் தொடர்ந்தான் பூமிநாதன். அவன் கால்கள் இடறின

அண்டை அயலிலிருந்த பெண்டுகள் சிலர் இவர்கள் மூவரையும் கள்ளத்தனமாகப் பார்த்துக் 'கள்ளத்தனமாகச் சிரித்துக் கொண்டிருந்தார்கள் எப்படிச் சிரித்தார்கள் தெரியுமா ? பைத்தியங்கள் மாதிரி ! — பைத்தியங்களுக்கும் சுயநலம் விலக்கல்லவே !

மூன்று ஜோடி நடையன்கள் வாசலுக்குக் காவல்.

கூடத்திற்குள் அவசரமாக அடியெடுத்து வைத்து, அவசரத்தோடு பாயை எடுத்து உதறி விரித்தாள் ஊர்வசி; மேலாக்குச் சரித்து விழுந்து விடாமல் காத்துக் கொண்டாள். "உட்காருங்க ரெண்டு பேரும்," என்று உபசாரம் செய்தாள். சொற்களில் பதட்டம் இருந்தது. கண்கள் கருமணிகளில் ஈரம் இருந்தது.

அம்பலத்தரசனும் பூமிநாதனும் பாயில் உட்கார்ந்தார்கள்.

அவர்கள் இருவரையும் பார்த்து, "ஒரு நிமிஷம் இருங்க இதோ வந்திடறேன்," என்று சொல்லிவிட்டு சமையற் கட்டுக்குச் சென்றாள்.

வினாடிகள் சிலவற்றை ஊமைக்கனவோடு விழுங்கியது மௌனம்.

"நீங்க இங்கே இதுக்கு முன்னாடி வந்திருக்கீங்களா ? என்று மௌனத்தை வெட்டினான் பூமிநாதன். வீசிக் கொண்டிருந்த வேப்பமரக் காற்றையும் மீறி அவன் முகத்தில் வேர்வை துளிர்த்தவாறு இருந்தது. துடைத்துக் கொள்ளச் சளைக்கவில்லை அவன் கைகள்.

"என்னைக் கேட்கிறீர்களா ? நான் இரண்டொரு வாட்டி இங்கே வந்திருக்கேன், மிஸ்டர் பூமிநாதன் ! நீங்க ... ? என்று அவனும் பதிலுக்கு ஒரு கேள்வியைத் தொடுத்தான்.

"நான் இங்கே வர்றது இதுவே முதல் தடவை. முந்தி ஒருதரம் இங்கே என்னை வரச் சொல்லி அழைச்சாங்க ஊர்வசி. எனக்கு ஒழியலே. ஊர்வசிக்கு என் பேரிலே எப்பவும் ஒரு அன்பு அது பேரிலே எனக்கும் எப்போதுமே அன்பு உண்டு !" என்று விளக்கினான் பூமிநாதன். காற்றை வேண்டித் தன்னுடைய சில்க் சட்டைப் பொத்தான்களைக் கழற்றி, சட்டையைத் தளர்த்தி விட்டபோது

அவனுடைய மார்பில் தெரிந்த அந்த ரத்தத் தழும்பு இப்போதும் அம்பலத்தரசனைத் தூண்டிலாக இழுத்தது.

அம்பலத்தரசன் தன் நண்பனை ஏறிட்டுப் பார்த்தான். 'பூமிநாதன்' இதென்ன உங்க செஸ்ட்டிலே இவ்வளவு பெரிய காயம் ? என்று கொஞ்சம் ஆர்வத்தோடு கேட்டு வைத்தான்.

இக் கேள்வியைக் கேட்டதும், அதாவது, காது சாய்த்துக் கேட்டதும் பூமிநாதனின் முகம் சலனம் அடைந்தது சலனம் ஒரு மாத்திரைப் பொழுதுக்குத் தான் இருந்தது. பிறகு சமாளித்துக் கொண்டான். தன்னைத்தானே ஒரு முறை குனிந்து பார்த்தவனாக, "இதுதானே ? சொல்கிறேன் அது ஒரு சோகக்கதை!" என்று துயரச் சரட்டை மறைத்துக்கொண்டு சரளமாகச் சொல்லிக் கொண்டிருக்கையில், மீனாட்சி அம்மாள் இலைகள் சகிதம் கூடத்துக்கு வந்தாள். 'வாங்க!'' என்று பொதுப்படையான வரவேற்பை வீசினாள் முதியவள், அவளைத் தொட்டுக் கொண்டு ஊர்வசியும் வந்து நின்றாள்.

"இவர்" வில்லன் பூமிநாதன். என் கூட ட்ராமாவிலே நடிச்சவர்!'' என்று பூமிநாதனைக் குறிப்பிட்டுச் சுட்டி தன் தாய்க்கு அறிமுகப் படுத்தினாள் ஊர்வசி. அவள் சுவரைப் பார்த்த போது, வழக்கம் போல அபயக்கரம் காட்டி அருள் நகை சொடுக்கிக் கொண்டிருந்த வல்லவேல் முருகனைத் தரிசித்தாள்.

"அப்படியா ? ரொம்ப நல்ல பிள்ளையாகப் பதவிசாக இருக்காரே !" என்றாள் மீனாட்சி அம்மாள்.

பூமிநாதன் கையெடுத்து மீனாட்சி அம்மாளைக் கும்பிட்டான்.

"இவங்க என் தாயார் !"

"புரிஞ்சுக்கிட்டேனே !" கொட்டாவி பிரிந்தது. முகக் களையும் பிரிந்தது.

இலைகளில் தண்ணீர் தெளித்துப் போட்டாள் மீனாட்சி அம்மாள். குனிந்து நிமிர்வதற்குள் மூச்சு வாங்கியது.

சாதம், கறி வகைகளைப் பரிமாறினாள் ஊர்வசி. கழுத்துச் சங்கிலியின் பதக்கம் தரையை இலக்குவைத்து ஊசலாடிக் கொண்டிருந்தது.

அப்போது பூமிநாதனின் கவனம் ஒரு பழைய செய்தித் தாளில் இருந்தது.

அம்பலத்தரசன் பார்வையைச் செலுத்திய நேரத்தில் ஊர்வசியின் கவர்ச்சி கனிந்த மார்பகத்தில் தெரிந்த அந்த ரத்தத் தழும்பு தென்பட்டது. 'என் ஊர்வசியை இந்தக் கதிக்கு உள்ளாக்கின அந்தப் பாவி யார் ? இளையபிரானே குற்றம் செய்த துரோகியை எப்போது காட்டப் போகிறாய் நீ ?...' அவன் கண்கள் கசிந்தன. மனக்கசிவு விழிகளைத் தஞ்சம் அடைந்ததோ ?

ஊர்வசி நிமிர்ந்தாள். தண்ணீர்ச் செம்பை எடுத்து முதலில் பூமிநாதனிடம் கொடுத்தாள். ஸ்மரணை இழந் திருந்தவன்போல் எழுந்து கால்கள் சிக்கித் தடுமாற்றத் தோடு நின்ற பூமிநாதன், அந்தச் செம்பைப் பற்றியபோது அவள் கைவிரல்களையும் பற்றி, அந்தப் பற்றுதலில் சிலுர்த்துக் கைவிரல்கள் நடுநடுங்க, கடைசியில் அந்தச் செம்பு கை நழுவியது. நழுவிய துடிப்புடன் அவன் விலகினான்; திருதிருவென்று விழித்தான்; நெஞ்சைப் பிடித்துக் கொண்டான்.

"பரவாயில்லை. இன்னொரு செம்பு தண்ணீர் கொண்டாரேன்" என்று சொல்லி, மறுசெம்பை நீர் நிறைத்துக் கொணர்ந்து பூமிநாதனிடம் நீட்டினாள்

ஊர்வசி. "உங்க மைண்ட் சரியில்லை போலிருக்கு" என்று விழுங்கினாள்.

பூமிநாதனோ உமிழ் விழுங்கியவனாக அந்தச் செம்பைப் பத்திரமாக ஏந்திக் கொண்டான். கை கழுவினான், அருகில் நின்ற அம்பலத்தரசன் வசம் கொடுத்தான்.

"என்னவோ மாதிரி இருக்கீங்களே, என்ன விசேஷம், பூமிநாதன் ஸார் ?" என்று கேட்டுக் கொண்டே கைகளைத் துடைத்தான் அம்பலத்தரசன்

"ஒன்றுமில்லே, மயக்கமாயிருந்திச்சு, அவ்வளவுதான்!"

"வாங்க, ரெண்டு பேரும் வந்து சாப்பிடுங்க " என்றாள் மூதாட்டி.

பூமிநாதன் முதலிலும், அதை அடுத்து அம்பலத்தரனும் உட்கார்ந்தார்கள்.

நெய் இரண்டு இலைகளையும் கமழச் செய்தது. ஊர்வசியின் அன்புக் கரங்கள் பட்ட நெய் அல்லவா ?

அம்பலத்தரசன் சாப்பிட்டுக் கொண்டே பூமிநாதனைப் பார்த்தான் அவன் சிந்தனை மூளை, நெய்ச்சாதத்தைப் பிசைந்த மணியமாக இருந்தான்.

ஊர்வசி விழி விரித்துப் பூமிநாதனை நோக்கினாள். அவள் திருஷ்டியில் ஏன் இந்தச் சலனம் ? 'ம் சாப்பிடுங்க வில்லன் ஸார்" என்றாள் அவள். அவள் குரலில் ஆணை ஒலித்தது.

பூமிநாதன் தலையை உயர்த்தி ஊர்வசியைப் பார்த்தான்.

ஊர்வசியை தலையை தாழ்த்தி பூமிநாதனைப் பார்த்தாள்.

பூமிநாதனின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தோடிக் கொண்டேயிருந்தது. அடுத்த கைந்

நொடிப் பொழுதில் அவன் இருக்கையை விட்டு எழுந்தான்.

"ஐயோ ! ஊர்வசி !' என்று கதறிக் கொண்டு ஓடி ஊர்வசியின் பாதங்களில் நெடுஞ்சாண் கிடையாக விழுந் தான். "நான் பாவி துரோகி சண்டாளன் ! ஐயோ ! தெய்வமே !" என்று கூக்குரலிட்டு மண்டையில் அடித்துக் கொண்டு, மண்டை முடியைப் பிய்த்துக் கொண்டு ஓலம் பரப்பினான்.

தீக் கணப்பைத் தீண்டியவனை ஒத்துத் துடித்தான் அம்பலத்தரசன். ஊர்வசியை நோக்கினான்.

ஊர்வசி வைராக்கியமாகச் சிலையாக அப்படியே நின்றாள் !

பூமிநாதன் கைகுவித்து ஊர்வசியைக் கும்பிட்டான்.

"நான் மிருகமாகி விட்டேன் ஊர்வசி....மிருகமாகி விட்டேன். உன்னை நாடகத்திலே கற்பழிக்கிற கட்டத்திலே உன்னை மேனி தொட்டு அணைச்ச அந்த இன்ப ஸ்பரிசம் என்னைப் பைத்தியமாக்கிடுச்சு ! அந்த வெறியிலே நான் மிருகமாகி விட்டேன். எனக்கு உன் மன்னிப்போ, என் மனச்சாட்சியோட மன்னிப்போ, அல்லது ஆண்ட வனோட மன்னிப்போ கட்டாயம் கிடைக்க முடியாதுங் கிறதும் எனக்குப் புரியாமல் இல்லை ! அமரர் தொழும் பூவை அநியாயமாய்க் கசக்கி நுகர்ந்து வீசிட்டேன். குற்றவாளி இதோ உன் முன்னே மண்டியிட்டு இருக்கேன். எனக்கு என்ன தண்டனை வேணும்னாலும் கொடு !

நானே உன்னைத் தேடித்தான் வந்தேன். அதுக் குண்டான பக்குவம் இன்னிக்கிக் காலம்பறத்தான் எனக்கு வந்திச்சு. என் பாவத்தைச் சொல்லி அழத்தான் நண்பரை நாடினேன். வழியிலே நண்பர் அறையிலே நாம் சந்தித் தோம். ஊர்வசி ! நீங்க....நீ....விரும்புற தண்டனையைக் கொடு ! என் நெஞ்சு வெடிச்சுச் சிதறுறதுக்கு முன்னாடி

உன் தண்டனையை எனக்குக் கொடுத்திடு! அந்தத் தண்டனை இந்தத் துரோகியை — பாவியை—மிருகத்தைக் கடைத்தேறச் செய்யட்டும்!'' என்று ஓங்காரமிட்டுக் கதறிய வண்ணம் மறுபடியும் ஊர்வசியின் பாதங்களில் சிரம் பதித்துக் கூக்குரலிட்டு அழுதான் பூமிநாதன், அவன் நினைவு சிறுகச் சிறுக மாறிக்கொண்டிருந்தது.

வெஞ்சினம் மூள, எச்சில் கையுடன் எழுந்தான், அம்பலத்தரசன்,

அவனை முந்திக்கொண்டு, ஊர்வசியின் அன்னை, பூமிநாதனின் தலைமுடியை வெறி மூளப் பற்றினாள்; பாழ் நெற்றியில் பழிவாங்கும் வைராக்கியம் தவம் இருந்தது.

அன்னையைத் தடுத்தாள் புதல்வி.

பூமிநாதனின் கன்னங்களில் அறையக் கையை ஓங்கிய அம்பலத்தரசனையும் கரம் பற்றித் தடுத்தாள் ஊர்வசி

''தெய்வம் விளையாடுதுங்க, அத்தான்! தர்மம் விளையாடுதுங்க, அம்மா நீங்க ரெண்டுபேரும் எனக்குக் கண் கண்ட தெய்வங்கள்!. தயவு செஞ்சு நீங்க ரெண்டு பேரும் அமைதியாயிருங்க. கையெடுத்து கும்பிடுகிறேன்'' என்று நைந்த குரலெடுத்துப் பேசிவிட்டு, தன்னை மறந்து, விம்மி வெடித்துக் கொண்டிருந்தாள் ஊர்வசி. அவள் வர்ஷித்த விழி வெள்ளம் பூமிநாதனின் தலையில் வழிந்து கொண்டே இருந்தது.

கணங்கள் பேய்க் கணங்களாக ஊர்ந்தன,

அம்பலத்தரசனும் மீனாட்சி அம்மாளும் சிலையாக நின்றனர்.

சுயப் பிரக்ஞை கொண்டாள் ஊர்வசி; வழிந்த கண்ணீர் வழிந்தோட, பூமிநாதனை நோக்கினாள்.

பூமிநாதன் சுயப் பிரக்ஞை தப்பிக்கிடந்தான்

ஊர்வசி அவன் முன்னே குனிந்து உட்கார்ந்தாள் பூமிநாதனைத் தொட்டுத் தலையைத் தூக்கினாள் அப்போது அவனுடைய சட்டைப் பையிலிருந்து ஓர் அழகான தங்கத் தாலியும், ஏழெட்டு தூக்க மாத்திரைகளும் நழுவின. அவனை மீண்டும் பார்த்தாள். அவன் இன்னமும் தன்னினைவுக் கொள்ளக் காணோம்!

"பூமிநாதன்! மிஸ்டர் பூமிநாதன் !" என்று பலத்த குரல் எடுத்துக் கூப்பிட்டாள்.

பூமிநாதன் கண்களை விலக்கினான். விரிந்த விழிகள் ஊர்வசியைப் வெறிக்கப் பார்த்தன. அப்பார்வையில் பரிதாபம்மோலோச்சியது. நோக்கு இறங்கியது. கீழே நழுவிக் கிடந்த அந்தத் தாலியையும், அந்தத் தூக்க மாத்திரைகளையும் அவன் கையிலெடுத்தான். கண்ணீர் வெள்ளம் திரும்பவும் மடைதிறந்தது.

"ஊர்வசி இந்த தாலியை உனக்கென்று கொண்டாந்திருக்கேன் நான். இந்த என் முடிவுக்கு — பிராயச்சித்தத்துக்கு நீ சம்மதிச்சு எனக்கு வாழ்வு கொடு, உன்னோட முடிவு என்னைக் கடைத்தேற்ற ஒப்பலைன்னா, இதோ இந்தத் தூக்க மாத்திரைகள் எனக்கு நல்ல முடிவு காட்டக் காத்திருக்கும்" என்று தேம்பலானான் அவன்.

ஊர்வசி எழுந்து நின்றாள். 'அவைகள் எல்லாத்தையும் என்கிட்டே கொடுங்க மிஸ்டர் பூமிநாதன்" என்றாள் அவள். நா தழ தழத்தது.

அச்சம் கொழிக்க அவற்றை அவளிடம் நீட்டினான் பூமிநாதன்!

"பூமிநாதன்! எழுந்திருங்க. எழுந்திருச்சு சாப்பிடுங்க ..." என்று அன்பு தோய்ந்து வேண்டினாள் ஊர்வசி. கண்ணீரும் புன்னகையும் கூடின.

பூமிநாதன் எழுந்து தன் இலையைக்கணித்து உட்கார்ந்தான். மந்திரத்துக்குக் கட்டுப்பட்ட பாவம்!

"வாங்க அத்தான், வந்து நீங்களும் சாப்பிடுங்க!"

அம்பலத்தரசனும் சாப்பிடத் தயாரானான். நீர்மணிகள் சிதறின.

அம்பலத்தரசனையும் ஊர்வசியையும் புதிய கண்ணோட்டத்தோடு பார்வையிட்டான் பூமிநாதன். அவன் கண்கள் பொடித்தன!

இரு விருந்தினர்களும் உணவு கொண்டனர்.

இருவருக்கும் மத்தியில் தாம்பூலத் தட்டை வைத்தாள் ஊர்வசி. அம்பலத்தரசன் தாம்பூலம் தரித்துக் கொள்ளத் தொடங்கினான்.

"ஊம், நீங்களும் வெற்றிலைப் போட்டுக்கங்க. விருந்து சாப்பிட்டவங்க, வெற்றிலைப் போட்டுகிறது தான் நம் தமிழ்ப் பண்பாடுங்க, பூமிநாதன்" என்றாள் ஊர்வசி. நயமான உரை.

இப்போது பூமிநாதனின் உதடுகள் சிவந்திருந்தன.

"சரி, இனி நீங்க புறப்பட வேண்டிய வேளை வந்திட்டுது! ஊம் கிளம்புங்க, மிஸ்டர் பூமிநாதன்!"

ஊர்வசி ஆணையிட்டாள்.

அவள் ஆணைக்கென்று இப்படியொரு தனி மகிமையா?

பூமிநாதன் பேய் பற்றியவன் போல தலைதெறிக்க ஓடத்தலைப்பட்டான்!

"ஊர்வசி ."

நேசம் தேம்பியது.

"மகளே! "

பாசம் கதறியது.

நெற்றிப் பொட்டு அன்பு காட்டிப் புன்னகை செய்து கொண்டிருந்தது.

கண்ணீர்ப் பொட்டுக்கள் அன்பு கூட்டிச் சிரித்துக் கொண்டிருந்தன!

அதே நேரத்தில்—

ஸ்ரீ தண்டு மாரியம்மன் சந்நதியில் பார்வையாளர் கும்பல் கூடியது. உச்சி வெயில் எரிந்தது.

மண்ணில் சாய்ந்து கிடந்தான் பூமிநாதன். அவனுடைய வாயிலும் மூக்கிலும் ரத்தம் கொப்பளித்துக் கொண்டிருந்தது.

ஆம் வினை சிரித்த வேளையல்லவா அது?....

நிறைவு

''குழந்தைகளின்
எதிர்காலம்
பெற்றோர்களிடம்
உள்ளது.
தாய்
தந்தையரின்
நற்குணங்களும்
தீய குணங்களும்
குழந்தைகளைப்
பற்றிக்
கொள்கின்றன.
தங்கள்
குழந்தைகளை
எத்தகைய
வாழ்விற்குத்
தயார்
செய்ய
வேண்டும்
என்பதை
நிர்ணயிப்பவர்களும்
தாய்
தந்தையரே''

'ஓர் ஆசிரியர்'